உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகரபாத்திரசுவாமிகளால்

அருளிச்செய்த

# அத்வைதபோததீபிகை.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங் கோயிலூர்

ஸ்ரீமுத்துராமலிங்கசுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீசிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ-இராமசுவாமியவர்களால்

திருத்தியும் விளக்கியுங் கூட்டியும்

புதுக்கி

ரா-ம-நா-புதூர்-பழனியப்பசெட்டியார்,

அ-மெ-முனிசாமிமுதலியார்,

இவர்கள் வேண்டுகோளின்படி,


சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வசித்துஹு கார்த்திகைமீ

இதன் விலை ரூ. க.



Registered Copy-right.



1887.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகுருவேநமஃ

# அத்வைதபோததீபிகை.

## முதலாவது,

## அத்தியாரோப்பிரகரணம்.

பரமகுருவாய்ச் சகலஜகத்துக்குஞ்சரணமாய்ச் சமுசாரத்தை க்கொல்லுகிறதிலேகாரணமாய் அநாதிகஜமுகனாயிருக்கிற விக்கினேசுரனுடைய பாதாரவிந்தங்களை நமஸ்காரம் பண்ணுகிறேன். (க)

அநாதியாயிருக்கிற வஞ்ஞான மஹாமோகத்தினாலே மூடனாயிருக்கிற வென்னாலே யாதொருத்தருடைய கடாட்சலேசத்தினாலே ஞானமாகிற ரத்தினமடையப்பட்டதோ அந்தச்சிதம்பரப்பிரமமென்கிறபெயரையுடைத்தாயும் அத்வைதபரமாத்மசொரூபராயும் ஆனந்தாநுபவசீலராயும் யோகசிரேட்டராயுமிருக்கிற ஸ்ரீகுருவைப் பஜிக்கிறேன். (உ)

யாதொருத்தருடைய பாதாரவிந்த தூளியையடைந்த ஜனங்கள் கரையில்லாத சமுசார சமுத்திரத்தைக் கன்றுக்குளம்படிபோல வெளிதாய்க்கடக்கிறார்களோ அப்படிப்பட்ட குருவைப் பஜனைபண்ணுகிறேன். (ங)

அனேக ஜன்மங்களிலே வெகுதபசுகளே பண்ணி யதினுலே சகல பாவங்களும் பஸ்பமாய்ப்போய் சுத்தசித்தாளாய் நித்தியா நித்தியவஸ்து விவேகபுத்திகளா யிகாமுத்திரார்த்த பலபோக விராகிகளாய் சம தம வுபரதி திதிட்சை சமாதான சிரத்தாவான்களாய் மோட்ச விச்சுக்களாயுமிருக்கிற அதிகாரிகளுச்கு யெளிதாய்ப்பந்தநிவிர்த்தியாகிறதின்பொருட்டு அத்தொய்தபோததீபிகையென்கிற கிரந்தமானது பன்னிரண்டு பிரகாரணத்தினுலே ஸங்கிரகித்துத்தெரிந்தமாத்திரம் சொல்லப்படுகிறது. (ச - ரு)

அத்தோய்த கிரந்தங்கள் வெகுவிதமாய்ப்பூருவந்தானே ஸ்ரீசங்கராசாரியர் ஸ்ரீவித்தியாரண்ணியர்முதலாயிருக்கிற பூருவாசாரியாளாலே பண்ணப்பட்டிருக்கிறதுகள் அப்படி இருந்தாலும் பிதாவானவன் தன்னுடைய சிசுவின் மழலைச்சொல் லாபாசமாயிருந்தாலும் அத்தை யெப்படி யாதரவோடே கேழ்ப்பானே வப்படி யென்னுடைய வார்த்தையு மாபாசமாயிருந்தாலு மத்தை மஹாத்மாக்களாயிருக்கிற சத்துக்கள் கேட்கக்கடவாள். (சா)

கஷ்டமாயிருக்கிற தாபத்திரயத்தினுலே வெகு கிலேசத்தையடைந்து இந்தக்கிலேச பந்தத்திலேநின்றும் விடுபடவேண்டுமென்று அத்தியந்த மோட்சவிச்சையினுலே சாதனசதுஷ்டயங்களை நன்ருயப்பியாசித்துக்கொண்டு சிட்டனயிருக்கிற வொருசிஷியனுனவன் சற்குருவைவந்தடைந்து கேட்கிருன். (எ)

வாருமய்யா சற்குரோ தயாசமுத்திரமாயிருக்கிறவரே சரணமாயடைந்தவென்னை ரட்சியு மெந்தப்பயத்திலேநின்று மிரட்சிக்கவேண்டு மென்கிறீரோ வென்ருற் ஜனனமரணமாகிற பயத்திலேநின்று மிரட்சிக்கவேண்டுஞ் சமுசாரத்தைவிட்டுப் பயமின்றியிலே இருவென்கிறீரோ வென்ருற் சமுசாரமாகிற சமுத்திரத்தைக்கடக்க

மாட்டாமற் ஜனனமரணத்திலே பயப்படுகிறேனுகையினுலேசரணு கெதனுயிருக்கிற வென்னைரக்ஷிக்கவேண்டுமென்று சிஷியன்சொல்லு கிறுன். (அ)

வாரீர் ஏ குரோ நம்மைச்சரணமா யடைந்தால் நாமென்ன செய்வோ மென்கிறீரோ நீர் இரட்சிக்க வேண்டுமேயொழிய வேறே கதியில்லை அதெப்படியென்றுல் லோகத்திலே தலையிலே தீப்பற்றின வனுக்கு தாகோபசமனுர்த்தமாய்ச் சலராசியைத்தவிர வேறே யெப் படிக் கதியில்லையோ வப்படித் தாபத்திரயதுக்கமாகிற அக்கினியி னுலே தபிக்கிறயெனக்கு உங்களைப்போலொத்த சத்துக்களன்றே கதி ஏனென்றுற் சமுசாரப் பிராந்தியில்லாமற் சாந்தாளா யாதியு மந் தமு மன்றியிலே நிரதிசயமாயிருக்கிற பிரமசுகத்திலே மூழ்கியிருக் கிறவாளன்றே நீங்க ளாகையினுலே துக்கியாயிருக்கிற யென்னை ரட்சியும். (கூ)

வாருமய்யா ஏ குரோ நீ துக்கப்பட்டதினுலே நமக்கேதென் கிறீரோ உங்களைப்போலிருக்கிற சாதுக்கள் புத்திரதுக்கத்தைப்பிதா யெப்படிச் சகிக்கமாட்டானே வப்படிப் பரதுக்கத்தைச் சகிக்கமாட் டாளன்றே நிஷ்காரணமாய்ச் சகல பூதங்களிடத்திலேயுந் தயை பண்ணுகிறவாளன்றே சகலலோகத்துக்குங் குருவாயிருக்கிறவாளன் றே சமுசாரமாயிருக்கிற சமுத்திரத்துக்கு ஓடமாயிருக்கிறவாளன்றே ஆகையினுலே யிரட்சியும். (க0)

வாரும் ஏ குரோ ஏனிப்படித்தபிக்கிறு யென்கிறீரோ கஷ்ட மாயிருக்கிற சமுசாரமாகிற துஷ்டசர்ப்பத்தினுடைய விஷப்பல்க ளாலே கடிக்கப்பட்டு மோகத்தை யடைந்து புத்திகெட்டுப்போனே ன் அதினுலேதபிக்கிறேன். (கக)

வாருமய்யா ஏ குரோ ஏ பிரபோ தாபத்திரயமாகிறஅக்கினியி
னாலே சகிக்கப்படாமற்கோரமாயிருக்கிற சமுசாரமாகிற ரௌரவாதி
நரகத்திலேநின்று மெப்படிநான் கரையேறுவேனோ அதற்குத்தக்கவு
பாயத்தை தயையினாலே சொல்லுமென்று சிஷியன் சொன்னான்.()

இப்படிச்சொல்லிக்கொண்ட சிஷியனைப்பார்த்துக் குருவான
வர் சொல்லுகிறார் வாராய் சிஷியா நன்றாய்ச் சொல்லிக்கொண்டாய்
நீயேபுத்திமான் நீயேசாது உனக்குபதேசத்திலே அதிகாரமுண்டோ
இல்லையோ வென்கிறதைப் பரிட்சிக்கத்தேவையில்லை நீசொன்ன
வாக்கியங்கள்தானே நன்றாய்ச் சாதனசம்பன்ன னென்கிறதை ஸ்பு
டமாகச் சொல்லுகிறதுகளென்று பரமார்த்தத்தைக் குருவுபதேசிக்
கிறார். (கங)

வாராய் சீடா சச்சிதானந்தமாத்திரமாயிருக்கிற பரமாத்மா
விணிடத்திலே சமுசாரியாவதார் சமுசாரமாவதேது யெவடத்திலே
இருக்கிறது யெதினாலேவந்தது யெதிலேநின்று முண்டாயிற்று எப்
படித்தானுண்டாயிற்று அத்துவிதவஸ்துவி லேன்பிரமிக்கிறாயொ
ன்றுமில்லை யானாலுஞ் சுழுத்தியிலே சுகமாய்நித்திரைபண்ணுகிறவன்
தானிர்விகாரனாய்ச் சுகியாயிருந்தாலும் ஆகா நான்கெட்டேனென்று
விருதாவிலே பிதற்றுகின்றதுபோல நிர்விகாரனாய் ஒரு ஆகாரமு
மன்றியிலே பரமானந்தசொரூபனாயிருககிறநீயும் விருதாவிலே நான்
சமுசாரியென்றுந் துக்கியென்று மேன்பிதற்றுகிறாய் சமுசாரமு
மில்லைச் சமுசாரியுமில்லை யொன்றுமில்லைப் பின்னையென்ன இருக்
கிறதென்றால் ஆதியந்தமன்றியிலே இரண்டாம்வஸ்துவுமன்றியிலே
பரமானந்தசித்துரூபமாய் ஒருக்காலும் பந்தமில்லாமல் நித்தியமுக்த
மாய் சுத்தமாய்ப் போதரூபமாய் ஏகமாயிருக்கிற வஸ்துமாத்திரமிருக்
கிறது வேறேயொன்று மில்லையென்று குருசொன்னார். (கச - கரு -
கசு - கஎ)

சீடன்கேட்கிறுன் வாரீர் ஏகுரோ இப்படி யொன்றுமில்லாவி ட்டா லேதோவொருசமுசாரப்பிராந்தியானது மகத்தாய் நிபிடமாய் வருஷாகாலத்து மேகம்போலே அந்தகாரமாக மூடிக்கொள்ளுகிறதே அதேது சொல்லுமென்று சீடன்கேட்டான் குருசொல்லுகிறுர்.(கஅ)

வாராய் சீடா அகோ ஆச்சரியம் உன்பிராந்திமகிமையை யென்னசொல்லப்போகிறோம் ஸ்தாணுவைப் புருஷனென்று பிர மிக்கிறப்போல அத்தொய்தனுய்ப்பூரணனுயிருக்கிறதன்னைச் சீவனு ய்ப்பிரமிக்கிறுய் பிராந்தியினுலே துக்கிக்கிறுய் இந்தப்பிராந்தி யெதி லேவந்ததென்முற் பொய்யாயிருக்கிற அஞ்ஞானமோகமாகிற நித்தி ரையினுலே பொய்யாயிருக்கிற சமுசாரமாகிற சொப்பனப்பிராந்தி யானது பொய்யாயுண்டாயிற்று அதினுலே பிரமிக்கிறுயென்று குரு சொன்னுர். (கக - உ0)

வாராய் சீடா அஞ்ஞானமாவ தேதென்முற் சொல்லுகிறோங் கேள் சரீரத்திலே யபிமானியாய் நானென்றுதோன்றுகிறவன் சீவன் இந்தச்சீவன் பகிர்முகனுய்ச் சகலசமுசாரங்களுஞ் சத்தியமென்றும் நாமே சகல கருமங்களையும் பண்ணுகிறோமென்றுஞ் சுகதுக்கமெல் லாம் நமக்கேயென்றும் நமக் கதுவேண்டு மிதுவேண்டுமென்றும் ஆசக்தியினுலே புத்திகெட்டுப்போ யனுதிகாலத்தைத்தொட்டு நாமா ரென்று முதலாய் ஸ்மரியாமல் நாமார் ஜகத்தாவதேதென்று விசா ரமன்றியிலேதானே சமுசாரத்திலேதானே சதாவிவகரித்துக்கொ ண்டு இருக்கிறுனேயொழிய அத்தொய்தமாயிருக்கிற தன்னுடைய சொருபத்தை ஸ்மரியாமற்போனு னிப்படித்தன்னுடைய சொருப ஸ்மரண மில்லாததே யஞ்ஞானமென்று சொல்லப்படும். (உக-உஉ உ௩- உச)

வாராய் சீடா சகலசாஸ்திரங்களிலேயு மாயையினாலே சமுசாரங்கற்பிக்கப்பட்டதென்றல்லோசொல்லியிருக்கிறது இப்பொழுது அஞ்ஞானத்தினாலே கற்பிதமென்று சொல்லுகிறீர் அதெப்படியென்று கேட்கிறாயோ இந்தவஞ்ஞானந்தான் மாயையென்றும் பிரதானமென்று மவ்வியத்தமென்று மவித்தையென்றும் பிரகிருதியென்றுந் தமசென்று மின்னம் நானாவிதமாய்ச் சொல்லப்படுகிற தாகையினாலே வஞ்ஞானத்தினாலே சமுசாரமென்றறி. (உரு)

வாராய் சீடா இந்தவஞ்ஞான மெப்படிச் சமுசாரத்தைக்கற்பித்தது என்றால் அஞ்ஞானத்துக்கு ஆவரணமென்றும் விட்சேபமென்று இரண்டுசத்தியுண்டு அதினாலே கற்பித்தது அந்த ஆவரணசத்தியும் அசத்தாவரணமென்றும் அபானாவரணமென்றும் இரண்டுவிதமா யிருக்குமென்றறி. (உசு

வாராய் சீடா அசத்தாவரணமாவ தேதென்றால் அஞ்ஞானிக்கும் ஞானிக்கும் பிரசங்கம்வந்தவிடத்திலே யத்துவயாத்மா வொருத்தருண்டென்று ஞானிபோதித்தாலு மஞ்ஞானியானவன் அத்துவயாத்மாவாவதார் இல்லையென்றுதானே யெண்ணுகிறானிப்படி யனாதியாயிருக்கிற சொரூபமறைப்பினாலே யுண்டென்று கேட்டாலு மதிலே சிரத்தையில்லாம லுதாசீனமாய் விவகரிக்கிற அசிரத்தையே அசத்தாவரணமென்றறி. (உஎ-உஅ)

வாராய் சீடா அபானாவரணமாவதேதென்றாற் சற்சாஸ்திரத்தினாலேயும் ஆப்த்தனுபதேசத்தினாலேயுந் தெய்வாதீனமாய் அத்துவயாத்மாவுண்டென்று சிரத்தையினாலே விசுவசித்தாலும் அவனானன்றாய்விசாரித்துப்பாராமல் மேலெழுந்தவாரியாய்விசாரித்துப்போட்டு ஆத்மாத்தோன்றவில்லையென்று சொல்லுகின்றான் தோன்றவில்லை

யென்கிறதை யறிகிறசித்ருபனுயிருந்துந் தோன்றவில்லையென் கிற மோகமே அபாணுவரணமென்றறி. (உகூ-ஙo)

விட்சேபசத்தியாவ தேதென்றல் நிர்விகாரனுய் நிராகாரனு ய்ப் பரமானந்தசொருபனு யத்தொய்தனுயிருக்கிற தான் காலுங்கை யுமாயிருக்கிற தேகநானென்றும் நான்கர்த்தா போக்தா வென்றும் நீ யென்றும் அவனென்றும் இவனென்றும் இதென்றுமதென்றும் விப ரீதப்பிராந்தியை யடைகின்றன் இந்தவிபரீதப்பிராந்தியே விட்சே பசத்தி இதுதானே அத்தியாரோபமென்றுசொல்லப்படும்(ஙக-ஙஉ).

அத்தியாரோபமாவ தேதென்றற் சுத்தியிலே ரசிதம்போல வும் ரச்சுவிலே சர்ப்பம்போலவும் தாணுவிலே புருடன்போலவும் கானலிலே ஜலம்போலவும் சத்தியமாயிருக்கிற வஸ்துவிலே அசத் தியமாயிருக்கிற அவஸ்துவைப் பிராந்தியினலே ஆரோபிக்கிறதே அத்தியாரோபமென்று பெயர். (ஙங)

வாராய் சீடா வஸ்துவிலே பிராந்தியினலே அவஸ்துவை ஆ ரோபிக்கிறது அத்தியாரோபமென்று சொன்னீரே வஸ்துவாவதே து அதிலே ஆரோபிக்கப்படுகிற அவஸ்துவேதுவென்று கேட்கிற யோ சொல்லுகிறேங் கேள் அத்தொய்தமாய் சச்சிதானந்த லக்ஷண மாயிருக்கிற பரப்பிரமமே வஸ்துவென்றறி இந்தப் பிரமவஸ்துவிலே ரச்சுவிலேசர்ப்பமென்று ஒருநாமமும் ருபமுமாத்திரமெப்படிப்பொ ய்யா யாரோபிக்கப்படுகிறதோ அப்படிபோலே பிரமாதிஸ்தம்பபரிய ந்தம் பிராணிகளென்றும் பிருதிவியாதிசடங்களென்றும் நானுவித மாய் நாமமும் ருபமுமாய்த் தோன்றுகிறஜகத்தே ஆரோபிதமாயிருக் கிற அவஸ்துவென்றறி அத்தொய்தமாயிருக்கிற வஸ்துவிலே நாம ருபாத்மகமாயிருக்கிற பிரபஞ்சத்தை ஆரோபிக்கிறதாரென்று கேட் கிறயோ மாயையே ஆரோபிக்கிறதென்றறி. (ஙச)

மாயையாவ தேதென்றால் முன்சொன்ன பிரமத்தினுடைய அஞ்ஞானசத்தியே மாயை அஞ்ஞானசத்தியாவ தேதென்றால் பிரமமே தானாயிருந்தும் தன்னுடைய சொரூபத்தைத்தெரியவொட்டாமலிருக்கிறசாமர்த்தியமே அஞ்ஞானசத்தியென்றறி அந்தவஞ்ஞானமெப்படிச் ஜகத்தைக் கற்பிக்குமென்றால் ரச்சுவைத் தெரியவொட்டாத அஞ்ஞானசத்தி சர்ப்பத்தையெப்படி யாரோபிக்குமோ வப்படிப் பிரமத்தை யறியவொட்டாத அஞ்ஞானசத்தியுஞ் ஜகத்துப்பிராந்தியை யாரோபிக்குமென்றறியலாமே. (௩௫)

இப்படிச் ஜகத்து ஆரோபிதமானபடியினாலேயு முன்னுமினிமேலு மில்லாதபடியினாலேயும் மித்தையென்றறியவேண்டும் முன்னும்பின்னு மேனில்லையென்றாற் சிருஷ்டிக்குமுன்னே இல்லாமற் சிருஷ்டியாதியிலே யுண்டாயிற்று இனிமேலும் பிரளயத்திலே லயித்துப்போகிறது மத்தியிலெமாத்திரம் ஆகாசகந்தருவ புரம்போலே தோன்றுகிறது வர்த்தமானத்திலேயுஞ் சுழுத்தி மூற்சாசமாதிகளிலேயு மில்லாமற்போகிறதாகையினாலே ஜகத்து ஆரோபிதம் மித்தையென்கிறதிலே சந்தேகம் லேசமுமில்லையென்றறி. (௩௬)

சிருஷ்டிக்கு முன்னும்பின்னுஞ் ஜகத்து ஒன்றுமில்லாவிட்டாற் பின்னை யென்னதானிருக்குமென்றா லொருகற்பனையுமன்றியிலே யத்வைதமாய்ச் சஜாதிய விஜாதிய ஸ்வகதபேத சூனியமாய் சச்சிதானந்தமயமாய் நிர்விகற்பமாய் இருக்கிற சத்துவஸ்துமாத்திரஞ்சேஷித்திருக்குமென்றறி யெதினாலே யிப்படி யறிகிறதென்றாற் சதேவசோமி யெதமக்கிற ஆசிதுவென்கிற சுருதி சன்மாத்திரவஸ்துப்ரூவமிருந்ததென்று சொல்லுகிறதினாலேயும் வாசிட்ட வசனத்தினாலேயு மறியலாம் வாசிட்டவசன மெப்படிச் சொல்லுகிறதென்றாற் சொல்லுகிறேன் கேள். (௩௭)

பிரளயத்திலே சமஸ்தப்பிரபஞ்சமும் லயித்துப்போம் பின்பு அசையாமல் வாக்குமனதுக்கெட்டாமல் வெளிச்சமுமன்றியிலே இருட்டுமென்றியிலே பூரணமாயு மொருபெயருமன்றியிலேயு மின்ன படியென் றறியப்படாததாய்ச் சூனியமுமன்றியிலே சன்மாத்திர மாயும் ஒருவஸ்துமீருமென்று வாசிட்டவசனஞ்சொல்லுகிறது(௩அ)

இப்படி யத்தொய்தமாத்திரமாயிருந்தால் அதிலே யெப்படிப் பிரபஞ்சஞ்சிருஷ்டிக்கப்பட்டதென்ருற் சொல்லுகிறேங்கேள் இப்ப டியத்தொய்தவஸ்துவிலே முன்சொன்ன அஞ்ஞானசத்தியானது ரச்சுவிலே அஞ்ஞானசத்தி மறைந்திருக்கிறப்போல அவ்வியத்தமாய் மறைந்திருந்தது மாயையென்று மவித்தையென்றும் விவகரிக்கப்படு கிற இந்த வஞ்ஞானசத்தி நாஞவித நாமரூபகற்பனைக்கேதுவாயிருந் ததென்றறி. (௩கூ)

இப்படிச் சித்துருபமாய் ஆனந்தமயமாய் அசங்கமாயிருக்கிற பரப்பிரமத்தை ஆசரித்துக்கொண்டிருக்கிற இந்தமாயைக்கு ஆவர ணமென்றும் விட்சேபமென்று மிரண்டுசத்திகளுண்டு அந்தஆவரண சத்தியினுலே அத்தொய்தமாய் தனக்கு அதிஷ்டானமாயிருக்கிற பிர மத்தை மறைத்துக்கொண்டு விட்சேபசத்தியினுலே அவ்வியத்தமா யிருந்தமாயை வியத்தமாய் ஸ்புடமாய் மனதென்று பெயராய் வெளி யிலே விசிரம்பனத்தை யடைந்தது இப்படி மாயை மஞேரூபமாய்ப் பரிணமித்திருந்துகொண்டு நாஞவித வாசனைகளாகிற தன்னுடைய விலாசத்திஞலே நாஞவித நாமரூபப்பிரபஞ்சங்களையெல்லாந் தோற் றுவிக்கிறதென்றறி. (சo - சக)

இப்படி யாராகிலுஞ்சொல்லியிருக்கிருளோவென்ருல் ஸ்ரீவசி ட்டர் இராமனுக்கு வாசிட்ட கிரந்தத்திலே விஸ்தாரமாகச்சொல்லி யிருக்கிரு ரெப்படிச்சொன்ஞரென்ரு லத்தைச்சொல்லுகிரேும். ()

பிரமத்தினிடத்திலே அனந்தசத்திகளுண்டு அந்த அத்துவய ப்பிரமமானது எந்தஎந்தச் சத்தியினுலே விகாசத்தை யடைகிறதோ அப்போ அந்தந்தச்சத்தி பிரகாசமாகிறது எந்தெந்தச்சத்தி யெதிலே கண்டோமென்முற் றேவதிரியக்கு மநுஷாதிரூபமாயிருக்கிற சரீரங் களிலே சிற்சத்தியும் வாயுவிலே சலனசத்தியுஞ் சிலையிலே தார்ட்டி யசத்தியுஞ் ஜலத்திலே திரவசத்தியும் அக்கினியிலே தாகசத்தியும் ஆகாசத்திலே சூனியசத்தியும் நசிக்கிற வஸ்துவிலே நாசசத்தியும் வியத்தமாய்ப் பிரகாசமாகிறது பூருவம் அவியத்தமாயிருந்தசத்திகள் வியத்தமாய்ச் சலன தார்ட்டிய தாகாதிரூபமாய்க் காணப்பட்டது இது வியத்தமாகிறதற்குமுன்னும் பிரமத்திலே சகலமும்அவ்விய த்தமாயிருந்ததென்றறியவேண்டு மெப்படிப்போலே என்முல் முட் டைக்குள்ளேயிருக்கிற ஜலத்திலே மயில் சூட்சுமமா யவ்வியத்த மாயிருக்கிறுப்போலவும் வடபீசத்திலே பலமும் பத்திரமும் புஷ்ப மும் சாகைகளும் வேர்மாய் விருட்சமிருக்கிறதுபோலவும் பிரமத்தி னிடத்திலே சகலஜகத்தும் அவ்வியத்தமாயிருந்தது இப்படிச் சகல ஜகசத்தியுமிருந்தா லெல்லாமொருமிக்க யேன்வியத்தமாகவில்லை என்முற் பூமியிலே சகலவோஷதிகளுமிருந்தாலும் சிறிதுதேசத்தி லே சிறிதுகாலத்திலே சிறிதுஒஷதிகள் முளைக்கிறுப்போலே தேச காலவிசித்திரத்தினுலே சிறிதுதேசத்திலே சிறிதுகாலத்திலே சிறி து சிறிதுசத்திகள் வியத்தமாகிறதுகள் இந்தச் சகலமாயாசத்திக்கும் அதிஷ்டானமாயிருக்கிற பிரம மெந்தக்காலத்திலே அது இதுவென்று மனனம்பண்ணி யெண்ணுகிறதாயிருக்கிற சத்தியை யடைகிறதோ அதுவேமனதென்று சொல்லப்படும் இப்படிச்சர்வகாரணமாயிருக்கிற பரப்பிரமத்திலேநின்றும் அவ்வியத்தமானமாயை வியத்தமாய் முன் னே மனேரூபமாய்ப் பரிணமித்தது இந்தமனதானது சகலஜகத்

தையுங்கற்பிக்கிறதென்று இப்படி ஸ்ரீவசிட்டர்சொன்னார். (சஉ-சங-சரு-சசு-சஎ-சஅ-சகூ-ருo)

இப்படி இந்தமனதே விட்சேபசத்தியென்று சொல்லப்படும் இந்தமனதுக்குச் சொரூபமேதென்றால் சங்கற்பமென்றும் வாசனை யென்றுஞ் சொல்லப்படுகிற ஸ்மரணமே இதற்குச் சொரூபம் விட் சேபமென்கிற பெயராயும் வாசனையாகிற சொரூபமாயு மிருக்கிற மனசத்தியானது அதிஷ்டானமாயிருக்கிற சாக்ஷியினிடத்திலே யகம்விர்த்தியென்று மிதம்விர்த்தியென்று மிரண்டுவிதமாய்த் தோன்றுகிறது இரண்டுவிதமேதென்றால் நானென்கிறவாசனையே யகம்விர்த்தியென்று மிதுவது வென்றுதோன்றுகிறவாசனையே இதம்விர்த்தியென்று மிரண்டுவிதமாய் வாசனையாகத் தோன்றிற்றென்றறி (ருக)

வாராய் சீடா நானென்கின்ற இந்த அகம்விர்த்தியானது சாக்ஷியினிடத்திலே யத்தியாசத்தை யடைந்தது எப்படிப்போலே யென்றால் சுத்தியிலே ரசிதமானது எப்படியத்தியாசத்தையடைந்து சுத்தியைத்தானே ரசிதமாகத் தோற்றுவிக்கிறதுபோல சாக்ஷியினிடத்திலே யத்தியாசத்தை யடைந்த அகம்விர்த்தியுஞ் சாக்ஷியைத் தானே நானென்று அகங்காரமா யதன்ரூபமாய் ஆனவர்போலப் பேதமன்றியிலே சாக்ஷியைத் தோற்றுவிக்கிறது. (ருஉ)

சாக்ஷியாயிருக்கிற ஆத்மாவானவர் அகம்விர்த்தியினாலே ஆவேசப்பட்டமாத்திரத்திலே பிசாசினாலே ஆவேசிக்கப்பட்ட புருஷனானவன் பிராந்தியினாலே தன்னை பின்னையொருரூபமா யன்னியன்போலே விபரீதமா யெப்படிக் காண்கின்றானோ அப்படிப்போல அகம்விர்த்தி ஆவேசிதராயிருக்கிற சாக்ஷியுந் தான் அத்தையறிகிறசாக்ஷி சொரூபமாயிருந்தும் பிராந்தியினாலே தன்னைத்தானே பின்னையொருரூபமா யன்னியன்போல விபரீதமாய் நானென்றுதோன்றினார். (ருங)

வாராய் சீடா சாக்ஷியாயிருக்கிற தன்னை நானென்று விகாரியாய்க்கண்டது எப்படிப்போலேயென்றால் சொல்லுகிறேங்கேள் சுரத்தினாலே சன்னிபாதத்தையடைந்த புருடன் தன்னைப் பின்னையொருவிதமா யாகத்திலே போகிறவன்போலே கண்டு பிரமிக்கிறாப் போலேயும் மத்தியபானம்பண்ணினவன் றன்னைத்தானே பின்னையொருவிதமாய்க் காண்கிறதுபோலவும் உன்மத்தம்பிடித்தவன் றன்னைத்தானே பின்னையொருவிதமாய்க்கண்டு பிதற்றுகிறதுபோலவும் சுழூத்தியிலே நித்திரைபண்ணுகிறவன் றன்னைச் சொற்பனப்பிராந்தியினாலே போகிறவன் வருகிறவன்போலே காண்கிறதுபோலவும் பிசாசுபிடித்தவன் றன்னை விபரீதமாய்க்காண்கிறதுபோலவும் சாக்ஷியுந் தான் அசங்கராய் நிர்விகாரமாயிருந்தாலும் அந்தத் துவகங்காரமாகிற பிசாசினாலே யாலிங்கனம் பண்ணப்பட்டு அதினாலே தான்றானே நானென்று விகாரியானவர்போலே ஆனார். (௫௪)

சீடன்சொல்லுகிறான் வாரும் ஏ குரோ இந்தநானென்கிற அகம்விர்த்தியாகிற சத்தியானது சாக்ஷியைத்தானிப்படி விகாரியாய்த் தோற்றுவிக்கிறதோ அன்றியிலேபோனாற் றானாகவிப்படி நானென்று விகாரியாய்ச் சாக்ஷியினிடத்திலே தோன்றுகிறதோ விந்தச் சமுசயத்தைப் போக்கவேண்டுமென்று கேட்ட சீடனைப் பார்த்துக்குருசொல்லுகிறார். (௫௫)

வாராய் சீடா சத்திதானே இப்படித் தோன்றுகிறதாவென்று கேட்டாயே அதுகூடாது ஏனென்றால் ஆத்மாவைத்தவிரத் தனக்கு வேறேசொரூபமில்லாமற் போகிறபடியினாலே தான்றானே தோன்றமாட்டாது பின்னையோவென்றாற் றனக்கு அதிஷ்டானமான ஆத்மாவைத்தானே விகாரியாய்க் காண்பிக்கிறது அதெப்படிப்போலே

யென்றால் ரச்சுவிலேயிருக்கிற சத்தியானது தான்றானே சர்ப்பமாய்த்தோன்றமாட்டாமல் ரச்சுவைத்தானே சர்ப்பம்போலே எப்படித்தோற்றுவிக்கிறதோ ஜலத்திலேயிருக்கிறசத்தி ஜலத்தைத்தவிரத்தான்தோன்றமாட்டாமற் ஜலத்தைத்தானே அலை நுரை குமிழியாக யெப்படித் தோற்றுவிக்கிறதோ அக்கினியிலே யிருக்கிற சத்தி அக்கினியைத்தவிர தான்தோன்றமாட்டாம லக்கினியைத்தானே பொறியா யெப்படிக்காண்பிக்கிறதோ அப்படிப்போல சாக்ஷியினிடத்திலே இருக்கிறமாயையும் தனக்கு ஆத்மாவைத்தவிரச் சொரூபமில்லாதபடியினாலே தான்தோன்றமாட்டாது மிருத்துவிலே இருக்கிற சத்தி மிருத்தைத்தானே கடாகாரமாய்த் தோற்றுவிக்கிறதுபோல ஆத்மாவைத்தானே விகாரியாய் நானென்று ஜீவனாய்த் தோற்றுவிக்கிறது. (ருகூ - ருஎ)

வாரும் ஏ குரோ ஆத்மாவை மாயையானது ஜீவனாய்ப் பண்ணிற்றென்று சொன்னீரே அதெப்படி ஆத்மாவானால் அசங்கர் ஆகாசம்போலே வொட்டாம லொருவிகாரமுமன்றியிலே நிர்விகாரியாயிருக்கிறவரன்றோ அப்படிப்பட்டவரை மாயை யெப்படித்தான் விகாரியாய்ச் ஜீவனாய்ப்பண்ணும் இது கூடாது இதெப்படிப்போலே இருக்கிறதென்றா லாகாசத்தைப்பிடித்து ஒருத்தன் புருடாகாரமாய் பண்ணினான் நான்கண்டேனென்று சொல்லுகிறாப்போலவும் வாயுவைப்பிடித்துப் பிண்டமாயுருட்டிக் குதிராய்ப் பண்ணினானென்கிற விசேஷம்போலவும் நீர்சொன்னவிசேஷமுங் கூடாததாய் அசங்கதமாய்க்காண்கிறது ஆகையினாலே சந்தேகமாகிற சமுத்திரத்திலே மூழ்கிப்போகிற யென்னை யுத்தாரணம் பண்ணுமென்று கேட்டசீடனுக்குக் குருசொல்லுகிறார். (ருஅ-ருகூ-கூ0)

கூடாததைக் கூட்டிவைக்கிறது மாயைக்குச் சுபாவந்தானே இல்லாமற்போனாலதற்கு மாயாசத்தியென்கிறபெயரே இல்லாமற்

போம் இல்லாததைஉண்டானதுபோலத்தோற்றிவிக்கிறசாமர்த்தியம் யாதொன்றுண்டோ அதற்கு மாயாசத்தியென்று நாமம் நிராலம்பமா யிருக்கிற ஆகாசமத்தியிலே கந்தருவநகரத்தைத் தோற்றிவிக்கிற இந் திரசாலக்காரனுடைய சாமர்த்தியத்திற்கு மாயையென்று எப்படி ப்பேருண்டாயிற்றோ அதெப்படிக்கூடாததைக் கூட்டிவைக்கிறதோ அப்படிப்போலே இந்த மாயாசத்தியுங் கூடாததைக் கூட்டிவைக்கிற துயுக்தமென்றறி. (சுக)

இதற்குத்திருஷ்டாந்தமேதென்றால் நித்திராசத்தியுஞ் சொற் பனமுமென்றறி அதெப்படியென்றாற் சொல்லுகிறோ மொருஜீவனி டத்திலேஇருக்கிற நித்திராசத்தி கூடாதசொற்பனங்களைக்கற்பிக்கிற து அதெப்படியென்றாற் கிரகத்துக்குள்ளே கட்டிலிலே சயனித்துக் கொண்டு நித்திரைபண்ணுகிற புருடன் சொற்பனத்திலே பசுபட்சி மிருகாகாரமாய் நானுவிதிக்கெல்லாம்போய்ப் பிரமிக்கிறான் கிரகத் திலே சய்யையிலே சுகமாய்நித்திரைபண்ணுகிறவனைக் காசியிலேயுஞ் சேதுவிலேயும் போயலைகிறவனாய்த் தோற்றுவிக்கிறது இதுமாத்தி ரமுமன்று சுகமாய்த்தூங்குகிறவன் நிர்விகாரியாயிருந்தாலுந் தான் ஆகாசத்திலே பறக்கிறவனாயுந் தலைகீழாய்விழுகிறவனாகியுந் தன்தலை யைவெட்டிக் கையிலேபிடித்துக்கொண்டு போகிறவனாயுங் கூடாத தைக்காண்கிறான் சொற்பனத்திலே இதுயுக்தம் இப்படிக்காணலாம் இது அயுக்தம் இப்படிக்காணலாகாதென் றொருவிவஸ்தையுங் காண க்கிடையாது அதிலேயெப்படி யெப்படிக் காண்கிறானோவதுவதேயுக் தமென்கிறதொழிய வொருவிவஸ்தையுமில்லை இப்படியற்பமாயிருக்கி றவொருநித்திராசத்திக்கே கூடாததைக் கூட்டிவைக்கிறதாய் இப்படி ப்பட்டமகிமையுண்டானால் மஹாமாயாசத்திக் கிப்படிப்பட்ட அநிர்வ சநீயமாயிருக்கிற மகிமையுண்டென்கிறதிலே ஆச்சரியமேது கூடாத

தைக்கூட்டிவைக்கிறதே மாயைக்குச் சொரூபமென்றறி. (சுஉ-சுரு-சுச-சுரு-சுசு)

வாராய்சீடா மாயைகூடாததைக் கூட்டிவைக்குமென்கிற இந்த வர்த்தத்திலே இன்னமுனக்குச் சந்தேகமுண்டானால் ஒருகதை சொல்லுகிறோம் வாசிட்டத்திலே விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறது அதைச்சங்கிரகித்துச் சொல்லுகிறோம் கேள் அத்தைக்கேட்டாலு னக்குத்தானே இந்த வர்த்தமானன்றாய்த் தெரியும் அதேதென்றாற் சொல்லுகிறோம். (சுஎ)

இட்சுவாகு வமுஷத்துக்குத் திலகபூதனாய் லவணமஹா ராஜாவென்று ஒரு ராஜாவுண்டு அவனொருக்காற் சபையிலே சிங் காசனத்திலே சகலமான ஜனங்களோடே இருக்கிறவேளையிலே ஒரு இந்திரஜாலக்காரன்வந்தான் மகாவேகத்தோடேவந்து சிங்காசனத் திலிருக்கிற ராஜாவை நமஸ்காரம்பண்ணி யொருவார்த்தைசொன் னான் வாரும் ராஜாவே சற்றே யொருவினோதங் காண்பிக்கிறேன் அதைப்பாருமென்று சொல்லிப்போட்டுத் தன்கையிலிருக்கிற மயிற் றோகையைச்சுற்றினான் சுற்றினமாத்திரத்திலேஅந்த ராஜாவானவன் பிரமித்துத் தன்னைமறந்துபோய் வேறேயொருவிதமாய் விபரீதமா ய்ச் சொற்பனங்கண்டாற்போலே யொரு பிராந்தியைக்கண்டான் அதேதென்றால் மனதிலே பிரமையினாலே யொருகுதிரையைக் கண்டு அதின்மேலேறிக்கொண்டு வேட்டையாட வேண்டுமென்று காட்டிலேபோனான் அனேகம்போது வேட்டையாடிச் ஜலமுங்கி டையாமற் பசிதாகத்தினாலே இளைப்பையடைந்து மஹாதுக்கிதனா யிருக்கிறபோது அவடத்திலே யொருசண்டாளக் கன்னிகையான வள் கையிலே யொருபல்லாவிலே அன்னங்கொண்டுவந்தாள் அவ ளைக்கண்டு பசிசகிக்கமாட்டாமல் ஆபத்தினாலே அவளை அன்னங் கேட்டான் அவளென்னை விவாகம்பண்ணிக்கொண்டாற் றருகிறே

னென்றுசொன்ன ளத்தைக்கேட்டு அந்தராஜா இந்தவாபத்துக்குப் பிழைத்தாற்போருமென்று அவசியமாய் விவாகம்பண்ணுகிறேனெ ன்று அன்னம்வாங்கிப்புசித்தா னதற்குப்பின்பு சண்டாளவாடிகை யிலேபோ யவளைவிவாகம்பண்ணி யவளோடேரமித்துக்கொண்டு அவளிடத்திலே யிரண்டுபிள்ளையு மொருபெண்ணும்பெற்று வெகு நாள் அவளோடேகூடச் சண்டாளவாடிகையிலே யிருந்ததாய்க்கண் டான் சிங்காசனத்திலே யிருந்தபடிதானே யொருமுகூர்த்தத்திலே வெகுகாலஞ் சண்டாளனாய்ப்போயிருக்கிறதாய் மனோப்பிரமையினா லேகண்டானென்றிப்படி வெகுஉபாக்கியானங்களினாலே இராமனு க்கு ஸ்ரீவசிட்டர் மனோசத்தியினுடைய விலாசத்தை விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறு ராகையினாலே மனோசத்தி கூடாததைக்கூட்டி வைக்குமென்றறி. (சா அ-சாகக-எ0-எக-எஉ-எங-எச)

வாராய் சீடா மனோசத்தியானது எந்தெந்தப்பிராந்தியை தான் கற்பிக்கமாட்டா தெவனெவனைத்தான மோகம்பண்ணிவிக்க மாட்டாது வகடிதகடிதம்பண்ணுகிறதே விருதாயிருக்கிறமாயைக் குப் பண்ணப்படாதது எதுதானிருக்கிறது ஆகையினாலே நிர்விகார ராய் அசங்காரா யிருக்கிற ஆத்மாவையும் விகாரியாய்ப்பண்ணிற்று அசங்கமாய் நிரவயமாயிருக்கிற வாத்மா விகாரியாயெப்படித்தோன் றுவரென்றால் நிரவயமாயிருக்கிற வாகாசமானது நீலாதிரூபமா யெப் படித்தோன்றுகிறதோ வப்படிப்போல பரமாத்மாவுஞ்சுத்தரானு அ மகம்பாவனையினாலே நானென்று லவணராஜாவானவன் நீசத்துவத் தை யடைந்ததுபோலப் பிராந்தியினாலே ஜீவத்துவத்தையடைந் தாரென்று குருசொன்னர் சீடன் கேட்கிறான். (எரு-எசா)

வாரீர் ஏ குரோ இப்படிநானென்கிற அகம்விர்த்தியையடைந் தந்தப்பிராந்தியினாலே ஜீவனாயானார் பரமாத்மாவென்றால் அப்போ

பரமாத்மா பிராந்தியினாலே யொரு ஜீவனாயன்றோ தோன்றவேண்டுமப்படி யில்லாம லனேகஜீவாள் தோன்றுகிறாளே யதெப்படி யொருவாத்மாவுக்கு அனேகஜீவப்பிராந்தி யெப்படிக்கூடு மிதையெனக்குத் தயையினாலே சொல்லுமென்று கேட்டசீடனைப்பார்த்துக் குரு சொல்லுகிறார். (எஎ)

வாராய்சீடா சுத்தராயிருக்கிற பரமாத்மாவினிடத்திலே நானென்கிற வொரு ஜீவப்பிராந்தி யெப்படிவந்ததோ அப்படிப்போலேதானே நானாஜீவத்துவப்பிராந்தியுஞ் சிதாகாச சொரூபமாயிருக்கிற தன்னிடத்திலேதானே படிகமண்டபத்திலே நாய்போலத் தோன்றுகிறதென்றறி படிகமண்டபத்திலே நாயாவதேதென்றால் ஒருபடிகமயமாயிருக்கின்ற மண்டபத்திலே யொருசுவானமானது வந்தது அதினுடைய சாயையானது படிகஞ் சொச்சமானபடியினாலே கல்லுக்குக்கல்லு பிரதிபலித்தது அதைக்கண்டு சுவானமானது அனேக சுவானமாக வெண்ணிக்கொண்டு எப்படி யுங்காரம்பண்ணுகிறதோ வப்படிப்போலே சுத்தமாய் அத்தொய்தமாய்ச் சிதாகாசசொரூபமாயிருக்கிற தன்னிடத்திலே பூருவவாசனைப் பிராந்தியினாலே நானென்று ஜீவப்பிராந்தி வந்தாற்போல நானாஜீவப்பிராந்தியும் பூருவவாசனையினாலே தோன்றுமென்றறி. (எஅ-எகூ-அ0)

இதிலே இன்னமொரு திருஷ்டாந்தஞ் சொல்லுகிறேன்கேள் சொப்பனத்திலே யொருத்தனாயிருக்கிற தன்னிடத்திலே தான் தானே சாக்கிரத்து வாசனையினாலே நானென்றும் நீயென்றும் அவனென்று மிவனென்றும் விருதாப்பிராந்தியினாலே நானாஜீவானை யெப்படிக்காண்கிறானோ வப்படிப்போலே யிந்தச்சாக்கிரத்திலேயும் பூருவவாசனையினாலே சிதாகாசமாயிருக்கிற தன்னிடத்திலே விருதாப்பிராந்தியினாலே நீயென்றும் நானென்று மவனென்று மிவனென்றுங்

ஜன்மவாசனையினாலே தோணுகிறதென்றாற் பிரளயத்திலே வாசனைக ளெல்லாம் லயித்துப்போகிறபடியினாலே யிந்தக்கற்பாதியிலே வாசனை யெப்படித் தோணுமென்றாற் சுழுத்தியிலே லயித்திருக்கிற வாசனை மறுநாளெப்படித்தோணுகிறதோ வப்படிப்போலே பூர்வ பூர்வகற்ப வாசனை பிரளயத்திலே லயித்திருந்து விந்தக்கற்பத்திலே தோணு கிறது ஆகையினாலே மாயாவாசனை யநாதியானபடியினாலே பூருவ வாசனையே யிந்தச் ஜன்மத்திலே தோணுகிறதென்றறி. (௬௨)

வாருமய்யா ஏ குரோ இப்படிப் பூர்வ பூர்வ ஜன்மத்திலே யநு பவித்த வாசனைக ளிப்போ தோணுகிறதானா லப்போ இன்னாராய் இப்படி யிருந்தோமென்று யிப்போ தோணவேண்டும் எதுவெது பூர் வமநுபவிக்கப்பட்டதோ வதுவெல்லா மிப்போ நினைக்கப்படுகிறதே யாகையினாலே பூர்வ ஜன்மாநுபவ மிப்போ யேனினைக்கப்பட வில்லை யதைச் சொல்லவேண்டுமென்று கெட்டசிஷனைப்பார்த்துக் குரு சொல்லுகிறார். (௬௩)

பூர்வ ஜன்மவாசனையே யிப்போ தோணினாலும் பூர்வபாவ மிப்போ நினைக்கப்படாது அதெப்படிப்போலேயென்றாற் சாக்கிரத்தி லே யாதொரு யாதொரு வாசனையுண்டோ வந்தந்தவாசனை சாக்கிர த்து வாசனாமயமாயிருக்கிற சொப்பனத்திலே தோன்றினாலுஞ் சாக் கிரத்திலேயிருந்தபாவஞ் சொப்பனத்திலே நினைக்கப்படவில்லைப் பின்னை யெப்படியென்றாற் சாக்கிரத்துவாசனைதானே சுழுத்திமோ கத்தினாலேமறந்துபோய்ச் சொப்பனத்திலே பின்னையொருபாவனை யாயுண்டாகிறது ஆகையினாலே சாக்கிரதாபாவஞ் சொப்பனத்திலே யெப்படி நினைக்கப்படவில்லையோ வப்படிப்போலே பூர்வஜன்ம வாசனை யிந்தஜன்மத்திலே தோன்றினாலும் மரணமூர்ச்சாமோகத்தி னாலே பூர்வஜன்மபாவம் மறந்துபோயிந்தவாசனைதானே யிப்போ

திந்தஜன்மத்திலே வேறேயொருவிதமாயிருக்கிறபாவனையாக வுண்டாகிறதாகையினாலே பூர்வஜன்மபாவமிப்போ நினைக்கக்கூடாதென்றறியென்றுசொன்ன குருவைப்பார்த்துச்சீடன்கேட்கிறான். கச-ரு

வாரீர் ஏ குரோ யிப்படிச்சொற்பன சமானமாய் சாக்கிரத்தும் பிராந்தியென்றுசொல்லுகிறதெப்படிச் சொப்பனமானது வாசனாமயமாய்த்தோன்றிச் க்ஷணத்திலே யசத்தியமாய் நசித்துப்போகிறபடியினாலே யதைப்பிராந்தியென்கிறது யுக்தஞ் சொப்பனம்போலே நசித்துப் போகாமற் பிரமாணமூலமாய்ச் சத்தியமாய்த் தோன்றுகிற சாக்கிரத்துப்பிராந்தியென்கிற தெப்படியென்றுகேட்ட சீடனைப் பார்த்துக் குரு சொல்லுகிறார். (கசு)

வாராய் சீடா சாக்கிரத்துப் பிரமாணமூலமாய்த் தோணுகிறதென்றனையே அப்படிப்போலே சொப்பனமுஞ் சொப்பனங்காணுகிறகாலத்திலே பிரமாணமூலமாய்ச் சத்தியமாகத்தானே தோணுகிறதேயொழிய வப்போதசத்தியமாய்த்தோன்றவில்லையே விழித்த பிற்பாடு சாக்கிரத்திலே யசத்தியமாய்ப்போகிறது அப்படிப்போலே யிந்தசாக்கிரத்துந் தான்தோன்றுகிறகாலத்திலே பிரமாணமூலமாய்ச் சத்தியமாய்த்தோன்றும் ஞானத்தினாலே தன்னுடையசொரூபத்திலே விழிக்கிறபோது இதுவு மசத்தியமாய்ப்போமென்றறி யானாற் சொப்பனத்துக்குஞ் சாக்கிரத்துக்கும் பேதமேதென்றாற் சொல்லுகிறேன் கேள். (கஎ-கஅ)

சாக்கிரசொப்பனங்க ளிரண்டும் வாசனா மயங்களானபடியினாலே யிரண்டும் பிராந்திசொரூபமே சந்தேகமில்லை பேதமேதென்றாற் சாக்கிரத்துஸ்திரப் பிராந்தியென்றுஞ் சொப்பனம் அஸ்திரப் பிராந்தியென்றுஞ் சொல்லுகிறதே பேதமன்றியிலே வேறேயொரு பேதம் லேசமுமில்லையென்றறி. (கக)

சாக்கிரத்து மிப்படிச் சொப்பன சமானமானு லிந்தச்சாக்கிரத்தாகிற சொப்பனத்தைக் காண்கிறவா ளாரொன்றுற் சொல்லுகிறோங் கேள் சிதானந்தமயராய் அத்தோய்தராய் அசங்கராயா யிருக்கிற ஆத்மாவினுடைய சொப்பன மித்தனைஜகத்துமென்றறி யானுல் நித்திரையினுலேயன்றோ சொப்பனம் வரவேண்டும் பரமாத்மாவுக்கு நித்திரையேதென்று லனுதிகாலத்தைத்தொட்டுத் தன்னுடைய சொரூபத்தையறியாத வஞ்ஞானமாகிற நித்திரைனுலே ஜகத்தாகிற சொப்பனமுண்டாயிற்று பரமாத்மாவானவர் தம்முடைய வஞ்ஞானப்பிராந்தியினுலே ஜகத்தாகிற சொப்பனத்தைக் காண்கிரு ராகையினுலே நித்திரைபண்ணுகிறவன் சொப்பனப்பிராந்தியினுலே சமுசாரத்தை யடைகிறுப்போல நிருவிகாரமாயிருக்கிற பரமாத்மாவும் பிராந்தியினுலே ஜீவத்துவத்தையடைந்து ஜகத்தாகிற சொப்பனத்திலே சமுசாரத்தையடைகிரு ரதெப்படியென்றுற் சொல்லுகிறோங் கேள். (கoo)

ஜீவனுனவன் சொப்பன பதார்த்தம்போலத் தோன்றுகிற தேகேந்திரியாதிகளை மோகத்தினுலே தானுய்க்கண்டு வதுகளோடேதாதான்மியவத்தியாசத்தை யடைந் ததுவே தானுய்க்கண்டு அதுகளோடேயொன்றுய்ப்போனு னுகையினுலே தேகத்திரயங்களுடைய அவத்தாத்திரயத்தை * யடைந்தத்துவாரா வெகுவித சமுசாரத்தை யடைகிறுன். (கoக)

சாக்கிரத்தாவதேதென்றுல் அகம்விர்த்தியாதி சகல விர்த்திகளுஞ் சகல விடயங்களோடேகூடத் தோன்றுகிறதே சாக்கிரத்தென்றுபெயர் தூலசரீரத்திலே நானென்று அபிமானித்துக்கொண்டு அந்த அவத்தாபிமானத்தினுலே விசுவனென்று பெயராய்த் தூலவிடயபோகங்களைப்புசிக்கிறுன் சொப்பனமாவதேதென்றுற் பாகியேந்திரி

---

*அடைந்து தத்துவாரா – என்றும்பாடம்.

யங்களெல்லா மொழிந்துபோன பிற்பாடு மனோவிர்த்தியினுடைய சாக்கிரத்துவிடய சமஸ்காரமே சொப்பன மதிலே யபிமானித்துக் கொண்டு தைசதனென்று பெயராய்ச் சூட்சுமபோகங்களைப் புசிக்கிறான் சுழுத்தியாவதேதென்றாற் சகல விர்த்திகளுங் காரணமாயிருக்கின்ற வஞ்ஞானத்திலே லயித்திருக்கிறதே சுழுத்தி யதிலே இந்தச் ஜீவன்றானே பிராஞ்ஞனென்று பெயராய் அந்த அவத்தாபிமானியாயப் பிரமானந்த போகத்தைப் புசிக்கிறான். (கoஉ-கoரு-கoச)

இந்தப்பிரகாரமாய்ச் ஜீவனானவனிந்த அவத்தாத்திரயங்களையும் அடிக்கடி திரும்பித்திரும்பி யடைகிறான் எதனாலே யென்றாற் ஜன்மாந்திர கன்மயோகத்தினாலென்றறி யதெப்படியென்றாற் சாக்கிரத்துப்போகங் கொடுக்கிறதாயிருக்கிற கருமமுற்பவமா யாகிறபோது சாக்கிரத்தை யடைகிறான் சொப்பனபோகங்கொடுக்கிறதாயிருக்கிற கருமம்வருகிறபோது சொப்பனத்தை யடைகிறான் சுழுத்திபோகங்கொடுக்கிறதாயிருக்கிற கருமம்வருகிறபோது சுழுத்தியை யடைகிறான் அடிக்கடி யிந்தப்படி கருமவசத்தினாலே யவத்தைகளை யடைந்து சமுசாரிக்கிறா னிப்படிப்போலேதானே கருமவசத்தினாலே தானே ஜனனமரணங்களை யடைகிறானென்றறி. (கoரு)

வாராய் சீடா ஜனனமரணாதியாயிருக்கிற சமுசாரமும் அவத்தாத்திரயங்கள் தோன்றுகிறாப்போல மனோப்பிராந்தியினாலே தோன்றுகிறதுமாத்திரமேயன்றியிலே பரயார்த்தமாயில்லையென்றறி ஜனிக்கிறவன்போலேயுமரிக்கிறவன்போலேயுந் தோன்றுகிறதுமாத்திரம் அதெப்படித்தோன்றுமென்றாற் ஜனனமரணந் தோன்றுகிறகிரமத்தைச்சொல்லுகிறோம் சூட்சும புத்தியினாலே கேள். (கoசு)

ஜீவனானவன் க்ஷணத்திலே நித்திரா மோகத்தையடைந்து சாக்கிரபாவனையையெல்லா மறந்துபோய் வேறேயொரு பாவனையை சொப்பனத்திலே காணுகிறாப்போல க்ஷணத்திலே மரணமூர்ச்சை

யையடைகிறுன் அடைந்த வந்தக்ஷணத்திலே யிந்தப்பாவனையெல் லாமறந்துபோய் மறந்த வந்த க்ஷணத்திலே சொப்பனம்போலே மனோபாவனை வேறேயொரு பிரகாரமாய்த்தோணு மிப்படிச்சுழுத்தி யிலே யொன்றுந்தோன்ருமற் போனுற்போலே யொன்றுந்தோன் ருமற்போகிற மூர்ச்சையே மரணமென்றறி சாக்கிரபாவனைமறந்து சொப்பனந் தோன்றுகிறுப்போல யிந்தப்பாவனைமறந்து வேறேயொ ருபாவனை தோன்றுகிறதே ஜனனமென்றறி ஜனனந்தோன்றுகிற கிரமமெப்படியென்ரு லிதோ விதுமாதாவினுடையவுதர மிந்தவாதா ரத்திலே ஆதேயமாய்க் கெற்பமாய் நாமிருக்கிறோமென்று முன்னே தோன்றுகிறது பின்பு கையுங்காலுமாக விருக்கிறசரீரம் நம்மது யிது வேநாமென்று காண்கிறுன் பின்பு நாஞ் ஜனித்தோமென்றுமிவனம் முடையபிதா இவனுடைய புத்திரனுமென்றும் நமக்கித்தனை வயதா யிற்றென்று மிதோயிருக்கிற யிவர்கள் நமக்கிஷ்டாளான பெந்துக் களென்றும் ரமணியமாயிருக்கிற விந்தக்கிரகம் நமதென்று மித்தியா தியாய்ச் சகலசமுசாரமுஞ் ஜகத்துஞ் கிரமமாய் மித்தியாபூதமான மரணமூர்ச்சையடைந்த அந்தக்ஷணத்திலே கருமானுசாரமாய்ப் பிரா ந்தியினுலேதோன்றுகிறதுமாத்திரஞ் ஜனனக்கிரமமிப்படியென்றறி. (கoஎ-கoஅ-கoக)

ஜனனக்கிரம மெப்படித்தோணுகிறதோ வப்படிப்போலே லோகாந்தர கெமனுதிகளு மவனவன் கருமானுசாரமாய்த் தோன்று கிறதுமாத்திரம் அதெப்படியென்ருற் பொய்யான மரணமூர்ச்சை யடைந்த அந்தக்ஷணத்திலே யிதோ சுவர்க்கம் மகாரம்மியமாயிருக் கிறதென்றுந் தான்போகிறதாயு மிதோ நாமதிசுந்தராகிருதியாய்த் தேவனுனேமென்று மிதோ அக்ஷரஸ்திரீகளதிமனேகரியளாய் நமக் கிருக்கிறுளென்று மிதோ நமக்கு * அதிகாசமாய் அமிர்தமிருக்கிற

* அதிகரசமாய் - என்றும்பாடம்.

தென்றும் இதோ வைவசுதபுரம் இதோவிதுநரகம் இதோயமன் இதோ யமபடா ளதிககுரூராளாயிருக்கிறாள் நம்மை நரகத்திலே போட்டா ளென்று மிதோ பிதுர்லோகமென்று மிதுசத்தியலோகமென்று மிது மனோகரமாயிருக்கிற வைகுண்டமென்று மிதுசிவலோகமென்று மே வமாதியாய்ச்சுவசுவகருமானுசாரமாய்வாசனையினாலேதோணுகிறது மாத்திர மிப்படிச் ஜனன மரண லோகாந்தர கெமனங்கள் சமுசார ங்களெல்லாஞ்சிதாகாசசொரூபமாய் இருக்கிறதன்னிடத்திலேமனோ வாசனைப் பிராந்தியினாலே தோணுகிறதேயன்றியிலே பரமார்த்தமா வொன்றுமில்லை யென்றறி. (கoய.கககக-ககஉ-ககங)

சிதாகாசமாயிருக்கிற தன்னிடத்திலேஜகத்தாகிற கந்தருவநக ரமானது பிரதீதிமாத்திர சத்தாகமாய்த்தோணுகிறதுமாத்திரமேயன் றியிலே நிசமாகச் சொரூபமில்லை நாமரூபமாத்திரமாயிந்திரசாலம் போலே தோணுகிறதுமாத்திரமென்றறி. (ககச)

சீடன்கேட்கிறான் வாரும்ஏ குரோபிரத்தியக்ஷமாய்ப் பிரமா ணமூலமாய்ச் சத்தியமாய்ச் சராசராத்மகமா யனேகவிதமாய்ச் சகல பானபேராலும் பிரத்தியக்ஷமாய் அநுபவிக்கப்படுகிற இந்தச்ஜகத் தை யசத்தியமென்றெப்படிச்சொல்லுகிறதென்று கேட்ட சீடனைப் பார்த்துக் குரு சொல்லுகிறார். (ககரு)

வாராய் சீடா இப்படிச் சராசராத்மகமாய் நானாவிதமாயிருக் கிற சகலஜகத்துஞ் சிதாகாசமாயிருக்கிற தன்னிடத்திலே யாரோ பிக்கப்பட்டுத் தோணுகிறதென்றறி யெதினாலேயாரோபிக்கப்பட் டுத்தோணுகிறதென்றாற்றன்னுடைய சொரூபத்தையறியாத வஞ் ஞானப்பிராந்தியினாலே யாரோபிக்கப்பட்டுது அதெப்படிப்போலே யென்றால் லொருபித்தியிலே சராசராத்மகமாயிருக்கிற சித்திரமா ரோபிக்கப்பட்டாப் போலென்றறி. (ககசு)

சீடன் கேட்கிறான் வாரீர் ஏ குரோ ஈசுரனானவர் சங்கற்பத்தினாலே சகலஜகத்தையுந் தான்தானே கற்பித்தாரென்றன்றோ சுருதிசொல்லுகிறது அப்படியன்றியிலே யிங்கே நீரானால் தன்னுடைய வஞ்ஞானப்பிராந்தியினாலே சகலஜகத்துஞ் சிருஷ்டிக்கப்பட்டதென்று சொல்லுகிறீர் அதெப்படிக் கூடுமென்று சீடன்கேட்டான் குருசொல்லுகிறார். (கக௭)

சுருதி ஈசுரன்சிருஷ்டித்தாரென்று சொல்லுகிறது நாமிப்படியிப்போசொன்னோமதிலேதோஷமில்லை யேனென்றாற்சுருதிக்கு விரோதமில்லாதபடியினாலேயென்றறி யேதென்று லீசுரன்மாயையினாலேஆகாசாதிபூதங்களைச்சிருஷ்டித்துப்பஞ்சீகரணம்பண்ணித்தேகாதியண்டாந்த ஜகத்தைச்சிருஷ்டித்தாரென்றுசொல்லுகிற சுருதியினுடையவிருத்தாந்தம் பொய்யென்றறி சுருதிசொல்லுகிறதைப் பொய்யென்றெப்படிச் சொல்லுகிறதென்றாற் பாலனுக்குப்போதிக்கிற நிமித்தமாய்ச் சொல்லுகிறதேயன்றியிலே யெதார்த்தமாய் சுருதிக்கது அபிப்பிராயமன்று அதெப்படி யென்றால் அனாதியஞ்ஞானத்தினாலே பரிச்சின்னனாய்த் தேகாகாரனாயிருக்கிற மூடனுக்குன்னுடைய பிராந்தியினாலே யித்தனை ஜகத்து முண்டாயிற்றென்று சொன்னா லவனுக்கு நாமாவது பரிச்சின்னனாயிருக்கிறோ நாமெப்படி யித்தனை ஜகத்துக்குங் காரணமாகப்போகிறோமென்று விபரீதப் பிராந்திவருகிற படியினாலே அதற்காக ஈசுவரனொருத்தனுண்டு அவர் சிருஷ்டித்தாரென்று சுருதியானது வஞ்ஞானத்தினாலே மூடனாய்ச் சிதாகாசசொரூபமாய்ப் பரிபூரணனாயிருக்கிற தன்னுடைய சொபாவத்தை யறியாமற் பிரமிக்கிற பாலனுக்குப் போதிக்கிறதென்றறி பரமார்த்தமாய்த் தன்னுடைய பிராந்தியினாலே கற்பிக்கப்பட்டதேயன்றியிலே வேறே யொன்றுமில்லை யென்று ரகசியார்த்

தமாய்ப்பரமார்த்தத்தை யதிகாரிக்குப்போதிக்கிறது ஆகையினாலே பாலபோதனார்த்தமாய்ப் பொய்யாய்ச்சொல்லுகிற விருத்தாந்த முனக்கு மோகத்தினாலே சத்தியம்போலே தோணுகிறது அதெப்படிப்போலேயென்றால் பாலகாக்ஞாயிகைபோலேயென்றறி யென்றுசொன்ன குருவைப்பார்த்துச் சீடன் சொல்லுகிறான். (கக௮)

வாரும் ஏ குரோ பாலகாக்ஞாயிகையாவதேது மஹா வதிசயமாயிருக்கிறது இந்தச் ஜகத்தை யில்லையென்று பிரதிபாதிக்கிறதிலே திருஷ்டாந்தமாயிருக்கிறதைச் சொல்லவேணுங் தயையினாலென்று சீடன் கேட்டான் குரு சொல்லுகிறார். (ககக)

வாராய் சீடா பாலகாவுபாக்கியானமாவதேதென்றால் வாசிட்டத்திலே வெகு பிரகாரமாய்ச் சொல்லியிருக்கின்றது அதை யெல்லாஞ் சங்கிரகித்துச்சொல்லுகிறோங் கேள் அதைக்கேட்டமாத்திரத்திலே ஜகத்துச்சத்தியமென்றும் ஈசுவரன் சிருஷ்டித்தாரென்றுந் தோன்றுகிற விபரீதப்பிராந்தியெல்லாம் போய்விடுமென்று குரு கதை சொல்லுகிறார். (க௨௦)

வாராய் சீடாமூடனாயிருக்கிற வொருபாலன் ஸ்தன்னியபானங்கொடுக்கிற தாத்திரியைப்பார்த்து விநோதமாயொருகதை சொல்லென்று கேட்டான் அவனுக்கு விநோதார்த்தமாய் தாத்திரியானவள் மஹாமநோகரமா யொருகதை சொன்னாள் அதே தென்றாற் சொல்லுகிறோங் கேள். (க௨க - க௨௨)

மகா பராக்கிரமசாலியாய் மூன்றுலோகத்திலேயும் பிரசித்தனா யொரு ராஜாவுண்டு அவனுக்குப்பெயரே தென்றால் வந்தியாசுதனென்று பெயர் அவனுடைய ஆக்கினையைச் சகலலோகத்திலேயுமிருக்கிற ராஜாக்களுஞ் சூடாமணிபோலே சிரசிலே வகிப்பாள்

அந்த வந்தியாசுதனென்கிற ராஜாவானவன் மகாமாயாவியா யிருப்பன் மாயையினாலே ஜகத்தைமுதலாய்ச் சிருஷ்டிக்க ரக்ஷிக்க சங்கரிக்கத்தக்க சாமர்த்தியமுண்டு அவனுக்குப் பீதவர்ணமாயுங் கிருஷ்ண வர்ணமாயுஞ் சுவேதவர்ணமாயு மூன்று தேகமுண்டு அவனந்தப்பீத வர்ணமாயிருக்கிற தேகத்தையெப்போ வடைகிறானோ அப்போ அவனுக்கு ஓரிச்சையுண்டாகிற தந்தவிச்சையினாலே இந்திரசாலக்காரன் போலே மாயையினா லொருபட்டணத்தைச் சிருஷ்டித்தான். (கஉ௩-கஉ௪-கஉ௫-கஉ௬)

அந்தப்பட்டண மெங்கே நிர்மித்தானென்றால் ஆகாசத்திலே நிர்மித்தானதற்குப்பேரேதென்றா லத்தியந்த மசத்தென்று பெயர் இவ்வத்தியந்தவசத்தென்கிற பட்டண மெப்படி யிருக்கிறதென்றாற் பதினான்கு ராஜவீதிகளோடே கூடியிருக்கும் அந்தப்பதினான்கு வீதியும் மூன்று விபாகமாயிருக்கு மதிலே யுத்தியானவனங்கள் அனேகமாயிருக்கும் அனேக வுப்பரிக்கை யுண்டு முத்து மாலையினாலே தோரணங்கள் கட்டியிருக்கும் ஏழுகடைவாவியினாலே அலங்காரமாயிருக்கு மந்தப்பட்டணமெல்லாந் தெரிய அணையாத்தீபமாய்ச் சீதமாயுமூஷ்டண மாயுமிரண்டு தீபம் வைத்திருக்கு மிப்படிப்பட்ட பட்டணத்திலே அந்த ராஜாவானவன் மனோகரமா யனேககிரகங்கள் கட்டினா னதிலே யுன்னததேசத்திலே சிறிது கிரகங்களும் அதோதேசத்திலே தாழச்சிறிது கிரகங்களும் மத்தியிலே சிறிது கிரகங்களுமாய் கிர்மித்தா னந்தக் கிரகத்துக்கெல்லா மேலுக்கு கிருஷ்ணவர்ணமாயிருக்கிற கத்தைபோட்டுக் கட்டியிருக்கும் ஒவ்வொரு கிரகத்துக்கு ஒன்பது வாசல் விட்டிருக்குஞ் சார்வகாலமுங் காற்று வரத்தக்கதாக அனேக பலகணிவாசலுண்டு ஐந்து தீபங்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு கிரகத்துக்குச் சுக்கில வர்ணமாய் மும்மூன்று தம்பம் காட்டியிருக்கும் மேலே மிருதுவாய் நன்றாய்ப்பூசியிருக்கு மிப்படிப்

பட்ட கிரகங்களை ரட்சிக்கிறதற் கொவ்வொரு கிரகத்துக் கொவ்வொரு யெட்சகை மாயையினாலே மஹா பயங்களாய்ச் சிருஷ்டித்தி ரட்சிக்கிறவர்களாய் வைத்தா னிப்படிச் சிருஷ்டித்துக்கொண் டந்த ராஜாவானவன் அந்தக்கிரகங்களிலே பக்ஷி கூட்டிலே பிரவேசிக்கிறாப்போலே பிரவேசித்துக்கொண்டு நானாவித லீலையை யடைகிறான். (கஉஎ-கஉஅ-கஉகூ-கங0-கஙக-கஙஉ-கஙங-கஙச)

அந்த ராஜாவானவன் கிருஷ்ணவர்ணமாயிருக்கிற தேகத்தை யடைகிறபோது தன்னாலே சிருஷ்டிக்கப்பட்ட வந்த யெட்சுக்கள் பட்டணமெல்லாத்தையு மிரக்ஷிக்கிறான் அவன் றானே சுவேதவர்ணமாயிருக்கிற தேகத்தையடைகிறபோது யெல்லாத்தையுஞ் க்ஷணத்திலே பஸ்பமாய்ப்பண்ணுகிறா னிந்தப்படி தான்தானேசிருஷ்டித்துத் தானேரக்ஷித்துத் தானேசங்கரித்துக்கொண்டு திரும்பித் திரும்பி இந்தப்படி மூறக்கன்போல மஹா கெறுவிஷ்டனா இருக்கிற அந்த வந்தியாசுத ராஜாவானவன் மஹா பிரயாசத்தினாலே தாகத்தினாலே கானற்ஜலமாகிற சரசிலே மூழ்கி யந்தக் கானற்ஜலத்தை இதேட்டமாய்ப் பானம்பண்ணித் திருப்தி யடைந்து ஆகாசத்திலே புட்பித்திருக்கிற ககன புட்பங்களினாலே யலங்காரம் பண்ணிக் கொண்டிருக்கிறான் நான் கண்டேன் அவனும் இங்கே வருகிறான் வளையலோட்டு ரத்தின மாலையிலே நாலுமாலையுஞ் சுத்திகா ரசிதத்திலே பண்ணியிருக்கிற கிங்கிணிகளுங்கொண்டு உனக்குத்தரவருகிறானிப்போதிவடத்திலே யென்று இந்தக்கதையைத் தாத்திரியானவள் பாலகனுக்குச்சொன்னாள் அதைக்கேட்டுப் பாலகனானவன் சத்தியமென்று சமுசயமன்றியிலே யெப்படி யெண்ணுகிறானோ வப்படிப்போலே யிந்தச்ஜகத்துக்கதையுஞ் சத்தியமாய்த்தோன்றுகிறது அஞ்ஞானத்தினாலே மூடனாயிருக்கிறவனுக்கென்றறி. (கஙரு-கஙசு-கஙஎ-கஙஅ கஙகூ-கச0)

சீடன் கேட்கிறான் வாரும் ஏ குரோ யிந்தக்கதையாகிற திருஷ்டாந்தஞ்சொன்னீரே யிப்படித் தாஷ்டாந்தத்திலே ராஜாவாவதார் பாலனுவதார் தாத்திரியானவளார் இதையெல்லாங் கேழ்க்க வேண்டுமென்று இச்சிக்கிறேன் இத்தைத் தத்துவமாய்ச்சொல்லுமென்று சீடன் கேட்டான் குரு சொல்லுகிறார். (கசக)

வாராய் சீடா தாஷ்டாந்தத்தைச் சொல்லுகிறோங் கேள் இங்கே பாலகனுவதாரென்றால் முன்னே சொன்ன வஞ்ஞானியே பாலகனென்று வர்ணிக்கப்படுகிறதென்றறி தாத்திரியாவ தாரென்றால் ஈசுரனைப் பிரதிபாதிக்கிற சுருதியே தாத்திரியென்றறி வந்தியா சுதனுயிருக்கிற ராஜாவானவன் யாரென்றால் மாயாகற்பிதனுயிருக்கிற ஈசுரனென்றறி அவனுக்கு மூன்றுதேகமுண்டென்ற தேதென்றாற் சத்துவ ரச தமோ குணாத்மகமாயிருக்கிற பிரம விஷ்ணு ருத்திர மூர்த்திகள் தேகங்களையடையலாவ தேதென்றால் பீதவர்ணமாயிருக்கிற பிரம தேகாபிமானத்தினலே பிரமாவென்று பெயராய்ச் சூத்திராத்மாவென்று சொல்லப்படுவன் இந்த ஈசுரன் ஆகாசத்திலே யத்தியந்தம் அசத்தென்கிறபட்டண நிர்மித்தானென்ற தேதென்றால் சிதாகாசத்திலே ஜகத்தாகிறஅசத்துப்பட்டணத்தை நிர்மித்தானென்றறி அந்தப்பட்டணத்திலே பதினுலுவீதியென்ற தேதென்றால் பதினுலுலோகங்களாகிற வீதிகள் உத்தியானவனமென்றதென்னவென்று லனேகவனங்களாகிற வுத்தியானவனங்கள் உப்பரிகையாவ தேதென்றால் சய்யமந்திரமேமுதலான பருவதங்களாகிற வுப்பரிக்கைகள் வாயுவினலே யணையாமற் சீதமாயு முஷ்ணமாயு மிரண்டுதீபமாவ தேதென்றாற் சந்திர சூரியாளாகிற தீபங்கள் முத்துமாலைத் தோரணமேதென்றாற் கங்காதி நதிகளாகிற தோரணங்கள் ஏழுநட

வாவிகளேதென்ற விக்ஷேசிராதி சமித்திரங்களென்றறி.(௧௪௨-௧௪௩-௧௪௪-௧௪௫-௧௪௬-௧௪௭-௧௪௮)

அந்த ஈசுரன் கிரகங்கள்கட்டின தேதென்றாற் றேகங்களாகிற கிரகங்களென்றறி ஊர்த்துவதேசத்திலே கட்டின கிரகங்களேதென்றால் தேவசரீரங்கள் அதோதேசத்திலேகட்டின கிரகங்களேதென்றால் பாதாளத்திலேயிருக்கிற நாகாதிசரீரங்கள் மத்தியத்திலே கட்டின கிரகங்களேதென்றால் மநுடாதிசரீரங்களென்றறி யதற்கு மாமிசங்களாகிற பித்திகை அஸ்திகளாகிற தம்பங்கள் துவக்காகிற பூச்சுப்பூசியிருக்கிறது கேசங்களாகிற கறுப்புக்கத்தை போட்டிருக்கிறது காணாக்ஷி நாசயாதியாயிருக்கிற நவத்துவாரங்களாகிற வொன்பதுவாசல் ஞானேந்திரியங்களாகிற வைந்துதீபங்க ளிப்படிப்பட்டிருக்கிற தேகங்களாகிற கிரகங்களுக்கு ரக்ஷகாளாயிருக்கிற யெட்சுக்களென்னவென்றால் அகங்காரமாகிற யெட்சுக்க ளிப்படி ஈசுரனாகிற வந்தியாசுத ராஜாவானவன் தேகங்களாகிற கிரகங்களைக்கட்டியதிலே ஜீவரூபமாய்ப் பிரவேசித்து அகங்காரமாகிற வெச்சோடே கூடக்கிரீடித்துக்கொண்டு வியர்த்தமாய்ச் சமுசாரம்பண்ணுகிறான். (௧௪௯-௧௫௦-௧௫௧-௧௫௨-௧௫௩-௧௫௪-௧௫௫)

அவன்றானே கிருஷ்ணதேகத்தையடைந்து சகலத்தையுமிரக்ஷிக்கிறானென்ற தேதென்றால் விஷ்ணுமூர்த்தி யபிமானத்தினாலே விஷ்ணுவென்றும் விராட்டுருபமென்றும் பெயராய் ஸ்திதியாகிற ரக்ஷை பண்ணுகிறாரென்றறி சுவேததேகத்தை யடைந்து சகலத்தையுஞ் சங்கரிக்கிறதென்ற தேதென்றாற் சுவேதவர்ணமாயிருக்கிற ருத்திரதேகாபிமானத்தினாலே ருத்திரனென்றும் அந்தரியாமியென்றும் பெயராய்ச் சகலத்தையும் பிரளயத்திலே லயம்பண்

னுகிருரென்றறி இந்தப்படி யடிக்கடி சிருஷ்டித்து ரக்ஷித்து சங்கரித்து திருப்தராயிருக்கிருர் கானற்ஜலத்திலே பானம்பண்ணி திருப்தியடைந்ததென்ற தேதென்று லீசுரானந்தமாகிற கானற்ஜலத்தைப் பானம்பண்ணி நாமே சகல ஜகதீசுரனென்கிற கெறுவத்தையடைந்திருக்கிருர் ஆகாசகுசுமங்களினுலே யலங்காரமென்றதேதென்ருற் சர்வஞ்ஞத்துவ சர்வேசுரத்துவாதி குணங்களாகிற வாகாசகுசுமங்களினுலே யலங்காரம் பண்ணப்பட்டிருக்கிருர் அவர் சுத்திகாரசிதத்தினுலே நிர்மித்திருக்கிற கிங்கிணிகளென்றதேதென்ருற் சுவர்க்காதிலோகங்களாகிற கிங்கிணிகள் வளையனோட்டு ரத்தினத்தினுலே நிர்மித்திருக்கிற நாலுமாலையென்ற தேதென்ருற் சாலோக சாமீப சாரூப்பிய சாயுச்சியமென்கிற நாலுமுத்தியும் நாலுமாலையென்றறி இவைகளைத் தரவருகிரு னிங்கே யென்றதேதென்ருல் ஈசுரன் மிருத்திகை சிலை தாரு தாம்பிரங்களினுலே வருவர் வந்து வேண்டிய அபிஷ்டமெல்லாங் கொடுப்பரென் றிப்படிச்சொல்லுகிற சுருதியைக் கேட்டுச் சத்தியமா யெண்ணிக்கொண்டு அவித்தையினுலே மோகிக்கிறமூடன் பாலன்போலே மெய்யென்று பிரமிக்கிருன். (கரு௬-கரு௭-கரு௮-கரு௯-க௬௦)

இப்படிச்சொன்ன குருவைப்பார்த்துச் சீடன் கேட்கிருன் வாரும் எ குரோ சுவர்க்காதிலோகங்களு மிப்படிச் சுத்திகாரூப்பிய கிங்கிணிகளென்றுஞ் சாலோக்கியாதிமுத்திகள் காசமணிமாலைகளென்று மிப்படிப்பரிகாசமாய் அசத்தியமானுல் அப்போ வதற்குச் சாதனமாய்ச் சோதிஷ்டோமாதியாயிருக்கிற கருமகாண்டத்தையும் பூசாத்தியானுதியாயிருக்கிற உபாசனுகாண்டத்தையுஞ் சுருதிபிரதிபாதிப்பானேன் அதைச் சொல்லுமென்றுசீடன்கேட்டான் குரு சொல்லுகிருர், (க௬க)

வாராய் சீடா சுருதிபொய்யாய்க் கருமாதிகளை யேன்சொல் லுகிறதென்றால் ஜீவனானவன் அனாதி யவித்தையினாலே பிராந்த னாய்ப்போய்ச் சொப்பன பதார்த்தம்போலே பொய்யாயிருக்கிற பாகிய விடயங்களைச் சத்தியமாய் எண்ணிக்கொண்டு அதுகளை இச் சித்துக்கொண்டு சதா வெகிர்முகனாய்ப்போய்ப் பிரமிக்கிறபடியினா லே யவனை மெள்ள அத்தொய்தப்பிரமத்தைப்போதிக்கவேண்டுமெ ன்றபிப்பிராயம்வைத்துக்கொண்டு தயையினாலே சுவர்க்காதிகளுண் டென்றுமதற்குக்கருமங்களையேபண்ணென்றுஞ்சொல்லி வஞ்சிக்கிற தென்றறி அதெப்படிப்போலேயென்றால் மாதாவானவள் வயிற்றுவ லியினாலேயழுகிறதன் குழந்தைக்கந்தரோகம்போகிற நிமித்தியமாய் மிளகைப்புகட்டவேண்டி வெல்லத்தைக்காட்டி வஞ்சிக்கிறாள் மிள குசரீரத்திற்கிதமானாலும் உறைக்கிறபடியினாலே அத்தைக்குடியா மல் வெல்லஞ்சரீரத்திற் காகாமலிருந்தாலும் ருசியானபடியினாலே அதை யிச்சிக்கிறான்பாலன் மாதாவுக்கிதமான மிளகைப்பொகட்டு இருந்தே அபிப்பிராயமானபடியினாலே அவனுக்கு இஷ்டமாயிருக்கிற குளத்தைக்காட்டி வஞ்சிக்கிறாப்போலே சமுசாரதாபத்தினாலே தபி க்கிறஜீவனை இதமாயிருக்கிற அத்தொய்தத்தைப்போதித்தால் அது அவனுக்கு மஹாகடினமாய்ப் பிரயாசமானபடியினாலே மனதிலே யேறாமல் விடயத்திலே யாசையினாலே அத்தொய்தத்தை இச்சி யாம லுபேக்ஷித்துப்போட்டிருக்கிற பிராந்தனுக்கு இதமாயிருக்கிற அத்தொய்தத்தைப் போதிக்கவேண்டுமென்கிற வபிப்பிராயத்தினாலே கலியாணியாயிருக்கிற சுருதிமாதாவானவள் அவனுக்கிதமாய்த்தோ னுகிற சுவர்க்காதிகளைச்சொல்லி வஞ்சிக்கிறதென்றறி. (கசுஉ-கசுங- கசுச)

சுவர்க்காதிகளைச்சொன்னதினாலே அத்தொய்தத்தைப்போதிக் கிற தெப்படியென்றால் தபசுகள் கருமங்களைப் பண்ணினால் சுவர்

காதிலோகமுண்டென்றும் விஷ்ணுவாதிமூர்த்திகளை யுபாசித்தாற் சாலோக்கியாதி முக்தியுண்டென்றுஞ் சொல்லுகிறபோது அதினாலே தபசுகருமோபாசனைகளைப்பண்ணுவன் அனேக ஜன்மங்களிலே பண்ணினாலதினாலே சித்தஞ்சுத்தமாம் அதற்குமேல் விடயபோகங்களிலே வைராக்கியம் வந்தவுடனே இத்தனையும் பொய்யென்று காண்பித்து அதற்குமேல் அத்தொய்தத்தைப்போதிக்குஞ் சுருதியென்றறி. (௧௬௫)

சீடன் கேட்கிறான் வாரும் ஏ குரோ இப்படியானாற் சுவர்க்காதிஜகத்துத்தான் பொய்யாகட்டும் பிராந்தியினாலேதோணுகிறது மாத்திர மானபடியினாலே யப்படிப்போலே ஈசுரனையும் பொய்யென்கிறதெப்படிச் சர்வேசுரனென்று சுருதிகளெல்லாஞ்சொல்லுகிறதே ஆகையினாலே எப்படி ஈசுரன்கூட அசத்தியமென்றுகேட்ட *சீடனைப்பார்த்துக் குரு சொல்லுகிறார். (௧௬௬)

இப்படி யிந்தச்சுருதிமாத்திரங் கேட்டதொழிந்து மாயையுமவித்தையுஞ் ஜீவேசுராளென்கிற வாபாசங்களைக்கற்பித்ததென்கிற சுருதியை நீ கேட்கவில்லையோ வானாற் சுருதிஇரண்டுஞ்சொல்லுவானேனென்றால் எப்படியானாற் சுவர்க்காதிகளைச்சொல்லி வஞ்சிக்கிறதோ வப்படிப்போலே கருமபலப்பிரதரா யொரு ஈசுரனுண்டென்று சொல்லி வஞ்சிக்கிறது அதிகாரிக்குச் ஜீவேசுர ஜகத்தெல்லாம் பொய்யென்று பரமார்த்தத்தைச் சொல்லுகிறதென்றறி. (௧௬௭)

ஈசுரனையுஞ் ஜீவனைப்போலே பொய்யென்று யெதினாலே சொல்லுகிறதென்றா லீசுரனுஞ் சொப்பனபுருடன்போலே பிராந்திகற்பிதனானபடியினாலேயென்றறி யெப்படியென்றால் ஜீவன்றன்னுடைய சொரூபத்தையறியாத வஞ்ஞானமோகத்தினாலே யெப்படிக்கற்பிக்கப்பட்டானோ வப்படிப்போலே தன்னையறியாத வஞ்

ஞானப்பிராந்தியினாலே சொப்பன புருடன்போலே கற்பிதனானபடி
யினாலே ஈசுரனும் வஸ்துவன்று பொய்யென்றறி. (௧௪௮)

தன்னஞ்ஞானத்தினாலே ஈசுரனெப்படிகற்பிக்கப்பட்டான்
மாயாகற்பிதரென்றன்றோ சுருதிசொல்லுகிறதென்றால் சொல்லுகி
றோம் தன்னையறியாதவஞ்ஞானம் யாதொன்றுண்டோ வந்தவஞ்ஞா
னந்தானேசமட்டிவியட்டி பேதத்தினாலேகமென்று மனேகமென்
றுஞ்சொல்லப்படு மெப்படியானால் சமட்டியாய்வனமென்றுசொல்
லுகிறபோ தேகமாயும் வியட்டியாய்விருக்ஷங்களென்றுசொல்லுகிற
போ தனேகமாயுஞ் சொல்லப்படுகிறதோ வப்படிப்போலே வஞ்ஞா
னமு மேகமாயு மனேகமாயு மிருக்கு மதிலே யேகமாய்ச்சமட்டியா
யிருக்கிற வஞ்ஞானத்திற்குத்தானே மாயையென்றுபெயர் அதினா
லேகற்பிக்கப்பட்டவர் ஈசுர ரிவர்தானே சமட்டிசாக்கிரதாதி யவத்
தாத்திரயாபிமானத்தினாலே விராட்டென்று மிரணியகர்ப்பரென்று
மந்தரியாமியென்றுஞ் சொல்லப்படுவர் சர்வஞ்ஞத்துவ சர்வேசுரத்து
வாதி குணத்தோடேகூடினவர் ஈக்ஷணாதிப்பிரவேசாந்த சிருஷ்டியே
யவருக்குச் சமுசாரமென்று சொல்லப்படுமென்றறி வியட்டியாய
னேகமாயிருக்கிற வஞ்ஞானமே அவித்தையென்றுசொல்லப்படு மதி
னாலே கற்பிக்கப்பட்டவன் ஜீவன் அந்தவவத்தாத்திரயாபிமானத்தினா
லே விசுவதைசதபிராஞ்ஞனென்று சொல்லப்படுவன் கிஞ்சிஞ்ஞத்
துவ கர்த்துருத்துவ போக்துருத்துவ பிரமாத்துருத்துவாதி குணங்க
ளோடேகூடியிருப்பன் சாக்கிராதிமோக்ஷபரியந்த மிவனுடைய சமு
சாரமென்றுசுருதியிலே சொல்லப்படுகிறதாகையினாலே தன்னு
டைய வஞ்ஞானப்பிராந்தியினாலே ஜீவேசுரஜகத்துக்கள்மூன்றுங் கற்
பிக்கப்பட்டதுக ளாகையினாலே ஈசுவரனும் வஸ்துவன்றென்றறி.

(௱௪௯-௱௭௰-௱௭௧-௱௭௨-௱௭௩-௱௭௪)

சிடன்கேட்கிறான் வாரும் ஏ குரோ தன்னையறியாதவஞ்ஞானந் தனக்குச் ஜீவத்துவபிராந்தியை யுண்டாக்கிறதிலே காரணமாகலா மெப்படிப்போலென்றால் ரச்சுவையறியாதவஞ்ஞானஞ்சர்ப்பப்பிராந்திக்குமாத்திரமன்றோகாரணமாகு மப்படிப்போல தன்னுடைய வஞ்ஞானந்தனக்கு ஜீவத்துவப் பிராந்தியிலேமாத்திரங் காரணமாகலாமொழிந்து ஈசுரசகப்பிராந்திக்கு எப்படிக்காரணமாமென்று சிடன்கேட்டான் குரு சொல்லுகிறார். (ாஎரு)

எதினாலே தன்னுடைய வஞ்ஞானமானது மூன்றுக்குங் காரணமென்று சொல்வதென்றால் அஞ்ஞானத்தினாலே மூன்றுவிதப்பிராந்தி யுண்டாயிற்று ஜீவனென்று மீசுரனென்றுஞ் ஜகத்தென்றும் இப்படி மூன்றுவிதப்பிராந்தி யொருமித்தேக்காலத்திலே யுண்டாயிற்று மூன்றுவிதப்பிராந்தியு மொருமித் துண்டாயிற்றென்று மெதினாலே சொல்லுகிறதென்றால் ஜீவப்பிராந்தி யெப்போதுண்டாகிறதோ வப்போ ஈசுரஜகப்பிராந்திகளு முண்டாகிறது ஜீவப்பிராந்தி யெப்போ லயிக்கிறதோ வப்போ ஈசுரஜகப்பிராந்திகளுங்கூட லயிக்கிறது இப்படி யெங்கேகண்டோமென்றால் சாக்கிரசொப்பனங்களிலே ஜீவப்பிராந்திவருகிறபோது ஈசுரஜகப்பிராந்தியுங் கூடவருகிறது கண்டோம் சுழுத்திமூர்ச்சாசமாதிகளிலே ஜீவப்பிராந்தி போகிறபோது மதுகளுங்கூடப் போகிறது கண்டோம் அதுவுமன்றியிலே ஞானத்தினாலே ஜீவப்பிராந்தி ஆத்தியந்திக நிவர்த்தியாகிறபோது ஈசுரஜகப்பிராந்திகளு மாத்தியந்திக நிவர்த்தியாகிறது சொச்சொரூப ஞானத்தினாலே அஞ்ஞான நஷ்டமாய்ப் பிராந்தி நிவர்த்தரா யிருக்கிற மஹாத்துமாக்கள் பிரத்தியக்ஷமாய் அத்வைத ஞானத்தை யநுபவிக்கிறா னானபடியினாலே தன்னையறியாத வஞ்ஞானமே ஜீவேசுரஜகத்துருபமாயிருக்கிற பிராந்தித்திரயத்திற்குங் காரணமாகலா மென்றறி. (களகா-களஎ-களஅ-களகூ)

வாரும் ஏ குரோ இப்படி ஈசுரன் தன்பிராந்தி கற்பிதரானால் அப்போ தன்பிராந்தியென்றல்லோ தோணவேண்டு மப்படியில்லாம லீசுரன் சர்வகாரணரென்று மவராலே நாங் கற்பிக்கப்பட்டோமென் றுந் தோணுகிற தாகையினாலே தன்னுடைய பிராந்தியினாலே ஈசுர ஜகத்துக்கள்கூட கற்பிக்கப்பட்டதென்கிறது யெப்படிக்கூடும் விருத் தமாயன்றோ யிருக்கிறதென்று சீடன் கேட்டான் குரு சொல்லுகி றார். (௧௮௦)

வாராய் சீடா ஈசுரன் சொப்பிராந்தி கற்பிதரானாலவனா லேதான் நாஞ் சிருஷ்டிக்கப்பட்டோமென்று தோணுகிறது விரோத மன்றோவென்றால் விரோதமில்லை யப்படி விபரீதானுபவங் கண்டப டியினாலே தோணலாமே எங்கே கண்டோமென்றால் வெகுநாளைக் குமுன்னே மரித்துப்போன பிதாவைச் சொப்பனத்திலே காணுகிறா ன் அந்தப் பிதாதன்னுடைய சொப்பனப்பிராந்தியினாலே கற்பிக்கப்ப ட்டா னப்படியானாலு மவனமக்குப் பிதா வவனிடத்திலே நின்று நாமுண்டானோமென்று தன்பிராந்திகற்பித பிதா தனக்குக்காரணமா யப்போ பிராந்தியினாலேதோணுகிறது சொப்பனத்திலே தோணுகி கிரகட்க்ஷேத்திராதி ஜகத்தெல்லாந் தன் சொப்பனப்பிராந்தியினாலே தோணினாலுஞ் சொப்பனப்பிதாவினாலே சம்பாதிக்கப்பட்டதாய்ப் பிதா நமக்குத் தேடிவைத்தாரென்று விபரீதமாய்த்தோணுகிறது தன் சொப்பனப்பிராந்தியினாலே பிதா கிரகட்க்ஷேத்திரங்கள் கற்பிக்கப் பட்டாலும் பிதாவினாலே தானுந் தன்னுடைய கிரகட்க்ஷேத்திராதி களுங் கற்பிக்கப்பட்டதாய்ச் சொப்பனகாலத்திலே எப்படித்தோணு கிறதோ அப்படிப்போலே தன் பிராந்தியினாலே ஈசுரஜகத்துக்களுங் கற்பிக்கப்பட்டாலு மீசுரனாலே தானுஞ் ஜகத்தும் கற்பிக்கப்பட்ட தாய் விபரீதமாய்த் தோணலாம் தோஷமில்லையென்றறி ஏனென்றால் அகடித கடிதத்திலே சமர்த்தையாயிருக்கிற மாயையினுடைய விலாச

பூதமாயுஞ் ஜீவேசுர ஜகத்தாகாரமாகியுந் தோணுகிற வாசனை யனாதி யானபடியினலே பூருவ பூருவ வாசனப்பிராந்தி தோணுகிறதிலே விரோதமில்லையென்றறி. (கஅக-கஅ௨-கஅ௩)

வாருமையா ஏ குரோ இந்த மாயையினுடைய மகிமை மஹா வாச்சரியமாயிருக்கிற தேனென்றல் அசத்தியமாயிருக்கிற மாயை சத்தியம்போல விளங்குகிறது இதுக்கு இப்படிப்பட்ட சத்தி எங்கே யுண்டாயிற்று சொல்லுமென்று சீடன்கேட்டான் குரு சொல்லுகிறர். (கஅ௪)

வாராய் சீடா துர்க்கடகாரியாயிருக்கிற மாயையிலே அதிசய மேது இந்தச்சாமர்த்தியம் அதுக்கு சுபாவமேயன்றியிலே ஒன்றினலே வந்ததன்று ஒருஇந்திரஜாலக்கார னகாசத்திலே நகரங் காண்பிக்கவில்லையோ நித்திரைமுதலாய்ச் சொப்பனத்திலே ஜீவேசுர ஜகத்தைச் சிருஷ்டிக்கவில்லையோ அதுகளுக்குத்தானே யித்தனைச்சாமர்த்திய முண்டானல் சர்வோபதான காரணமாயிருக்கிற இந்த மஹா மாயைக்கி இப்படிப்பட்ட சாமர்த்திய முண்டென்கிறதிலே கேட்கவேண்டுமோ சந்தேகமில்லை ஆகையினலே தன்னுடையபிராந்தியினலே ஜீவேசுரஜகத்தெல்லாந் தோணுகிறதுமாத்திரமேயொழிய பரமார்த்தமாய்ச் சத்தியமன்று இப்படிவஸ்துவாயிருக்கிற வாத்மாவினிடத்திலே யவஸ்துவாயிருக்கிற ஜகத்துவாரோவிக்கப்பட்ட தென்கிற அத்தியாரோபஞ் சொல்லப்பட்டுது. (கஅ௫)

இந்த வத்தியாரோபப் பிரகரணத்தை யாதொருவித்துவானனவன் னன்றய்ப்பராமரிசித்துப்பார்க்கிருனே அவன் இத்தனைஜகத்துஞ் சகலசம்சாரமும் ஆகியவனைத்தும் மாயாமயம் மித்தை தோணுகிறது மாத்திரஞ் சொப்பனம்போலேபிராந்தியினலே யென்றறிந்து இதைப்பூருவம்போலே சத்தியமாயஎண்ணும லிது யெப்படிப்போமென்று அதற்கு அபவாதத்தையிச்சிப்பன். (கஅ௬)

ஸ்ரீகுருகடாட்சங் ஸ்ரீகரபாத்திரசுவாமிகள்தயையினாலே வநுக்கிரகம்பண்ணிய ஞானபோதமாகிய வேதாந்த தரிசனம். (௧அஎ)

முதலாவது அத்தியாரோப் பிரகரணமுற்றிற்று.

# இரண்டாவது அபவாதப்பிரகரணம்.

சீடன் கேட்கிறான் வாரீர் ஏ குரோ அவித்தையானது அனாதியென்றன்றோ சொல்லப்பட்டது ஆகையினாலே அதற்கு அபவாதமெப்படிச்சொல்லப்படும் எனக்குச்சமுசயமாயிருக்கிறது இந்தச் சமுசயத்தைப் போக்கவேண்டுந் தேவரீர் தயாசமுத்திரமாயிருக்கிறவரன்றோ ஆதியில்லாதமாயைக்கந்தமெப்படிவருஞ் சொல்லுமென்று கேட்ட சீடனைப்பார்த்துக் குரு சொல்லுகிறார். (௧)

வாராய் சீடா ஏ வித்துவான் நீசொன்னது சத்தியந்தான் அவித்தை அனாதிதான் சந்தேகமில்லை அப்படியானாலும் அதற்கு அவதியுண்டு ஏதென்றால் வித்தியோதயமே யவித்தைக்கு அவதியென்று சகல சாஸ்திரங்களிலேயுஞ் சொல்லப்பட்டிருக்கிறதன்றோ ஆகையினாலே பிரகாசம்வந்தா லந்தகார மெப்படி அவதியாமோ அப்படிப்போலே ஞானம்வந்தா லஞ்ஞானம் அவதியையடைந்து நசித்துப்போமென்கிறதைச் சொல்லுகிறேன் கேள். (உ)

இவ்விடத்திலே சகல வஸ்துக்களுக்கும் ஏதுவென்றுஞ் சொரூபமென்றுங் காரியமென்றும் அவதியென்றும் பலமென்றும் இப்படி ஐந்துவிதமாய் அசங்கிரமாகிய பிரிச்சல் சொல்லப்படுகிறது ஏதுவாதியாயிருக்கிற இந்த ஐந்துவித அசங்கரங்களும் அத்தொய்தமாயிருக்கிற பரமாத்துமாவுக்குமாத்திரஞ் சொல்லக்கூடாது அவரிடத்திலே பொய்யாய்க் கற்பிதமாயிருக்கிற மாயாதி அண்டபரியந்தமா

யிருக்கிற வஸ்துக்களுக்கெல்லாம் ஏதுமுதலான ஐந்துவித அசங்கர
முண்டென்றறி. (௩-௪)

வாராய் சீடா இந்த மாயைக்கு ஏதுமாத்திர மில்லை யேயெ
ன்று விதுவொன்றினாலே வுண்டாக்கப்பட்டதன்று சொதசித்தமா
யனாதியாய்ப் பிரமத்தினிடத்திலே யிருக்கிறது சிருஷ்டியாதியிலே
யிது விசிரம்பனமாகிறதற்கு ஒருவேதுவுமில்லை தானாகவே விசிர
ம்பனத்தை யடைகிறது ஆகையினாலே யேதுவில்லையென்றறி இத
ற்குப் பிரமாணமேதென்றால் ஸ்ரீவசிட்டரிப்படிச்சொல்லியிருக்கிறா
ரதுவே பிரமாணம். (௫)

அனந்தசத்திமானாய்ப் பூரணரா யிருக்கிற பரமாத்மாவினிட
த்திலே நின்றும் நாமரூப விபாகங்களைக் கற்பிக்கிறதா யொரு சத்தி
கிளம்பித்து ஜலத்திலேநின்று மொரு குமிழிகிளம்பினா லெப்படி
யோ வப்படிப்போலேதானே கிளம்பித்தென்று ஸ்ரீவசிட்டர்சொன்
னார். (௬)

மாயைக்கேது வில்லையென்கிறது கூடாது யேனென்றால்
மன்சத்தி கடாகாரமாய் வியத்தமாகிறதற்குக் குலாலவியாபார மே
துவாகிறாப்போலே பிரமத்தினிடத்திலே யவ்வியத்தமாயிருக்கிற
சத்தி வியத்தமாகிறதற்கு ஈசுரசங்கற்பமே யேதுவாகட்டுமென்றால்
மகாப்பிரளயத்திலே ஈசுரனுமில்லாமற் பிரமமாத்திர மிருக்கிறபடி
யினாலே ஈசுரசங்கற்பமேதுவாகமாட்டாது பிரளயத்திலே ஈசுரன்
அவ்வியாகிருதமா யிருக்கிறாரென்றா லப்போ சகலஜீவாளும் ஐக்கிய
மவ்வியாகிருதமா யிருக்குமென்றறியவேண்டும் அப்போ ஜீவான்
லயித்திருக்கிறாப்போலே லயித்திருக்கிற ஈசுரனுக்குச் சங்கற்பங்கூ
டாது நித்திராசத்தியானது சொப்பனமாய் விசிரிம்பிக்கிறாப்போலே
பிரளயத்திலே லயித்திருக்கிற மாயாசத்தி தானாகவே விபாககற்

பனைக்கேற்பட்டு விசிரிம்பிக்கிறபோது ஈசுரனென்றுஞ் சங்கற்பமே யவருடைய வியாபாரமென்றுஞ் ஜகத்தென்றுஞ் ஜீவனென்றும் நானாவிதாகாரமாய் வியத்தமாகிறது இப்படி மாயைதானே அவ்வியாகிருதராயிருக்கிற ஈசுரனையுந் தான் விசிரிம்பத்து வியத்தமாய்ப் பண்ணுகிறபடியினாலே ஈசுரசங்கற்பந் தன்னை யுண்டாக்கின மாயைக் கேதுவாகமாட்டாது ஆகையினாலே பிரளயத்திலே சன்மாத்திரமாய்ச் சேஷித் தோரிச்சையுமன்றியிலே நிர்விகற்பமாய்ச் சுத்தமா யிருக்கிற பிரமத்தினிடத்திலே அவ்வியத்தமாயிருந்த மாயை சிருஷ்டியாதியிலே விசிரிம்பிக்கிறபோது மனதென்கிற பெயராய் வியத்தமாயிற்று அந்த மனோசத்திவிலாசத்தினாலே ஈசுரனென்றுஞ் ஜீவனென்றுஞ் ஜகத்தென்றும் நானாவிதப்பிராந்தியான இந்திரசாலம்போலே தோணுகிறது இப்படி மாயையுல்லாசத்தை யடைகிறதே யுற்பத்தியென்றுஞ் சங்கோசத்தையடைகிறதே பிரளயமென்றுஞ் சொல்லப்படு மிப்படி மாயை தான்றானே யுண்டாய்த் தான்றானே மறைகிறபடியினாலேயும் அநாதியானபடியினாலேயும் மாயைக் கேதுவில்லையென்கிறது சொல்லப்பட்டது. (௭-௮-௯)

மாயைக்குச்சொரூபமேதென்றால் அநிர்வசநீயமே சொரூபம் ஏனென்றால் வாதிக்கப்பட்டுப்போகிறதினாலே சத்துமன்று திரிசியமாய்க்காணப்படுகிறபடியினாலே யசத்துமன்று விருத்தமானபடியினாலே யுபயாத்மகமுமன்று ஆகையினாலே யநிர்வசநீயமென்று வித்துவாம்சர்களாலே சொல்லப்படுஞ் சத்தாவதே தசத்தாவ தேதென்றால் மாயைக்கு அதிஷ்டானமாய்ச் சன்மாத்திரமாய் அத்வைதமாயிருக்கிற பிரமமே சத்து மாயாகாரியமாய் நாமரூபாத்மகமாயிருக்கிற சகல ஜகத்தும் அசத்து மாயாசத்தியாவதேதென்றால் இரண்டுமன்று காரியத்திற்கு மதிஷ்டானத்திற்கும் விலக்ஷணமாயிருக்கும் அதெப்படிப் போலென்றால் சொல்லுகிறோம். (௰-௰௧)

அக்கினி அதிஷ்டானம் அதிலே கிளம்புகிற பொறிகாரியம் இரண்டுமென்றியிலே அக்கினியிலே இருந்துகொண்டு பொறியாகிற காரியத்தையுண்டாக்கிற சத்தியினது காரியங்கண்டபடியினாலே இதற்குக்காரணமாயொரு சத்தியுண்டென்றெப்படி அநுமானத்தினாலேயறியப்படுகிறதோ மிருத்திகைஅதிஷ்டானம் பெருத்து வர்த்துளாகாரமாயிருக்கிற கடங்காரியம் இந்த மிருத்திகையுமன்றியிலே கடமுமன்றியிலே இரண்டுக்கும் விலக்ஷணமாய்க்காரியங்கண்டபடியினாலே சத்தியுண்டென்றெப்படி யநுமானம் பண்ணப்படுகிறதோ ஜலமதிஷ்டானங் குமிழிகாரியம் இரண்டுக்கும் விலக்ஷணமாய்ச் சத்திகாரியத்தினாலே யெப்படியநுமானம் பண்ணப்படுகிறதோ பாம்புமுட்டை யதிஷ்டானம் பாம்புகாரியம் அதிலே சத்தியெப்படி அநுமானம் பண்ணப்படுகிறதோ விரையதிஷ்டானம் மரங்காரியம் அதிலே சத்தி யெப்படி யநுமானம் பண்ணப் படுகிறதோ சுழுத்தியிலே நிருவிகாரனாய் நித்திரைபண்ணுகிற ஜீவன் அதிஷ்டானஞ் சொப்பனப்பிராந்தி காரியம் அதிலே சொப்பனத்தைக் கற்பிக்கிற நித்திராசத்தி யதிஷ்டானமுமன்றியிலே காரியமுமன்றியிலே விழித்தபிறகுண்டாகிற நினைவினா லெப்படியறியப்படுகிறதோ அப்படிப் போலே பிரமத்தினிடத்திலே யிருக்கிறசத்தியானது ஜகப்பிராந்தியைக் கற்பிக்கிறது அந்தச்சத்திக்கு பிரமம் அதிஷ்டானஞ் ஜகத்துக்காரியம் இந்த இரண்டுமென்றியிலே சத்திக்குச் சொரூபங் காணாவிட்டாலுஞ் ஜகத்தாகிற காரியங் கண்டபடியினாலே இதற்குக்காரணமாயொரு சத்தி யுண்டென் றநுமானத்தினாலே அறியப்படுகிறது ஆகையினாலே சத்தி பிரமமுமன்று ஜகத்துமன்று பின்னை அதற்குச் சொரூபந்தா னேதென்றால் இரண்டுமென்றியிலே யேதோ யெப்படியோ அதுதான் சொரூபம் ஆகையினாலே இன்ன திப்படிப்

பட்டதென்று சிந்திக்கப்படாதபடியினாலே மாயைக்குச் சொரூபம் அநிர்வசநீயமென்று சொல்லப்பட்டுது. (௧௨-௧௩-௧௪-௧௫-௧௬-௧௭)

மாயைக்குக் காரியமேதென்றால் அத்தொய்தமாயிருக்கின்ற பிரமத்தினிடத்திலே ஆவரண விக்ஷேபசத்தி சாமர்த்தியத்தினாலே ஜீவேசுர ஜகத்துரூபமாயிருக்கின்ற பிராந்தியைக் கற்பிக்கிறதே மாயைக்குக்காரியம் அது எப்படியென்றால் அவ்வியத்தமாயிருந்த சத்தி மனோரூபமா யெப்போ வியத்தமாகிறதோ அப்போ ஜகத்தாகிற விருக்ஷங்களுக்கு அங்கு ரபந்திகளாயிருக்கிற மனோவாசனைகள் முளைக்கிறதுகள் ஆகையினாலே மனோவிசாலமாயிருக்கிற சங்கற்பவாசனையினாலே ஜகத்துக்கள் சொப்பனம்போலே கற்பிக்கப்பட்டுதுகள் அதுக்குள்ளே யகப்பட்டவாளாயிருக்கிற ஜீவேசுராளும் ஜகத்துக்குள்ளே யந்தற்பூதாளானபடியினாலே ஜகத்துப்போலே இவாளு மனோவிலாச சங்கற்பத்தினாலே கற்பிக்கப்பட்டவாள் அதெப்படிப்போலேயென்றாற் சொப்பனத்திலே காணப்படுகிற ஜகத்தெல்லா மனோவிலாச மாத்திரத்தினாலேதோணுகிறது அது மத்தியிலே தோணுகிற ஜீவேசுராளும் அதிலேயந்தற் பூதாளானபடியினாலே மனோவிலாசசத்தியினாலெப்படிக் கற்பிக்கப்படுகிறார்களோ அப்படிப்போலேயும் பித்திகையிலே வர்ணத்தினாலே ஜீவேசுரஜகத்துக்கள் சித்திரமா யெழுதினாலந்தச் சித்திரஜகத்திலே யேகதேசமாயிருக்கிற ஜீவேசுராளும் அந்தற்பூதாளானபடியினாலே வர்ணத்தினாலே யெப்படி யாரோபிக்கப்படுவாளோ அப்படிப்போலேயும் மனோவிலாச கற்பனா மயமாயிருக்கிற ஜகத்திலே யேகதேசாளா யந்தற்பூதாளாயிருக்கிற ஜீவேசுராளும் மனோவிலாச கற்பிதாளென்றறி. (௧௮-௧௯-௨௦)

இப்படி மனக்கற்பிதாளானபடியினாலே ஜீவேசுராளுஞ் ஜகத்தைப்போலே கற்பிதாளென்று சொல்லுகிறதிலே சந்தேகமில்லையெதினாலே யென்றால் மாயை ஜீவேசுராளென்கிற யாபாசங்களைக் கற்

பித்ததென்கிற சுருதியினாலேயு ஸ்மிருதியினாலேயு மனக் கற்பிதா ளென்கிறதறியலாம் ஸ்மிருதி யாவதேதென்றால்மேற்சொல்லுகிறோம் வாசிட்டவசனம் அவனென்றும் நானென்று மிதுவென்று மதுவெ ன்று மென்புத்திரனென்று மென்றனமென்றும் நானாவிதமாய் மனோ வாசனைதானே யிந்திரஜாலம்போலே நிர்த்தனம் பண்ணுகிற தென்று சொல்லுகிறது. (௨௧-௨௨-௨௩-௨௪)

இந்தஸ்மிருதி ஜீவேசுர ஜகத்து மூன்றையு மெங்கேசொல்லு கிறதென்றால் சோகமிதமென்கிற பதங்கள் மூன்றினாலேயும் ஜீவே சுர ஜகத்துக்கள் மூன்றும் சொல்லப்பட்டுது எப்படியென்றால் ஜக யென்கிற தற்சப்தத்தினாலே யவனென்று பரோக்ஷத்துவாதி குணை வானாயிருக்கிற ஈசுரன் சொல்லப்பட்டான் அகமென்கிற பதத்தினா லே நானென்றபிமானியாய்க் கர்த்தத்துவாதிகுணவானா யிருக்கிற ஜீவன் சொல்லப்பட்டான் இதமென்கிற பதத்தினாலே யிதுவென்று மென்னதென்றும் போக்கிய ரூபமாயிருக்கிற சகல ஜகத்துஞ் சொல் லப்பட்டுது ஆகையினாலே இப்படிச் சுருதி ஸ்மிருதிகளினாலேயும் யுக்தியினாலேயு மநுபவத்தினாலேயுஞ் ஜீவேசுர ஜகத்துக்கள் மனோ விலாசகற்பிதங்களென்கிறது சித்தமாச்சுது. (௨௫-௨௬-௨௭)

இதிலே யநுபவமேதென்றால் சாக்கிரஞ் சொப்பனங்களிலே மனோவாசனைகள் முளைத்தமாத்திரத்திலே ஜீவேசுர ஜகத்துக்கள் கா ணப்படுகிறதுகள் சுழுத்தி மூர்ச்சாதிகளிலே வாசனைகள் மறைந்து போகிறபோது தோணாமற்போகிறதுகள் இது யெல்லாராலேயு மநு பவிக்கப்படுகிறது ஞானத்தினாலே வாசனைகளெல்லாம் நன்றாய் நிவர் த்தியாகிறபோது ஜீவேசுர ஜகத்துக்களும் நிவர்த்தியாகிறது இது பூரணதிருஷ்டியினாலே அத்வைத ஞானிகளாயிருக்கிற மஹாத்து மாக்கள் ஜீவேசுர ஜகத்தையெல்லாம் விட்டு அத்வைதத்தை யநுப

விக்கிறார்க ளாகையினாலே மனோவாசனா கற்பிதங்களென்று சத்திக்குக்காரியஞ்சொல்லப்பட்டது. (௨௮-௨௯)

மாயைக்கவதி ஏதென்றால் மஹாவாக்கியார்த்த விசாரத்தினாலே யுண்டாகிற ஞானமே அவதியென்று சொல்லப்படும் ஏனென்றால் வஸ்துமாயை அவிசாரத்தை யுபஜீவித்துக்கொண்டிருக்கிறபடியினாலே விசாரம்வருகிறபோது நசித்துப்போகிறதானபடியினாலே வித்தையே அவதி அதெப்படிப்போலென்றால் சொல்லுகிறோம். (௩௦)

ஜ்வராதியாதியாயிருக்கிற ரோகங்கள் கருமவசத்தினாலே யுண்டாகிறதுகள் அதுகள் அபத்தியத்தை யுபஜீவித்துக்கொண்டுவிருத்தி யடைகிறதுகள் எப்படி அபத்தியம் விருத்தி ஆக ஆக ரோகமும் விருத்தியடைகிறதோ ரச்சுவாதியிலே யிருக்கிற மாயையானது ரச்சுசொருபத்தை விசாரியாத அவிசாரத்தை யுபஜீவித்துக்கொண்டு விருத்தி அடைந்து எப்படி சர்ப்பாதிகளைக்காண்பித்துக்கொண்டு நிபிடமாயிருக்கிறதோ அப்படிப்போலே மாயையும் அஹேதுவாய்ச் சொதசித்தமா யனாதியாயிருந்தாலும் ஆத்மசொருபத்தை விசாரியாத அவிசாரத்தை யுபஜீவித்துக்கொண்டு ஜகத்தாதிகளைக் காண்பித்துக்கொண்டு நிபிடமாய் நன்றும் காடாந்தகாரம்போலே விருத்தியடையும். (௩௧-௩௨)

இப்படி அவிசாரத்தினாலே காடாந்தகாரமாய் விருத்தியடைந்திருக்கிற மாயை விசார முண்டானமாத்திரத்திலே அவிசாரமாகிற ஜீவனம் நசிக்க நசிக்க மாயையுந் தன்னுடைய விசாலமாயிருக்கிற ஜகத்தாதிகளோடேகூட நசித்துப்போம் எப்படிப்போலேயென்றால் ரச்சுவிலே விசாரத்திற்குமுன்னே சர்ப்பாதிகளைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கிற சத்தி விசாரத்தினாலெப்படி நசிக்கிறதோ அப்படிப்போலே விசாரத்தினாலே மாயையும் நசிக்கும் எப்படியானால் விசாரி

க்கிறத்தற்கு முன்னே ரச்சுவிலே தோன்றின சர்ப்பமுஞ் சத்தியும் விசாரித்தபிற்பாடு ரச்சுவைத்தவிரயில்லை பின்னையோ ரச்சுமாத்திரங்காணப்படுகிறதோ அப்படிப்போலே விசாரத்திற்கு முன்னே தோன்றினமாயையும் மாயாவிலாசமாயிருக்கிற ஜகத்தும் விசாரித்தபிற்பாடு பிரமத்தைத் தவிரவில்லைப் பின்னையோ பிரமமாத்திரங் காணப்படுகிறது. (௩௩-௩௪-௩௫)

ஒருவஸ்துத்தானே யெப்படி யிரண்டுவிதமாய்த் தோணுமென்றால் அத்தொய்தமாய்ச் சன்மாத்திரமாயிருக்கிற பிரமமொன்று தானே விசாரத்திற்கு முன்னே யன்னியதாவாய்ச் ஜகத்தாகாரமாய்த்தோணித்து விசாரித்தபிற்பாடு சொபாவமாய்த் தோணுகிற தெப்படிப்போலென்றால் மிருத்துத்தானே விசாரத்திற்குமுன்னே கடமாய்த் தோணுகிறது விசாரத்தினாலே மிருத்திகையாய்த் தோணுகிறது விசாரத்திற்குமுன்னே கனகந்தானே கடகமகுட குண்டலமாய்த் தோணுகிறது விசாரத்தினாலே கனகமா யெப்படித் தோணுகிறதோ அப்படிப்போலே விசாரத்தினாலே பிரமமாத்திரம்தோணும் இப்படி யதார்த்தமாயிருக்கிற பிரமசொரூபம் விசாரத்தினாலே ஏகமாய் அத்தொய்தமாய்ச் சுஜாதிய விஜாதிய ஸ்வகதபேத சூனியமாயிருக்கிற பிரமமொன்றும்வஸ்து அதுவே காலத்திரயத்திலு மிருக்கிறது அதிலே மாயையென்றுஞ் ஜகத்தென்று மொருகற்பனையு மொருக்காலு மில்லவேஇல்லையென் றிப்படியிருக்கிறபுத்தியே வித்தையென்று பெயர் இந்தவித்தையே அவித்தைக்கவதியாகலாமே இப்படி மாயைக் கவதிசொல்லப்பட்டது. (௩௬-௩௭-௩௮)

மாயைக்குப் பலமேதென்றாற் நிஷ்பலமாய்ச் சூனியமாய்ப் போகிறதே பலம் ஏனென்றால் சசசிருங்கமென்று சொன்னால் சொல்லுகிற நாமமாத்திரமேயன்றியிலே அதற்குச்சொரூப மெப்படிச்சூனி

யமோ அப்படி மாயையென்று சொல்லுகிறதுமாத்திரமொழிந்து அதற்குச்சொரூபமேயில்லையென்று விசாரத்தினாலே தத்துவத்தை யறிந்த ஞானிகள் சசசிருங்கம் போலே மாயையென்றுசொல்லுகிற படியினாலே ஞானத்தினாலே சூனியமாய்ப்போகிறதே மாயைக்குப் பலம். (௩௯)

இப்படியானாலெல்லாருமேனிப்படிச் சொல்லவில்லையென்றால் அஞ்ஞானிகள் மாயை சத்தியமென்றுசொல்லுவார்கள் விஜாரிக்கிறபேர் அநிர்வசநீயமென்றுசொல்லுவார்கள் ஞானிகள் சசசிருங்கசமானமென்றுசொல்லுவார்க ளிப்படி மூன்றுவிதமாய்த்தோன்றும் அவாளவாள் திருஷ்டிக்குத்தக்கதாய்ச் சொல்லுவார்கள் அஞ்ஞானிகள் எதினாலே சத்தியமென்பாளென்றால் விசாரமில்லாத பாலர்களுக்கு இதோபேயிருக்கிறதென்று பொய்யாய்ச்சொன்னாலுஞ் சத்தியமென்றெப்படிப்பயப்படுவார்களோ அப்படிப்போலே விசாரமில்லாத அஞ்ஞானிகளும் அந்தப் பொய்யாயிருக்கிறமாயையினாலே மோகத்தையடைந்து அதை மெய்யென்றுசொல்லுவார்கள் விஜாரிக்கிறபேர்கள் சாஸ்திரத்தினாலே சத்தாயிருக்கிற பிரமத்தையும் அசத்தாயிருக்கிற ஜகத்தையும் விஜாரிக்கிறபோது இரண்டுக்கும் விலக்ஷணமாயிருக்கிறமாயை இன்னதென்றுநிச்சயம்பண்ண மாட்டாமல் அநிர்வசநீயமென்று சொல்வார்கள் விஜாரித்து நன்றாயறிந்த ஞானிகள் மரித்துப்போன மாதாவானவள் புத்திரியினாலே தகிக்கப்பட்டால் எப்படியோ அப்படிப்போலே வித்தையினாலே மாயை தகிக்கப்பட்டுப் பஸ்மமாய்ப்போனபடியினாலே காலத்திரயத்திலேயும் மாயையில்லையென்றுசொல்லுவார்கள். (௪௦-௪௧-௪௨-௪௩)

புத்திரியினாலே மாதா தகிக்கப்பட்டாப்போலே வித்தையினாலே மாயை தகிக்கப்பட்டதென்றதேதென்றால் மாயைதானே விசா

ரத்தினாலே சுத்தமாய்த் தெளிகிறபோது வித்தையாய்ப்பரிணமிக்கிற படியினாலேயும் மாயையிலே ஞானமுண்டாகிறபடியினாலேயும் மாயைக்கு வித்தையைப் புத்திரியென்று வர்ணிக்கப்பட்டது அவிசாரத்தினாலே ஜீவித்துக்கொண்டிருந்த மாயைக்கு விசாரத்தினாலே அந்திய காலம்வந்தது விசாரமாகிற அந்தியகாலத்திலே கன்றி தனக்கு நாசார்த்தமாய்ப்பிரசவிக்கிறதுபோலே மாயையுந் தனக்கு நாசார்த்தமாய் வித்தையாகிற கன்னிகையைப் பிரசவித்து நசித்துப்போயிற்று உடனே வித்தையாகிற புத்திரியானவள் தகனம்பண்ணிப் பஸ்பமாய்ப்பண்ணிப்போட்டாள் அதிலேயுண்டானது அதைத்தானே யெப்படித்தகிக்குமென்றால் மரத்தோடேமரமுராசுகிறபோது அதிலேயுண்டாகிற வன்னியானது ததை யெப்படித்தகிக்கிறதோ அப்படிப்போலே மாயையிலே யுண்டான வித்தை மாயையைத்தகிக்கும் ஆகையினாலே இப்படி வித்தையினாலே தகிக்கப்பட்டுப் பஸ்பமாய்ப் போனபடியினாலே மாயை சசிருங்கம்போலே நாமமாத்திரமிருக்கிறபடியினாலே பொய்யென்று சொல்லுவார்கள்ஞானிகள் இதுமாத்திரமன்று அவித்தைமாயையென்கிற நாமத்தினாலேயும் பொய்யென்றறியலாம் எப்படி யென்றால் யாநவித்தியா தேசா அவித்தியா யாமாசாமாயா வென்றும் யாதொன்றுமில்லையோ அது அவித்தைமாயையென்று நாமத்தினாலேதானே ஸ்புடமாயறியலாம் ஆகையினாலே இப்படி வித்தையினாலே தகிக்கப்பட்டு வியர்த்தமாய் நிஷ்பலமாய்ச் சூனியமாயில்லாமற் பொய்யாய்ப்போகிறதே மாயைக்குப்பலம் இப்படி மாயைக்குப்பலஞ் சொல்லப்பட்டது. (சக-சரு-சக)

இப்படி நிஷ்பலமாய்ச் சூனியமாய்ப்போகிறதே பலமென்று சொல்லக்கூடாது ஏனென்றால் அவித்தைதானே விசாரத்தினாலே வித்தையாய்ப்பரிணமிக்கிறதாகையினாலே அதுதானே வித்தையான

யானபடியினாலே ஸபலமாய்ச் சத்தியமாயன்றோ ஆயிற்று ஆகையினா லே பொய்யென்று சொல்லப்படாதென்று சங்கைவர அப்படிச் சொ ல்லக்கூடாதேதெனென்றால் அவித்தையாப் பரிணாமமாயிருக்கிற வித் தைதான் சத்தியமானாலன்றோ மாயை சத்தியமென்று சொல்லலாம் அப்படியன்றியிலே வித்தையும்பொய்யானபடியினாலே மாயை சத் தியமன்று வித்தையெதினாலே பொய்யென்றால் வித்தையினாலே அவித்தை நசித்தவுடனே வித்தையும் நசித்துப்போகிறபடியினாலே அதெப்படிப்போலென்றால் விருக்ஷங் கருஷணத்திலே யுண்டான அக்கினி விருக்ஷத்தைத்தகித்தவுடனே விருக்ஷம்பஸ்மமாய்ப்போ கிறபோது அக்கினியும் நசித்துப்போகிறாப்போலேயும் கதகரேணு ஜலத்திலேயிருக்கிற கல்மிஷத்தைப்போக்கித் தானுநசித்துப்போகி றாப்போலேயும் வித்தையும் அவித்தையை நாசம்பண்ணினவுடனே அது நசித்துப்போகிறபோது தானும்நசித்துப்போம் ஆகையினாலே இப்படி வியர்த்தமாய்ச் சூனியமாய்ப்போகிறதே பலமென்று சித்த மாச்சுது. (சஎ-சஅ-சக)

இப்படி வித்தையும்பொய்யானால் அதினாலே அவித்தியாகாரி யமாயிருக்கிற சமுசாரதுக்கம் எப்படி நிவர்த்தியாமென்றால் வித்தை போலே அந்த அவித்தையாகாரியமும் பொய்யானபடியினாலே அந்தப் பொய்யைப்போக்கிறதற்கு இந்தப்பொய் போரும் அதெப்படிப்போ லேயென்றாற் சொப்பனத்திலே சுத்து பாதித்தால் அந்தச்சுத்தைப் போக்கிறதற்குச் சொப்பனத்திலே பண்ணுகிறபோசனமே போரும் இரண்டும் பொய்யானபடியினாலே பொய்யான பசியைப்போக்கப் பொய்யாயிருக்கிற சொப்பனபோசனம் எப்படிப்போருமோ அப்ப டிப்போலே வித்தைபொய்யானாலும் இதுவேபோரும் ஆகையினா லே அத்தொய்த வஸ்துவினிடத்திலே பந்தமோக்ஷங்களிரண்டும் பொய்யாய்க்கற்பிக்கப்பட்டிதுகள் எப்படியானால் ரச்சுவிலே சர்ப்பமு

வந்ததும் சர்ப்பம்போனது மிரண்டும் பிராந்திகற்பிதமேயன்றியிலே சொபாவமாயில்லையோ அப்படிப்பிரமத்திலே பந்தமோக்ஷங்களும் பிராந்திகற்பிதங்களன்றியிலே சொபாவமாயில்லை. (௫௰-௫௧-௫௨)

சித்தாந்த மேதென்றால் பரமார்த்தமாய் அத்வைதமாயிருக்கிற பிரமமாத்திரம் வஸ்து அதற்கன்னியமாயிருக்கிற சகலமும் அவஸ்தை காலத்திரயத்திலேயு மில்லையென்று சித்தாந்தம் இப்படியே சுருதிசொல்லுகிறது எப்படியென்றால் ஒன்றுமொருக்காலு முற்பத்தியாகவுமில்லை நசிக்கவுமில்லை பந்தமுமில்லை பந்தப்படுகிறதுமில்லை மோக்ஷமுமில்லை மோக்ஷவிச்சுவுமில்லை மோக்ஷார்த்தமாய்ச் சிரவணாதிகளைப் பண்ணுகிறவனுமில்லை முக்தனுமில்லை இதுவே பரமார்த்தமென்றிப்படிச் சுருதிசித்தாந்தம். (௫௩-௫௪)

இப்படிச்சொன்ன பிரகாரமாய் மாயை மாயாகாரியம் ஒன்றுமன்றியிலே சன்மாத்திரமாயிருக்கிற வஸ்துவையறிகிற அத்வைத ஞானமே அபவாதமென்று சொல்லப்படும் இந்தநிஷ்டையே ஜீவன்முக்தியென்று சொல்லப்படும். (௫௫)

இந்த அபவாதப்பிரகரணத்தை யாதொரு வித்துவான் நனறாய்ப் பராமரிசித்தறிகிறானோ அவனே இந்தமாயையை அபவாதம் பண்ணுகிறதற்குச் சாதனமாயிருக்கிற சுவாத்மவிசாரத்தை இச்சிப்பன் விசாரத்திற்குச் சாதனசதுஷ்டயமுள்ளவனே அதிகாரியானபடியினாலே மேற்பிரகரணத்திலே அதிகாரிலக்ஷணஞ்சொல்லி அதற்குமேல் அதிகாரிக்கு விசாரஞ் சொல்லப்படுகிறது ஆகையினாலே அதிகாரியாய்ச் சிரவணாதி விசாரம்பண்ணி மாயையை அபவாதம் பண்ணவேண்டியபடியினாலே இந்த அத்தியாரோப அபவாதங்களை அறிந்தவன் விசாரம்பண்ணவேண்டுமென்றிச்சிப்பனென்றிப்படி அபவாதஞ் சொல்லப்பட்டுது. (௫௬)

(இரண்டாவது அபவாதப்பிரகரணம் முற்றிற்று.)

# மூன்றாவது சாதனப்பிரகரணம்.

சச்சிதானந்த சொரூபராயிருக்கிற பரமாத்மாவுக்கு சமுசாரமே தென்று விசாரிக்கிறபோது பரமாத்மாவினுடைய சத்தி அவியத்தமாயிருக்கிறபோது மாயையென்றும் வியத்தமாகிறபோது மனதென்றுஞ் சொல்லப்படும் இப்படி மாயாபரிணாமாத்மகமாய் அநிர்வசநீய சொருபமாயுமிருக்கிற மனதே ஆத்மாவுக்குச் சமுசார அங்குரமென்று தத்துவவித்துக்கள் சொல்லுவாள் மனது அநிர்வசநீயசொருபமென்று யார்சொல்லியிருக்கிறார்களென்றால் ஸ்ரீவசிட்டர் சொல்லியிருக்கிறார். (க)

சத்தாயிருக்கிற சித்துக்கும் அசத்தாயிருக்கிற சடத்துக்கும் விலக்ஷணமாயும் கற்பனோன்முகமாயும் அத்தெர்ய்தமாயிருக்கிற சித்தினிடத்திலே அதுவிதுவென்று சடமாயிருக்கிற சங்கற்பவாசனைகளைக் கற்பிக்கிறதாயுந் திரும்பியுபயாத்துமகமாய்ச் சிற்சடங்களையுமொன்றுக்கிறதாயு மிரண்டுவிதமாயும் டோளாயமானமாயுஞ் சஞ்சலாத்மகமாயும் யாதொருபாவமிருக்கிறதோ அதுவே மனதென்று சொன்னார் இராமனுக்கு ஸ்ரீவசிட்டர் ஆகையினாலே மனது அநிர்வசநீய சொருபமென்றறி. (உ-ங)

பரமாத்மாவானவர் தான் நிருவிகாரராயிருந்தாலும் இந்த மனதோடே அத்தியாசத்தினாலே கூடினபடியினால் விகாரத்துவத்தை அடைந்தார் அதெப்படிப்போலென்றால் மத்தியபானம்பண்ணி அந்தமதத்தோடேகூடின பிராமணனானவன் எப்படி விகாரியாகிறானோ அப்படி ஆத்மாவுஞ் சொதகா நிருவிகாரியானாலும் மனோயோகத்தினாலே விகாரியாய்ச் ஜீவனாய்ச் சமுசாரத்தை அடைகிறார் ஆகையினா

லே மனதே ஆத்மாவுக்குச் சமுசார மிதற்குப்பிரமாணமேதென்றாற் சுருதியே பிரமாணம். (௪)

புருடனுக்கு சித்தமேசமுசார மாகையினாலே சித்தத்தைச்சோதிக்கவேண்டும் ஏனென்றாற் புருடனெந்தெந்த விடயமாயிருக்கிற சித்தத்தையடைகிறானோ அந்தந்த விடயமாய்த் தத்தன்மயமாய் சித்தம் எப்படியெப்படி யாகிறதோ அப்படிஅப்படி யாகிறான் இதுவே அநாதிசித்தமாயிருக்கிற அதிரகசியமென்று மைத்திராயணிய சாகை சொல்லுகிறது அப்படியே அன்னுவயவிதிரேக யுக்தியினாலேயு மநுபவத்தினாலேயுஞ் சித்தமாச்சுது. (௫)

அநுபவமேதென்றாற் சுழுத்தியிலே மனோவிசிரிம்பனமில்லாமலொழிந்திருக்கிறபோது ஆத்மா நிருவிகாரமாய்ச் சமுசாரமில்லாமலிருக்கிறார் சாக்கிரசொப்பனங்களிலே மனது விசிரிம்பிக்கிறபோது விகாரியாய்ச் சமுசாரத்தையடைகிறார் இது எல்லாரும் நித்தியமநுபவிக்கிறாள் ஆகையினாலே இப்படிச் சுருதி ஸ்மிருதி யுக்தி அநுபவங்களினாலே மனதே ஆத்மாவுக்குச் சமுசாரமென்று சித்தமாச்சு இப்படி மனதே சமுசாரமென்கிற இந்த அர்த்தத்திலே புத்தியானாயிருக்கிறவனெவன்றான் சமுசயவிவாதங்களை அடைவனொருத்தருக்கும் * விப்பிரதிபத்தியில்லை சித்தம். (௬-௭)

ஆத்மா மனோயோகத்தினால் எப்படிச் சமுசாரத்தையடைகிறாரென்றால் அநுவிது வென்று சதாமனனிக்கிறதே சொருபமாயிருக்கிற மனது அகம்விர்த்தியென்றும் இதம்விர்த்தியென்றும் இரண்டுவிதவிர்த்தியாத்மகமா யிருக்குமென்கிறது பூருவந்தானே அத்தியா

---

* விற்பிரிதிபத்தி என்றும்பாடம். விப்பிரதிபத்தி என்றது-சந்தேகம்.

ரோபப்பிரகரணத்திலே சொல்லப்பட்டது அதிலே அகம்விர்த்தியாத்மகமாயிருக்கிற மனதினுடைய அம்சமானது நானென்றேகரூபமாயிருக்கும் இதம்விர்த்தியாத்மகமாயிருக்கிற பின்னையொரு அமுசம் சத்துவரசதமோ குணபேதங்களினாலே நானாவிதாகாரமாய்ப் பரிணமிக்கிறது இப்படி ஆர் சொன்னார்களென்றால் ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள். (அ-கூ)

எப்படிச்சொன்னார்களென்றால் சத்துவரசதமசுகள் மூன்றும் மனதினுடைய குணங்கள் அந்தக்குணத்திரயங்களினாலே மனது விகாரத்தைஅடைகிறது எப்படியடைகிறதென்றால் சத்துவகுணத்தினாலே வைராக்கிய சாந்தியுதாரமுதலான விகாரத்தை அடைகிறது ரசோகுணத்தினாலே காமக்குரோத லோபபய யத்தனாதிகளாயிருக்கிற விகாரத்தை அடைகிறது தமோகுணத்தினாலே ஆலசியம் பிராந்தி தந்திரியாதிகளாயிருக்கிற விகாரத்தை அடைகிறதென்று சொல்லியிருக்கிறார்கள். (ഥ-ഥக)

பரமாத்மாவானவர் நிருவிகாரியாய்ச் சுத்தசின்மாத்திர சொரூபராயிருந்தாலுங் குணத்திரயத்தினாலே யுண்டான மனோவிகாரங்களோடே கூடுகிறபோது தத்தன்மையராயானார் அதெப்படிப்போலேயென்றால் நிருமலஜலமானது தான் சுத்தமாய்ச்சீதமாயிருந்தாலும் உஷ்ணம் உறைப்பு புளிப்பு கசப்பு தித்திப்பு முதலான ரசங்களோடே கூடுகிறபோது எப்படி யதன்மயமாயாகிறதோ அப்படிப்போலே சொதகா சச்சிதானந்த சொரூபராயிருக்கிற ஆத்மாவும்அகம் விர்த்தியோடே கூடுகிறபோது நானென்றகங்காரமயராய்த்தோனுகிறார் சீதமாயிருக்கிற ஜலம் அக்கினிசையோகத்தினாலே உஷ்ணமாயானாப்போலே ஆனந்தரூபராயிருக்கிற ஆத்மாவும் அகங்காரயோகத்தினாலே நானென்று துக்கரூபரானார் சுத்த ஜலங் கார்த்தல் தித்தித்

தலாதிரசங்களோடே கூடினால் அதன் மயமா யெப்படியாகிறதோ அப்படிப்போலே சித்ரூபராயிருக்கிற ஆத்மாவும் வைராக்கியாதியாயும் காமக்குரோதாதியாயும் ஆலசியாதியாயும் இருக்கிற மனோவம்சமான இதம்விருத்தியோடே கூடினபடியினாலே தத்தமயராய்த்தோணுகிறார். (௰௨-௰௩-௰௪)

ஆத்மா தத்தமயராணாரென்று சுருதியுஞ்சொல்லுகிறது எப்படியென்றால் இந்தவாத்மாத்தானே பிராணாதியோகத்தினாலே பிராணமயராயும் மனோமயராயும் புத்திமயராயும் பிருதிவியாதிபூதமயராயுங் காமக்குரோதாதிமயராயும் வைராக்யாதிமயராயும் ஆனாரென்று சுருதி சொல்லுகிறது. (௰௫)

இப்படிச்சொன்ன பிரகாரமாய் ஆத்மாவானவர் மனோயோகவசத்தினாலே விகாரியாய்ச் ஜீவனாய் நானென்றும் நீயென்றுமிதென்றும் மிதென்று மென்னதென்று முன்னதென்று நானாவிதப்பிராந்தியினாலே விஸ்தாரமாய் அபாரமாயிருக்கிற சமுசாரசாகரத்திலே மூழ்கிப்போய்த்துக்கிக்கிறார். (௰௬)

இப்படி யாத்மாவுக்குச் சமுசாரம் வந்துள்ளளவிலே இந்தச்சமுசார மெப்படிப்போமென்றால் இந்தமனது உபசாந்தியை அடைந்தால் அப்போது சகலசம்சாரமும் நிச்சேஷமாய் நிவிர்த்தியாம் அதன்றியிலே யன்னியதாவாய்க் கற்பகோடிகாலத்திலேயும் சமுசாரம்நிவிர்த்தியாகாது. (௰௭)

மனசாந்தியினாலே சமுசாரம் நிவிர்த்தியாகவேண்டுமேயொழியப் பின்னையொன்றினாலேயும் ஆகாதோவென்றால் ஆகாது வேதங்கள் சாஸ்திரங்கள் தபசுகள் கருமங்கள் விரதங்கள் தானங்கள் செபங்கள் உபாசனைகள் புராணங்கள் இதுமுதலான வொன்றினாலேயுஞ் சமுசாரம் நிவிர்த்தியாகாது மனசமனமொன்றுமே நிவிர்த்திபண்ணுகிற

து அதைத்தவிர வேறேயொன்றுஞ் சமுசாரநிவிர்த்தி பண்ணமாட்டாது. (௰அ)

ஞானமன்றோ சமுசாரத்தை நிவிர்த்திபண்ணுகிறதென்று சாஸ்திரஞ்சொல்லுகிறது அப்படியன்றியிலே மனசமனத்தினாலே சமுசாரநிவிர்த்தி சொல்லுகிற தெப்படியென்றா லிந்த மனசாந்தியே ஞானமென்றும் முக்தியென்றுஞ் சகல சாஸ்திரங்களிலேயு நானாப் பிரகாரமாய்ச் சொல்லப்படுகிற தாகையினாலே சொல்லலாமே இப்படி யார்சொன்னாரென்றால் ஸ்ரீ வசிட்டர்சொன்னார் எப்படியென்றால் மேற்சொல்லுகிறோம். (௧௧)

மனதை அப்பியாசயோகத்தினாலே நிரோதம்பண்ணினாற் சமுசாரப்பிரமையெல்லாஞ் சாந்திஅடையும் எப்படிபோலேயென்றால் அமிர்தமதனம்பண்ணுகிறபோது மந்தரபருவவேகத்தினாலே குழம்பினசீரசமுத்திரம் மந்தரபருவதத்தையெடுத்துப்போட்டாலெப்படித்தெளிந்து கலக்கமெல்லாம் போமோ அப்படிப்போலே மனசாந்தியினாலே சமுசாரசாந்தியாம் மனசாந்தி யெதினாலே வருமென்றால் வைராக்கியத்தினாலே இஷ்டவஸ்துக்களையெல்லாம் தியாகம் பண்ணிப்போட்டுத் தன்னுடையபுருடயத்தனத்தினாலே யெளிதாய்ச்சாதிக்கலாம் இப்படியிருக்கிற மனசமனமொன்றுந்தவிர வொருக்காலும் மோக்ஷமில்லை பிரமத்தைத்தவிர அன்னியமாயிருக்கிற திரிசயப்பிரபஞ்சம் காலத்திரயத்திலு மில்லையென்கிற விவேகபலத்தினாலே மனதிலே பிராந்தியினாலேதோணுகிற சகலதிரிசியங்களும் என்றைக்கு நன்றாய்த் தொடைபட்டதோ அன்றைக்கு நிரதிசய சுகத்தை அடைவன் அன்னியதாவாய் மனசாந்தியைத்தவிர சாஸ்திரங்களாகிற படுகுழியிலேகிடந்துபுரளுகிற அஞ்ஞானிகளுக் கொருக்காலுங் [illegible]கோடியினாலேயும் மோக்ஷசுகமில்லை ஆகையினாலே [illegible]பியாசயோகத்தினாலே சகலவாசனைகளெல்

லாம் நசித்து நிர்வாசனையாய்ச் சாஞ்சலியமன்றியிலே நிவாதஸ்தானத்திலே கும்பத்திலேவைத்திருக்கிற தீபம்போலே யிருக்கிறதோ அதுவே மிருதமனதென்று சொல்லப்படும் இப்படிமனோமரணமே புருடார்த்தம் எப்படியென்றால் இந்த மனோநாசந்தானே மோக்ஷமென்று சகல வேதசாஸ்திர சித்தாந்தம் இந்த மனோலயத்தைத்தவிர தனங்கள் பெந்துக்கள் மித்திரர்களாலேயும் பிரயோசனமில்லை அத்தபாதசலனம்பண்ணுகிற கருமங்களினாலேயும் பிரயோசனமில்லை தேசாந்திரத்திலே போனாலும் எந்தலோகத்திலே போனாலுங் கங்காதீர்த்தயாத்திரை பண்ணினாலுங் காயக்கிலேசத்தினாலேயும் மற்றொன்றினாலேயும் மோக்ஷமில்லை கேவல மனோநாசமாத்திரத்தினாலேயே முத்தியை அடையலாமென்று ஏவமதியா யிப்படி வெகு கிரந்தங்களினாலே வெகுவாய்ச்சொல்லுகிறது சமுசாரமூலமாயிருக்கிற மனோநாசத்தினாலேயே மோக்ஷசுகமானது கிடைக்குமென்று வாசிட்டத்திலேயும் வெகுவாய்க் கோஷிக்கப்பட்டிருக்கிறது. (௨0-௨௧-௨௨-௨௩-௨௪-௨௫-௨௬-௨௭)

சொன்னபிரகாரமாய்ச் சுருதியுக்தி யநுபவங்களினாலே மனோநாசமாகிற வித்தையே சமுசார நிவர்த்தகம் அதைத்தவிர புருடாளுக்குச் சமுசாரதுக்கம் யெதினாலே உபசாந்தியை அடையப்போகிறது நிவிர்த்தா னெங்கேவரப்போகிறது ஒருக்காலுமில்லை எப்படிப்போலேயென்றால் தான் விழித்தாலொழிய தான்கண்ட சொப்பனமெப்படிப்போகாதோ வியாக்கிராதியனர்த்தமு மெப்படிப் போகாதோ அப்படிப்போலே தன்னுடையமனோபிராந்தி போனாலொழியச் சம்சாரதுக்கம்போகாது ஆகையினாலே மனசமனமே பண்ணவேண்டும் அதுவே புருடார்த்தம். (௨௮)

இந்த மனசமனத்திற்க் குபாயமேதென்றாற் சாங்கியமென்கிற விசாரமே யுபாயம் ஏனென்றால் மனதிற்கவிசாரமே மூலமானபடி

யினாலே விசாரத்தினாலே நசிக்குமென்று தத்துவவித்துக்கள் சொல்வார் சாங்கியவிசாரமாவ தேதென்றாற் சிரவணமென்றும் மனனமென்றும் நிதித்தியாசனமென்றுஞ் சமாதியென்றும் இப்படி நாலுவிதமாய்ச் சாஸ்திரத்திலே சொல்லப்பட்டிருக்கிறதன்றோ அதுவே விசாரம் இந்த விசாரமே மனசாந்திக்குபாயம். (உ.௬-௩௦)

பின்னையொருபக்ஷஞ் சாங்கியமன்றியிலேபோனால் யோகந்தான் மனசாந்திக் குபாயமாகலாம் யோகமாவ தேதென்றால் நிர்க்குணவஸ்துத்தியானமே யோகமென்று சொல்லப்படும் இப்படியோகமும் மனசாந்திக் குபாயமென் றெங்கே யார்சொன்னாரென்றாற் கீதையிலே பகவான் சொல்லியிருக்கிறார் எப்படிசொன்னாரென்றாற் சாங்கியத்தினால் எந்தத்தான மடையப்படுகிறதோ யோகத்தினாலேயும் அந்தஸ்தானத்தை அடையலாஞ் சாங்கியமுயோகமும் முடிவிலே பலம் இரண்டுக்கு மொன்றென் றியாவனறிகிறானோ அவனே யறிந்தவனென்று பகவான் சொன்னார். (௩க-௩உ)

சாங்கிய யோகங்கள் இரண்டுக்கும் பலமெப்படி யொன்றென்றால் இரண்டுக்கும் அவதியொன்று அவதி யேதென்றால் மனசாந்தியாகிற சமாதியே அவதி ஆகையினாலே முடிவிலே சமாதியினாலே தத்துவஞானமாகிற பலம் இரண்டும் ஒன்றே இரண்டுக்கும் பலமொன்றேயானா லொன்றுபோருமே இரண்டுமார்க்கஞ் சொல்லுவானேனென்றால் லோகத்திலே அதிகாரிபேதங்கண்டபடியினாலே அதிகாரிக்குத்தக்கதா யிரண்டு மார்க்கத்தை விசாரித்துப் பார்த்துப் பகவான் சொன்னார். (௩௩-௩௪)

விசாரத்திற் கதிகாரியாரென்றாற் பூரண சாதனஸம்பன்னனையிருக்கிறவனே அதிகாரி அவனுக்கே சாங்கியவிசாரஞ் சித்திக்கும் அன்னியனுக்குச் சித்தியாது. (௩.ரு)

சாதனமாவ தேதென்றால் முன்னே நித்தியாநித்தியவஸ்து விவேகமென்றும் இகாமுத்திரார்த்த பலபோகவிராகமென்றும் உபரதியென்றும் மோட்சேச்சையென்றும் இப்படிச் சாதனங்கள் நாலுவிதமாய் வித்துவாமிஷாளாலே சொல்லப்படும் இந்த நாலுசாதனங்களுமன்றியிலேபோனால் வெகுயத்தனம் பண்ணினாலும் விசாரஞ் சித்தியாகாது ஆகையினாலே இந்தச் சாதனசதுஷ்டயங்களே விசாரத்திற்குச் சாதனம். (ருக-ருஎ)

சாதனசதுஷ்டயங்கள் நாலுக்கும் ஏதுசொருபாதிகளாயிருக்கிற அசங்கரத்தை முன்னே யறியவேண்டும் சுவாத்மவிசாரம் பண்ணவேண்டுமென்கிறவன் முன்னே சாதனங்களுக்கேதுவாகிய அசங்கரத்தை அறிந்துகொண்டு பின்னே விசாரிக்கவேண்டும் ஆகையினாலே நித்தியாநித்தியவஸ்துவிவேகாதி சாதனங்களுக்கும் ஏது சொருபங்காரியமென்கிற அசங்கரமும் அவதியும் இதுகளுக்கு பலமும் மேற் சொல்லப்படுகிறது. (ருஅ)

அதில் ஏதுசொருபங்காரிய மேதென்றால் நித்தியாநித்தியவஸ்துவிவேகத்திற்குச் சித்தசுத்தியே ஏது பிரமமாத்திரஞ் சத்தியம் அன்னியமெல்லாம் அசத்தியமென்று சாஸ்திரங்களினாலே நிச்சயிக்கிறது சொருபம் அதைத்தானே சதாசிந்திக்கிறது காரியம் இகாமுத்திரார்த்த பலபோக விராகத்திற்கு விடயங்களிலே தோஷதிருஷ்டியே ஏது ஆசையில்லாமல் விஷயங்களைவிடுகிறதேசொருபம் திரும்பித் தேகவியவகார போசனாதிபோகத்தினாலேயும் வாந்தாசனம்போலே கண்டு ஆசைவாராமலிருக்கிறதே காரியம் உபரதிக்கு இயமம்நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரந் தாரணை தியானம் சமாதியென்கிற அட்டாங்கயோகமே ஏது சித்தநிரோதமே சொருபம் வியவகாரக்ஷயமே காரியம் மோட்சேச்சைக்குச் சற்சங்கமே ஏது மோக்ஷமாத்திரத்திலே இச்சிக்கிறதே சொருபம் குருவை அடைகிறதே காரி

யம் இப்படி நித்தியாநித்தியவஸ்துவிவேகாதிகளுக்குச் சாதாரணஏது வாதி அசங்கரமாகிய பிரிச்சல் சொல்லப்பட்டுது: (௩௧-௪௦-௪௧-௪௨)

நித்தியாநித்தியவஸ்துவிவேகத்திற் கவதியேதென்றாற் பிரம மாத்திரம் நித்தியம் அன்னியமெல்லாம் அநித்தியமென்றிருக்கிற நிச் சய மொன்றினாலும்போகாமல் நன்றாய்த்திடமாயிருக்கிறது வைராக் கியத்திற்கவதி ஏதென்றாற் றேகத்தைத்தொட்டுப் பிரமலோகபரியந் தமாயிருக்கிற சகல போகங்களிலேயும் ஆசையில்லாமற் றிரணம் போலேயும் வாந்தாசனம்போலேயுங் காலாக்கினிபோலேயும் நரகம் போலேயும் காணுகிறது உபரதிக்கவதி யேதென்றாற் பிரவிருத்தி யற்றபடியினாலே சுழுத்திபோலே விடயங்களை மறக்கிறது மோக்ஷ விச்சைக் கவதியேதென்றாற் சகலசாஸ்திரங்கள் கருமங்களெல்லாந் தியாகம்பண்ணுகிறதுஇப்படி நாலு சாதனங்களுக்கும் அவதி சொல் லப்பட்டுது இந்தநாலும் அவதிபரியந்தமானால் பூரணசாதனங்களெ ன்று சொல்லப்படும். (௪௩-௪௪)

இப்படிப் பூரணமாயிருக்கிற சாதனங்களுக்கும் பலமே தென்றால் நாலுமொருமித்துக்கூடாமல் வேறுவேறாய்ப் பிரிந்திருந் தாற் சுவர்க்காதியாயிருக்கிற புண்ணிய லோகப்பிராப்தியே பலம் நாலுமொருமித்துக்கூடியிருந்தா லிங்கேதானே சீக்கிரஞ் சித்தியைக் கொடுக்கிறபடியினாலே ஆத்மவிசாரமே பலமென்று தத்துவவித்துக் களாயிருக்கிற மஹாத்மாக்களாலே சொல்லப்படும். (௪௫-௪௬)

இந்த நாலுசாதனங்களு மொருமித் தொருத்தனிடத்திலே கூடித்தென்றால் அப்போது ஆத்மவிசாரஞ் சித்திக்கும் இதிலே யொ ருசாதனமாகிலுங் கூடாவிட்டால் விசாரம் பிரதிபந்திக்கப்படும் அதெப்படியென்றாற் மேற்சொல்லுகிறோம். (௪௭)

நித்தியாநித்தியவிவேகமாத்திரம் பூரணமானாலும் வைராக்கியாதித்திரயமு மில்லாமற்போனால் ஆத்மவிசாரம் பிரதிபந்திக்கப்படும் ஏனென்றால் லோகத்திலேவேதாந்தசாஸ்திரம் படித்தவர்களெல்லாம் நித்தியாநித்தியவஸ்துவிவேகிகள்தான் படித்தவாளெல்லாம் விவேகிகளானாலும் வைராக்கியாதிக ளில்லாமற்போனபடியினாலே யெல்லலாருஞ் சித்தியை அடையவில்லை வைராக்கியாதியுள்ளவனே சித்தியையடைகிறான் ஆகையினாலே விவேகமாத்திரம் போராது வைராக்கியாதிகளும் வேண்டும். (சூ௮-௬௧)

வேதாந்தம் படித்தும் வைராக்கிய மில்லாததினாலே விசாரசித்தியை யேனடையவில்லையென்றால் வேதாந்தத்தைச் சதாப்படித்தாலுஞ் சீடருக்குப்பாடஞ்சொல்லிவைத்தாலும் வைராக்கிய மில்லாவிட்டால் வேதாந்தத்திற் கூறிய அநுட்டானத்தைப் பண்ணவில்லை பின்னை யென்னசெய்வாளென்றாற் கிளிப்பிள்ளைபோலே வாயினாலேமாத்திரம் வேதாந்த சப்தங்களைச் சொல்லுவாளன்றியிலே சாஸ்திரார்த்தத்தை அனுட்டிக்க மாட்டாள் வேதாந்தசாஸ்திரமென்ன சொல்லுகிறதென்றால் அத்வைதப்பிரமத்தைத்தவிர அன்னியமெல்லாந் துக்கரூபமென்றுகண்டு வொன்றிலேயும் ஆசையற்று ராகத்துவேஷாதிகளைவிட்டு நானென்கிற அகங்காரக்கிரந்தியை நிச்சேஷமாய் நாசம்பண்ணி நானென்றும் நீயென்றும் அவனென்றும் இவனென்றும் அதென்றும் இதென்றும் என்னதென்றும் உன்னதென்றும் ஏவமாதிப்பிராந்திகளெல்லாம் விட்டு என்னதென்கிற அபிமானங்கள் விகற்பங்களெல்லாம் விட்டு நிர்விகற்பமாய் லாபாலாப சீதோஷ்ண சுகதுக்காதி தொந்தங்களெல்லாம் விட்டுச் சமபுத்தியாய்ப் பூரணதிருஷ்டியை அடைந்து பேதப்பிரதீதியன்றியிலே காலத்திரயத்திலேயும் பிரமத்தைத்தவிர அன்னியவஸ்துவைக் காணாமல் அத்வைதபிரமானந்தாநுபவத்தைச் சதா அநுபவிக்கச்

சொல்லி வேதாந்தசாத்திரஞ்சொல்லுகிறது இந்தச் சாஸ்திரத்தைப் படித்தாலுஞ் சாஸ்த்திரார்த்தத்தை அறிந்தாலும் வைராக்கியமில்லாமற்போனால் விடயாசக்திபோகாது இஷ்டவஸ்துக்களிலேயும் போசனாதிகளிலேயும் வாந்தாசனம்போலே அருசிவாராதபடியினாலே அதிலே ஆசக்திபோகாது பாஹ்ய போகாசக்தியை விடாதபடியினாலே காமக்குரோதாதிகளும் விட்டாமுத்திர பாத்திரமாகிய தேகத்திலே நானென்றகந்தையுந் தேகத்துக்கிதமாயிருக்கிற வஸ்துக்களிலேயென்னதென்னு மமதாபிமானமும் சுகதுக்காதி தொந்தங்களுஞ் சகலவிகற்பங்களும்ஒன்றும்போகாது ஆகையினாலேசாஸ்திரத்தைப்படித்தாலுஞ் சாஸ்திரத்திற் கூறுநின்ற வைராக்கியானுட்டானமில்லாமற்போனால் அவன் சாஸ்திரார்த்தத்தை அறிந்தவனேயன்று விருதாவாய் வாயினாலேமாத்திரம் பிரமமாத்திரம் சத்தியம் அன்னியமெல்லாம் அசத்தியமென்று கிளிப்பிள்ளைபோலே சொல்லுவனேனென்றாற் சுவானமானது அமேத்தியத்திலே ரமிக்கிறாப்போலே பாகிய போகத்திலே ரமித்துக்கொண்டிருக்கிறபடியினாலே வைராக்கியமில்லாதவன் வேதாந்தத்தைச் சதாப்படித்தாலும் பாடஞ்சொல்லிவைத்தாலும் அவன் சுவானத்திற்குச்சமானமென்று மஹாத்மாக்கள் சொல்வாள் இப்படியார்சொன்னாரென்றால் ஸ்ரீ வசிட்டர்சொல்லியிருக்கிறார் அதை மேற்சொல்லுகிறோம். (௫௰-௫௧)

யாதொருபுருடாள் சகலசாஸ்திரம்படித்துஞ் சகலத்திலேயுஞ்சமர்த்தாளாயிருந்து நாமே சர்வஞ்ஞாள் நாமே சமர்த்தாள் நாமே பெரியவாளென்று அகங்கார தரபிமானத்தை அடைந்து ராகத்துவேஷமயர்களாயிருக்கிறார்களோ அவாள் மான்ணியகர்த்தாள் வெகுதூரஞ்சுமையெடுக்கிறதாய் வெகுவிலைபெற்ற பெரியகழுதைகள் அவர்களை அத்தொய்தகதையிலே நினைக்கவே ஆகாதென்று ஸ்ரீவசிட்டர் இராமனுக்கு வெகுவாய்ச்சொல்லியிருக்கிறார். (௫௨)

இப்படிச்சாஸ்திரத்தைப்படித்தும் சாஸ்திரத்திற்கூறிய அநு ட்டானமில்லாமற் போனவர்களுண்டோ வென்றால் அனேகம்பே ருண்டு புராணங்களிலேயுங் கேட்டிருக்கிறோம் எப்படியென்றாற் பிரமசர்மாவென்கிற பிராமணன் முதலான அனேகம்பேர் வேதங் கள் வேதாந்தங்கள் முதலாய் அறிந்து சமர்த்தாளாயிருக்கிறவர்கள் அந்தச் சாஸ்திரத்திற்கூறிய அனுட்டானத்தைப் பண்ணாமற் பரா ளுக்குபதேசித்துக்கொண் டிராகத்துவேஷ புஷ்டாளாய் ஆச்சிரம ஆசார மரியாதயைமுதலாய்க்கடந்து போசனாதி போகங்களிலே ஆசையினாலே துர்ப்போசனாதிகளைத் துர்ப்பி ரவிருத்திகளைப் பண்ணி நரகத்திலே விழுந்தாளென்று புராணகதையைக் கேட்டிருக்கிறோம் அப்படியே லோகத்திலேயுஞ் சகல சாஸ்திரஞ்ஞாளாயும் ராகத்து வேஷ துரகங்கார துரபிமானிகளா யிருக்கவுங் கண்டோம் ஆகையி னாலே வேதாந்தத்தைப்படித்து நித்தியாநித்தியவஸ்துவிவேகம்வந் தாலும் வைராக்கியமில்லாமற்போனால் அந்த விவேகமும் நிஷ்பலம் விசாரஞ்சித்தியாகாது. (ருக)

ஆனால் நித்தியாநித்தியவிவேகம் வைராக்கியம் இரண்டும் வந் தாற்போராதோவென்றாற் போராது இரண்டும் வந்தாலும் உபரதி யன்றியிலே போனால் விசாரஞ்சித்தியாகாது ஏனென்றால் உபரதி யில்லாமல் வைராக்கியமாத்திரம் வந்தவன் தன்னை விசாரிக்கிறதற் கே இச்சிக்கவில்லை அவனுக்கு விசாரசித்தியென்கிறகதைதான் எங் கேவரப்போகிறது வைராக்கியம் வந்தவன் விசாரிக்கவேண்டுமென் று இச்சியாமற் பின்னை யென்னசெய்வானென்றால் ஒழிவுதல் வா ராதபடியினாலே பிரமாநந்தத்திலே விசிராந்தியை அடையாமலிரு க்கிறதினாலேயும் போகத்திலேயும் வாந்தாசனம்போலே அருசிவந் ததினாலு மொன்றிலேயும் ரமியாமற் கிரகட்சேத்திராதிகள் சத்தாதி விடயங்களையும் தேகத்திற் குபயோகமாயிருக்கிற சகல போகங்

கௗயும் விட்டுவிடுவன் அன்றியிலேபோனாலுஞ் சுஷ்கவைராக்கிய சாலிகளாயிருக்கிறவர்கள் நிர்ச்சனமாயிருக்கிற வனத்திலேபோய்த் தவசுபண்ணவேண்டுமென்று யத்தனம் பண்ணுவார்கள் இதற்குதாரணமேதென்றால் சிகித்துவசனென்கிற ராஜாமுதலானபேர்கள் சுஷ்க வைராக்கியத்தினாலே வனத்திலேபோனானென்று கதை வாசிட்டாதிகளிலே சொல்லியிருக்கிறதுவே யுதாரணம். (௫௪-௫௫-௫௬)

ஆனால் நித்தியாநித்தியவிவேகம் வைராக்கிய முபாதி மூன்றும்வந்தாற் போராதோவென்றாற் போராது ஏனென்றால் விவேக வைராக்கியோபரதிமூன்றும் வந்தாலு மோக்ஷவிச்சையன்றியிலே போனால் விசாரஞ்சித்தியாகாது ஏனென்றால் மோக்ஷம்வேண்டுமென்றாசையில்லாமல் மோக்ஷவிச்சைவாராதபடியினாலே விசாரத்தைப்பண்ணான் பின்னை யென்னசெய்வானென்றா லொருவிடயத்திலேயும் பிரவிருத்தியற்று உதாசினனாயிருப்பன் இப்படி விவேகவைராக்கியமுபாதிவந்து மோக்ஷவிச்சைவாராமல் விசாரியாமலிருந்தவனுண்டோவென்றாலுண்டு லோகத்திலே தபசிகளுக்கெல்லாம் வைராக்கியமுமுண்டு சித்தமேகாக்கிரமாகிறவுபரதியுமுண்டு உண்டானாலும் அந்தத்தபசிகள் ஆத்மவிசாரம்பண்ணவில்லை பின்னையென்னசெய்வானென்றால் ஒருவிடயத்திலேயும்பிரவிருத்தியாமல் ஏகாக்கிரமாய்த் தூங்கினவன்போலே நிரந்தரந் தபசைப்பண்ணுவான் ஆத்மவிசாரம்பண்ணான் மோக்ஷவிச்சையில்லாதபடியினாலே இப்படி வுபரதியடைந்த தபசிகளுக்குமுதலாய் ஆத்மவிசாரஞ் சித்திக்கவில்லையென்கிறதிலே சம்மதியேதென்றால் அத்தியந்தமுபரதானாயிருக்கிற சரபங்கராதிரிஷிகள் சுவர்க்காதிகளை அடைந்தாரென்று இராமாயணாதிகளிலேசொல்லியிருக்கிறகதையே யிதற்குச் சம்மதி வுபரதாளுக்குச் சுவர்க்காதிகளிலே போனமாத்திரத்தினாலே விசாரசித்தியாகவில்லையோவென்றாலில்லை ஏனென்றால் ஆத்மவிசாரம்

சித்தித்தவனுக்கு ஜனனங்கள் லோகாந்தரகமனங்களில்லாமல் முக்தியை யன்றே அடையவேண்டும் அப்படியன்றியிலே லோகாந்தரகமனம் வந்தபடியினாலே வுபரதாளானாலும் விசாரசித்தியாகவில்லையென்று நன்றாயறியலாமே ஆகையினாலே விவேகவைராக்கியமுபரதிமூன்றும் வந்தாலும் மோக்ஷவிச்சையில்லாமற்போனால் ஆத்மவிசாரஞ் சித்தியாகாது. (௫௭-௫௮-௫௯)

இந்த மோக்ஷவிச்சைவந்தாலும் வைராக்கிய வுபரதிகளில்லாமற்போனால் விசாரஞ்சித்தியாகாது ஏனென்றால் வைராக்கிய வுபரதிகளன்றியிலே மோக்ஷவிச்சைமாத்திரம்வந்தவாள் விசாரசித்தியை அடையமாட்டாள் பின்னை யென்னசெய்வாளென்றால் மோக்ஷம்வேண்டுமென்று அத்தியந்தம் ஆசையிருக்கிறபடியினாலேயும் விசாரித்தாலும் வைராக்கியாதியில்லாததினாலே விசாரசித்தியாகாததினாலேயும் முடவன் கொம்புதேனுக் காசைப்பட்டாற்போலே அசாத்தியத்திலே ஆசைவந்தபடியினாலே சதாதுக்கிப்பாளன்றியிலே போனால் மோக்ஷவிச்சாதிஜயத்தினாலே குருவையடைந்து குருவினிடத்திலே சிரத்தாளுக்களாய்ச் சகலத்தையும்விட்டுப்போட்டுக் குருவுபதேசத்தினாலே சித்தியை அடைகிறதற்குத்தக்கதா யத்தனம் பண்ணுவாள் இப்படி முமுட்சுக்கள் வைராக்கியாதியில்லாவிட்டாற் றுக்கிப்பாளென்கிறதிலே பிரமாணமேதென்றாற் சூதசங்கிதாவசனமே பிரமாணம் அதைமேற்சொல்லுகிறோம். (௬௦-௬௧)

யாதொருமனுடாள் விஷயாசக்தாளாயிருந்துகொண்டு முக்திவேண்டுமென் றிச்சிக்கிறார்களோ அவர்கள் சமுசாரமாகிற மஹாகோரசர்ப்பத்தினாலே கடிபட்டவர்கள் சமுசயமில்லையென்று சொல்லியிருக்கிற புராணமே இதற்குப்பிரமாணம் ஆகையினாலே இப்படிச் சுருதியுக்தி அனுபவங்களினாலே சாதனசதுஷ்டங்களும் பூரணமாயொருமித்துக் கூடியிருக்கவேண்டும் அன்றியிலே

யொன்றுகிலுமில்லாமற்போனால் விசாரஞ்சித்தியாகாது ஆகையினாலே இதுகளுக்குப் புண்ணியலோகமே பலம் ஒருமித்துக்கூடியிருந்தால் ஆத்மவிசாரசித்தியே பலமென்று சொல்லப்பட்டுது. (௯௨)

இப்படிச்சொன்னபிரகாரமாய் ஆத்மவிசாரத்திற்கு அதிகாரியென்றுசித்தாந்தமாச்சுதென்றால பூரணமாயிருக்கிறசாதனசதுஷ்டய சம்பத்தியுள்ளவனே அதிகாரி நாலுவேதமும்வந்தவனுஞ் சகலசாஸ்திரபாண்டித்தியத்தினாலே சமர்த்தனாயிருக்கிறவனுந் தபசிகளுஞ் சார்வதா கருமாநுட்டானபரனுஞ் செபோபாசனைகள் பண்ணுகிறவனுந் தானங்கள் விரதங்கள் கங்காதி தீர்த்தயாத்திரை பண்ணுகிறவனும் அதிகாரியல்ல அதெப்படிப்போலென்றாற் சூத்திராதிகளுக்கு வேதயாகாதிகளில் எப்படி அதிகாரமில்லையோ அப்படிப்போலச் சாதனசதுஷ்டயமில்லாதவனுக்கு ஆத்மவிசாரத்திலே அதிகாரமில்லை சாதனசதுஷ்டயமில்லாததினாலே சாஸ்திரபாண்டித்தியமுள்ளவனுக் கதிகாரமில்லையோவென்றால்லை ஏனென்றால்அசேஷசாஸ்திரபாண்டித்தியவானாய்த்தானாகட்டும் ஒருசாஸ்திரமும்வாராதவனாய்த்தானாகட்டும் எவன் சாஸ்திரத்திற்கூறியிருக்கிற சாதனசதுஷ்டயஅனுட்டானமுள்ளவனோ அவனே அதிகாரிசாஸ்திரபாண்டித்தியமுள்ளவனல்ல ஏனென்றாற் சாந்தோதாந்த வுபரதிதிதிட்சுவென்கிற சுருதி வைராக்கியோபரதி முதலான சாதனமுள்ளஅதிகாரிக்கே ஆத்மவிசாரத்தைச் சொல்லுகிறதேயன்றியிலே பின்னையொருத்தனுக்குஞ்சொல்லவில்லை ஆகையினாலே சாதனசதுஷ்டயசம்பன்னனே அதிகாரி. (௯௩-௯௪-௯௫-௯௬-௯௭-௯௮-௯௯

இதிலே அதிகாரிநேமமில்லையோவென்றால் ஆத்மவிசாரத்திற்குச் சாதிவர்ணாச்சிரம ஆசாரநியமங்களிலே யொன்றுமில்லை அசேஷசாஸ்திரக்ஞனாகட்டும் வித்துவானாகட்டும் மூடனாகட்டும் பாலனாக வாவாகட்டும் விர்த்தனாகட்டும் பிரமச்சாரியாகட்

டுங் கிரகஸ்தனாகட்டும் வானப்பிரஸ்தனாகட்டுஞ் சந்நியாசியாகட்டு ம் பிராமணனாகட்டுஞ் சத்திரியனாகட்டும் வைசியனாகட்டுஞ் சூத்திரனாகட்டும் ஸ்திரியாகட்டும் அந்தியஜனமுதலான யெவன் சாஸ்திரத்திற்கூறியிருக்கிற சாதனசதுஷ்டய அனுஷ்டானசீலனாயிருக்கிறானோ அவனே ஆத்மவிசாரத்திலே யோக்கியாதிகாரியென்று வேதசாஸ்திர சித்தாந்தம். (எ௦)

இப்படிச் சாஸ்திரம்படியாதமூடாளுக்கும் ஸ்திரீசூத்திராதிகளுக்கும் அதிகாரஞ்சொல்லக்கூடாது ஏனென்றால் சாஸ்திரங்களைப் படித்துச் சகலத்தையும் அறிந்தவனன்றோ அதிகாரியென்றால் சாஸ்திரத்தையறிந்தவ னதிகாரியன்று சாஸ்திரவிகிதமாயிருக்கிற சாதனசதுஷ்டயஅப்பியாசமுள்ளவனே அதிகாரி சாஸ்திரம்படியாதவனுக்குச் சாதனசதுஷ்டயமெப்படிவருமென்றால் சாஸ்திரம்படித்தவனுக்குத்தான் எப்படிவரும் சாஸ்திரார்த்தத்தை அறிந்திருக்கிறபடியினாலே ஈசுரார்ப்பணகருமங்களைப்பண்ணிச் சுத்தசித்தனாய் வைராக்கியாதிசாதனங்களைக்கிரமமாயடைவன் சாஸ்திரார்த்தத்தை அறியாதவன் எப்படிஅடைவனென்றால் அடைவன் அதெப்படியென்றால் இந்தச்ஜன்மத்திலே சாஸ்திராத்தியயனமில்லாமற்போனாலும் பூருவஜன்மத்திலே சாஸ்திரஞ்ஞனாய் ஈசுரார்ப்பணகருமத்தைப்பண்ணி யுந்தச்சற்கருமபுஞ்சபரிவாகவசத்தினாலே இச்ஜன்மத்திலே சாதனசதுஷ்டயமெளிதாய் யத்தனமன்றியிலேவரும் ஆகையினாலே இச்ஜன்மத்திலே சாஸ்திரம்படியாதவனுக்கும் அதிகாரமுண்டு. (எக)

இப்படிப் பூருவஜன்மாப்பியாச சமஸ்காரத்தினாலே இச்ஜன்மத்திலே சாதனசதுஷ்டயம்வரும் ஆனால்அப்படிச் சாஸ்திராத்தியயனமும் பூருவஜன்மசமஸ்காரத்தினாலே இந்தச்ஜன்மத்திலேவரவேண்டும் அதுமாத்திரம் வாராமற்போவானேனென்றால் சாஸ்திராத்தியயனமாத்திரஞ் சிறிதுபேர்க்குச்சிறிதுகருமவிசேடத்தினாலே பிரதி

பந்திக்கப்படும் ஆகையினலே சாஸ்திராத்தியயனம் இச்ஜன்மத்தி லேவாராது ஆனுற் சாஸ்திரம்வாராவிட்டாற் சாதனமெப்படிவரு மென்ருற் சாஸ்திரம்வாராமற் பிரதிபந்திக்கப்பட்டுப்போனமாத்திரத் தினலே பூருவஜன்மத்திலே வெகுசற்கருமம்பண்ணி பாக்கியசாலி யாயிருக்கிறவனுக்குச் சாதனசதுஷ்டய அதிகாரமில்லாமற்போமோ போகாது. (எ௨)

இப்படிச் சாஸ்திரபாடமாத்திரங் கருமவசத்தினலே பிரதி பந்திக்கப்பட்டாற்போலே சாதனசதுஷ்டயமும் கருமவசத்தினலே பிரதிபந்திக்கப்பட்டாலோவென்ருல் அப்போ சாதனம்பிரதிபந்தி க்கப்பட்டாற் சாஸ்திரம்படித்தவனுக்கும் படியாதவனுக்கும் இரண் பேர்க்கும் அதிகாரமில்லை சாஸ்திரம்படித்தும் சாதனமில்லாவிட் டால் அவனுக்கதிகாரமேது ஆகையினலே சாதனமில்லாமற் பிரதி பந்திக்கப்பட்டால் இரண்டுபேர்க்கும் அதிகாரமில்லை இரண்டுபே ருஞ் சரிதான். (எ௩)

இப்படி இரண்டுபேருஞ் சரியென்றுசொல்லக்கூடாதேனெ ன்ருற் சாஸ்திரம்படித்தவனுக்குச் சாதனம் பூருவஞ்சித்தியாமற் போனலுஞ் சாஸ்திரார்த்தத்தைஅறிந்திருக்கிறபடியினலே இனி மேலாகிலும் அப்பியாசித்துச் சித்தியையடைவன் சாஸ்திரம்படி யாதவன் சாஸ்திரார்த்தத்தைஅறியாதபடியினலே அவனுக்குப் பூரு வஞ்சாதனஞ்சித்தியாகாமற்போனல் இனிமேல் எப்படி அப்பியாசித் துச் சித்தியை அடையப்போருன் அடையமாட்டானென்ருற் சொல் லுகிறேருங் கேள் சாஸ்திரம்படியாத பேர்களும் மோக்ஷவிச்சையின லேகுருவையடைந்து குருவினிடத்திலேநின்றுஞ் சாஸ்திரார்த்தத் தைக்கேட்டுச் சிரத்தையினலே சாதனப்பியாசம்பண்ணி சித்தியை அடைவாள் அதெப்படிப்போலென்ருல் லோகத்திலே கருமசாஸ்திர த்தைஅறியாமலிருக்கிறவனுக்கும் பரலோகத்திலே நல்லகதிவேண்டி

மென்கிறசிரத்தையினலே குரு உபதேசத்தாற் கருமோபாசனதி அனுஷ்டானங்கள் எப்படிச்சித்திக்கிறதோ அப்படிப்போலே குரு உபதேசத்தினலே சாதனப்பியாசமுஞ் சாஸ்திரஞ்ஞானப்போலே சாஸ்திரத்தையறியாதவனுக்குஞ் சந்தேகமில்லை. (எச-எரு-எசு)

குரு உபதேசத்தினலே கருமானுஷ்டானம்போலேசாதனப்பியாசமுஞ் சித்திக்குமென்ருற் சிரத்தாலுவாயிருக்கிறவனுக்கன்றே கருமாதி அனுஷ்டானமுஞ் சித்திக்கவேண்டுஞ் சிரத்தையில்லாதவனுக்கு எப்படியென்ருற் கருமசாஸ்திரமெல்லாமறிந்தாலும் அதிலே சிரத்தையுள்ளவனுக்கே கருமாதியனுஷ்டானஞ்சித்திக்கிறது சாஸ்திரத்தையறிந்தும் அதிலே சிரத்தையில்லாதவனுக்குச் சாஸ்திரத்தையறிந்தமாத்திரத்தினலே பிரயோசனமேதொன்றுமில்லை ஆகையினலே சாஸ்திரத்தையறிந்தாலும்அறியாவிட்டாலும் எவன் கருமாதிஅனுஷ்டானத்தை அனுஷ்டிக்கிருனே அவனே நற்கதியடைவன் ஆகையினலே சிரத்தையில்லாதவனுடைய அவிசுவாசத்தை இங்கே *யுதாரிக்கிறது யோக்கியமன்று சிரத்தாலுவாயிருக்கிறவனுக்கே சர்வத்திர வைதீகத்திலே அதிகாரம். (எஎ-எஅ)

இப்படிச் சொன்னபிரகாரமாய்ச் சாஸ்திரம்படித்தவனுக்கும் படியாதவனுக்கும் பூருவஞ்சாதனஞ்சித்தியாமற்போனல் இனிமேலாகிலும் மோக்ஷம்வேண்டுமென் றிச்சாதிசயத்தினலே சிரத்தாலுவாயிருக்கிறவனுக்கே சாதனப்பியாசத்தினலேயும் விசாரத்திலேயும் அதிகாரஞ் சித்திக்கவேணடும் ஆகையினலே சாதனப்பியாசத்தினலேயும் விசாரத்திலேயும் அதிகாரஞ் சித்திக்கிற திரண்டுபேர்க்குஞ் சரிதான் பேதமில்லை. (எகூ)

இப்படியாயுள்ளளவில் இரண்டுபேர்க்கும் பேதமேதென்ருற் சாஸ்திரம்படித்ததும்படியாததும் பேதமன்றியிலே சாதனப்பியா

*விவகரிக்கிறதுஎன்றும்-பாடம்.

சத்திலொருபேதமுமில்லை விசாரத்திலேயு மொருபேதமுமில்லை. ()

இப்படி இரண்டுபேர்க்குஞ் சாதனப்பியாசத்திலே பேதமில்லாமற்போனாலும் விசாரத்திலே இரண்டுபேர்க்கும்பேதமுண்டு அதேதென்றால் ஆத்மவிசாரத்திற்குச்சாதனமாயிருக்கிற சாஸ்திரபாண்டித்தியமிருக்கிறபடியினாலே சாஸ்திரஞ்ஞனுக்கு விசாரத்திலே அதிகாரம் அதிகமென்றுசங்கைவர அதுகூடாது ஏனென்றாற் சாஸ்திரம்விசாரசாதனமன்றன்றோ பின்னை ஏதென்றால் வைராக்கியாதிகுணங்களே சாதனமென்றுசொல்லப்பட்டிருக்கிறபடியினாலே சாதனமுள்ளவனுக்கேஅதிகாரமென்கிற திரண்டுபேர்க்குஞ் சமஞ் சாஸ்திரஞ்ஞனுக்கு விசாரத்திலே அதிகாராதிக்க மொன்றுமில்லை. (அக-அஉ)

ஆத்மவிசாரத்திற்கு வைராக்கியாதிகுணங்களே சாதனந்தான் சந்தேகமில்லை அப்படியானாலுஞ் சாதனம்வந்தாலுஞ் சாஸ்திரத்தினாலேயன்றோ ஆத்மாவைவிசாரித்தறியவேண்டும் ஆகையினாலே சாஸ்திரபாடம்வேண்டுமென்றுசங்கைவர அதுகூடாது ஏனென்றால் தன்னைஅறிகிறதற்குச் சாஸ்திரந்தேவையில்லை யெவனாகிலுந் தன்னையறிகிறத ுச்சாஸ்திரத்தைஅபேக்ஷிப்பானோ யொருத்தனும் அபேக்ஷியான் ஆகையினாலே .ஆத்மவிசாரத்திற்குச் சாஸ்திரந்தேவையில்லையானால்தன்னையறிந்தாற்றேவையில்லை பிராந்தியினாலேதன்னுடையதத்துவத்தைஅறியாமல் அஞ்ஞானியாயிருக்கிறவன்ஆத்மசொரூபத்தை பிரதிபாதிக்கிறசாஸ்திரத்தை விசாரியாமல்ஆத்மசொரூபத்தைஅபரோக்ஷமாய்எப்படியறிவான் அறியமாட்டானாகையினாலேசாஸ்திரத்தினாலேதானே ஆத்மதத்துவத்தைஅறியவேண்டுமென்று சங்கைவந்தால்அப்போ சாஸ்திரத்தினாலேதானேஆத்மதத்துவத்தையறியலாம் ஆனாற்-பரோக்ஷமாய்ச் சுவர்க்காதிலோகம்போலே யறியலாமேயன்றியிலே அன்னியதாவாய்ப்பிரத்தியக்ஷமாய் அறியக்கூடா

தேனென்றாற் சாஸ்திரத்தினாலே அறிகிறதெல்லாம் பரோக்ஷமே யொழிய அபரோக்ஷஞானமன்று அதெப்படிப்போலேயென்றால் விஷ்ணுவாதிமூர்த்திகளை அறிகிறவிடத்தில் விஷ்ணுவாதிமூர்த்திகளைப் பிரதிபாதிக்கிற சாஸ்திரத்தினாலே பரோக்ஷமாயறிகிறதேயன்றியிலே பிரத்தியக்ஷமாய் எப்படி யறியப்படவில்லையோ சுவர்க்காதிகளை பிரதிபாதிக்கிற சாஸ்திரத்தினாலேசுவர்க்காதிகளை யெப்படிப் பிரத்தியக்ஷமாயறியப்படவில்லையோ அப்படிப்போலே ஆத்துமதத்துவத்தை அறியாதவனுக்கும் ஆத்துமதத்துவத்தைப்பிரதிபாதிக்கிற சாஸ்திரத்தினாலேபிரத்தியக்ஷமாய்யறியக்கூடாது அநுபவத்தினாலேயறிகிறதே அபரோக்ஷஞானமானபடியினாலே ஆத்மதத்துவத்தையும்அநுபவத்தினாலேபிரத்தியக்ஷமாயறியவேண்டும். (அங-அச-அரு)

இப்படி யார்சொல்லியிருக்கிறார்களென்றால் ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகள் தியானதீபிகையிலே சொல்லியிருக்கிறார்கள் அதெப்படியென்றால் மூர்த்திப்பிரதிபாதகசாஸ்திரத்தினாலே சதுர்ப்புசராய்ச் சங்குசக்கிராதிதாரியாயிருக்கிற விஷ்ணுமூர்த்தியை யறிந்தாலும் அது பரோக்ஷஞானமேயல்லாமல் அபரோக்ஷஞானமன்று ஏனென்றாற் சாஸ்திரத்தினாலே இப்படியிருப்பரென்று மனதிலே நிச்சயிக்கிறதேயொழிய அந்தமூர்த்தியைப்பிரத்தியக்ஷமாய்க்கண்ணாலேகாணவில்லை அப்படிப்போலே ஆத்மதத்துவப்பிரதிபாதகமாயிருக்கிற வேதாந்தசாஸ்திரத்தினாலே சச்சிதானந்த சொரூபமாயிருக்கிற ஆத்மதத்துவந்தோணினாலும் அது பரோக்ஷ ஞானந்தானே ஏனென்றாற் பஞ்சகோசசாக்ஷியாயிருக்கிற பிரத்தியகாத்மப்பிரமத்தை சொற்சொரூபமாய்ப் பிரத்தியக்ஷமாய்க் காணவில்லையே ஆகையினாலே பிரத்தியக்ஷமாய் அநுபவியாமல் சாஸ்திரத்தினாலே இப்படியிருக்குமென்று சாமானியமாயறிகிறபடியினாலே பரோக்ஷஞானந்தானேயானால் விஷ்ணுவாதிமூர்த்திகள் தனக்கன்னியமானபடி

ஞலே அதைச்சாஸ்திரத்திஞலே பரோக்ஷமாயேயறியவேண்டும் அப்படி இங்கே ஆத்மா தனக்கன்னியமாகாதபடியினலே சாஸ்திரத்திஞலேயறிந்தாலுந் தன்னைப் பரோக்ஷமாயறியக்கூடாது தாஞய்ச்சொற்சொரூபமாயிருக்கிற தன்னுடையசொரூபத்தை சாஸ்திரத்திஞலேதானே பிரத்தியக்ஷமாயறியலாமென்று சங்கிக்கக்கூடாது ஏனென்ருல் வேதாந்தசாஸ்த்திரத்திலே மஹாவாக்கியங்களிஞலே பிரமதத்துவம் பிரத்தியக்சொரூபமாய்த் தாஞய்த் தான் * பிராயணப்பிரத்தியக்ஷமாய் நீயே பிரமமென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது சந்தேகமில்லை அப்படியாஞலும் அதைச்சாஸ்திரத்திஞலே யறிந்தாலும் ஆத்மவிசாரம்பண்ணுதவனுக் கப்படிப்பிரத்தியக்ஷமாயறியப்படாது சாஸ்திரத்திஞலே வருகிறஞானமெல்லாம் பரோக்ஷமே விசாரத்திஞலே அநுபவிக்கிறதே அபரோக்ஷமென்று சொல்லியிருக்கிருர். (அகூ-அஎ-அஅ)

இப்படி ஸ்ரீவசிட்டரும் இராமனுக்குச்சொன்ஞர் எப்படியென்ருல் சாஸ்திரமென்றுங் குருவென்றும் உபதேசமென்றும் இதுகளெல்லாம்மரியாதைமாத்திரமேயன்றியிலே ஆத்மாவைஅறிகிறதற்குக்காரணமன்று கேவலஞ் சுத்தமாயிருக்கிறசிட்டப்பிரஞ்ஞையே காரணமன்றியிலே பரமாத்மாவைச் சாஸ்திரத்திஞலேயுங் குருவிஞலேயுங் காணப்படாது பின்னைஎதிஞலேதான்காணலாமென்ருல் தன்னுடையசொரூபத்தைத்தன்ஞலே சூக்ஷ்மதிருஷ்டியிஞலே காணவேண்டும் பின்னை யொன்றிஞலேயு மறியக்கூடாதென்று ஸ்ரீவசிட்டர்சொல்லியிருக்கிருர் சகலசாஸ்திரத்திலேயுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. (அகூ-௯௦)

* பிருயெண-என்றும் பாடம்.

ஆகையினாலே தன்னுடைய சொரூப விசாரத்தைத்தவிர சாஸ்திரத்தையறிந்தினாலேதானே தன்னுடைய சொரூபத்தை அபரோக்ஷமாயொருக்காலு மறியக்கூடாது. (கக)

சாஸ்திரத்தை விஜாரித்தன்றோ ஆத்மசொரூபத்தை யறிய வேண்டும் அப்படி யன்றியிலே சாஸ்திரவிசாரத்தைத்தவிர ஆத்ம விசாரமாவ தேதென்றாற் சொல்லுகிறோம் கேள். (கஉ)

ஆத்மவிசாரமாவதேதென்றால் தேகேந்திரியாதிகளிலே நானென்றுதோனுகிற நாமாராவோமென்று ஏகாக்கிரமாய் அந்தர்முகமாயிருக்கிற புத்தி யொன்றினாலேயுஞ் சார்வதாப்பஞ்சகோசங்களுக்குள்ளேஆத்மாவை விஜாரித்துத் தேடுகிறதே ஆத்மவிசாரமென்று பெயர் தேகத்திற்கு வெளியிலே தேடுகிற விசாரம் விசாரமன்று வெளியிலே யாவதேதென்றால் வாக்கினாலே வேதாந்த சாஸ்திரங்களைப் படிக்கிறதும் விசாரமன்று விற்பத்தியினாலே சாஸ்திரசப்தங்களுக்கு அர்த்தத்தை அறிகிறதுமன்று பின்னைத்தா னேதென்றால் புத்தியினாலே ஆத்மசொரூபத்தை பராமரிசித்துப்பார்க்கிறதே விசாரமென்று சொல்லப்படும். (கங)

சாஸ்திரத்தைப் படித்ததினாலேயும் அதனர்த்தத்தையறிந்ததினாலேயும் ஆத்மாவை யறியப்படாதோவென்றால் லறியப்படாது ஏனென்றால் ஆத்மா சச்சிதானந்தசொரூபர் தேகத்திரய விலக்ஷணர் அவத்தாத்திரய சாக்ஷியென்றுசொல்லுகிற சப்தங்களைவெளியிலே வாக்குனாலேசதாப்படித்தாலும் வியாகரணவிற்பத்தியினாலே அதற்கு அர்த்தத்தையறிந்தாலும் ஆத்மசொரூபத்தை பிரத்தியக்ஷமாய் காணவில்லையன்றோ பின்னையெதினாலேதான் காணுகிறதென்றாற்பஞ்சகோசங்களுடைய சொருபத்தைப் புத்தியினாலே பராமரிசித்துக்

கண்டு நன்றாய் அநுபவித்து இதுவும்ஆத்மாவன் றிதுவும்ஆத்மா வன் றென்று நேதிநேதி வாக்கியத்தாற் கோசங்களைத்தள்ளி அதற்கு ம் அதீதமாயிருக்கிற சாக்ஷிசொருபத்தை சூக்ஷ்மபுத்தியினாலே வி ஜாரித்துக்காணவேண்டும் பிரத்தியக்ஷமாய் அதன்றியிலே வெளியி லேகாணப்படாது ஏனென்றால் கோசங்களினாலே மறைபட்டு யெல் லாத்திற்கும் ஆந்தரமாயிருக்கிற ஆத்மாவை கோசங்களுக்குள்ளே பு த்தியினாலே தேடவேண்டுமேயொழிய சாஸ்திரங்களிலே தேடக்கூ டாது அஃதெப்படிப்போலென்றால் கிரகத்திலே கெட்டுப்போனவ ஸ்துவை வனத்திலேபோய் எந்தப்புத்திமான்றான் தேடியடைவன் எங்கேகெட்டுதோ வங்கேயன்றோ தேடவேண்டும் அப்படிப்போலே கோசங்களுக்குள்ளே கெட்டுப்போனஆத்மாவை கோசங்களுக்குள் ளே தேடவேண்டுமேயொழியச் சாஸ்திரங்களுக்குள்ளேதேடி யெவ ன்றான் எப்படிக்காண்பன் காணமாட்டான். (௧௪-௧௫-௧௬)

சாஸ்திரத்திலே காணப்படாவிட்டாலுஞ்சாஸ்திரத்தினாலே கோசங்களுடைய லக்ஷணத்தையறிந்துகொண்டு புத்தியினாலே அநு பவித்துத்தள்ளி ஆத்மசொருபத்தைவிஜாரித்துப் பிரத்தியக்ஷமாய்க் காண்பன் சாஸ்திரஞ்ஞன் சாஸ்திரம்படியாதவன் கோசலக்ஷண ம் ஆத்மலக்ஷணங்களை அறியாதபடியினாலே யெப்படிப்புத்தியினாலே யறியப்போகிறானென்றால் அவன்சாஸ்திரத்தினாலே அறிகிறாப்போ லே யிவனுங்குருவினிடத்திலேநின்றும் அறிந்து விஜாரிப்பன். (௧எ)

சாஸ்திரம்படியாதவனுக்குக் குருவை அபேக்ஷிக்கவேண்டும் சாஸ்திரஞ்ஞனுக்குக் குருவை அபேக்ஷிக்கத்தேவையில்லையே யெ ன்றால் சர்வசாஸ்திரஞ்ஞனாலுங் குருவையன்றியிலே ஆத்மத த்துவத்தை யொருத்தனும்அறியவேமாட்டான் பூருவஞ்சர்வசாஸ்

திரவித்துக்களாயிருக்கிறபேர்கள் முதலாய்க் குருவையன்றியிலே அறியமாட்டாமற் குருவையடைந்தாள் யார் ஆரையடைந்தாளென்முற் சர்வக்ஞராயிருக்கிறநாரதர் சனற்குமாரரைக் குருவாயடைந்தார் இந்திரன்பிரமாவை அடைந்தான் சுகர்ஜனகமஹாராஜாவைக்குருவாயடைந்தார் இப்படியனேகம்பேர் குருவையடைந்தேதத்துவத்தை அறிந்திருக்கிறுளேயொழியக் குருவையன்றியிலே யறிந்தவாளில்லே. (கூஅ-கூகூ)

சாஸ்திரம்படியாதவாளும் இப்படிக் குருவினிடத்திலே கேட்டுப் பிரமத்தையறிவாள் அப்படியாராகிலுங் குருஉபதேசத்தினுலேயறிந்தவாளுண்டோவென்முல்*யாக்கியவல்கியர் தம்முடைய பெண்சாதி மைத்திரிக்குபதேசித்தார் அதிமூடைகளாயிருக்கிறஸ்திரீகள்முதலாய் லீலே சூடாலே இத்தியாதியாய் அனேகம்பேர் சாஸ்திரமறியாதபேர் ஆத்மக்ஞானசித்தியை அடைந்தார்கள் ஆகையினுலே சாஸ்திரம்படியாதவர்களுக்கும் ஆத்மவிசாரத்திலே அதிகாரமுண்டு சந்தேகமில்லே. (ரு-ருக)

இப்படியாயுள்ளளவில் அதிகாரியாரென்முல் நித்தியாநித்தியவஸ்துவிவேகத்தினுலே அநித்தியமாயிருக்கிறதேகாதிபிரமலோகபரியந்தமாயிருக்கிற சகலபோக்கியவஸ்துக்களிலேயும்நாய்கக்கினபாயசத்திலே திவேஷம்போலே அத்தியந்தவைராக்கியத்தையடைந்துசகலவிடயங்களேயும் விடம்போலேயும்அக்கினிபோலேயும் நரகம்போலேயுங் கண்டு வொருவிடயத்திலேயும் பிரவிருத்தியற்று நிவிர்த்தியடைந்து சுழுத்திபோலொழிந்தும் உபரதனேயும் அப்படியும் இருக்கப்ப

---

* யாக்கினுவற்கர் தம்முடையமயித்தரைக்கு என்றும் பாடம்.

டாமல் அத்தியாத்மீகாதியாயிருக்கிற தாபத்திரயத்தினாலே சிரசிலே அக்கினிபற்றினவனைப்போலே ஒருவிடத்திலேயுஞ்சுகத்தையடையாமல்ஒருக்ஷணகாலமுந் துக்கத்தைச்சகிக்கமாட்டாமல்எப்போதிந்தச்சமுசாரபந்தத்திலேநின்றும் விடுபடப்போகிறோம் யெப்படித்தான் விடுபடப்போகிறோம் யெதனாலே இந்ததுக்கத்திலேநின்றும் விடுபடுவோமென்று இப்படி அத்தியந்த மோக்ஷவிச்சைடோடேயுங்கூடியிருக்கிறபுருடன் ஆத்மதத்துவவிசாரத்திலே உத்தமோத்தம அதிகாரியென்றுபெயர் நன்றாய்அவதிபரியந்தம்பூரணமாயிருக்கிறவிவேகாதிசாதனசதுஷ்டயமுள்ளவனே உத்தமோத்தம அதிகாரியென்று சொல்லப்படுவன். (க0உ-க0௩-க0௪-க0ரு-க0சு)

காரியபரியந்தம் பூரணமாயிருக்கிற விவேகாதிசாதனசதுஷ்டயமுள்ளவன் உத்தமஅதிகாரியென்று சொல்லப்படுவன் சொருபபரியந்தமாயிருக்கிறசாதனசதுஷ்டயமுள்ளவன் மந்தஅதிகாரியென்று சொல்லப்படுவன் ஏதுமாத்திரமாயிருக்கிற சாதனசதுஷ்டயமுள்ளவன் மத்திமஅதிகாரியென்று சொல்லப்படுவன் இந்த நாலுவிதஅதிகாரிகளுக்கும் ஆத்மவிசாரந் தாரதன்மியமாய்ச்சித்தியாம். (க0எ-க0அ)

உத்தமோத்தம அதிகாரிக்குச் சீக்கிரம்சித்தியாம் உத்தமஅதிகாரிக்கு மெள்ளச்சித்தியாம் மந்த அதிகாரிக்கு நாட்சென்றுசித்தியாம்அந்த மத்திமஅதிகாரிகளுக்குச்சர்வதாவிசாரம்பண்ணப்பண்ணப் பரிபக்குவமாய்ச் சித்தியைக்கொடுக்கும். (க0௯)

விசாரமன்றியிலேபோனால்மந்தமத்திமஅதிகாரிகளுக்குச்சித்தம் வியாகூலமானபடியினாலேயும் அதிகாரம் மந்தமாய்ப்போனபடியினாலேயும் யோகந்தான் எளிதாய்ச்சித்தவிர்த்தியையுபசமனம்பண்

ணுகிறபடியினாலேயும் மந்தமத்திமாளுக்குயோகமேமுக்கியம் யோகத்திஞலே சித்தோபசமனத்துவாரா சுலபமாய்ச்சித்தியை அடைகிறபடியினாலே விசாரத்தைக்காட்டிலும் யோகம் முக்கியமென்றுசொல்லப்படும் முன்சொன்ன உத்தமோத்தமன் உத்தமனென்கிற இரண்டதிகாரிகளுக்கும் விசாரத்தினாலே யெளிதாய்ச்சித்தியாகிறபடியினாலே யோகத்தைக்காட்டிலும் விசாரமேமுக்கியம் இப்படி முன் இரண்டுபேர்க்கும் விசாரமேமுக்கியமென்றும் மந்தமத்திமாளுக்குயோகம்முக்கியமென்றும் எங்கேசொல்லியிருக்கிறதென்றால் இப்படி ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகள் தியானதீபிகையிலே சொல்லியிருக்கிறார். (௱௧௦-௱௧௧-௱௧௨)

வெகு வியாகூலசித்தாளாயிருக்கிற மந்த அதிகாரிகளுக்கு விஜாரத்தினாலே ஞானசித்திவாராது ஆகையினாலே அவர்களுக்குப் புத்தியினுடைய கெறுவத்தை அடக்குகிறயோகமேமுக்கியம் பூரணசாதனத்தினாலே சித்தம்வியாகூலத்தை அடையாமல் ஏகாக்கிரசித்தாளாயும் மோகமாத்திரத்தினாலே மறைபட்டு ஆத்மசொரூபமறியாத முக்கிய அதிகாரிகளுக்குச்சாக்கிறமென்கிற விசாரஞ்சடுதியிலே சித்தியைக்கொடுக்கிறபடியினாலே விசாரமேமுக்கியமென்று ஸ்ரீவித்யரண்ணியசுவாமிகள்சொன்னார். (௧௧௩-௧௧௪)

இந்தயோகமும வெகுகாலம் நிரந்தரம்ஆதரவோடே பிரமாதத்தையடையாமற் சாவதானமாய்க் கேத்ப்படாமல் அப்பியாசித்தாற்ஸபலமாய்ச் சித்தியைக்கொடுக்கும் இந்த யோகத்திலே இத்தனைசாவதானமேதென்றால் ஆத்மாவினிடத்திலே மனதைநிறுத்துகிறபோது மனதானது வித்துவானாய்த் தீரனாயிருக்கிறவனையும் இந்திரியத்துவாராச்சத்தாதிவிடயங்களிலேஇழுக்கிறது சொதகா சஞ்சலமாய்

மஹாபெலவத்தாய்த் தான்போனதேவழியாய் நிக்கிரகம்பண்ணப் படாமற் றிடமாயிருக்கிறது சொதகா சஞ்சலசுபாவமொரு க்ஷணமாகிலும் ஒருவிடத்திலேயிராது சர்வதா நாலுதிக்கிலேயும் ஓடிக்கொண்டேயிருக்குஞ் க்ஷணத்திலேபாதாளத்திலேபோய்விடுஞ் க்ஷணத்திலே ஆகாயத்திலேபோஞ் க்ஷணத்திலே தேசாந்திரங்கள்திக்குவிதுக்களிலே ஓடும் இப்படி மனது மற்கடம்போலே சஞ்சலசொபாவமாகையினாலே மனதைநிறுத்துகிறது அதிப்பிரயாசம் ஆகையினாலே பிரமாதத்தை அடையாமற் சாவதானமாய் நிறுத்தவேண்டும் இப்படி மனது சஞ்சலமென்கிறதிற் பிரமாணமேதென்றாற் கீதாவசனமும் வாசிட்ட வசனமும் பிரமாணம். (கக௫-ககசு-ககஎ-ககஅ)

வாரும் ஏ கிருஷ்ண மனதானது சஞ்சலசுபாவமன்றோ புருடனைக் கலக்கிறதன்றோ மஹாபெலவத்தன்றோ ஒருத்தராலேமறிக்கப்படுகிறதன்றே இப்படிப்பட்ட இந்தமனதை நிக்கிரகிக்கிறது வாயுவைப் பிடிக்கிறதைக்காட்டிலுங் கடினமென்று எண்ணுகிறேனென்றருச்சுனன் ஸ்ரீகிருஷ்ணசுவாமியைப்பார்த்துப் பிரசனம்பண்ணினான் இராகவர்ஸ்ரீவசிட்டரைப்பார்த்து ஏ சாதோ வாருமையா ஸ்ரீவசிஷ்டரே மனோநிக்கிரங்கடினமன்றோசமுத்திரத்தைப்பானம்பண்ணினாலும் மகாமேருவைப் பிடுங்கினாலும் அக்கினியை யெடுத்து விழுங்கினாலுஞ் சித்தநிக்கிரகங் கடினம் மனதை நிக்கிரகிக்கப்படாதென்று இராகவர் சொன்னார் இப்படி இராமார்ச்சுனருடைய வாக்கியத்தினாலேயும் அப்படியே அநுபவமுங்கண்டபடியினாலேயும் எத்தனைசமர்த்தனானாலுந் தீரனானாலும் மனோநிக்கிரகம்பண்ணுகிறது அத்தியந்தம் மஹாகடினஞ் சந்தேகமில்லை. (௱கக-௱உ0-௱உக)

இப்படி மனதை நிக்கிரகிக்கப்படாவிட்டால் யோகத்தை அப்பியாசிக்கிறதெப்படியென்றால் இப்படி மனது நிக்கிரகிக்கப்படாவிட்டாலும் அப்பியாசபெலத்தினாலேயும் வைராக்கியபெலத்தினாலே

மென்று வெகுவிஸ்தாரமா யர்ச்சுனனுக்கு பகவான் சொல்லியிருக்கிறார். (ராஉக-ராரு0)

இப்படியோகத்தினாலே யடைகிறாப்போலே விசாரத்தினாலேயும் மனசாந்தியினாலேயுஞ் சமாதியை யெளிதாயடையலாம் அதினாலே பிரமானந்தத்தை யெளிதாய்ப்பெறலாம் விசாரத்தினாலே யடைகிறவழி ஏதென்றால் வேதாந்தங்களிலே சச்சிதானந்தமாய்ப் பிரமசொரூபமாய்ச் சொல்லப்பட்டிருக்கிற தன்னுடைய ஆத்மசொரூபத்தைக் குருவினிடத்திலேநின்றும் சிரவணம்பண்ணிக்கேட்டுப் பரோக்ஷமாயறிந்துகொண்டு பிற்பாடு மனனம்பண்ணி யுக்தியாய்ப் புத்தியினாலே நன்றாய் விஜாரித்துத் திருக்குருபமாயிருக்கிற ஆத்மாவையும் திரிசியரூபமாயிருக்கிற அகங்காராதி சடங்களையும் விவேகித்துப்பிரித்துஇவர் சாட்சி இதுதிரிசியமென்று நன்றாய்வேறுகண்டபரோக்ஷமாயறிந்துகொண்டு பின்பு நிதித்தியாசனத்தினாலே திரிசயங்களைலயம்பண்ணிப்போட்டுஅத்வைதனாய்ச்சேஷித்திருக்கிற தன்னிடத்திலே மனதைச் சமாதானம்பண்ணி நிரதிசயமாயிருக்கிற பிரமானந்தத்தை யநுபவிக்கலாமென்றுசகலசாஸ்திரங்களிலேயுஞ்சொலியிருக்கிற அர்த்தத்தைச் சங்கிரகித்துச் சொல்லப்பட்டுது. (கருக-கருஉ-கருரு)

இப்படிச் சாதனப்பிரகரணத்திலேமனசாந்திக்குபாயமாயிருக்கிற சாங்கியயோகங்களிரண்டுஞ்சொல்லப்பட்டுது இந்தவிரண்டிலேயும் யெதுவெதிலே தனக்கதிகாரமுண்டோ அதை யோகமாகட்டும் சாங்கியமாகட்டும் அதிகாரமுள்ளதைப் புத்திமான்களாயுள்ளபேர் அப்பியாசிக்கக்கடவர்கள். (கருச)

இந்தச் சாதனப்பிரகரணத்தை யாதொருவித்துவான் பராமரிசித்துப்பார்க்கிறானோ அவன் தனக்குச் சாதனஞ்சித்தித்த திவ்வளவு இனிமேற் சித்திக்கவேண்டிய திவ்வளவென்று நன்றாய்த் தன்னு

டைய அதிகாரத்தையறிந்து இனிமேற் சித்திக்கவேண்டுவதை அப்பியாசித்துத் தனக்குச் சாங்கியத்திலே அதிகாரமோ யோகத்திலே அதிகாரமோ வென்கிறதையறிந்து * அதேஅதிகாரமாய் அப்பியாசிப்பனென்று சாதனப்பிரகரணஞ் சொல்லப்பட்டது. (கருரு)

சாதனப்பிரகரணம் முற்றிற்று.

## நான்காவது சிரவணப்பிரகரணம்.

முந்தின பிரகரணத்திலே மந்த அதிகாரிகளுக்கு யோகமென்றும் முக்கிய அதிகாரிகளுக்குச் சாங்கியவிசாரமென்றும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டது இனிமே யிந்தப்பிரகரணத்திலே அதிகாரிகளுக்கு யாதொருவிசாரத்தினாலே எளிதாய் யத்தனமின்றியிலே பிரமவித்தையானது சித்திக்குமோ அப்படிப்பட்டிருக்கிற சாங்கிய விசாரத்தை நிரூபிக்கிறோம். (க)

சாங்கியவிசாரமாவதேதென்றாற் சிரவணமனன நிதித்தியாசனசமாதியென்று சாஸ்திரங்களிலே நாலுவிதமாய்ச் சொல்லப்பட்டுப் பிரசித்தமாயிருக்கிறதே சாங்கியவிசாரஞ் சிரவணாதிகளேவிசாரமென்பதற்குப் பிரமாணமேதென்றாற் சுருதியேபிரமாணம். (உ)

ஆத்மாவாரே சுரோதவியோ மந்தவ்யோ நிதித்தியாசிதவ்யவென்கிற சுருதி யாத்மாவை சிரவணமனன நிதித்தியாசனம்பண்ணிச் சமாகித்நா பூத்துவாவென்கிறதினாலே சமாதிஸ்தனாய் ஆத்மாவை அறியவேண்டுமென்று சொல்லியிருக்கிறபடியினாலே அந்தஅர்த்தத்தை மனதிலேவைத்துக்கொண்டு ஸ்ரீஆசாரியசுவாமிகளும் வாக்கியவிருத்தியிலே அப்படித்தானேசொல்லியிருக்கிறார் எப்படிச்சொன்

---

* இதே அதிகாரமாய் என்றும்பாடம்.

ஞரென்றால் அகம்பிரமாஸ்மியென்கிற வாக்கியார்த்தஞானம் நன்று ய்த்திடமாகிறமட்டுஞ் சிரவணுதிகளை அப்பியாசிக்கவேண்டுமென்று சொன்னார். (ரு-சு)

ஆகையினாலே சிரவணுதிகளே ஞானவேதுவாயிருக்கிறவிசாரமென்று ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகளுஞ் சித்திரதீபிகையிலே ஞானத்திற்கேதுவாதிகளையும் நிரூபித்திருக்கிறார் அதெப்படியென்றால்ஞானத்திற்குச்சிரவணமனனநிதித்தியாசனங்களே ஏதுபிரமமாத்திரமே தத்துவமாயுள்ளதாகவும் அன்னியமெல்லாம் இல்லாததாகவும் அறிந்திருக்கிற சமாதியவத்தையே சொருபம் நஷ்டமாய் அசத்தியமாய்ப்போன நானென்கிற அகங்காரக்கிரந்தி திரும்பி யொருக்காலும் வாராமலிருக்கிறதே காரியம் பூருவந் தேகமேதானாய்ச் சமுசயவிபரீதமன்றியிலேயிருந்தாப்போலே பரமாத்மாவேதானாய்த் திடமாயிருக்கிறதே அவதி முத்தியே பலமென்று சொல்லியிருக்கிறார் ஆகையினாலே சிரவணுதிகளே விசாரமென்று சித்தமாச்சுது (ரு-கூ-எ)

இப்படிச்சொன்னபிரகாரமாய்ச் சிரவணுதிகளே விசாரமென்று சித்தித்தவளவில் இனிமேற்சொல்லப்போகிறசிரவணுதிகளுக்கு ஏதுவாதிகள் மேற்சொல்லப்போகிறதுகள் அதிலேசிரவணமனனநிதித்தியாசனசமாதிகள் நாலுக்கும் ஏதுவேதென்றால் முன்சொன்ன சாதனசதுஷ்டயம் நாலும் சிரவணுதிகள் நாலுக்கும்ஏதுவாகவேண்டும் நாலுக்கு நாலுங்கிரமமாய் ஏதுவாமோ அன்னியதாய் ஆமோவென்றால் எதெதற் கெந்தச்சாதனமுசிதமோ அதுவது அததற்கேதுவாம அதுகளெல்லாங் கிரமமாய்ச்சொல்லுகிறவிடத்திலே மேற்சொல்லுகிறோம் இங்கே முன்னேசிரவணத்தைச்சொல்லுகிறோங் கேள். (அ-கூ)

சிரவணமாவதேதெதென்றாற் சகல வேதாந்தங்களுக்குஞ் சடுவி தலிங்கங்களினாலே அத்தொய்தப்பிரமத்தினிடத்திலே தாற்பரிய மென்று நிர்ணயிக்கிறதே சிரவணம். (௧௦)

இந்தச்சிரவணத்திற் கேதுவாதிகளேதெதென்றாற் றீவிரதரமாயிருக்கிற முமுக்ஷுத்தவமே ஏது அத்தொய்தமாயிருக்கிற ஆதமசொரூபத்தைச் சதா சிரவணம்பண்ணுகிறதே சொருபம் ஆத்மாவில்லையென்கிற அசத்தாவரணம் நசிக்கிறதேகாரியம் நஷ்டமாய்ப்போன அசத்தாவரணங் திரும்பி வாரமலிருக்கிறதே அவதி திடமாயிருக்கிற பரோக்ஷக்ஞானமே பலம். (௧௧-௧௨)

சிரவணத்திற்கு மோக்ஷேச்சை ஏதுவென் றெதினாற் சொல்லுகிறதென்றாற் சதேவசோமமி ஏதமக்கிற ஆசிதுவென்று ஏவமாதி சுருதிகளினாலே சிருஷ்டிக்குமுன் பிரளயத்திலே சன்மாத்திரமாய் அத்தொய்தமாயிருக்கிற வஸ்துமாத்திரமிருந்ததென்றுபிரதிபாதிக்கப்படுகிற ஆத்மசொரூபத்தைச் சிரவணம்பண்ணுகிறதற்குத் தீவிரதரமோக்ஷேச்சையுள்ளபுருடனே இச்சிக்கிறானேயொழியப் பின்னையொருத்தனுமிச்சிக்கவில்லை ஆகையினாலே மோக்ஷேச்சையே சிரவணத்திற்கேதுவென்று சித்தமாச்சுது. (௧௩)

அத்தொய்த ஆத்மசிரவணமே சொருபமென்று சொல்லப்பட்டுதே அத்தொய்த ஆத்மாவாவதாரென்றாற் சரீரத்திரய விலக்ஷணர் பஞ்சகோசவிதிரித்தர் அவத்தாத்திரய சாக்ஷியென்று சாஸ்த்திரங்களிலே பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறவரே ஆத்மா. (௧௪)

இதிற் சரீரத்திரய விலக்ஷணத்துவமாவ தேதெதென்றாற் றுவக் கிரத்தம் மாமிசம் மேதசு அஸ்தி மச்சை சுக்கிலமென்கிற சத்ததாதுக்

கள் முதலானதினாலே நிர்மாணம்பண்ணப்பட்டுவிட்டா மூத்திர பாத்திரமாய்ச் ஜனித்துமரித்துக்கொண்டு குட்டியம்போலே சட மாய்க் கடாதிகள்போலே பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிறதே ஸ்தூல சரீரம் அந்தக்கரணமென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிற யா தொருமனதுண்டோ அகம்விர்த்தி இதம்விர்த்தியென்றும் இரண்டு ரூபமாயிருக்கிற அந்தமனதே பிராணாதிபஞ்சகமும் ஞானேந்திரிய பஞ்சகமுங் கன்மேந்திரியபஞ்சகமும் ஆகப் பதினைந்தோடேயுங்கூ டிக்கொண்டு லோகாந்திர கமனாதிகளைப் பண்ணுகிறதாய்ச் சுகதுக் காதிபோகங்களுக்குச் சாதனமாய்த் தூலசரீரதிற்குள்ளே சூக்ஷ்மமா மாய்த் தோணுகிறதே சூக்ஷ்மசரீரம். (கரு-கசு)

அனாதியாய்ச் சத்தென்றும் அசத்தென்றுஞ் சொல்லப்படா மல் அநிர்வசநீயமாய் யாதொருவஞ்ஞானமுண்டோ அந்தவஞ்ஞான மூமே தூலசூக்ஷ்மசரீரங்களை யுண்டாக்கிற காரணமானபடியினா லே காரணசரீரம். (கஎ)

இந்தத் தேகத்திரயங்களும் ஆத்மலக்ஷணமல்லாமல் அதற்கு விபரீதலக்ஷணமாய்த் தூலதேகஞ் சடமாயுஞ் சூக்ஷ்மதேகந் துக் கமாயுங் காரணதேகம் அபிர்தமாயுமிருக்கிறபடியினாலே இதுகள் ஆத் மாவன்று சந்தேகமன்று சச்சிதானந்த லக்ஷணராய்த் தேகத்திரயத் திற்கும் விலக்ஷணரே ஆத்மாவென்று சொல்லப்படும். (கஅ)

இனிப்பஞ்சகோச விதிரித்தமாவதேதென்றால் அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயங்களே பஞ்ச கோசங்கள் ஸ்தூல சரீரந்தானே அன்னத்தினாலேயுண்டாய் அன்னத் தினாலேவிருத்திஅடைந்து அன்னவிகாரமாயிருக்கிறபடியினாலே அன்

னமயகோசமென்றுங்கத்தியைஉறையானதுமறைக்கிறதுப்போலேஆ
த்மாவைத் தெரியவொட்டாமல் மறைக்கிறபடியினாலே கோசமென்
றும் ஆத்தியத் தவஸ்தாய் நசிக்கிறபடியினாலே ஆத்மாவன்றென்றும்
பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயங்களாகிய சூக்ஷுமசரீரத்திற்
சரீரத்திற்குள்ளே நாடிமார்க்கத்திலே வாயுவுருபமாய்ச் சஞ்சரித்துக்
கொண்டு பஞ்சவிர்த்தி ஆத்மகமாய் விர்த்திபேதத்தினாலே பிராணா
பானவியானோதான சமானனென்று சொல்லப்படுகிற யாதொருபி
ராணனுண்டோ அந்தப்பிராணன்றானே கருமேந்திரியங்களோந்தோ
டேயுங்கூடி ஆத்மாவைமறைக்கிறபடியினாலே பிராணமய கோசமெ
ன்றும் இதுசடமானபடியினாலே ஆத்மாவன்றென்றுங் காமக்குரோ
தாதிகளோடேகூடி இதுவதுவென்று வாசனைகளைச் சங்கற்பிக்கிற
தாய் யாதொரு இதம்விர்த்தியுண்டோ அந்த இதம்விர்த்தியே ஞா
னேந்திரியங்களோந்தோடேயுங்கூடி மனோமயகோசமென்றும் இதுச
டமானபடியினாலே ஆத்மாவன்றென்றும் மனதினாலே அதுவிதுவெ
ன்று சங்கற்பிக்கிறதை இன்னதுகடம் இன்னதுபடமென்று நிச்சயி
த்தறிகிறதாயுந் தேகேந்திரியாதிகளிலே நானென்றுங் கிரகட்க்ஷேத்
திராதிகளிலே யென்னதென்றும் அபிமானிக்கிறதாயும் யாதோரகம்
விர்த்தியுண்டோ அந்தவகம்விர்த்தியே ஞானேந்திரியங்களோந்தோ
டேயுங்கூடி விஞ்ஞானமயகோசமென்றும் இது சாக்கிறசொப்பன
ங்களிலேயுண்டாய்ப் பாதமத்தக தேகமெல்லாமறிவுருபமாய்க்கல
ந்து வியாபித்திருந்து சுழுத்தி மூர்ச்சாதிகளிலே லயித்துப்போகிறப
டியினாலெ ஆத்மாவன்றென்றுஞ் சுழுத்தியிலொன்றையும் அறியே
னென்றும் யாதொருவஞ்ஞானமநுபவிக்கப்படுகிறதோ அந்தவஞ்
ஞானமே சுகமாய் நித்திரைபண்ணினேனென்று ஆனந்தமயமாயி

ருக்கிறபடியினாலே ஆனந்தமயகோசமென்றும் இதுவொன்றுந்தெரியாமற் சடமாயநுபவிக்கப்படுகிறபடியினாலே ஆத்மாவன்றென்றுங் கடாதிகளை அநுபவிக்கிறவன் அந்தக்கடாதிகளைக்காட்டிலும் பின்னனோ அப்படிப்போலே பஞ்சகோசங்களையுமநுபவிக்கிற ஆத்மாவும் அந்தகோசங்களைக்காட்டிலும் பின்னரென்கிறதிலே சந்தேகமில்லையென்றும் இப்படி ஆத்மாவுக்குப் பஞ்சகோசவிதிரித்துவஞ் சொல்லப்பட்டுது. (ககூ-உ0-உக-உஉ-உங-உச-உரு)

அவத்தாத்திரயசாக்ஷி ஆத்மாவென்று சொல்லப்பட்டுதே அவத்தாத்திரயங்களாவதேதென்றால் நானென்று ஜீவனாய்விவகிரிக்கிற அகங்காரமானது தேகத்திரயங்களிலேயும் அபிமானிக்கிறபோது தேகத்திரயாபிமான அவத்தைகள்மூன்றுஞ் சாக்கிரசொப்பனசுழுத்திகளென்றுசொல்லப்படும் எந்தத்தேகாபிமானத்தினாலே யெந்த அவத்தைசொல்லப்படுமென்றால் அகங்காரமானது ஸ்தூலதேகத்தை அபிமானிக்கிறபோது சாக்கிராவத்தையென்றுஞ் சூக்ஷுமதேகத்தையபிமானிக்கிறபோது சொப்பனாவத்தையென்றுங் காரணதேகத்தையபிமானிக்கிறபோது சுழுத்தியென்றுஞ் சொல்லப்படும் ஆத்மாவானவர் இந்த அவத்தாத்திரயங்களுக்குஞ் சாக்ஷியாயிருக்கிறவரேயொழிய அவருக்கு இந்த அவத்தைகளில் ஏதொன்றுமில்லை. (உசு)

ஆத்துமாவுக்கு இந்த அவத்தைகளொன்றுமில்லையென்றாற் பின்னை யாருக்குத்தான் இந்தஅவத்தைகளென்றால் யாதொருத்தன் இந்த அவத்தைகளை அபிமானிக்கிறானோ அவனுக்கே இந்த அவத்தைகளெல்லாம் மற்றவனுக்கன்று ஆகையினாலே நானென்றபிமானிக்கிறயாதொருவகங்காரனுண்டோ அவனே அவத்தாவான் அவன்று

னேசாக்கிர அவத்தாபிமானத்தினாலே விசுவனென்று பெயராய்த் தூலங்களாயிருக்கிற விடயபோகங்களைப் புசிக்கிறான் அவன்றானே சொப்பன அவத்தாபிமானத்தினாலே தைசதனென்றுபெயராய்ச் சூக்ஷுமபோகங்களைப்புசிக்கிறான் அவன்றானேசுழுத்தி அவத்தாபிமானத்தினாலே பிராஞ்ஞனென்றுபெயராய் அஞ்ஞானபோகத்தைப் புசிக்கிறான் ஆகையினாலே யகங்காரனே அவத்தாவான் ஆத்மாவன்று. (உ௭)

அகங்காரனே அவத்தாவானென்று சொல்லுவானேன் ஆத்மாத்தான் அவத்தாத்திரயபோகங்களைப்புசிக்கிறவராய் அவத்தாவாராய் ஆகட்டுமென்றால் அப்படிச்சொல்லக்கூடாது ஏனென்றால் அகங்காரஞ் சுழுத்தியிலே லயிக்கிறபோது தூலசூக்ஷுமரூபமாயிருக்கிற போகங்களொன்றுமில்லை போக்தாவுமொருத்தருமில்லை அவனுண்டானபிற்பாடு போக்தாவும் போகமுங்காணப்படுகிறது ஆகையினாலே அவனே போக்தா சாக்கிரசொப்பனங்க்ள் இரண்டும் அவனுடைய அவத்தைகள்தானே ஆத்மாவினுடைய அவத்தைகளன்று இப்படியானாற் சுழுத்தியவத்தை ஆருக்கென்றால் அதுவும் அகங்காரனுடைய அவத்தைதானே ஏனென்றால் நான் விழித்தேன் நான் சொப்பனங்கண்டேனென்று சாக்கிரசொப்பனங்களை அபிமானிக்கிறாப்போலே நான் நித்திரைபண்ணினேனென்றுசுழுத்தியையும் அவனே அபிமானிக்கிறபடியினாலே சுழுத்தியவத்தையும் அகங்காரனுக்கே ஆத்மாவுக்கன்று ஏனென்றால் அவத்தைகளிலே அபிமானமில்லாமல் அவத்தைகளுக்கும் அவத்தையை அபிமானித்துக்கொண்டு நான் விழித்தேன் நான் சொப்பனங்கண்டேன் நான் தூங்கினேனென்றிருக்கிற அவத்தாவானுக்குஞ் சாக்ஷியாயிருக்கிற ஆத்மாவுக்கோரவத்தையுமில்லை. (உ௮-உ௯)

சுழுத்திகூட அகங்காரனுடைய அவத்தையென்று சொல்லக்கூடாது ஏனென்றாற் சுழுத்தியிலே அகங்காரன் இல்லாதபடியினாலே அவனுடைய அவத்தையென்று எப்படிச்சொல்லுகிறது சாக்கிரசொப்பனங்களிலே அபிமானியாயிருக்கிறபடியினாலே அந்த இரண்டு மிவனுடையஅவத்தைகள் சுழுத்தியிலே அவன் இல்லாதபடியினாலே சுழுத்தி அவனுடைய அவத்தையன்று ஆத்மாவினுடைய அவத்தைதானேயென்று சங்கைவந்தால் அப்படி சங்கிக்கக்கூடாது ஏனென்றால் நானென்று ஜீவனாய்விவகரிக்கிற யாதொருஅகங்காரனுண்டோ அவன்றானே சாக்கிர சொப்பனங்களிலே விஞ்ஞானமயாகாரனாய்த் தூலசூக்ஷ்ம போகங்களைப்புசிக்கிறான் அவன்றானே சுழுத்தியிலே லயா அவத்தையையடைந்து ஆனந்தமயாகாரனாய்ச் சுழுத்தியை அபிமானித்துக்கொண்டு நானொன்றும் அறியேன் சுகமாய் நித்திரைபண்ணினேனென்று அஞ்ஞானசுகங்களைப் புசித்துக்கொண்டு சுழித்தியிலே அகங்காரன் லயா அவத்தையையடைந்து சமஸ்காரரூபமாயிருக்கிறானே சுழுத்தியிலே இல்லாமற்போனானென்றால் அப்போ விழித்தபிற்பாடு இத்தனைபோது நானொன்றுமறியேன் சுகமாய் நித்திரைபண்ணினேனென் றகங்காரன் ஸ்மரியாமற்போகவேண்டும் ஏனென்றால் எவன் அநுபவித்தானோ அவனன்றோ தானநுபவித்ததை ஸ்மரிக்கவேண்டும் ஒருத்தன் அநுபவித்ததைப் பின்னையொருத்தன் ஸ்மரிக்கக்கூடாதே அநுபவியாததையும் ஸ்மரிக்ககூடாதே ஆகையினாலே விழித்தபிற்பாடு நானொன்றும் அறியேன் சுகமாய் நித்திரைபண்ணினேனென்று ஸ்மரிக்கிறபடியினாலே அஞ்ஞானசுகங்களைப்புசித்துக்கொண்டு சுழுத்தியிலே அகங்காரனிருக்கிறானே அந்த அஞ்ஞானசுகங்களை அபிமானித்துக்கொண்டிருக்கிறபடியினாலே அந்தச்சுழுத்தியவத்தையும் அகங்காரனுக்கேயொழிய ஆத்மாவுக்கன்று. (௬௦-௬௧)

இப்படியானும் சுழுத்தியபிமானியாயிருக்கிற ஆனந்தமயனைத்தவிர வேறேசாக்ஷியாயிருக்கிற ஆத்மாவாவதெங்கேயிருக்கிறாரென்றால் அந்தவானந்தமயனையறிகிறவராய் வேறே யொருசாக்ஷியுண்டென் றங்கீகரிக்கவேண்டும் ஏனென்றால் ஆனந்தமயனொன்றுமறியேனென் றறியாதவனாயிருந்ததைக்கண்டு சொல்லுகிறபடியினாலே அறியாதவனாயிருந்த அவத்தையை யறிகிறவனொருத்தன்வேண்டுமே ஆனந்தமயனிருக்கிறானே அவன்றானே யறியட்டுமென்றால் அந்தவானந்தமயன் சுழுத்தனாய் ஜாட்டியா அவத்தையையடைந்தொன்றுமறியேனென் றறியாதவனாய்ப் போனபடியினாலே அறியாததாயிருக்கிற தன்னுடையவஞ்ஞானவவத்தையைத் தான்றானே அறியமாட்டானன்றோ ஆகையினாலே யறியாதவனாயிருக்கிற ஆனந்தமயனையறிகிறவர் சாக்ஷியொருத்தர் அங்கீகரிக்கவேண்டுமே ஆகையினாலே அறியேனென் றானந்தமயா அவத்தையைத் தோற்றுவித்துக்கொண்டு தனக்கு இந்த அவத்தைகளிலே யொன்றுமில்லாமற்சாக்ஷிமாத்திரமாயிருக்கிறவரே ஆத்மா இப்படிச் சுழுத்தியிலே யெல்லாம் லோபித்துப்போய்ச் ஜாட்டியாவவத்தையை அடைந்துஞ் சாக்ஷியொருத்தர் லோபியாமலிருக்கிறாறென்கிறதிலே பிரமாணமேதென்றால் நகிதிரஷ்டத்திறஷேவிபரீலோபோவித்தியதேயென்கிற சுருதி எல்லாம் லோபித்தாலுஞ் சுழுத்தியிலே திருஷ்டாவாய் அதைக் காண்கிறசாக்ஷிக்கு லோபமில்லையென்று சொல்லுகிறதேபிரமாணம். (௯௨-௯௯)

சுழுத்தியிலே ஜாட்டியாவவத்தையை அறிகிறதற்கொருத்தருமில்லாதபடியினாலே அதையறிகிற ஆத்மாவே சாக்ஷியாகட்டுஞ் சாக்கிறசொப்பனங்களிலே அறிகிறவனாய் விஞ்ஞானமயனிருக்கிறபடியினாலே சாக்கிரசொப்பனங்கள் இரண்டுக்கும் விஞ்ஞானமயனே சாக்ஷியாகட்டும் ஆத்மாவென்கிறது கூடாதென்று சங்கைவந்தால்

அப்படிச்சங்கிக்கக்கூடாது ஏனென்றாற் சுழுத்தியிலே அறியாததாயி ருக்கிற ஜாட்டியாவவத்தையை அறிகிற ஆத்மாத்தானே யெப்படிச் சாக்ஷியோ அப்படிப்போலே சாக்கிர சொப்பனங்களிலேயும் விழித் தேன் சொப்பனங்கண்டேன் போனேன் வந்தேன் கண்டேன் கேட் டேன் அறிந்தேனென் றறிகிறவனாயிருக்கிற விஞ்ஞான வவத்தை யையும் அறிகிறவரேசாக்ஷி அறியேனென்கிறதை அறிகிறாப்போலே அறிந்தேனென்கிறதை அறிகிறவர்தானே சாக்ஷியாகவேண்டுமே யொழிய வொருக்காலறிகிறவனாயு மொருக்காலறியாதவனாயுந் தோ னுகிற விஞ்ஞானமயன் சாக்ஷியன்று அப்படியானால் விஞ்ஞானவவ த்தையையறிகிற ஆத்மாவுக்குத்தானே சாக்கிரசொப்பனங்கள் இர ண்டவத்தையும் ஆகட்டுமென்றால் அதுகூடாது ஏனென்றால் சுழுத் தியவத்தை சுழுத்தியவத்தாவான் இரண்டுகளுக்குஞ் சாக்ஷியானப டியினாலே ஆத்மா சாக்கிரசொப்பனாவத்தாவானென்று சொல்லக்கூ டாது ஆத்மா சுழுத்தியவத்தாவானுக்குச் சாக்ஷியானாற் சாக்கிரசொ ப்பனாவவத்தாவனாகலாகாதோவென்றா லாகாது ஏனென்றால் யா தொருத்தன் தூங்கினானோ அவனன்றோ விழிக்கவேண்டுஞ் சொப்ப னமுங்காணவேண்டும் ஆகையினாலே யொருக்காலுந்தூங்காமல் நித்தி யஞ்சாகரூபராய்ச் சர்வசாக்ஷியாய்த் தூங்கினேன் சொப்மனங்கண் டேன் விழித்தேனென்கிற அவத்தாவான் அவத்தைகளெல்லாத்தி ற்குஞ் சதா சாக்ஷியாயிருக்கிற ஆத்மா அவத்தாவானாயாகாரோ இந்தஅ வத்தைகளொன்றும் அவருக்கில்லையென்கிறதிலே சந்தேகம்லேசமு மில்லையென்று நன்றாயறியலாமே. (கூச-கூரு)

ஆத்மா சாக்ஷியானாலும் அவத்தாவானாயு மாகட்டுமென்றா லதுகூடாது ஏனென்றால் யாதொருத்தன் அவத்தாவானோ அவனுக் குச்சாக்ஷித்துவங்கூடாது யெவன்சாக்ஷியோஅவன் அவத்தாவானாகக் கூடாது யெப்படிப்போலென்றால் இரண்டுபேராய்ச் சண்டைக்குநிற்

திறவிடத்திலொருத்தன் சாக்ஷியாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாற் சாக்ஷியாயிருக்கிறவனுக்குச் சண்டைப்படுகிற அவத்தையில்லை சண்டைப்படுகிறவனுக்குச் சாக்ஷித்துவம் இல்லையென்கிறப்போலே சாக்ஷிக்கவத்தாத்துவமில்லை அவத்தாவானுக்குசாக்ஷித்துவமில்லாதபடியினாலே ஒருஆத்மாவுக்குத்தானே அவத்தாத்துவமும் சாக்ஷித்துவமும் இரண்டுங்கூடாது சித்தாந்தமேதாயிற்றென்றால் அபிமானியாயிருக்கிறவனேஅவத்தாவான் அவத்தை அவத்தாவான்களைக் காண்கிறவரே சாக்ஷியென்று சித்தாந்தம். (௩௬)

இப்படியானால் அவத்தாத்திரயங்கள் மூன்றுக்குஞ் சாக்ஷிமூன்றுபேரோ வொருத்தரோவென்றாற் சாக்ஷியொருத்தர்தானே அவத்தைகள்மாத்திரம் பேதித்துப் பேதித்துப் போகிறது அவற்றைக்காண்கிற சாக்ஷி பேதிக்கவில்லை அவத்தைகள்வருகிறதற்கும் மிருக்கிறதற்கும் போகிறதற்குஞ் சாக்ஷியா யெல்லாவவத்தையிலேயும் அனுசூதராயிருக்கிற சாக்ஷியொருத்தர்தானே ஆகையினாலே அவத்தாத்திரயத்துக்குஞ்சாக்ஷி ஆத்மாவென்று ஆத்மாவுக்கவத்தாத்திரயசாக்ஷித்துவஞ் சொல்லப்பட்டது. (௩௭)

இப்படித் தடஸ்தலக்ஷணஞ் சொல்லப்பட்டது இனி ஆத்மாவுக்குச் சொரூபலக்ஷணமேதென்றாற்சொரூபமாய் ஆத்மா சச்சிதானந்தசொரூபர் ஏகர் சர்வகெதர் அசங்கர் பூரணர் நிருவிகாரர் அத்தொய்தர் என்று இப்படி ஏழுலக்ஷணமுண்டு எதனாலே ஏழுலக்ஷணஞ்சொல்லப்பட்டது என்றாற் சொல்லுகிறோம். (௩௮)

ஆத்மாவுக்குச் சத்துரூபமெதனாலேயென்றாற் நம்மிடத்திலேயாரோபிக்கப்பட்டிருக்கிற சகல அவத்தைகளு முண்டாகிறதற்கும் அழிகிறதற்கும் எப்போதுஞ் சாக்ஷியாயிருக்கிறபடியினாலே சத்துரூபர் இந்த வாத்மா சாக்கிரதாதி அவத்தாத்திரயத்திற்குமாத்திரஞ் சா

க்ஷியோவென்றுற் பாலியாதி அவத்தைகளொன்றுபோயொன்று ஒன்றுபொயொன்றாய் வருகிற அவத்தைகளுக்குங் கெதம்போன ஜனனமரணுதி அவத்தைகளுக்கும் வர்த்தமானத்திலே ஜன்மாதி வாலிய வெவ்வணுதியவத்தைகளுக்கு மினிமேலும் வரப்போகிற ஜனனமரணவாலியாதி யவத்தைகளுக்கும் பூதபௌஷ்யவர்த்தமான காலத்திரயத்திலேயு மெப்போது மெல்லா அவத்தைகளுக்குஞ் சாக்ஷியொருத்தர்தானே ஆகையினுலே எப்போதுஞ் சாக்ஷியாயிருக்கிறபடியினுலே ஆத்மாச் சத்துரூபரென்று சொல்லப்பட்டுது. (ங௧-சo)

ஆத்மாவுக்குச் சித்துரூபத்துவ மெதனுலேயென்றுல் முன்சொன்னபிரகாரமாய்ச் சகலமாயிருக்கிற அவத்தைகள் அவத்தாபிமானிக ளெல்லாவற்றையு மெப்போதும் பிரகாசித்துத்தோற்றிவிக்கிறபடியினுலே சித்துரூபத்துவமுஞ் சித்திக்கிறது. (சக)

ஆத்மாவுக் கானந்தரூபத்துவ மெதினுலேயென்றுற் சர்வத்தைக்காட்டிலுஞ் சர்வதாப் பரமப்பிரீதி விஷயராய் நிரதிசயமாய்ப் பிரியசொரூபராயிருக்கிறபடியினுலே ஆனந்தரூபரே யாத்மா ஆத்மாவைத்தவிர அன்னியமெல்லாம் பிரிய மன்றேவென்று லன்றே அதெப்படியென்றுல் ஆத்மாவுக்கன்னியமாயிருக்கிற பதிசாயா புத்திரவித்தகிரக சிற்குசந்தனுதிகளாயிருக்கிற சகலவிடயங்களும் ஆதமாவுக்குப்போகார்த்தமாய்ப் பிரியமாயிற்றேயன்றியிலே அதுகள்சொதகாப் பிரியசொரூபங்கள்ன்று எதனுலே பிரியங்களன்றென்றுல் அதுகள் பிரியங்களே ஆனுல் எப்போதும் பிரியங்களாகத்தானே யிருக்கவேண்டும் அப்படிச் சார்வதாப்பிரியமாயிராமலொருக்காற்பிரியமாயுமொருக்காலப்பிரியமாயும் போகக் காணப்படுகிறதே சார்வதாப் பிரியமாகாமலெப்போதப்பிரியமாகிறதென்றுற் பத்தாவுக்கு ஸ்திரியினிடத்திலே யெப்போதிச்சைவருகிறதோ அப்பமாத்திரம்பிரியமாகிறுள் சரா

திகளினாலே துக்கமநுபவிக்கிறபோ தந்த ஸ்திரீதானே அப்பிரியமாய்ப்போகிருள் அந்தஸ்திரீதானே விரக்தனுக்குத் திரணதிபோலே யுபேக்ஷிக்கப்பட்டுப்போகிருள் இப்படி யொருஸ்திரீதானே பிரியமாயும் அப்பிரியமாயும் உபேக்ஷையாயும் மூன்றுவிதமாகிருள் அப்படிப்போலே சகலவிடயங்களும் மூன்றுவிதமாகிறது ஆகையினாலே யெப்போதும் பிரியமாயிராதபடியினாலே ஆத்மாவுக் கன்னியமெல்லாம் பிரியமன்று. (சஉ-சரு-சச'சரு-சசு)

ஆத்மா யெப்போதும் பிரியமாயிருக்கிரோவென்ரு லெப்போதும் பிரியசொரூபர்தானே அதுகளைப்போலே யொருக்கால் அப்பிரியராயு முபேக்ஷியராயுங் காணப்படாதபடியினாலே யொருக்காலும் அப்பிரியரன்று. (சஎ)

துக்காநுபவகாலத்திலே யொருக்காற் றுவேஷத்தினாலே ஆத்மாவை விடுகிறபடியினாலே சர்வதாப்பிரியர் ஆத்மாவென்கிற தெப்படியென்ருல் ஒருக்காலும் ஆத்மாவை விடக்கூடாது ஏனென்ருல் விடுகிறவனைத் தானிருந்துகொண்டு தனக்கன்னியமாயிருக்கிறதுக்கத்தைத் துவேஷத்தினாலே விடுகிருனேயொழியத் தன்னை விடவில்லைத் தன்னைத்தானே விடுகிருனென்ருல் அப்போது தான் விடப்படுகிறவனானாற் றன்னைவிடுகிறவன் வேறேயொருத்தன்வேண்டும் அப்படியன்றியிலேதானே விடுகிறவனானபடியினாலே தனக்கன்னியமாய்த் துக்கரூபமாயிருக்கிற தேகாதிகளை விடுகிருனேயன்றியிலே தன்னை விடவில்லை அதுவுமன்றியிலே யொருக்காற் றேகாதிகளைத் துவேஷிக்கிறபடியினாலே ஆத்மாப் பிரியசொரூபரென்றுந் தேகாதிகள் துக்கசொரூபமென்றும் நன்ருயறியலாமே அதெப்படியென்ருல் தான் எப்போதுந் துக்கசொரூபனேயானால் அப்போது துக்கத்தைத் துவேஷியாமலிருக்கவேண்டும் தனக்கெப்போதும் பிரியசொரூபமே

சொபாவமாகக்கொள்ளவன்றே துக்கரூபமாயிருக்கிற தேகாதிகளைத் துவேஷிக்கிறான் அதெப்படிப்போலேயென்றாற் றுக்கரூபமாயிருக்கிற வியாதிமுதலானதுகள் தனக்கெப்போதுமில்லாமலொருக்கால் ஆகந்துகமாய் வருகிறதுகளைத் தனக்குச் சொபாவமாகாதபடியினாலே துவேஷிக்கிறான் தனக்குத் துக்கரூபமாயிருக்கிற வியாதியாதிகள் சொபாவமானால் அதுகளைத் துவேஷியானே ஆகையினாலே தனக்கன்னியமாய்த் துக்கமாய் ஆகந்துகமாயிருக்கிற வியாதியாதி அனர்த்தங்களைத் துவேஷிக்கிறபடியினாலே அதுகள்தனக்குச் சொபாவமன்றென்றெப்படியறியலாமோ அப்படிப்போலே தேகாதிகளைத் துவேஷிக்கிறபடியினாலே அதுகள் தனக்குச் சொபாவமன்று *ஆகந்துகமாய்வந்தது தனக்குப்பிரியசொரூபமேயெப்போதுஞ் சொபாவமென்றறியலாமே ஆகையினாலேயொருக்காற் றேகாதிகளைத் துவேஷிக்கிறபடியினாலே அதுகள் துக்கசொருபங்கள் அதுகளைவிடுகிறானேயன்றியே ஆத்மாவை விடவில்லையே அதுகளை விடுகிறதுதானே தேகாதிகள் ஆத்மாவன்றனாத்மாவென் றுபதேசிக்கிற தெல்லாருக்கும் ஆகையினாலேஆத்மாவொருக்காலுந் துவேஷிக்கப்படுகிறவனன்று. (௪௮-௪௯)

ஆத்மா துவேஷியாகாமற்போனாலுபேக்ஷியாகட்டுமென்றுமெப்படிச்சொல்லக்கூடாது ஏனென்று லுபபேக்ஷிக்கிறவன்றானாகையினாலே தனக்கன்னியமாயிருக்கிற திரணவோடாதிகளை யுபேக்ஷிக்கிறானேயன்றியே யுபேக்ஷிக்கிறவனாயிருக்கிற தன்னை யுபேக்ஷிக்கக்கூடாது ஆகையினாலே தேகம் ஸ்திரிமுதலானதுகளைப்போலே யொருக்காலப்பிரியராய் ஆகவில்லைத் திரணவோடாதிகளைப்போலே

* ஆகந்துகமாய் என்றும் பாடம்.

டுபெறுபவராகவுமில்லை யெப்போதும் பிரியசொரூபராக ஆத்மாவே யிருக்கிறார் மற்றதுகளன்று. (௫௦-௫௧)

ஆத்மா யெப்போதும் பிரியனென்றால் ஆத்மாவுக்கு அன்னியங்களாயிருக்கிற விடயங்களிலேயுஞ் சுகாநுபவகாலத்திலே பிரியங்காணப்படுகிறபடியினாலே யதுகளும்பிரியமாகட்டுமென்றால் அதுகளிலேகாணுகிற பிரீதி யெப்போது மிருக்கவில்லை யொன்றிலேயிருக்கிறபிரீதி அதிசயமாய்ப் பின்னையொன்றைக்கண்டாலதிலே யதிகமாய் ஒன்றைவிட்டொன்றிலேபோய் விபசாரத்தை யடைகிறபடியினாலே யொன்றிலேதானே யெப்போதும் பிரீதிகாணுதபடியினாலே அந்தப்பிரீதி சாதிசயமாய்த் திரமன்றியிலேபோகிறது ஆகையினாலே அதுகளிலே மோகத்தினாலே பிரீதிகண்டதேயன்றியிலே சொபாவமாய்ப் பிரீதியேயில்லை எப்படிப்போலென்றால் நிச்சாரமாயிருக்கிற மாட்டெலும்பிலே சுவானமானது மோகத்தினாலே தன்னுடையவாயிரத்தத்தை அதினுடையசாரமென்றெண்ணிக்கொண்டதையெப்படிப்பிரியமாய்க்கண்டு பிரீதியை அடைகிறதோ அந்தரத்தம்போனபிற்பாடு பின்னையொரெலும்பைக் கண்டவுடனே யதைவிட்டுப்போட்டு அதை மஹாப்பிரியமாய்க் காணுகிறாப்போலே மாயாகற்பிதமாய்த் துக்கசொரூபமே சொபாவமாயிருக்கிற அன்னியவஸ்துக்களிலே மோகத்தினாலே ஆத்மாவுக்குச்சொபாவமாயிருக்கிற தன்னுடைய பிரியத்துவத்தை அதுகளிலே ஆரோபித்துக்கொண்டதுகள் மஹாப்பிரியமென்று காணுகிறதன்றியிலே சுபாவமாய்ப்பிரியமன்று துக்கசொரூபங்கள்தானே இப்படி மோகத்தினாலேகாணுகிற விடயப்பிரீதியானதொன்றிலேதானேபிரமமலொன்றைவிட்டொன்றிலே விபசரிக்கிறபடியினாலே அந்தவிடயப்பிரீதி சாதிசயமேயொழிய நிரதிசயமன்று ஆத்மாவினிடத்திலேயிருக்கிற பிரீதியோவென்றால் அதைப்போலே யொன்றிலேயும் விபசாரத்தையடையாமற் றேகாதிகளைவிட்டாலுஞ்

தன்னைவிடப்படாமலெப்போதுந் தன்னிடத்திலே பிரீதிகாணுகிற படியினாலே நிரதிசயமாயிருக்கிறது ஆத்மாவினிடத்திலே பிரீதி யெல்லாருக்குமிருக்கும் ஆகையினாலே ஆத்மா பரமானந்தரூபர் இப்படி ஆத்மாவுக்குச் சச்சிதானந்த ரூபத்துவஞ்சொல்லப்பட்டது. (௫௨-௫௩)

இந்தச் சச்சிதானந்தங்கள் மூன்றும் ஆத்மாவுக்குக்குணமோ சுபாவமோவென்றாற் சொல்லுகிறோஞ் சச்சிதானந்தங்கள் ஆத்மாவுக்குச் சுபாவமேயன்றியிலே குணங்களன்று அதெப்படிப்போலேயென்றால் அக்கினியிடத்திலேயிருக்கிற லோகிதோஷ்ணப் பிரகாசங்கள் மூன்றும் அக்கினிக்குச் சுபாவமேயன்றியிலெப்படிக்குணங்களன்றோ அப்படிப்போலே ஆத்மாவுக்குச் சுபாவமென்றறி. (௫௪)

சத்துரூபமென்றுஞ் சித்துரூபமென்றும் ஆனந்தரூபமென்றும் ஆத்மாவுக்கு மூன்றுசொரூபங்களுண்டானால் ஆத்மாச்சத்துரூபமொன்றுஞ் சித்துரூபமொன்றும் ஆனந்தரூபமொன்றும் மூன்றாத்மாவுண்டோவென்றால் ஆத்மாவொருத்தர்தானே யெப்படிப்போலென்றால் லோகிதோஷ்ணப்பிரகாசங்கள் மூன்றையுஞ் சுபாவமாயுடைத்தாயிருக்கிற அக்கினி யெப்படியொன்றேயொழிய மூன்றன்றோ ரசசயித்தியதிரவங்களே சுபாவமாயிருக்கிற ஜலம் யெப்படியொன்றோ அப்படிப்போலே சச்சிதானந்தங்களைச் சுபாவமாயுடைத்தாயிருக்கிற ஆத்மாவொருத்தரேயொழிய மூன்றாத்மாவன்று. (௫௫)

இப்படி ஆத்மாவொருத்தரானாற் சர்வபூதங்களிலேயுமிருக்கிறாரென்று சர்வகெதத்துவஞ் சொல்லப்படுகிறதே அதெப்படி யோராத்மாத்தானே யெல்லாத்திலேயு மிருக்கிறாரென்கிறதென்றால் ஒரு ஆத்மாத்தானே யெல்லாத்திலேயுமிருக்கிறாரென்று நன்றாய்ச்சொல்லலாமே யெதினாலேயென்றாற் சர்வஞ்ஞராய்ச் சர்வத்தையுமறிகிறபடியினாலே சர்வத்திலேயு மிருக்கிறாரென் றறியலாமே ஆத்மாவுக்குச்

சர்வஞ்ஞத்துவந்தா னெப்படிக் கோசசாக்ஷியாயிருக்கிற பிரத்தியககா
த்மா சர்வத்தையு மறிகிருரோவென்று லறிகிருரே அதெப்படியென்
ருற் சகலமாயிருக்கிற பூதபௌதிகங்களையெல்லாந் தானேயறிகிரு
னேயன்றியிலே பின்னை யொன்றுமறியவில்லை ஏனென்ருல் ஆத்மா
வுக்கன்னியமெல்லாஞ் சடமானபடியினுலே அதுகளறியமாட்டாது
அறியுமென்றுசொல்லலாமென்ருற் கடாதிசடங்களு மறியவேண்டு
ம் அப்படிக்காணுதபடியினுலே சர்வத்தையுந் தானேயறிகிருனேயன்
றியிலே தன்னை யதுகளறியவில்லை ஆகையினுலே சர்வத்தையு மறி
கிறவன் தான்ருனேயென்றறியலாமே இந்திரியசந்நிதானத்திலேயிரு
க்கிற சடங்களைத்தான் ஆத்மாவறிகிருர் வெகுயோசனைதூரத்திலே
மகாமேருமுதலானதுகளையுஞ் சுவர்க்காதிகளையுந் தானெங்கேயறிகி
ருரென்று லறிகிருர் எப்படியென்ருற் சொல்லுகிறேஞ் சிதாகாசசொ
ரூபமா யறிவாயிருக்கிற தன்னிடத்திலே அறியப்படாததாகவும் அ
றியப்பட்டதாகவும் இரண்டுவிதமாய்ச் சர்வசடங்களுந்தோணுகிறது
இந்திரியப் பிரத்தியக்ஷமாயிருக்கிற தேகக் கிரகட்க்ஷேத்திர கிராம
புரதேசாதிகளெல்லா மறியப்பட்டதா யெப்படித் தன்னிடத்திலே
யறிவிலே தொணுகிறதோ அப்படிப்போலே அப்பிரத்தியக்ஷமா யறி
யப்படாததாயிருக்கிற மேரு சுவர்க்காதி சடங்களுந் தன்னுடைய அ
றிவிலே தோணுகிறதேயொழிய அப்பாலே தோன்றவில்லை யறியப்
படாத தெங்கேதோணுகிற தென்ருற் ருேணுகிறதே யெப்படியென்
ருல் வந்தியாபுத்திர சமானமாயிருக்கிறகிராமபுரதேசாதிக ளில்லாம
லசத்தாயிருந்தாலும் உள்ளதுபோலே மனுேவாசனையினுலே கற்பி
க்கப்பட்டுக்கொண் டறியப்படாததாய் அறிவிலே தோணுகிறப்போ
லே அசத்தாயிருக்கிறமேருவாதிகளும் அறியப்படாததாய் மனுேகற்
பிதமா யறிவிலே தோணுகிறதென் றறியவேண்டும் அதெப்படிப்போ

லென்றுற் சொப்பனத்திலே மனோகற்பிதமாயிருக்கிற கிராமபுராதிக ளறியப்பட்டதாயும் மேருவாதிக ளறியப்படாததாகவும் இரண்டுவித மாய்ச் சகல சொப்பனபதார்த்தங்களும் மனோகற்பிதமாய்ச் சொப்ப னசாக்ஷியாயிருக்கிற தன்னுடைய அறிவிலே யெப்படித் தோணுகி றதோ அப்படிப்போலே சாக்கிரத்திலேயுமுள்ள சகலபதார்த்தங்க ளும் இரண்டுவிதமாய் மனோகற்பனையினாலே தன்னிடத்திலேதா னே தோணுகிறது அன்றியிலேபோனால் நான் மேருசுவர்க்காதிகளை யறியேனென்று லோகத்திலே சொல்லாம லிருக்கவேண்டும் அப்படி யன்றியிலே மேருவாதிகளை யறியேனென் லறியாததாய் மேருவாதி கள் தோணுகிறதே ஆகையினாலே மேருமுதலான சகலசடங்களையும் அறிகிற ஆத்மாத்தானே இந்தஆத்மா சகலத்திலேயுமிராமற் கோச சாக்ஷியாய்த் தேகத்திலேமாத்திர மிருக்கிறாரேயானால் லெல்லாத்தை யும் எப்படியறிவார் அறியமாட்டார் சமீபமாயுந் தூரமாயும் பிரத்தி யக்ஷமாயும் அப்பிரத்தியக்ஷமாயும் அறியப்பட்டதாயும் அறியப்ப டாததாயுந் தன்னிடத்திலே மனதானது கற்பிக்கிறது ஆகையினாலே யதுகளுக்கெல்லாம் அதிஷ்டானமா யெல்லாத்திலேயு மிருக்கிறபடி யினாலே யெல்லாத்தையு மறிகிறார் ஆகையினாலே ஆத்மாவுக்குச் சர் வகெதத்துவஞ் சித்தித்ததே ஆனபடியினா லொருத்தர்தானே சர்வத் திலேயு மிருக்கிறார் சந்தேகமில்லை. (ருசு-ருஎ-ருஅ)

ஆத்மாச்சர்வகெதரானால் சர்வத்திலேயுமிருக்கிறபடியினாலே யதுகளோடே யாத்மாவுக்குச் சங்கம்வருமே சங்கியாயாவரென்றா ல் அப்படிச் சொல்லக்கூடாது ஏனென்றால் யெல்லாத்திலேயுமிருந் தாலும் ஆகாசம்போலே நிரம்சரானபடியினாலே யதுகளோடே யா

த்மாவுக்குச் சங்கமில்லை ஆகாசம்போலே அசங்கராய்ஆகாசத்திற்கும் அதீதராய்ச் சிதாகாசசொரூபரா யிருக்கிறபடியினாலே ஆத்மா அசங்கரென்று அசங்கோஹி அயம்புருஷ இத்தியாதிசுருதிகளுஞ்சொல்லுகிறது. (ருக)

ஆத்மா அசங்கரானா லொன்றிலேயு மொட்டாதபடியினாலே சர்வத்திற்கும் அதீதராய் அப்பாலே யுதாசீனரா யிருந்தால் அப்போது பரிச்சின்னரா யன்றோ ஆகவேண்டு மென்றால் அப்படிச் சங்கிக்கக்கூடாது யேனென்றாற் றிரிவிதபரிச்சேத சூனியரானபடியினாலே ஆத்மாப் பரிச்சின்னரன்று பின்னையோ பூரணசொரூபரே ஆகாசம்போலே யொன்றிலேயு மொட்டாம லிருந்தாலும் பூரணர்தானே பரிச்சின்னரன்றென்கிறதெதினாலேயென்றால் ஒருதேசத்திலே யிருக்கிறாராத்மா வொருதேசத்திலே இல்லையென்கிற தில்லாமற் சர்வவியாபியா யெல்லாத் தேசத்திலேயு மெங்கும் வியாபித்திருக்கிறபடியினாலே தேசத்தினாலே பரிச்சின்னரன்று ஒருக்கா லிருக்கிறாரொருக்கா லில்லை யாத்மாவென்கிற தன்றியிலே நித்தியரா யெப்போது மிருக்கிறபடியினாலே காலத்தினாலே பரிச்சின்னரன்று ஆத்மாவைத்தவிர வேறேயொருவஸ்துவு மில்லாமற் சர்வாத்மக சொரூபரா யெல்லாந் தானாயிருக்கிறபடியினாலே வஸ்துக்களிலேயும் பரிச்சின்னரன்று இப்படி மூன்றுவித பரிச்சேதமன்றியிலே வியாபகரா யிருக்கிறபடியினாலே பூரணத்துவம் ஆத்மாவுக்குச் சித்தித்தது. (ருo)

ஆத்மா வியாபகரானால் ஆகாசம்போலே யெல்லாத்தையும் வியாபிக்கிறபடியினாலே விகாரியாகவேண்டு மென்றால் அப்படி விகாரியாகாரென்றால் அஸ்தி சாயதே வர்த்ததே பர்ணமதே அபக்ஷியதே நசியதே யென்கிற சட்பாவ விகாரவான்களாயிருக்கிற ஆகா

சாதி பூதங்களையெல்லா மறிகிறவரானபடியினாலே சட்பாவவிகார ங்க ளாத்மாவுக்கில்லை விகாரியானால் ஆத்மாவும் ஆகாசாதிகளைப்போ லே யுற்பத்திநாசங்களை யடையவேண்டும் உற்பத்திநாசங்களை யடை ந்தாற் சடமா யொன்றையு மறியாமற்போகவேண்டும் அப்படியன்றி யிலே சர்வப்பிரபஞ்சமும் உண்டாகிறதற்கும் இருக்கிறதற்கும் நசிக்கி றதற்குஞ் சாக்ஷியா யறிந்துகொண் டிருக்கிறபடியினாலேயும் நிரம்ஸ வஸ்துவானபடியினாலேயும் நிருவிகாரர்தானே. (௬௧)

ஆத்மா நிருவிகாரியென்றால் விகாரிவஸ்துக்கள் சிறிது வே றேயுண்டென்று வருகிறபடியினாலே ஆத்மா அத்தொய்தரென்கிறது கூடாது இரண்டாம் வஸ்துவோடே கூடினபடியினாலே சத்துவயரெ ன்று சொல்லவேண்டுமென்றால் அப்படிக்கூடாது ஏனென்றால் ஆத் மாவைத்தவிர வேறே இரண்டாம்வஸ்து வொன்றுமில்லாதபடியி னாலே யெல்லாம் அவரே யானபடியினாலே சத்துவிதியான்று அத் தொய்தர்தானே ஆத்மாவைத்தவிர யெல்லாம் அன்னியமாகாவிட்டா ல் அத்தொய்தர்தான் சந்தேகமில்லை சகலமும் ஏன் ஆத்மாவைத்தவி ர அன்னியமன்றென்றாற் சர்வத்திற்குங்காரணனானபடியினாலே அ ன்னியமன்று சர்வகாரணரானால் அன்னியமகாமற் போமோவென் றால் அன்னியமாகாதே அதெப்படியென்றாற் காரியகாரணங்களுக்கு ப் பேதமில்லையே காரணத்தைத்தவிரக் காரியம்வேறன்றே இப்படி லோகத்திலே காரியகாரணங்களுக்குப் பேதமோரிடத்திலேயு மில் லாதபடியினாலே ஆத்மகாரியமாயிருக்கிற சர்வமும் ஆத்மாவைத்த விர அன்னியமன்றென் றறியலாமே. (௬௨-௬௩)

ஆத்மாச் சர்வகாரணரானபடியினாலே சர்வமு மாத்மாவுக் கன்னியமன்றென்று சொல்லப்பட்டது ஆத்மாவுக்குச் சர்வகாரணத் துவ மெப்படி இந்த ஆத்மாத்தானே சர்வத்திற்குங் காரணரென்கிற

தெதினாலேயென்றாற் சர்வதிருஷ்டாவாய்ச் சர்வத்தையுங் காணுகிற வரானபடியினாலே சர்வகாரணரென்று சொல்லலாமே சர்வத்தையு ங் காணுகிறவரானாற் சர்வகாரணராக வேண்டுமோவென்றால் ஆகலா மே அதெப்படியென்றால் லோகத்திலே மித்தியாபதார்த்தங்களுக் கெல்லாங் காணுகிறவனே காரணமாகக் கண்டோமே யெதினாலே கண்டோமென்றாற் சுத்தியிலே தோணுகிற ரசிதப்பிராந்திக் கஃதை க்காணுகிறவனே யுபாதானகாரணமாகக் கண்டோஞ் சொப்பனப் பிரமைக்குத் திருஷ்டாவே யுபாதானகாரணமாகக் கண்டோம் அப் படிப்போலே சாக்கிரத்திலே தோணுகிற சர்வஜகப்பிராந்திக்குத் திருஷ்டாவாயிருக்கிற ஆத்மாவே யுபாதானகாரண மாகலாமே இப் படிச் சர்வஜகத்தும் பிராந்தியானால் ஆத்மாக்காரணமாகட்டுஞ் சர்வ ஜகத்தும் பிராந்தியென்கிற தெப்படியென்றாற் பிரளயத்திலே அத் தொய்தராயிருக்கிற ஆத்மாவினிடத்திலே ரச்சுசர்ப்பம்போலே மா யையினாலே நாமரூபங்கள் கற்பிக்கப்பட்டதென்று சுருதிசொல்லு கிறபடியினாலேயும் யுக்தியினாலேயுஞ் சொப்பனம்போலே கண்ட ழிந்துபோகிற வநுபவத்தினாலேயும் பிராந்தியென் றறியலாம் பின் னையுஞ் சர்வமும் பிராந்திமாத்திரமேயன்றியிலே சுபாவமாய் வே றேயொன்றுமில்லைப் பிரமமாத்திர மிருக்கிறதென்று தத்துவஞா னிகளும் பிரத்தியக்ஷமாய்க் கண்டநுபவித்துச் சொல்லுகிறபடியி னாலே சர்வமும்பிராந்திதானே சந்தேகமில்லை ஆகையினாலே ஆத்மா சர்வதிருஷ்டாவாயிருக்கிறதினாலே சர்வகாரணராகலாமே சர்வமுந் தன்னுடைய பிரமையினாலே தன்னிடத்திலே தோணுகிறபடியினா லே ஆத்மாவினுடைய காரியமாகலாமே ஆனபடியினாலே ஆத்ம காரியமாயிருக்கிற சர்வமும் ஆத்மாவுக் கன்னியமன்றே யெப்படிப் போலே யென்றாற் சமுத்திரத்திலே யுண்டான அலைநுரைகுமிழி

முதலானதுகள் சமுத்திரகாரியமானபடியினாலே சமுத்திரத்தைவிட அன்னியமன்றியிலே சமுத்திரஜலமாத்திரமா யெப்படியிருக்கிற தோ அப்படிப்போலே ஆத்மகாரியமாயிருக்கிற சர்வமும் ஆத்மா வைத்தவிர அன்னியமன்று ஆத்மாமாத்திரந்தானென் றறியலாமே ஆனபடியினாலே ஆத்மா சத்தொய்தரன்றே அத்தொய்தர்தானே சந் தேகமில்லையென்று நன்றாயறியலாமே. (கூ௬-கூ௫-கூகூ)

இப்படிச் சொன்னபிரகாரமாய் அத்தொய்தராயிருக்கிற ஆத்மசொருபத்தைப் பிரதிபாதிக்கிற வேதாந்தசாஸ்திரத்தைக் குரு சன்னிதானத்திலேயிருந்து சர்வதாப் படித் தந்த வர்த்தத்தை மன லே அவதானம் பண்ணுகிறதே சிரவணத்திற்குச் சொருபமென்று சொல்லப்படும். (கூஎ)

இப்படி இந்தச் சிரவணத்தைச் சர்வதா அப்பியாசிக்கவேண் டும் வரப்பண்ணினதினாலே யஃதென்னசெய்யு மென்றால் நன்றாய் வரப்பண்ணுகிறபோது பூருவம் அத்தொய்தஆத்மாவாவ தெங்கேயிரு க்கிறு ரில்லையென் றுவரித்துக்கொண்டு இருந்த அசத்தாவர்ணத்தை நாசம்பண்ணும் இந்த அசத்தாவரணத்தை நாசம்பண்ணுகிறதே சிர வணத்திற்குக் காரியமென்று சொல்லப்படும். (கூஅ)

இந்தச்சிரவண மெத்தனைநாட்பண்ணுகிறதென்றால் நஷ்டமா ய்ப்போன அசத்தாவரணந் திரும்பி வாராமலிருக்கிறதே சிரவணத்தி ற்கு அவதியென்று சொல்லப்பட்டபடியினாலே அவ்வளவுபரியந்தஞ் சிரவணம்பண்ணவேண்டும் நஷ்டமான ஆவரணந் திரும்பியும் வரு மோவென்றால் வருமே யெதினாலே வருமென்றாற் சுருதி நானாவித மாய்த் தொய்தங்களையும் பிரதிபாதிக்கிறபடியினாலே தொய்தமும் பி ரமாணமாய்த் தோணும் யெப்படியானால் விஷ்ணுப்பிரதிபாதகமாயி ருக்கிற சாஸ்திரத்தைப் பரிசிலனம்பண்ணினதினாலே அந்த விஷ்

ணுமூர்த்தியிலே தானே சிரத்தையோடே கூடியிருந்தாலும் பின்னை யொரு மூர்த்தியைப் பிரதிபாதிக்கிற சாஸ்திரப்பிரமாணத்தைக் கண்டதிலே அசிரத்தை யெப்படிவருகிறதோ அப்படிப்போலே அத்தொய்தசாஸ்திரப் பிரமாணத்தினாலே அத்தொய்த ஆத்மாவில்லை யென்கிற அசிரத்தையோ யுண்டென்று சிரத்தை அடைந்திருந்தாலும் அன்னியமாயிருக்கிற தொய்தப்பிரமாணங்களினாலே திரும்பி யொருக்கால் அசிரத்தைவந்துவிடும் ஆகையினாலே சுருதி நானாத்துவங்களினாலே யெவ்வளவுபரியந்த மொருக்காலும் அசிரத்தை வாராமலிருக்கிறதோ அவ்வளவுபரியந்தஞ் சிரவணம் பண்ணவேண்டும் இப்படிப் பண்ணின சிரவணத்தினாலே பிரயோசன மேதென்றால் அத்தொய்த ஆத்மா வில்லையென்கிற அசிரத்தையாகிற அசத்தாவர்ணம் நஷ்டமானவுடனே அன்னியப் பிரமாணங்களொன்றினாலேயுங் கெடுக்கப்படாம லொருபிரதிபந்தமு மன்றியிலே திடமாய்ப் பரோக்ஷக் ஞானமுண்டாகும் அதுவே இந்தச் சிரவணத்திற்குப் பலமென்று சொல்லப்படும். (௬௯-௭0)

பரோக்ஷக்ஞானமாவ தேதென்றாற் பிரத்தியகாத்ம சொரூபத்தைப் பிரத்தியக்ஷமாய்க் காணாமல் வேதாந்தசாஸ்திரத்தினாலே யுண்டென் றறிகிறது பரோக்ஷக்ஞானம் யெப்படிப்போலே யென்றால் விஷ்ணுவாதிமூர்த்திகளைப் பிரத்தியக்ஷமாய்க் காணாமல் மூர்த்திப்பிரதிபாதக சாஸ்திரத்தினாலே யுண்டென்று சிரத்தையினாலே சாமான்னியமா யறிகிற தெப்படியோ அப்படிப்போலே அத்தொய்த சாஸ்திரத்தினாலே அத்தொய்தப் பிரமமுண்டென்று சாமான்னியமா யறிகிறது பரோக்ஷக்ஞானமென்று சொல்லப்படும். (௭௧)

இப்படி வேதாந்த சிரவணத்தினாலே வந்தஞானம் பரோக்ஷமென்று சொல்லுவானேன் அபரோக்ஷமாக லாகாதோவென்றா லா

காது ஏனென்ருல் அபாணுவரணமிருந்து பிரத்தியக்ஷமா யாத்மாவைத் தெரியவொட்டாமல் மறைக்கிறபடியினலே அபரோக்ஷமன்று பரோக்ஷந்தானே இதற்குப் பிரமாணமேதென்ருற் ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகள் சொல்லியிருக்கிருர் அதுவேபிரமாணம். (எஉ)

ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிக ளெப்படிச்சொல்லியிருக்கிருரென்ருற் சிரவணத்திஞலேதானே சச்சிதானந்த சொரூபமாயிருக்கிற பிரமசொரூபந் தோன்றினலும் பஞ்சகோச சாக்ஷியாய்த் தானேய்ப் பிரத்தியக்ஷமாய்ப் பிரமத்தைக்காணவில்லை அதெப்படிப்போலேயென்ருற் சதுர்ப்புயராய்ச் சங்கு சக்கர கதாபாணியா யிருப்பர் விஷ்ணுவென்று சாஸ்திரத்திஞலே அறிந்தாலுந் தியானத்திஞலே மனதிலே தோணிஞலுங் கண்ணிஞலே பிரத்தியக்ஷமாய்க் காணுதபடியிஞலே மூர்த்திப்பிரதிபாதக சாஸ்திரசென்னியஞானம் பரோக்ஷமன்றியிலே யெப்படி அபரோக்ஷமன்றெ அப்படிச் சிரவணசென்னியஞானமும் அபரோக்ஷமன்று இனிமேற் சங்கை விஷ்ணுமூர்த்தி தாஞகாமற் றனக்கன்னியமானபடியிஞலே அதைச் சாஸ்திரத்திஞலே அறிந்தாலும் பரோக்ஷமாய்ப் போயிற் றப்படியிங்கேகூடாது ஏனென்ருற் பிரமந் தனக்கன்னியமாகாமற் ருஞயிருக்கிறதை அறியாம லிருக்கிறவனுக்கு நீயே பிரமமென்று தத்துவமசியாதி மஹாவாக்கியங்கள் பிரதிபாதிக்கிறதைக்கேட் டறிந்தவுடனே பிரமத்தைத் தாஞய்ப் பிரத்தியக்ஷமா யறியலாமே தனக்கன்னியமாயிருக்கிற சுவர்க்காதிகளைப்போலே சாஸ்திரத்திஞலே பரோக்ஷமாயாகாதே ஆகையிஞலே தன்னுடைய சொரூபத்தைச் சுவர்க்காதிபோலே பரோக்ஷமா யறியவேண்டாஞ் சிரவணத்திஞலே அபரோக்ஷமா யறியலாமென்று சங்கைவந்தால் அப்படிக்கூடாது ஏனென்ருற் சாஸ்திரங்களிலே மஹாவாக்கியங்களிஞலே நீயே பிரமமென்று தா

னேபிரமமாய்ச் சொல்லப்படுகிறது சந்தேகமில்லை அப்படியானாலு மஃதைச் சிரவணம் பண்ணினமாத்திரத்திலே தானே தன்னுடைய சொரூபத்தைப் பிரத்தியக்ஷமாய்க் காணப்படவில்லை ஆகையினாலே விஜாரியாமற் சிரவணத்தினாலே அபரோக்ஷக்ஞானம் வாராதென்று ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகள் தியானதீபிகையிலே சொல்லியிருக்கிறார் ஆகையினாலே சிரவணம்பண்ணிப் பரோக்ஷமாய் ஆத்மசொரூபத்தை அறிந்தவனுக்குச் சாக்ஷாதபரோக்ஷமா யறிகிறதற்கு மனனம்பண்ணவேண்டும். (எரு-எச-எரு-எசு)

இப்படிச் சிரவணப்பிரகரணஞ் சொல்லப்பட்டுது இந்தச் சிரவணப்பிரகரணத்தை யாதொருவித்துவான் பராமரிசித்துப் பார்க்கிறானோ அவ னாத்மசொரூபத்தைப் பரோக்ஷமாயறிந்துகொண் டபரோக்ஷமா யறிகிறதற்குச் சாதனமாயிருக்கிற மனனத்தை அபேக்ஷிப்பன். (எஎ)

நாலாவது-சிரவணப்பிரகரணம் முற்றிற்று.

---

## ஐந்தாவது - மனனப்பிரகரணம்.

சீடன்கேட்கிறான் வாருமையா ஏ குரோ ஆத்மசொரூபத்தைச் சிரவணத்தினாலே நன்றாய்ப் பரோக்ஷமா யறிந்தேன் இனிமேல் மனனத்தைச் சொல்லும் யாதொரு மனனத்தைப் பண்ணினதினாலே அவித்தையாகிற அந்தகார ஆவரணம் நசித்து அபரோக்ஷக்ஞானஞ் சித்திக்குமோ அப்படிப்பட்டிருக்கிற மனனத்தைச் சொல்

லவேண்டுமென்று கேட்ட சீடனுக்கு மனனத்தைக் குரு சொல்லுகிறபிரகாரம். (க)

மனனமாவ தேதென்றாற் சிரவணத்தினாலே பரோக்ஷமாயறிந்திருக்கிற அத்தொய்த ஆத்மவஸ்துவைச் சூக்ஷமமாயிருக்கிற யூகத்தினாலே சர்வதாச் சிந்திக்கிறதே மனனமென்று சொல்லப்படும். (உ)

இந்த மனதிற் கேதுசொரூபகாரிய அவதிபலங்க ளேதென்றால் நித்தியாநித்தியவஸ்துவிவேகமே ஏது அத்தொய்த ஆத்மதத்துவத்தை விஜாரிக்கிறதே சொரூபம் அபாறுவர்ணத்தை நாசம்பண்ணுகிறதே காரியம் நஷ்டமான ஆவரணந் திரும்பி வாராதிருப்பதே அவதி அபரோக்ஷக்ஞானமே பலமென்று தத்துவவித்துக்களாலே சொல்லப்படும். (ங-ச)

மனனத்திற்கு நித்தியாநித்தியவஸ்துவிவேகமே யேதுவென்று சொல்லுகிறதெதினாலேயென்றால் இதுநித்தியவஸ்து இதுஅநித்தியவஸ்துவென்று நித்தியாநித்தியவஸ்துக்களைப் பரோக்ஷமாய் விவேகித் தறிந்தவனன்றோ அபரோக்ஷமாய்விஜாரிக்கிறதற்கு அதிகாரி மற்றவனன்று. (ரு)

மோக்ஷச்சைதான் மனனத்திற் கேதுவாகட்டுமென்றால் ஆகாது ஏனென்றாற் கேவலம் மோக்ஷவிச்சைமாத்திர முள்ளபுருடன் விஜாரத்திற்கு யோக்கியனே யன்று ஏனென்றாற் சிரவணம் பண்ணுதபடியினாலேபரோக்ஷக்ஞானமில்லையே பரோக்ஷமாய் ஆத்மசொரூபத்தை யறியாதவனுக்கு விஜார மெப்படிக்கூடும் ஆத்மசொரூபம் இன்னபடியிருக்குமென்று கேட்டறிந்துகொண்டன்றோ பிற்பா

டதைவிஜாரிக்கவேண்டுங் கேட்டறியாமற் ருனே யெப்படி விஜார ஞ்சித்திக்கும் மோக்ஷம்வேண்டுமென்கிற ஆசையினுலேதானே கூடாது. (சு)

மோக்ஷவிச்சையினுலே விஜாரமேன்கூடாது மோக்ஷவிச்சை வர்தவுடனே சிரவணம்பண்ணிப் பரோக்ஷக்ஞானம் வருகிறபடியினுலே விசாரங்கூடுமேயென்ருற் சிரவணம்பண்ணிப் பரோக்ஷக்ஞானம் வந்துதேயென்ருல் அப்போதவன் நித்தியாநித்தியவஸ்து விவேகியேயாகுன் அவனைக் கேவல முமுக்ஷுவென்றுமாத்திரஞ் சொல்லப்படாது நித்தியாநித்தியவஸ்து விவேகியென்றே சொல்லவேண்டும் ஏனென்ருற் சிரவணம்பண்ணி நித்தியாநித்தியங்களாயிருக்கிற ஆத்மா அனுத்மாக்களைப் பரோக்ஷமாய் விவேகித் தறிகிறதன்ருே பரோக்ஷக்ஞானமென்று சொல்லப்படுகிறது அந்தபரோக்ஷக்ஞானந்தானே நித்தியாநித்திய வஸ்துவிவேகமென்று சொல்லப்படுகிறது சகல வேதாந்தங்களிலேயும் பரோக்ஷக்ஞானியே நித்தியாநித்திய விவேகியானபடியினுலே பரோக்ஷக்ஞானியானவன் விஜாரத்திற்கு யோக்கியன்ருனே சந்தேகமில்லை ஆகையினுலே வஸ்து அவஸ்துகளைப் பரோக்ஷமாயறிந்த நித்தியாநித்தியவிவேகியே விஜாரயோக்கியன் மற்றவனன்று. (எ)

மோக்ஷவிச்சைதான் மனனத்திற்கு அசாதாரண வேதுவாகாமற்போனுற்போகட்டும் வைராக்கியந்தான் உபரதிதான் ஆகட்டுமென்ருல் அதுகளுஞ் சாதாரணவேதுவேயன்றியிலே பிரதானவேதுவன் றேனென்ருற் கேவலம் வைராக்கிய உபரதியுள்ளவனுக்குப் பரோக்ஷக்ஞானமில்லாதபடியினுலே விஜாரயோக்கியமில்லை ஏனென்ருற் றபசிகளுக்கு வைராக்கிய உபரதிகள் இரண்டாகுலும்மோக்ஷ

ஆத்மாவையெப்படியடைகிறதென்றால் அசத்ரூபங்களாயிருக்கிற கோசங்களை விஜாரித்தே ஆத்மாவை யடையவேண்டு மேனென்றாற் சத்ரூபராயிருக்கிற ஆத்மாவினிடத்திலே ஆரோபிக்கப்பட்டிருக்கிற பஞ்சகோசங்களை விஜாரித்துப்பார்த்து அதுகளை அசத்தென்று தள்ளி அப்பாலே அதுகளுக்கு அதிஷ்டானமாயிருக்கிற ஆத்மாவை அறியலாம் மற்றபடி யாரோபிதங்களாயிருக்கிற கோசங்களை விசாரியாமல் அதிஷ்டானமாயிருக்கிற ஆத்மாவை அடையப்படாது லோகத்திலே யெங்கேயாகிலும் ரச்சுவிலே யாரோபிக்கப்பட்ட சர்ப்பம் அசத்தானாலுஞ் சர்ப்பத்தை இன்னதென் றற்றுப்பார்த்து விசாரியாமல் ரச்சுவைக் கண்டபேருண்டோ ஆரோபிதசர்ப்பத்தை விஜாரித் ததிஷ்டான ரச்சுவையடையாத பேர்தானுண்டோ வில்லையே அப்படிப்போலே ஆரோபிதமான பஞ்சகோசங்களையும் முன் சிரவணத்தினாலே பரோக்ஷமாயறிந்திருக்கிறபடியினாலே தூலமாய்ச் சாமான்னியமாயறிந்திருக்கிறஅதுகளுடைய சொருபங்களைச் சூக்ஷமபுத்தியினாலே தானேவிஜாரித் தாராய்ந்துபார்த்து நன்றாய்க் கண்டநுபவித்து முன் குருவினாலேயுஞ் சாஸ்திரத்தினாலேயுங் கேட்டறிந்திருக்கிறதுகளைப் பிரத்தியக்ஷமாயிருக்கிற ஸ்தூலசரீரத்தை அன்னமயமானபடியினாலேஅன்னமயகோசமென் றெப்படி நன்றாயறியப்படுகிறதோ அப்படி எல்லாருக்குந்தெரியாமற் சூக்ஷமங்களாய்ப் பிராணமயாதிகளாயிருக்கிற நாலுகோசங்களையுங்குருசாஸ்திரங்களினாலே யறிந்திருக்கிற லக்ஷணங்களைப் பிடித்துக்கொண்டு நன்றாய்ப் பிரத்தியக்ஷமாய்ப் புத்தியினாலே கண்டநுபவித் தொன்றொன்றாய்த் தள்ளிஅப்பாற் கோசசாக்ஷியாய்ச் சூக்ஷமமாயிருக்கிற ஆத்மாவை விஜாரிக்கவேண்டும். (கஅ-கக)

இப்படிக் கோசங்களை விஜாரித்துத்தள்ளி அப்பால் ஆத்மா

வை விஜாரித்தால் விஜாரத்தினாலே ஆத்மா வெப்படித் தெரியுமென்றால் இந்த விஜாரமாகிற மனனத்திற் காவரணநாசமே காரியம் என்ன படியினாலே நிரந்தரம் அக்கோசங்களுக் கப்பாற்பட்டிருக்கிற ஆத்மாவைச் சிந்திக்கிறபோது யுக்தியினாலே அந்தவிசாரமானது அபானாவரணத்தைத் தகித்துப்போடும் எப்படியென்றால் ரச்சு சர்ப்பத்தை விஜாரித்தால் ரச்சுவைத் தெரியவொட்டாமல் மறைத்திருந்த ஆவரணம் எப்படிநஷ்டமோ அப்படிப்போலே கோசசாக்ஷியாயிருக்கிற ஆத்மாவை உற்றுவிஜாரித்தால் ஆத்மாவைக்காணோம் ஆத்மாத்தோணவில்லையென்று மறைத்துக்கொண்டிருந்த ஆவரணம் இன்னவிடமென்று காணாமற்போம் ஆவரணம் நஷ்டமானவுடனே சூரியனைமறைத்திருந்தமேகம் அப்பாலேபோனாற் சூரியனெப்படி ஸ்புடமாய்த்தெரியுமோ அப்படி ஆத்மா ஸ்புடமாய்த்தெரியுங் கோசசாக்ஷியாய் ஆத்மாத்தோணுவார் ஆகையினாலே விஜாரிக்கவேண்டும். (உ௦)

இப்படி யெவ்வளவுபரியந்தம் விஜாரிக்கிறதென்றால் நஷ்டமாய்ப்போன அபானாவரணந் திரும்பிவாராமலிருக்கிறதே மனனத்திற்கு அவதியென்றுசொல்லப்பட்டது ஆவரணந் திரும்பிவாராமலிருக்கிற பரியந்தம் மனனம்பண்ணவேண்டும். (உக)

நஷ்டமான ஆவரணந் திரும்பிவருமோவென்றால் வருமே ஏனென்றாற் றிரும்பிச் சமுசயம்வருகிறபடியினாலே வரும் ஆவரணம் போய் ஆத்மாவைக்கண்டுந் திரும்பிச் சமுசயமேதென்றாற் பஞ்சகோசங்களையும் விஜாரித்துத் தானன்றென்றுதள்ளி அப்பால் இவைகளுக்குச் சாக்ஷியாயிருக்கிற ஆத்மாவைக்காணுகிறபோதுஅந்தவாத்மாவினிடத்திலே யொன்றுமன்றியிலே ஆகாசத்தைக்காட்டிலுங் கோடிமடங்கு சூக்ஷமமாய்ச்சூனியமாய்க்கண்டபடியினாலே கோசங்களை

த்தள்ளினால் நாஞ் சூனியமாயன்றோ யிருவோமென்று பயம்வரும் ஏனென்றாற் சர்வாதீதமாயிருக்கிற ஆத்மாவினிடத்திலே பிரபஞ்சவியவகார கதைகளொன்றுமில்லாமல் அதிசூனியமாயிருக்கிறபடியினாலே அலவுகீகமாய்க்கண்டதுதான் ஆத்மாவோ அன்றோ இதுவே ஆத்மாவானால் யெப்படி நாமொன்றுமில்லாமற் போவோமென்று நிரம்ஸவஸ்துவைக்கண்டும் அதிலே விசுவாசமன்றியிலே அசம்பாவனை வருகிறபடியினாலே சமுசயம்வருமே ஆகையினாலே அசம்பாவனையினாலே ஆவரணந் திரும்பிவருமே ஆனபடியினாலே அசம்பாவனை போகிறநிமித்தமாய் மனனத்தைப் புனகப்புனகப் பண்ணவேண்டும் இந்த அர்த்தத்தை மனதிலேவைத்துக்கொண்டு வியாசரும் ஆவிர்த்திரசகிறுதுபதேசாதென்று சூத்திரம்பண்ணினார் சிரவணமனனாதிகளைத் திரும்பித்திரும்பி அப்பியாசிக்கச் சொன்னார். (உஉ-உங-உச)

இப்படி விசாரம்பண்ணினாற் பலமேதென்றால் புனப்புனக விசாரம்பண்ணி நன்றாய் ஆவரணம் நஷ்டமானா லப்போது அசம்பாவனாதிகளாயிருக்கிற வொருபிரதி பந்தமுமன்றியிலே நன்றாய்க் கரதலாமலகம்போலே அபரோக்ஷக்ஞானமுண்டாம் அதுவே பலம். ()

அபரோக்ஷக்ஞானமாவதேதென்றால் விகாரியாயிருக்கிற இது அகங்காரஞ் சாக்ஷியாயிருக்கிற இவர் ஆத்மாவென்று பிரித்து இது மேகம் இவர் சூரியரென்று வேறேபிரத்தியக்ஷமாய்க் காணுகிறாப்போலே ஆத்மாவகங்காரங்களை வேறாய்க்கண்டு இவரே ஆத்மாவென்று பிரத்தியக்ஷமா யறிகிறதே அபரோக்ஷக்ஞானமென்று சொல்லப்படும் இதுவே மனனத்திற்குப் பலம். (உசு)

சீடனைப்பார்த்துக் குரு சொல்லுகிறார் வாரும்பிள்ளாய் சுமதே யுனக்கு மனனலக்ஷணம் நன்றாய்ச் சொல்லப்பட்டதே நீயும் இந்தப்பிரகாரமாய் அவஸ்துக்களாயிருக்கிற பஞ்சகோசங்களை விஜாரி

த்துத்தள்ளி அப்பால் அதிசூக்ஷமமாயிருக்கிற ஆத்மவஸ்துவை அத்தியந்தஞ் சூக்ஷமபுத்தியினாலே அந்தர்முகனாய் விஜாரித்துப் பிரித்தறியென்று சொன்ன குருவைப்பார்த்துச் சீடன் சங்கிக்கிறான்.()

வாரும் ஏ குரோ விஜாரித்துப்பார்த்தாலும் இது கோசங்கள் இவர் ஆத்மாவென்று பிரத்தக்காய்ப் பஞ்சகோசங்களுக்கு வேறாய் இவர் ஆத்மாவென்று பிரத்தியக்ஷமாய் என் தெரியவில்லையென்றால் குரு சொல்லுகிறார் பிரத்தக்காய்த் தோணாததே அனாதியாயிருக்கிற அவிவேகமென்று சொல்லப்படும் அந்த அவிவேகம் எதனாலேவந்ததென்றால் முன்சொன்ன ஆவரணசத்தியினாலே வந்தது அதெப்படியென்றால் ஆத்மாகங்காரங்களிரண்டும் அன்னியோன்னிய விலக்ஷணங்களாய்ச் சுபாவமாய் வேறாயிருந்தாலும் இரண்டுகளையும் முன்சொன்ன ஆவரணமானது வேறாய்த் தெரியவொட்டாமலொன்றாய்த் தோற்றிவிக்கிறது அஃதெப்படிப்போலேயென்றால் ரச்சுசர்ப்பங்களிரண்டும் வேறானாலும் ரச்சுவை மறைத்துக்கொண்டு தோணவொட்டாமற் சர்ப்பமாய்த் தோணுகிறாப்போலே ஆத்மாவையும் ஆவரணம் மறைக்கிறபடியினாலே அகங்காரதர்மங்களாயிருக்கிற கர்த்துருத்துவாதிகள்மாத்திரந் தோணுகிறது ஆத்மாத்தோணவில்லை. ()

ஆகையினாலே பஞ்சகோசங்களையெல்லாம் விஜாரித்துப்பார்த் தநுபவித்து இவைகளெல்லாம் ஆத்மாவன்றென்றுதள்ளி அப்பால் இதுகளுடைய உற்பத்திநாசாதி விகாரங்களுக்குச் சாக்ஷியாய் நிருவிகாரியாயிருக்கிறவரைப் பார்த்தறி இவைகளுக்கு விலக்ஷணராய்ச் சாக்ஷியாய் எங்கேயிருக்கிறாரென்றால் ஞாதுருஞானஞேயங்களாகிற திரிபுடியுண்டே ஞாதாவாயறிகிறவனாயிருக்கிற கர்த்தாவும் ஞானமாயறிவாயிருக்கிற புத்தியும் ஞேயமாயறியப்படுகிறதுகளாயிருக்கிற விடயங்களுமான திரிபுடியுஞ் சாக்கிரசொப்பனங்களிலே யுண்

டாயிருக்கிறதையுஞ் சுழுத்தியிலே இல்லாமல் லயித்துப்போயிருக்கிற சாட்சியா அவத்தையும் எல்லாவற்றையும் பிரகாசித்துக்கொண்டு தாம் எப்போதும் ஏகரூபமா யெல்லாவற்றையுந் தோற்றிவிக்கிற நிருவிகார சைதன்னியமே சாக்ஷியாயிருக்கிற ஆத்மா இவரை விவேகித்தறியென்று குரு சொன்னார். (௨௯-௩௦-௩௧)

சீடன் சங்கிக்கிறான் பஞ்சகோசங்களை விஜாரித்துத் தள்ளச் சொன்னீரே அதுகளை ஆத்மாவன்றென்று தள்ளுகிறபோது அப்பாலொன்றுமில்லை சூனியமாத்திரம் மீருதேயொழிய வேறொன்றுங் காணோம் ஆத்மாவாவ தெங்கேயென்றுகேட்ட சீடனைப்பார்த்துக் குரு சொல்லுகிறார். (௩௨)

பஞ்சகோசங்களுக் கப்பா லொன்றுமில்லையென்று நீசொன்னது வார்த்தைசொல்ல யெனக்கு நாக்கில்லையென்று சொல்லுகிறது போலே நன்றாயிருந்தது ஏனென்றால் நாக்கில்லாமற்போனால் நாக்கில்லையென் றெப்படிச் சொல்லக்கூடாதோ அப்படிப்போலே யொன்றுமில்லையென்கிறதையும் அறிகிறவ னொருத்தனிருந்தன்றோ வொன்றுமில்லையென்று கண்டு சொல்லவேண்டும் இல்லாமற்போனால் ஒன்றுமில்லையென்று சொல்லாமலிருக்கவேண்டும் அப்படியன்றியிலே யொன்றுமில்லையென்று தோணிச்சொல்லுகிறபடியினாலே யொன்றுமில்லையென்கிறதைத்தோற்றிவிக்கிறவரா யிருக்கிறாரே ஆத்மா இப்படி யிருந்தால் ஏன்காணப்படவில்லை யென்றால் எல்லாத்தையுங் காணுகிறவரன்றியிலே அவரொன்றினாலேயுங் காணப்படுகிறவரன்று பின்னை யெப்படி அறிகிறதென்றால் யெல்லாத்தையுந் தான்றானே யொருசாதனமன்றியிலே தானே சொப்பிரகாசமா யறிகிறபடியினாலே யொன்றினாலே யறியப்படுகிறவரன்று தான்றானே யெல்லாத்தையும் அறிகிறவர் ஆத்மா ஆகையினாலே யொன்றுமில்லையென்கிறதை அறி

கிறவராய் எல்லாத்திற்கும் ஆந்தரராய்க் கேவல ஆகாசசித்துருபரா யொன்றினாலேயு மறியப்படாமல் நிரவயவராய் எல்லாத்தையு மறி கிற சித்துருபரா யிருக்கிறாரே. (௩௩-௩௪-௩௫)

ஒன்றினாலேயு மறியப்படாம லெல்லாத்தையு மறிகிறவராய் எப்படி யிருக்கிறாரென்றாற் பாவரூபங்களா யுண்டானதாய்த்தோணு கிற கோசங்களும் அதுகளைத்தள்ளின லொன்றுமில்லாமற் றோணுகி றசூனியமுஞ் சகலமுங் இன்னுந் தோணுகிறதெல்லாஞ் சடமேயானப டியினாலே காணுகிறவ னொருத்தனன்றியிலே தானே காணப்படாது ஒருத்தனாலே காணப்படுகிற தென்றறியவேண்டுங் காணுகிறவனில் லையென்றால் அப்போ தொன்றுங்காணமற்போமே அதெப்படிப்போ லே யென்றாற் கடாதிகளைக் காணுகிறவ னிருக்கிறபோது கடாதிகள் காணப்படுகிறதன்றியிலே காணுகிறவனில்லாமற் றானே யெப்படிக் காணப்படவில்லையோ அப்படிப்போலே சூனியத்தைக் காணுகிறவ ன் இருக்கிறபடியினாலே சூனியந்தோணுகிறது காணுகிறசாக்ஷி இல் லாவிட்டா லொன்று மில்லையென்று சூனியமெப்படித்தோணுஞ் சுய மாய்த் தோற்றறிவில்லாமற் சடமானபடியினாலே காணுகிற சாக்ஷிய ன்றியிலே தான்றானே தோணமாட்டாதே சடமானாலுந் தானேதோ ணுமென்றால் அப்போ சடங்களாயிருக்கிற கடாதிகளுங் காணுகிறவ னன்றியிலே தான்றுதானே தோணவேண்டும் அப்படிக் காணுதபடி யினாலே யொன்றுமில்லையென்று தோணுகிற சூனியமுஞ் சொதகா பானமில்லாதபடியினாலே தானே தோணமாட்டாது பின்னை யெப்ப டித்தோணுகிறதென்றால் அதற்கும் அதீதமாயிருக்கிற சாக்ஷியினாலே தோற்றுவிக்கப்படுகிறபடியினாலே தோணுகிறதென் றறியவேண்டும் அதெப்படிப்போலேயென்றாற் சொதகாப் பிரகாசமன்றியிலே அப்பி ரகாசங்களாயிருக்கிற மேகமுதலானதுகள் பூமியிலேயிருக்கிற கடாதி

களெல்லாந் தானேதோணுமல் இதுகளுக்கு அதிதமாய் வெகுயோச னைதூரத்திலேயிருந்துசொப்பிரகாசராய் விளங்குகிற சூரியனுலேபிர காசிக்கப்பட்டுக்கொண்டு சொட்சமாய் எப்படித் தோணுகிறதோ அப் படிப்போலே புத்திகற்பிதமாய் புத்திக்கிவெளியிலிருக்கிற சூனியமுத லான சகல திரிசியசமூகங்களுஞ் சொதகா சடமாய்த்தானே தோண மாட்டாதபடியினுலே இதுகளுக் கதிதமாய்ச் சொப்பிரகாசமாயிருக் கிற சித்தினுலே தோற்றுவிக்கப்பட்டுக்கொண்டு தோணுகிறது ஆ கையினுலே சூனியத்திற்கதிதமாய்ச் சூனியவிலக்ஷணராய்ச் சூனிய த்தையறிகிறவரா யிருக்கிற சாக்ஷியை யெல்லாத்தையும் அறிகிறவரா யொன்றினுலே அறியப்படாதவரா யிருக்கிற ஆத்மாவாக வறியலா மே ஆகையினுலெ நீயுஞ்சூக்ஷமபுத்தியினுலே ஆத்மாவை அறி.
(௩கூ-௩எ-௩அ-௩கூ-௪0-௪க-௪உ-௪௩)

முன்சொன்னபிரகாரமாய் ஆத்மசொரூபத்தைக் கரதலாமல கம்போலே காண்பிக்கிற குருவாக்கியத்தினுலே ஆத்மசொரூபத்தை ப் பிரத்தியக்ஷமாய்க்கண் டநுபவித்த சந்தோடத்தைச் சீடன் சொ ல்லுகிற பிரகாரம் அகோ ஏ குரோ ஆத்மசொரூபத்தைப் பிரத்தியக்ஷ மா யறிந்தேன் நன்றுய்க்கண்டேன் ஐயா ஆத்மா எப்படியிருக்கிறு ரென்றுற் சூனியமுதலான சர்வதிரிசியங்களுக்குஞ் சாக்ஷியாய்ச் சர் வத்தையு மறிகிற சித்துருபராய் அதிகெம்பீரராய் இவ்வளவு அவ்வ ளவு இன்னபடியென்று அறியப்படாமல் அகாதமாய் மனோபுத்தியா தி இந்திரியங்களுக்கும் அதிதராய் அசங்கராய் ஒன்றிலுமொட்டாம ல் நிராகாரமாய்த் தூலமுஞ் சூக்ஷமமும் அணுமகத்தும் வெளுப்புக் கறுப்பு முதலான வர்ணமும் இருட்டும் வெளிச்சமுதலானது மன்றி யிலே ஆகாசத்தைக்காட்டிலும் அத்தியந்தங் கேவலராய்ச் சுத்தராயி ருக்கிறுர் ஆத்மா அவரிடத்திலே யொருவிகார லேசமுமில்லை புத்திக் கிவெளியிலே வெகுதூரத்திலே விகாரிகளாயிருக்கிற பாவாபாவாதி

சகலபாவங்களுஞ் சிற்பிரகாசத்தினுலே தோணுகிறதன்றியிலே ஆத்மாவினிடத்திலே யொருபாவவிகாரங்களுமில்லை இல்லாவிட்டால் ஆத்மாவினிடத்திலே ஸ்தூலோகங் கிறுசோகமென்று தூலாதிவிகாரங்கள் தோணுவானே னென்கிறீரோ ஆவரணசத்திவசத்தினுலே யெல்லாருக்கும் ஆத்மசொருபத்தைத் தெரியவொட்டாமல் ஆவரணம்மறைக்கிறபடியினுலே ஆத்மாவைக்காணுமற் கோசங்களையே ஆத்மாவாய்க் கண்டுவருகிறபடியினுலே தூலாதிவிகாரங்கள் ஆத்மாவினிடத்திலே தோணுகிறது அவிவேகத்தினுலே சுபாவமா யொருவிகாரமுமில்லை அஃதெப்படிப்போலேயென்றல் ஆகாசங் கறுப்பாயிருக்கிறதென்று சுத்தமாயிருக்கிற ஆகாசத்திலே எப்படி நீலாதிவர்ணங்கள் அவிவேகத்தினுலே தோணுகிறதோ அப்படிப்போலே ஆத்மாவினிடத்திலே ஆவரணத்தினுலே விகாரிபோலே தோன்றினதன்றியிலே யொருக்காலும் விகாரியே அன் றெப்போதுஞ் சுத்தராயேயிருக்கிறர் இதோ பிரத்தியக்ஷமா யெப்போது மிருக்கிறர் ஒருக்காலில்லாமற்போகவில்லை அகோ ஆச்சரியமன்றே இது இதோஆத்மாத் தானுய் எப்போது மிருக்கிறதிலேயும் ஆத்மாவைக்காணுமென்று மகத்தாகிய ஒருவிருதாமோகம்வந்துதே யெப்படியானுல் மத்தியானத்திலே சூரியன் பிரகாசிக்கிறதிலே கோட்டானுக்கு விருதாவிலே இருட்டெப்படிவந்துதோ அப்படிப்போலே ஆத்மா சொப்பிரகாசர் இதோ ஸ்புரித்துக்கொண்டிருக்கிறதிலே நமக் கொருபிராந்தியினுலே ஆத்மாவைக் காணுமென்று ஓர் ஆவரணுந்தகாரம் வந்தது அகோ ஆச்சரியம் மத்தியானத்திலே இருட்டுண்டோ இதோ நித்தியப்பிரகாசராய் ஸ்புரிக்கிறஆத்மாவினிடத்திலேஆவரணமாவதேதுஎங்கேயிருந்துவந்துதுஅந்தகதையேது விருதாப்பிரமையினுலே ஆவரணமென்றுசொல்லுகிறதேயன்றியிலே ஆவரணமேயில்லை இல்லாமற்போனுல் ஆத்மாவைத் தெரியாமல் மறைப்பானேனென்றல் இல்லாமலிருந்தா

லும் விஜாரியாமலிருந்த அவிசாரத்தினுலே யுபஜீவித்துக்கொண் டிரு ந்தது ரச்சுவைச்சர்ப்பத்திலே விஜாரியாத அவிசாரமே ஆவரண மாய் ரச்சுவைத்தெரியாமல் மறைத்தாப்போல் ஆத்மாவையும் விஜா ரியாமற் றெரியவில்லையென்று மயங்கினதே ஆவரணமாச்சுது அந்த ஆவரண மிப்போ ஆத்மாவை யுற்றுப்பார்க்கிறபோ தெங்கே நஷ்ட மாய்ப்போனதோ ஆவரணத்தை இன்னவிடமென்று காணுமே இ தோ திருஷ்டாவாய் நித்தியப்பிரகாசராயிருக்கிற ஆத்மாத்தோணு கிறார் ஆச்சரியம் ஆச்சரியம் ஆத்மாவை உள்ளங்கை நெல்லிப்பழம்போ லே நன்றுயறிந்தேன் ஐயா ஏ குரோ ஏ பகவான் வாருமையா குரோ உம்முடைய பிரசாதத்தினுலே தன்னியனுனேன் கிருதார்த்தனுனே ன் கிருதகிருத்தியனுனேனென்று தன்னுடைய அநுபவத்தைச் சொ ல்லிச் சந்தோஷத்தைஅடைந்தான் சீடன். (சஜ-சரு)

ஆத்மசொருபத்தையறிந்து சந்தோஷித்த சீடனைப்பார்த்துக் குரு குசலப்பிரசினம்பண்ணிச்சந்தோஷப்படுகிருர் வாராய் ஏ சுமதே ஏ வித்துவான் ஏ சீடா தெய்வாதீனமாயறியவேண்டியவஸ்துவை அறி ந்தனையே தெய்வாதீனமாய் ஆவரணம் நஷ்டமானதோ யாதொருஆ வரணத்தினுலே வித்துவானுயிருக்கிறவன் முதல் ஆத்மாவை அறிய மாட்டாமற் பிரமிக்கிருனே அப்படிப்பட்ட வஸ்துவை அறிந்தனை யே வெகுஜன்மங்களிலே பண்ணின சுகிர்தங்களெல்லாம் இன்றைக் கன்றே பலித்தது எந்தச்சுகிர்தந்தான் பலித்ததோவுனக்கு நீயேதன் னியன் நீயேகிருதார்த்தன் நீயேகிருதகிருத்தியன் ஏனென்ருல்அறிய வேண்டியவஸ்துவை அறிந்தனையே லோகத்திலே அதிமகத்துக்களா யிருக்கிற கருமங்கள் விரதங்கள் தபசுகள் உபாசனைகள் யோகங்கள் முதலான சகல மஹாப்பிரயாசங்களும் இதுநிமித்தமன்றே அறிய வேண்டியதை அறிகிறநிமித்தமன்றே சமஸ்தபிரயாசங்களும் இத்த

ளையும் உனக்குப்பண்ணிமுடிந்ததே அனேகஞ் ஜன்மங்களிலே பண்ணியிருந்த இத்தனைபிரயாசமும் உனக்கின்றைக்கன்றோ பலித்தது யாதொருவஸ்துவை அறியாமலன்றோ சகலபிராணிகளுங் கரையில்லாத சமுசாரசமுத்திரத்திலே மூழ்கிக்கிடக்கிறாள் நீ சமுசாரபாரமாயிருக்கிற வஸ்துவை அறிந்தனையே சகல ஜனங்களும் யாதொருவஸ்துவை அறியாமலன்றோ தேகேந்திரியாதிகளே ஆத்மாவென்று பிரமிக்கிறாள் நீ அப்படிப்பட்ட ஆத்மவஸ்துவை அறிந்தனையே ஆகையினாலே யுனக்குச் சுமதியென்று பேரிட்டது யதார்த்தமேயாச்சுது நீ நல்லபுத்திமான் சந்தேகமில்லை தத்துவமசிவாக்கியத்திலே தொம்பதத்திற்கர்த்தம் நன்றாய்ச் சோதித்தறியப்பட்டு துன்றாலே சமுசயமில்லை இப்படிப்போலே நல்லபுத்தியினாலே தற்பதத்திற்கும் அர்த்தத்தைச் சோதித்து வாச்சியலக்ஷியங்களை அறியென்று குரு சொன்னார். (சஙச௭-சஅ-சகூ-ரு0)

தொம்பதத்திற்குப் பஞ்சகோசங்கள் வாச்சியம் சாக்ஷி லக்ஷியமென் றறியப்பட்டாப்போலே தற்பதத்திற்கு வாச்சியலக்ஷியங்களேதென்றாற் குரு சொல்லுகிறார் அத்திபாதிப்பிரியம் நாம ரூபமென் றைந்தம்ஸத்தோடே கூடியிருக்கும் பஞ்சகோசங்களுக்கும்பாகியமாயிருக்கிற கடாதிசகலபிரபஞ்சமும் பாகியப்பிரபஞ்சத்திலே அத்திபாதிமுதலான வைந்தம்ஸங்களும் ஏதென்றாற் கடமிருக்கிற தென்கிறபோ திருக்கிற அத்தியம்ஸமுங் கடந்தோணுகிறதென்கிறபோது பாநும்ஸமுங் கடம்பிரியமென்கிறபோது பிரியம்ஸமுங் கடமென்கிற நாமமுங் கடாகாரமாயிருக்கிறரூபமும் இப்படியைந்தம்ஸங் கடத்திலே கண்டாப்போலே சகலவிடயத்திலேயும் ஐந்தம்ஸங்களுமுண் டதிலே முந்தின அத்திபாதிப்பிரியமென்கிற மூன்றம்ஸங்களும்பிரமத்தினுடையசொரூபம் நாமரூபங்களென்கிற இரண்டம்ஸமு

ஞ் ஜகத்தினுடையசொரூபந் தற்பதத்திற்குப் பிரமசொரூபங்களாயி ருக்கிற அத்திபாதிப்பிரியங்களே லக்ஷியார்த்தஞ் ஜகத்துரூபங்களா யிருக்கிற நாமரூபங்களேவாச்சியார்த்தங் கோசங்களுக்குஞ் சாக்ஷிக் குஞ் சொதசித்தமாயிருக்கிற பேதத்தை ஆவரணசத்தி யெப்படிம றைக்கிறதோ அப்படி இங்கேயும் அத்திபாதிப்பிரியங்களும் நாமரூப ங்களும் வேருயிருந்தாலும்இரண்டுகளுக்குஞ் சொதசித்தமாயிருக்கிற பேதத்தை ஆவரணசத்திமறைக்கிற திங்கேயும் விஜாரிக்கிறபோ தா வரணம் நஷ்டமானவுடனே சச்சிதானந்தங்களும் நாமரூபங்களும் வேருய்த்தோணும். (ருக-ருஉ)

தத்துவம்பதங்களுக்கு வாச்சியார்த்தமும் லக்ஷயார்த்தமும் வேருயறிந்ததினுலே பிரயோசனமேதென்ருல் தத்துவமசியாதிகளா யிருக்கிற மஹாவாக்கியங்கள் பஞ்சகோசங்களுக் கன்னியராய்த் தொ ம்பதத்திற்கு லக்ஷியார்த்தமாயிருக்கிற சாக்ஷிக்கும் நாமரூபங்களுக் கன்னியமாய்த் தற்பதலக்ஷியார்த்தமாயிருக்கிற பிரமத்திற்கும் ஐயி க்கியத்தைச்சொல்லுகிறதுகள் வாச்சியார்த்தங்களாயிருக்கிற கோச ங்களுக்கும் நாமரூபங்களுக்கும் ஐயிக்கியஞ்சொல்லவில்லை ஆகையி னுலே கோசங்களும் நாமரூபங்களும் மாயாகாரியங்கள் சாக்ஷிபிரம ங்கள் இரண்டு மொன்றென்றறிகிறதே பிரயோசனஞ் சாக்ஷிப்பிரம ங்களிரண்டு மெப்படியொன்ருமென்ருல் இரண்டுஞ் சச்சிதானந்த சொரூபங்களாயிருக்கிறபடியினுலே இரண்டுமொன்ருகலாமே அதெ ப்படிப்போலேயென்ருற் கடாகாசமும் மஹாகாசமும் ஏகலக்ஷணமா யிருக்கிறபடியினுலே இரண்டாகாசமும் எப்படியொன்றுதானேயோ அப்படிப்போலே சாக்ஷியும்பிரமமுஞ் சச்சிதானந்தரூபங்களா யேகல க்ஷணமாயிருக்கிறபடியினுலே இரண்டுமொன்றுதானே கடாகாசமே மஹாகாசம் மஹாகாசமே கடாகாசமென் றறிகிறதுப்போலே சாக்ஷி யேபிரமம் பிரமமேசாக்ஷியென்று நன்ருயறியலாமே. (ருங-ருச)

சாக்ஷியேபிரமமென்று முன்சொன்ன பிரகாரமாய்ப் பஞ்ச கோசசாக்ஷியாயிருக்கிற ஆத்மாவுக் ககண்டபரிபூரணமாயிருக்கிற பிரமத்துவஞ் சித்தித்தளவி லகண்டபரிபூரணத்துவமுஞ் சித்தித்ததே ஆகையினாலே இப்படிச்சாக்ஷியே பிரமமென்றறிகிறபோ தாத்மாவொருத்தராய் அகண்டேகரசாயிருக்கிறாரென்று நன்றாயறியலாமே இப்படியறிந்ததற்குப் பலமேதென்றால் அநிர்வசநீயங்களாய் ஆரோபிதங்களாய் இருக்கிற கோசங்களையும்நாமரூபங்களையும் மாயாகாரியங்களென் றுபேக்ஷித்துப்போட்டுச்சர்வாதிஷ்டானரூபமாய்ச் சச்சிதானந்தரூபராயிருக்கிற பிரமமே நாமென் றப்பியாசித்து நாமேபிரமமென் றநுபவிக்கலாமே இப்படி நாமேபிரமமென் றறிந்து பிரமானந்தத்தை யநுபவிக்கக்கடவா ளிப்படி மனனப்பிரகரணஞ் சொல்லப்பட்டது. (ருரு-ருசு)

இந்த மன்னப்பிரகரணத்தை யாதாமொருவித்துவான் பராமரிசித்தறிகிறானோ அவன் றன்னைச்சச்சிதானந்தப் பிரமசொரூபமாக அறிந் தநுபவிப்பன். (ருஎ)

*பரிபூரண சொபாவசொரூப சுயம்பிரகாசப் பிரஞ்ஞையே தத்துவமாகி சற்குருவென் றறியும்படி குருமயம்.

---

*இச்சுலோகம் சிலப்பிரதிகளில் இப்பிரகரண ஆதியில் உளவாயும் சிலப்பிரதிகளில் இலவாயும் இருக்கின்றமையால் இப்பிரகரண அந்தத்தில் வைக்கப்பட்டது.

ஐந்தாவது-மனனப்பிரகரணம் முற்றிற்று.

# ஆருவது - வாசனாக்ஷயப்பிரகரணம்.

இப்படி ஐந்துப்பிரகரணமாகிய அத்தியாரோப அபவாத சாதன சிரவண மனனமாகிய வைந்துஞ்சொல்லி இனிவாசனாக்ஷயப் பிரகரணஞ் சொல்லப்போகிறது மனனத்தினாலே ஆத்மசொரூபத் தை அபரோக்ஷமாயறிந்த சீடனைப்பார்த்துக் குருவானவர் இதையு முபதேசிக்கிருர். (க)

வாராய் ஏ சுமதே யுனக்குச் சாஸ்திரவிசாரம்முடிந்தது விஞா ரித்ததுபோரும் இனிமேல் கர்த்தவ்வியமாயிருக்கிற நிதித்தியாசனத் தைப்பண்ணு மனனம்பண்ணிமுடிந்தவனுக்கு நிதித்தியாசனம் பண் ணச்சொல்லி ஆத்மாவாரே சுரோதவ்வியோ மந்தவ்வியோ நிதித்தி யாசிதவ்விய வென்கிற சுருதியானது விதிக்கிறது ஆகையினுலே நீயுஞ் சாஸ்திர விசாரங்களையெல்லாம் விட்டுவிடு சாஸ்திரவிசாரத் தை விடலாமோவென்ருல் விடலாமே எதினாலேயென்ருல் விசாரத் தினாலே யறியவேண்டியவஸ்த்துவை நீ நன்ருயறிந்தனையே ஆகையி னாலே சாஸ்திரங்களையெல்லாந் தூரத்திலேவிட்டுப்போடு அறியவே ண்டியவஸ்த்துவை யறிந்தாலும் மரணபரியந்தம் விஞாரிக்கச்சொல்லி யிருக்கிறபடியினாலே சாஸ்திரங்களை விடுகிறதெப்படியென்று சங் கித்தால் அப்படிச்சங்கிக்கக்கூடாது ஏனென்ருற் சாஸ்திரங்களினா லே அறியவேண்டினதாய்ச் சகலவேதாந்தங்களுக்குஞ் சாரமாயிருக் கிறவஸ்துவை அறிந்துவிட்டால் அறிகிறதற்குச் சாதனமாயிருக்கிற வேதாந்தசாஸ்திரங்களினாலேதான் வியற்தமாயிருக்கிற விசாரங்களி னாலேதான் பிரயோசனமே தில்லையே ஆகையினாலே சகலவேதாந் தங்களையு நன்ருய்த் தூரத்திலேவிடவேண்டுமே விட்டுப்போட்டுச் சார்வதாப் பிரமத்தியானத்தைத்தானே பண்ணவேண்டும் இப்படிச் சொன்னாவிதற்குப்பிரமாணமேதென்ருற் சுருதிகளே பிரமாணம்(உ)

சுருதி யெப்படிச்சொல்லுகிறதென்றால் முமுக்ஷுவாயிருக்கிறவன் சகலவேதாந்தசாஸ்திரங்களையுங் குருவினிடத்திலேயின்றும் அப்பியாசித்துப் புனப்புனக விஜாரித்துப் பரமமாயிருக்கிற பிரமத்தை அபரோக்ஷமாயறிந்தபிற்பாடு சாஸ்திரங்களையும் பிணஞ்சுடுதடிபோலே விட்டுப்போடக் கடவன் முமுக்ஷுவானவன் வேதாந்தகிரந்தங்களை அப்பியாசித்து ஆத்மாவைப் பரோக்ஷமாயறிந்தபிற்பாடு விசாரம்பண்ணி அபரோக்ஷமாயறிந்துகொண்டு தானியார்த்தியாயிருக்கிறபுருடன் சாரமாயிருக்கிற தானியங்களைக் கிரகித்துக்கொண்டு நிச்சாரமாயிருக்கிற வைக்கோலை யெறிந்துபோடுகிறாப்போலே சாரமாயிருக்கிறவஸ்துவை யறிந்துகொண்டு நிச்சாரமாயிருக்கிற சாஸ்திரகிரந்தங்களை யெல்லாம் நிச்சேஷமா யெறிந்துபோடக்கடவன் முமுக்ஷுவானவன் சாஸ்திரசாரமாயிருக்கிற வஸ்துவைமாத்திரமறிந்து அதைமாத்திரந் தியானம்பண்ணிக்கொண்டு இருக்கவேண்டும் நானாவிதங்களாய் வெகுவாயிருக்கிற வேதாந்தசப்தங்களை வாயினாலேசொல்லவு மாகாது மனதிலேயும்நினைக்கவு மாகாது ஏனென்றால் வாயினாலே யெத்தனைநாட் சொல்லிக்கொண்டிருந்தாலும் வாய்க்கிளைப்புமாத்திரம் நினைத்தாலும் மனதுக்கிளைப்பு மாத்திரமேயொழியப் பிரயோசனமில்லை ஆகையினாலே அறியவேண்டிய வஸ்துவொன்றையும் அறியுங்கோள் அன்னியமாயிருக்கிற சகலசாஸ்திரவாக்குக்களையெல்லாம் விட்டுவிடுங்கோளென்றும் பிராக்கியனாயிருக்கிற முமுக்ஷுவானவன் வாக்கு மன திரண்டுகளையும் அடக்கிப் பிரமத்தியானத்தைச் சார்வதாப் பண்ணவேண்டுமென்றும் வெகுவாய்க் கோஷிக்கிற சுருதிகளெல்லாம் பிரமாணம். (௩-௪-௫-௬)

ஏ சுமதே அறியவேண்டியவஸ்துவை யறிந்த நீயும் இத்தனைநாட் பண்ணின சாஸ்திரவாசனையை விட்டுவிடு சாஸ்திரவாசனையா

வதேதென்றால் வேதாந்தசாஸ்திரங்களைப் படிக்க அதனர்த்தங்களை யறிய நெட்டுருப்பண்ண மறவாமல் நினைத் தனுசந்தானம்பண்ண இதுகளிலே மனது பிரவருத்திக்கிறதே சாஸ்திரவாசனையென்று சொல்லப்படும் இந்தவாசனை பிரமத்தியானத்திற்கு விரோதமானபடியினாலே பிராஞ்ஞனாயிருக்கிறவன் இதைச் சர்வப்பிரகாரத்தினாலேயும் விடவேண்டும் பின்பு லோகவாசனையினாலே மனது போகாமல் லோகவாசனையும் விடவேண்டும். (எ)

லோகவாசனையாவதேதென்றால் இது நம்முடையதேசம் நம்முடையகுலம் நம்முடைய ஆசாரமென்றும் இதுகளைப் பிரத்தியான் தூஷித்தால் நம்முடைய தேசத்தைத் தூஷிக்கிறான் நம்முடையகுலத்தைத் தூஷிக்கிறான் நம்முடையஆசாரத்தைத்தூஷிக்கிறானென்றதிலே ரோஷத்தினாலே தன்னுடைய குலாசாராதிகளிலே தூஷணபூஷணங்களினாலே வருகிற ஆக்கிரகமே லோகவாசனையென்று சொல்லப்படும் இந்தலோகவாசனையையும் விட்டுப்போட்டுத் தேகவாசனையையும் விடவேண்டும். (அ)

தேகவாசனையாவதேதென்றால் நமக்கித்தனைவயதாச்சு நல்லவயதாயிருக்கிறோம் இன்னந்தீர்க்காயுசாயிருக்கவேண்டுமென்றும் ஆரோக்கியமாயிருக்கிறோமென்றுஞ் சுகமாய் ஆரோக்கியமாயிருக்கவேண்டுமென்றும் நன்றாயழகாயிருக்கிறோமென்றும் நன்றாயழகாயிருக்கவேண்டுமென்றும் யேவமாதிகளாய்த் தேகத்தைத்தொட்டுவருகிற சிந்தனையே தேகவாசனையென்று சொல்லப்படும் இந்தலோகவாசனை தேகவாசனைகள் மனத்திற்கு விக்ஷேபங்களைக் கொடுக்கிறபடியினாலே பிரமத்தியானத்திற்கு விரோதிகள் ஆகையினாலே இதுகளையெல்லாஞ் சகலவிடயங்களும் அநித்தியமென்கிற விவேகத்தினாலே விடவேண்டும் பின்பு போகவாசனைகளை விடவேண்டும். (கூ-க0)

போகவாசனைகளாவ தேதென்றால் இதுநல்லது நமக்குவேண்டும் இதுவாகாது நமக்குவேண்டாம் இதுகிடைத்த தினிமேல் நமக் ககப்பட வேண்டுமென்கிறபுத்தியே போகவாசனை இதை எதினாலேவிடலாமென்றால் சகலவிடயங்களும் வாந்தாசனமூத்திரபுருஷங்கள்போலே கண்டுவருகிற வயிராக்கியவாசனையினாலே போகவாசனைகளை விடவேண்டுஞ் சகல போகவாசனைகளையுஞ் ஜெயிக்கிறதற்கு வைராக்கியமே பரமமாயிருக்கிற உபாயமானபடியினாலே போகவாசனைகளை விட்டுக் காமாதிவாசனைகளையும் விடவேண்டும். (கக-கஉ)

காமக்குரோதாதிவாசனைகளை யெதினாலே விடுகிறதென்றால் மயித்திரி கருணை முதிதா வுபேக்ஷா வாசனாப்பியாசத்தினாலே காமாதிவாசனைகளை விட்டுப்போட்டுச் சத்தாதிவாசனைகளையும் விடவேண்டுஞ் சத்தாதிவாசனையாவ தேதென்றாற் சுரோத்திராதி ஞானேந்திரியங்களெந்துஞ் சத்தாதிவிடயங்களிலே சதாவோடுகிறதே சத்தாதிவாசனை இதை எதினாலேவிடவேண்டுமென்றால் இந்திரியங்களை நிரோதம்பண்ணிச் சமதமாதி வாசனாப்பியாசத்தினாலே விடவேண்டும் அதையும் விட்டபிறகு சங்கவாசனையும் விடவேண்டும். (கங)

சங்கவாசனையாவதேதென்றால் இந்திரியங்களைச் சத்தாதி விடயங்களிலேபோகாமல் நிறுத்தினாலும் மனதான துள்ளேயிருந்துகொண்டு சர்வகாலமும் அதென்று மிதென்று மிப்படிப்பட்டதென்றும் அப்படிப்பட்டதென்று மிப்படியென்று மப்படியென்று மெதையாகிலும்நினைத்துநினைத்ததுகளிலேசங்கத்தை யடைகிறபடியினாலே மனதிற்குப் பாஹ்யவிடயங்களைச் சார்வதா நினைத் தெண்ணுகிறதே சங்கவாசனையென்று சொல்லப்படும் இதை யெதினாலே விடுகிறதென்றாற் சார்வதா வியர்த்தமாய் அதுவிதுவென்றெண்ணுகிற மனோ

ராச்சியத்தினாலே பிரயோசனமேது போருமென் றொன்றையும் நினையாம லொழிகிற உபரதியாகிற வாசனுப்பியாசத்தினாலே சங்க வாசனையை விடவேண்டும். (கச-கரு)

இப்படிப் பூர்வோத்தப்பிரகாரமாய்ப் பூர்வஞ்சொன்ன வாசனைகளெல்லாம் பூர்வோத்த சாதனங்களினாலே விட்டுப்போட்டு நிச்சேஷமாய்ப் பிற்பாடு மஹா அனத்தப்பிறதையாயிருக்கிற விபரீத வாசனையையும் புருடயத்தினப் பிரயாசத்தினாலே விடவேண்டும்.()

விபரீதவாசனையாவ தேதென்றால் அனாத்மாவாயிருக்கிற தேகத்திலே நானென் றாத்மபுத்தியைப் பண்ணி அனாதிகாலத்தைத் தொட்டுப் பழகினவாசனையே விபரீதவாசனை இந்தவாசனை அனாதியானபடியினாலே திரும்பியும் அடிக்கடிவருகிறபடியினாலே இதைப் பிரமாப்பியாசமாகிற வாசனையினாலே விடவேண்டுமேயன்றியிலே பின்னை யொன்றினாலேயும் விடப்படாது. (கஎ)

பிரமாப்பியாச வாசனையாவ தேதென்றால் தேகேந்திரியாதிகள் நாமன்று தேகாதிசடங்களுக்குச் சாக்ஷியாயிருக்கிற பரமாத்மாவேநாமென் றிப்படி நிரந்தரந் தத்துவபாவனை பண்ணுகிறதே பிரமாப்பியாசம் இப்படி யேகாந்தத்திலேயிருந்து சிந்திக்க இரண்டாம் பேர்வந்தாலுந் தத்துவவார்த்தையைத்தானே சொல்ல அதைத்தானே அன்னியோன்னியம் போதிக்க இப்படி வாக்கினாலும் மனதினாலு மொன்றையும் நினையாமற் பிரமத்தியானத்திலேதானே சார்வகாலமு மொருப்பட்டுக்கொண்டிருக்கிறதே பிரமாப்பியாசமென்று சொல்லுவாள் வித்துவாமிஷாள் இப்படிச் சாக்ஷித்துவ வாசனுப்பியாசத்தினாலே தேகத்திலே நானென்கிற அகந்தாவாசனையை விட்டுப்போட்டுப் பின்பு மமதாவாசனையையும் விடவேண்டும். (கஅ-ககூ-உ0)

மமதாவாசனையாவ தேதென்றால் தேகத்திலேயும் தேகத்திற்குபயோகியாயிருக்கிற வத்திராகாராதிகளிலேயும் வர்ணாச்சிரமாசாரங்கள் முதலான தேகவியவகாரங்களிலேயும் என்னதென்கிற அபிமானமே மமதாவாசனையென்று சொல்லப்படும் இதை யெதினாலே விடலாமென்றால் தத்துவவாசனையினாலே விடவேண்டுந் தத்துவவாசனையாவ தேதென்றால் தேகேந்திரியாதிகள் தேகோபயோகியாயிருக்கிற போகங்கள் வர்ணாச்சிரமாதி வியவகாரங்களெல்லாஞ் சின்மாத்திரமாயிருக்கிற நம்மிடத்திலே மாயையினாலே கற்பிதங்கள் சுத்தியில் ரசிதம்போலவும் சுவர்ணத்திலே கடகமகுடாதிபோலவும் கானலிற் ஜலம்போலவும் ஆகாசத்திலே நீலாதிவர்ணங்கள்போலவும் சமுத்திரத்திலே அலைமுதலானதுகள்போலவும் மித்தியாபூதங்களாய்க் கற்பிக்கப்பட்டமாத்திரமேயொழிய வுண்மையா யொன்றும் நம்மைத்தவிர அன்னியமன்றென்கிற பாவனையே தத்துவவாசனை இதனாலே மமதாவாசனையைவிட்டுப் பின்பு பேதவாசனையையும் விடவேண்டும். (உக-உஉ)

பேதவாசனையாவ தேதென்றால் நாஞ் சகலத்திற்கும் சாக்ஷியென்றுந் தன்னாலே யறியப்படுகிற சடங்களாய் மாயாமயங்களாயிருக்கிறது ஜகத்துக்களென்றுஞ் ஜீவாளென்றுஞ் சீடனென்றுங் குருவென்றும் ஈசுரனென்றும் நானாவிதபேதங்களாய்த் தோணுகிறதே பேதவாசனை இதை எதினாலேவிடுகிறதென்றால் அத்தொய்தவாசனையினாலே விடவேண்டும் அத்தொய்தவாசனையாவ தேதென்றாற் சத்தியமித்தையென்கிறபேதபுத்தியன்றியிலே மாயாதற்காரியங்களன்றியிலே நிர்மலராய்ச் சஜாதிய விஜாதீய ஸ்வதகபேத சூனியராய்ச் சச்சிதானந்தகனரா யொருகற்பனையுமன்றியிலே அத்தோயதரா யிருக்கிறாரென்று நிரந்தர நிர்விகற்பசமாதி அப்பியாசத்தினாலே யொருபேதப்பிரதீதியுமன்றியிலே அத்தொய்தப் பிரமமாத்திரமா யநுபவிக்கி

றதே அத்தொய்தவாசனை அதினாலே பேதவாசனையை நிச்சேஷமாய் வெகுதூரத்திலே விட்டுப்போட்டுப் பின்பு அந்த அத்தொய்தவாசனையையும் விடவேண்டும். (உரு-உச-உரு)

அத்தொய்தவாசனையையும் எதினாலே விடுகிறதென்றால் அத்தொய்தமாயிருக்கிறே மென்கிறபாவனையுந் தொய்தமுமன்றியிலே அத்தொய்தமுமன்றியிலே வாக்குமனதிற் கெட்டாததாயிருக்கிற வஸ்துவாய்நின்று பழகிற அப்பியாசத்தினாலே அத்தொய்தவாசனையையும் விட்டு வொருவாசனையுமன்றியிலே நிர்வாசனையாய்ச் சுகியாகவேண்டுமேயன்றியிலே மற்றபடி முக்திச்சுகமில்லை ஆகையினாலே சொன்னபிரகாரமாய்ச் சகலவாசனையும் நிச்சேஷமாய் விட்டால்அப்போ மனதானது *நிர்வாசனமயமாய் உண்டென்கிறதுமன்றியிலே இல்லையென்கிறதுமன்றியிலே யொருகற்பனையுமன்றியிலே வாக்குமனதிற் கெட்டப்படாத வஸ்துமாத்திரமாகிவிடும் இப்படி நிர்விகற்பமாய் *நிர்வாசனமயமாயிருக்கிற மனோநிட்டையே சாக்ஷாத்காரமென்றுஞ் ஜீவன்முக்தியென்றுஞ் சொல்லப்படும். (உகூ-உஎ)

இப்படியிருக்கிற பிரமசாக்ஷாத்காரம் யெவ்வளவுபரியந்தந் திடமாய் எப்போது அநுபவிக்கப்படுகிறதோ அவ்வளவுபரியந்தம் அபரோக்ஷக்ஞானம்வந்தாலுஞ் சகலவாசனாக்ஷயமாய் ஜீவன்முக்தி சாக்ஷாத்காரஞ் சித்திக்கிறமட்டும் முன்சொன்ன சாந்தியாதி சாதனங்களோடே கூடிக்கொண்டு நிரந்தரம் பிரமாப்பியாசம் பண்ணவேண்டுமென் றிப்படி வாசனாக்ஷயப் பிரகரணஞ் சொல்லப்பட்டது. (உஅ)

ஆறுவது-வாசனாக்ஷயப்பிரகரணம் முற்றிற்று.

---

* நிர்வாசனமா யென்றும் பாடம்.

# ஏழாவது - சாக்ஷாத்காரபிரகரணம்.

மூந்தினபிரகரணத்திலே அபரோக்ஷக்ஞானம்வந்தாலும் வாசனக்ஷயம்பண்ணிப் பிற்பாடு சாக்ஷாத்காரஞ் சித்திக்கவேண்டுமென்று சொல்லி இந்தப்பிரகரணத்திலே பிரமசாக்ஷாத்காரத்தை யுபதேசிக்கிறார் குரு ஏ சுமதே வாராய் சீடா விசாரத்தினாலே ஆத்மதத்துவத்தை அபரோக்ஷமாயறிந்த நீயும் பிரமசாக்ஷத்காரஞ் சித்திக்கிறநிமித்தமாய் நிதித்தியாசனத்தைச் சர்வதாப் பண்ணென்றுசொன்ன குருவைப்பார்த்துச் சீடன் சங்கிக்கிறான். (க)

வாரீர் ஏ குரோ விசாரத்தினாலே அபரோக்ஷக்ஞானஞ் சித்தித்துக்கிருதகிருத்தியனாயிருக்கிற எனக்கு இன்னங்கர்த்தவ்வியமாய்நிதித்தியாசனமாவ தேது அதினாலேதான் பிரயோசனமேதென்று சீடன் கேட்டான். (உ)

குரு சொல்லுகிறார் மனனத்தினாலேதானே ஆத்மதத்துவத்தைப்பிரத்தியக்ஷமாய் நன்றாயறிந்தாலும் நிதித்தியாசனம்பண்ணமற் பிரம சாக்ஷாத்காரம் வாரா தாகையினாலே அகம்பிரமாஸ்மியென்கிற வாக்கியார்த்தமாகிற பிரம சாக்ஷாத்காரத்திற்குச் சாதனமாயிருக்கிற நிதித்தியாசனத்தைப் பண்ணென்று குரு சொன்னார், (ஙு-ச)

சீடன் சங்கிக்கிறான் பிரமசாக்ஷாத்காரஞ் சித்திக்கிற நிமித்தியமாய் நிதித்தியாசனம்பண்ணச் சொன்னீரே அது தேவைஇல்லை ஏனென்றால் மஹாவாக்கிய விசாரத்தினாலேதானே பிரமசாக்ஷாத்காரஞ் சித்தித்துவிட்டதேயென்று சங்கித்தவனைப்பார்த்துக் குரு சொல்லுகிறார் வாக்கியவிசாரத்தினாலேதானே சாக்ஷாத்காரஞ் சித்

திக்குமென்று சொல்லுகிருயானுல் அல்லவென் ருர்தான்சொல்லு வாள் ஒருத்தருஞ் சொல்லாள் வாக்கியவிசாரத்திஞலே சாக்ஷாத் காரஞ் சித்திக்குமென்கிறதிலே சந்தேகமில்லை சித்தந்தான் ஆனு லுந் தத்துவமசியாதி மஹாவாக்கியங்க ளாருக்குப் பிரமத்தோடே ஐக்கியமாகிற சாக்ஷாத்காரத்தைச் சொல்லுகிறதென்று விஜாரிக் கிறபோது தொம்பதத்திற்கு லக்ஷியார்த்தமாய்ப் பஞ்சகோசங்களுக் குஞ் சாக்ஷியாயிருக்கிற சாக்ஷிக்குத் தற்பதலக்ஷியார்த்தமாயிருக்கிற பிரமத்தோடே ஐக்கியத்தைச் சொல்லுகிறதுகளேயன்றியிலே வா ச்சியார்த்தமாயிருக்கிற ஜீவனுக்குப் பிரமத்தோடே ஐக்கியஞ் சொ ல்லவில்லை ஆகையினுலே சாக்ஷிக்கிப் பிரமசாக்ஷாத்காரம் விசாரத்தி ஞலே சித்தித்தது சந்தேகம் லேசமுமில்லை சித்தம் வாக்கியவிசார த்திஞலே சாக்ஷிக்கிப் பிரமசாக்ஷாத்காரஞ் சித்தித்ததுகொண்டு அதி ஞலே யுனக்குப் பிரயோசன மேதொன்றுமில்லை. (ரு-சு)

வாக்கியவிசாரத்திஞலே சாக்ஷியேபிரமம் பிரமமேசாக்ஷியெ ன்று சாக்ஷிக்குப்பிரமத்துவஞ்சித்தித்ததிஞலே யுனக்குப் பிரயோச ன மேதென் றெப்படிச் சொல்லுவீர் பிரயோசனமிருக்கிறதே ஏதெ ன்ருல் முன் இப்படி யறியாதவனுக்கு இப்போ விசாரத்திஞலே சாக்ஷியேபிரமமென்று ஜீவாத்மாபரமாத்மாவயிக்கிய ஞானஞ் சித் சித்ததே ஆகையினுலே இப்படி யறிகிறதே பிரயோசனமென்று சொன்ன சிடனைக்குறித்துக் குருசொல்லுகிருர் மஹாவாக்கிய விசா ரத்திஞலே சாக்ஷியேபிரமம் அகண்டபரிபூரணப்பிரமமே சாக்ஷியெ ன் றறிகிறஞானம் நன்ருய்ச் சித்தித்தது சந்தேகமில்லை அதிஞலே தா னுனக்குப் பிரயோசன மேதொன்றுமில்லை அஃதெப்படிப்போ லேயென்ருற் சக்கரவர்த்தியாயிருக்கிற ராஜாவே சகலமண்டலத்திற் கும் அதிபதியாயிருக்கிற சாம்பிராட்டென் றறியாதவனுக்குச் சக் கரவர்த்திசாம்பிராட்டென் றறிகிறவாக்கிய விசாரத்திஞலே யொரு

கோட்டையிலேயிருக்கிற இந்தச் சக்கரவர்த்திராஜாவே அகண்டபூமண்டல சாம்பிராக்ஷியாதிபதியென்று அகண்டபூமண்டல சாம்ராக்ஷியத்திற்கு அதிபதியாயிருக்கிறவனே இந்தக் கோட்டையிலேயிருக்கிற சக்கரவர்த்தி ராஜாவென்றறிந்ததினாலேபிச்சைவாங்குகிறவனுக்கெப்படிப் பிரயோசனமில்லையோ அப்படிப்போலே சாக்ஷியே பிரமமென் றறிந்தவுனக்குப் பிரயோசனமில்லையே. (எ)

வாக்கியவிசாரத்தினாலே சாக்ஷியேபிரமமென் றறிந்தபிற்பாடன்றோ சாக்ஷிக்குப்பிரமத்துவஞ் சித்தித்தது அதற்குமுன்னே இல்லையே ஆகையினாலே பிரயோசனமுண் டிப்படியறிந்ததினாலேயென்று சொல்லுகிறாயோ அப்படிக்கூடாது ஏனென்றால் நீ விசாரம்பண்ணிச் சாக்ஷியேபிரமமென் றறிகிறதற்குமுன்னுஞ் சாக்ஷிக்குப்பிரமத்துவமுண்டு எப்போதுஞ் சாக்ஷியானவர் பிரமமாகத்தானே இருக்கிறாரேயொழிய இப்போ புதிதாய் நீயறிந்ததினாலே பிரமமாகவில்லையே எப்படியானாற் கோட்டைக்குள்ளே யிருக்கிறராஜாவே பூமண்டலாதிபதியென்று நீ யறிகிறதற்குமுன்னுங் கோட்டைக்கதிபதியாயிருக்கிற ராஜாவுக்குப் பூமண்டலசாம்பிராக்ஷியாதிபதித்துவ முண்டே. நீயறிந்தாலு மறியாவிட்டாலு மெப்போதுஞ் சாம்பிராக்ஷிய மிருக்கிறாப்போலே சாக்ஷிக்கு நீயறிந்தாலு மறியாவிட்டாலும் எப்போதும் பிரமத்துவமுண்டே சந்தேகமில்லை ஆகையினாலே இப்போதறிந்தபிற்பாடு விசேஷமேது சொல் ஒன்றுமில்லை. (அ)

அறிந்தபிற்பாடு விசேஷமேனில்லை யுண்டே யேதென்றால் தொம்பதலக்ஷியார்த்தமாயிருக்கிற சாக்ஷியேபிரமமென்று தத்துவமசியாதிவாக்கியங்களினாலே சாக்ஷிக்குப்பிரமத்துவ மறிந்தபிற்பாடு அகம்பிரமாஸ்மியென்கிற வாக்கியார்த்தஞானத்தினாலே நாமே யந்த அகண்டபரிபூரணப்பிரமமென்றறிந்து நானே பிரமமென்று பிரம

சாக்ஷாத்காரம் வந்துதே ஆகையினாலே முன் சாக்ஷியேபிரமமென்றறியாதவெனக்குச் சாக்ஷாத்கார மில்லாமலிருந்துதே இப்போ தறிந்தபிற்பாடு பிரமசாக்ஷாத்காரம் விசேஷமாச்சுதென்றுசொன்ன சீடனைக்குறித்துக் குருசொல்லுகிறார் இப்போது பிரமசாக்ஷாத்காரம் வந்துதென்று சொன்னையே அதெப்படிக்கூடுங் கூடா தேனென்றால் அகம்பிரமாஸ்மியென்கிற வாக்கியத்தினாலே நான்பிரமமென் றறிகிறபோது நானென்கிற ஜீவன் விகாரியானபடியினாலே விகாரியாயிருக்கிற அகங்காரி நான்பிரமமென் றெப்படி அறிவன் அறியக்கூடாது எப்படியானால் தாரித்திரனாயிருக்கிறவன் நான் ராஜாவென்றெப்படியறியக்கூடாதோ அப்படி விகாரியானஜீவனுக்கும் நிருவிகாரப்பிரமம் நானென்றறியக்கூடாது. (க)

சீடன் சங்கை விகாரியாயிருக்கிற ஜீவன் நான்பிரமமென்றறியக்கூடாதென்று சொன்னீரே அது நிச்சயந்தான் சந்தேகமில்லை ஆனாலும் நானென்கிற ஜீவனாரென்று விஜாரிக்கிறபோது சாக்ஷியாய் நிருவிகாரியாயிருக்கிற ஆத்மாத்தானே தம்முடைய சொரூபத்தை விஜாரியாத அஞ்ஞானத்தினாலே நானென்றகங்காரியாய் விகாரியாய் ஜீவனா யெண்ணிக்கொண்டிருந்தார் அவர்தானேவிசாரத்தினாலேபார்க்கிறபோது நாம் விகாரியன்று விகாரியான அகங்காரத்திற்குச் சாக்ஷியென்று தம்முடைய தத்துவத்தையறிந்து பிற்பாடு நிருவிகாரியாயிருக்கிற சாக்ஷிக்கு நாமேபிரமமென் றறிகிறதில் விரோதமேது நன்றாயறியலாமேயென்று சங்கித்தான்சீடன் குரு சொல்லுகிறார் சாக்ஷியேஅகம்பிரமாஸ்மியென்றுசொல்லினையே அதெப்படிக்கூடுங் கூடாதேனென்றா லுன்னைத்தான் நான்சங்கிக்கிறேன் நீதான் சொல் ஏனென்றால்அகம்பிரமாஸ்மியென் றறிகிறவன்றானார் சாக்ஷிதானறிகிறாரோ அன்றியிலேபோனால் நானென்று வியவகாரியாய் விகாரியாயிருக்கிற ஜீவன்றானறிகிறானோ சொல் சாக்ஷிதானறிகிறானென்கிறாயோ அது

கூடாதேனென்றாற் சாக்ஷியானவர் நிருவிகாரியாய் நானென்கிற அகங்காரிக்குச் சாக்ஷியாயிருக்கிறபடியினாலே அவருக்கு நானென்கிற அகங்காரமேயில்லை யுண்டென்றால் அவருக்கு அப்போது சாக்ஷித்துவமேயில்லை அவரும் விகாரியாகவேண்டும் அப்படியில்லாமல் நானென்கிறதுமன்றியிலே பிரமமென்கிறதுமன்றியிலே யொருகற்பனையுமன்றியிலே யிருக்கிறபடியினாலே நாம்பிரமமானோமென்கிற ஞானம் அவருக்கில்லை ஆகையினாலே சாக்ஷியே அகம்பிரமாஸ்மியென்று அறிகிறாரென்று சொல்லுகிறதற் கவகாசம் லேசமுமில்லை பின்னையாரறிகிறாரென்றால் நானென்கிற ஜீவனே அறிகிறானென்று சொல்லவேண்டும் எதினாலே அப்படிச் சொல்லவேண்டுமென்றால் அஞ்ஞானியாயிருக்கிறவனன்றோ சமுசாரநிவிர்த்தியாகிற நிமித்தமாய் அகம்பிரமாஸ்மியென்று ஞானாப்பியாசம் பண்ணவேண்டும் ஆகையினாலே சாக்ஷிக்கு அஞ்ஞானமில்லையே அஞ்ஞானமில்லாமற்போனால் ஞானமில்லையே அஞ்ஞானிக்குத்தானே ஞானம்வேண்டினபடியினாலே ஞானாஞ்ஞானங்களிரண்டுஞ் ஜீவனுக்கேயன்றியிலே சாக்ஷிக்கில்லை அப்படியே யநுபவங்கண்டோம் யெப்படியநுபவங்கண்டோமென்றாற் சாக்ஷியாயிருக்கிறஆத்மா ஞானாஞ்ஞானங்களுக் கதிஷ்டானமாய் ஞானாஞ்ஞானரகிதராயிருக்கிறார் ஜீவனானால் ஞானாஞ்ஞானங்களோடே கூடியிருக்கிறான் அதெப்படியென்றால் நானென்றுவிவகரிக்கிற ஜீவனை சாக்ஷியானஆத்மாவை அறிவையோவென்று கேட்டால் அச்சாக்ஷியாவதார் நானறியேனென்று சொல்லுகிறபடியினாலே ஜீவனிடத்திலே யஞ்ஞானவநுபவங் கண்டோம் பின்பு வேதாந்த சிரவணத்தினாலே சாக்ஷியுண்டென்று தனக்குச்சாக்ஷியாயிருக்கிற ஆத்மாவைப் பரோக்ஷமாயறிகிறான் பிற்பாடு விசாரத்தினாலே தோணவில்லையென்கிற ஆவரணம்போனபிற்பாடு இதோ சாக்ஷிதோணுகிறாரென்று தனக்குச்சாக்ஷியாய் ஆத்மாவைப் பிரத்தியக்ஷமாய்க்

கண்டான் ஆகையினாலே ஞானானுபவமுஞ் ஜீவனிடத்திலேதானே கண்டோம் இப்படிச் சாக்ஷியுண்டென்றும் இல்லையென்றும் ஞானாஞ்ஞானங்களையுடைத்தானவன் ஜீவன்றானே சாக்ஷியன்று ஆகையினாலே ஜீவனே அகம்பிரமாஸ்மியென் றறிகிறானென்று சொல்லவேண்டும்இப்படியாயுள்ளளவில் விகாரியானஜீவன் நிருவிகாரியான சாக்ஷியைக் கண்டமாத்திரத்தினாலே தான்றானே சாக்ஷியாகவில்லையே யெப்படியானாற் றரித்திரனாயிருக்கிறவன் ராஜாவைக் கண்டமாத்திரத்தினாலே ராஜாவாகவில்லையோ அப்படிப்போலே சாக்ஷியைக்கண்டஜீவனுஞ் சாக்ஷியாகமாட்டானே சாக்ஷியாகாமல் விகாரியாயிருக்கிறவனுக்கு நான்பிரமமென்று பிரமமாகவுங் கூடாதபடியினாலே நான்பிரமமென் றறியவேகூடாது. (கo-கக-கஉ-கரு-க௪)

சாக்ஷியைக் கண்டமாத்திரத்தினாலே சாக்ஷியேநானென் றறியப்படாதென் றெப்படிச்சொல்லுவீர் அறியலாமே யெப்படியென்றாற் ஜீவனானவன் றனக்கதிஷ்டான சொரூபமாயிருக்கிற சாக்ஷியையறியாமல் நானென்று ஜீவனாய் விவகரிக்கிறான் விஜாரித்துச் சாக்ஷியை அறிந்தவுடனே சாக்ஷியே நாமென் றறியலாமே இப்படி யறிந்தாற் சாக்ஷியே அகண்டபரிபூரணப் பிரமமானபடியினாலே நானேபிரமமென் றறியலாமென்று சங்கித்த சீடனைக்குறித்துக் குரு சொல்லுகிறார் நீ சொன்னது யதார்த்தந்தான் சாக்ஷியேநானென்று ஜீவனறிந்தானானாற் சாக்ஷிபிரமங்க ளொன்றானபடியினாலே நானேபிரமமென்றறியலாஞ் சமுசயமில்லை ஜீவன் சாக்ஷியைக்கண்டமாத்திரத்திலே நான்சாக்ஷியென் றெப்படியறிவன் தான்சாக்ஷியா யானாலன்றோ நான்சாக்ஷியென் றறியவேண்டும் எப்படியானாற் றரித்திரனாய்ப் பிட்சைவாங்குகிறவன் ராஜாவைக் கண்டதினாலேதானே நான்ராஜாவென் றறியப்படாதே தான் ராஜாவாயன்றோ நான்ராஜாவென் றறிய

வேண்டும் அப்படிப்போலே ஜீவனும் நிருவிகாரியாய்ச் சாக்ஷியாகாமல் விகாரியாயிருந்துகொண்டு நான்சாக்ஷியென் றறியவேகூடாது இப்படிச் ஜீவன் சாக்ஷியாகத்தானே யாகமாட்டாமற்போனால் அகண்டபரிபூரணப் பிரமமாய் எப்படியாகப்போகிறான் ஆகமாட்டானே எப்படியானாற் கோட்டையிலே மஹாராஜாவைக் கண்டமாத்திரத்திலே மஹாராஜாவாய் ஆகமாட்டாத்தரித்திரனுக் கிராச்சியத்திற் கெல்லாம் எசமானாகிற சாம்பிராச்சியாதிபத்தியந் தூரதோ பாஸ்தமோ அப்படிப்போலே சர்வசாக்ஷியாய்ஆகாசத்தைக்காட்டிலும் அத்தியந்தங்கேவலமாய் ஞாதுருஞானாதி திரிபுடிவியவகாரங்களிலே யொன்றுமன்றியிலே நித்தியசுத்த புத்த முத்த சத்திய பரமானந்த சொரூபமாயிருக்கிற சாக்ஷியைக்கண்ட ஜீவனுக்குத் தான் அந்தச் சாக்ஷியாகாமற்றானே நான் அகண்டபரிபூரணப் பிரமமென் றறிகிறஞானந் தூரதோபாஸ்தம். (க௫)

சீடன் சங்கை இப்படியானாற் சுருதியிலே அகம்பிரமாஸ்மியென்கிற வாக்கியத்தினாலே நானேபிரமமென்று நானென்கிற ஜீவனுக்குப் பிரமத்தோடே சமானாதிகரணியஞ் சொல்லப்படுவானேன் நான்பிரமமென்று ஜீவனுக்குப் பிரமத்தோடே சமானமாயிருக்கிற அதிகாரஞ் சொல்லுகிறதே சுருதி அதெப்படிச் சொல்லுமென்று சீடன் கேட்டான். (கசு)

குரு சொல்லுகிறார் சுருதியிலே அகம்பிரமாஸ்மியென்கிற சமானாதிகரணியம் முக்கியமாய்ச் சொல்லவில்லை முக்கிய சமானாதிகரணியமாவ தேதென்றால் ஓர்கடத்திலேயிருக்கிற ஆகாசமே பின்னையோர்கடத்திலேயிருக்கிற ஆகாசங் கடத்திலேயிருக்கிற ஆகாசமே மடத்திலேயிருக்கிற ஆகாசம் மடத்திலேயிருக்கிற ஆகாசமே எங்குமிருக்கிற ஆகாசமென்றுங் கடாகாசமே மஹாகாசமென் றறிகிறது மு

க்கிய சமானாதிகரணியம் ஓரிடத்திலேயிருக்கிற வாயுவே எங்குமிருக்கிற வாயுவு ஓரிடத்தித்திலே யிருக்கிற அக்கினியே எங்குமிருக்கிற அக்கினி ஓரிடத்திலே யிருக்கிற ஜலமே எங்குமிருக்கிற ஜலம் ஓரிடத்திலேயிருக்கிற பூமியே எங்குமிருக்கிற பூமி ஓரிடத்திலே யிருக்கிற வெய்யிலே எங்குமிருக்கிறவெய்யில் ஓர்மூர்த்தியிலேயிருக்கிற ஈசுரனே எல்லாமூர்த்தியிலேயுமிருக்கிற ஈசுரனென்றிப்படி யறிகிறதெல்லாம் முக்கிய சமானாதிகரணியம் அப்படிப்போலே தேகங்களிலே சாக்ஷியாயிருக்கிறவரே எங்குமிருக்கிற பிரமமென்றறிகிறது முக்கிய சமானாதிகரணியம் அப்படி அகம்பிரமாஸ்மியென்கிற வாக்கியத்தினாலே நானே பிரமமென்று ஜீவனே பிரமமென்றறியச்சொல்லி முக்கியமாய்ச் ஜீவனுக்குப் பிரமத்தோடே சமானாதிகரணியத்தைச் சுருதிசொல்லவில்லை பின்னை யெப்படிச் சமானாதிகரணியஞ் சொல்லுகிறதென்றால் வாதசமானாதிகரணியஞ் சொல்லுகிறது வாதசமானாதிகரணியமாவதேதென்றால் நான் பிரமமென்கிற விடத்திலே நானென்கிற ஜீவத்துவத்தை வாதித்துப்போட்டுப் பிரமமாய்த் தான் சேஷித்திருந்துகொண்டு பிற்பாடு நான்பிரமமென்றறிகிறதே வாதசமானாதிகரணியஞ் ஜீவத்துவத்தை நாசம்பண்ணாமற் ஜீவனாயிருந்துகொண்டு பிரமத்தைக் கண்டவுடனே தான்பிரமமாகாமல் நான்பிரமமென்றறிகிறதன்று அதெப்படிப்போலேயென்றாற் பிட்சைவாங்குகிற தரித்திரன் றன்னுடைய சரீரத்தைவிட் டிராச்சியாதிபத்தியத்தை யடைந்து பிற்பாடு நான்ராஜாவென்றறிகிற தெப்படியோ மநுடனானவன் றேவனென்றறிகிறபோது மநுடத்துவத்திற் குபாதியாயிருக்கிற மநுடசரீரத்தைக் கங்காப்பிரவேசாதிகளினாலே விட்டுப்போட்டுத் தேவசரீரத்தையடைந்து பிற்பாடு நான்றேவனென்றறிகிறாப்போலேயும் நானீசுரனென்றறிகிற மநுடன் அந்தரங்க பக்தியுபாசனை மகி

மையினாலே மநுடத்துவத்தை விட்டுப்போட்டு ஈசுரசாயுச்சியத்தை யடைந்து நானீசுரனென் றறிகிறதுபோலவும் இப்படித் தரித்திரனுக் கிராசத்துவமும் மநுடனுக்குத் தேவத்துவமும் பக்தனுக்கு ஈசுரத்து வமும் அறிகிறபோது முக்கியமாய்ச்சமானாதிகரணியங்கூடாதபடியினா லே தரித்திரமனுஷோபாசகத்துவங்களாகிற வுபாதிகளை வாதித்தாற் சமானாதிகரணியம் எப்படிக்கூடுமோ அப்படிப்போலே நான்பிரமமெ ன் றறிகிறவனுக்குச் ஜீவத்துவத்தை வாதித்துப்போட்டு நான்பிரம மென் றறிகிற ஜீவனுக்குச் ஜீவத்துவத்தை வாதித்துப்போட்டு நான் பிரமமென்று ஜீவனுக்குப் பிரமத்தோடேசமானாதிகரணியத்தை அறி யச்சொல்லிச் சுருதியான துபதேசிக்கிறதேயன்றியிலே முக்கிய சமா னாதிகரணியஞ் சொல்லவில்லை ஆகையினாலே ஜீவத்துவத்தை வாதி யாமல் நான்பிரமமென்று அறியவேகூடாது ஜீவத்துவவாதையினாலே நானேபிரமமென்று அறியலாமென்று சித்தமாச்சுது விகாரியாயிரு க்கிற ஜீவன் பிரமமாகாதபடியினாலே ஜீவத்துவத்தை வாதித்தால் தானெப்படிப் பிரமமாவன் ஆகானே ஆனபடியினாலே ஜீவத்துவ வாதையினாலேதான் நான்பிரமமென்கிற சமானாதிகரணியம் எப்ப டிக் கூடுமென்று சங்கிக்கிறாயோ அப்படித்தேவையில்லை கூடுமே அ தெப்படிப்போலேயென்றாற் பிரமரகீட ஞாயமாய்க் கூடுமென்றறி. (கஎ-கஅ)

பிரமரகீட ஞாயமாவ தேதென்றாற் புழுவானது குளவித் தியானத்தினாலே யெப்படிக் குளவியாகத்தானே ஆகிறதோ அப்ப டிப்போலே ஜீவனும் பிரமத்தியானத்தினாலே ஜீவத்துவத்தை வாதி த்தாற் பிரமாகாரமாகத்தானே ஆகிவிடுவன் ஆகையினாலே ஜீவனுக் கு வாதையினாலே பிரமசாக்ஷாத்காரம் நன்றாய்க் கூடும். (கக)

கீடன்சங்கை பிரமரகீடம்போலே ஜீவன் பிரமமாவனென்று

சொன்னீரேஅதெப்படிச் ஜீவனுற் பிரமத்திலே யாரோபிக்கப்பட் டவன் விகாரி மித்தியாபூதனுயிருக்கிறவன் அதிஷ்டானப்பிரமமா ஞல் வாஸ்தவமாய்ச் சுத்தமாயிருக்கிறது ஆரோபிதஜீவன் ஜீவத்துவ வாதையினுலேதா னெப்படி யதிஷ்டானப் பிரமமாவனென்று சீட ன் சங்கித்தான். (உ௦)

குரு சொல்லுகிருர் ஆரோபித னதிஷ்டானமா யெப்படியாவ னென்று சங்கிக்கிருயோ அதுதேவையில்லை அதிஷ்டானத்தை யறி ந்தா லாரோபிதம் வாதிக்கப்பட் டதிஷ்டானமாய் மீருமே யெப்படி யானுற் சுத்திரசிதம் ரச்சுசர்ப்பமுதலானதுகளிலே யதிஷ்டானமா யாரோபிதமீருகிறது கண்டோமே அப்படிப்போலே யாரோபித ஜீவன் அதிஷ்டானப் பிரமமாகலாமே சங்கை பிரமத்திலே ஜீவத்து வம் பிராந்தியினுலே யாரோபிக்கப்பட்டாலும் ரச்சுசர்ப்பாதிகளைப் போலே நிருபாதிகப் பிராந்தியன்று பின்னையோவென்ருற் சோ பாதிகப்பிராந்தியன்ரு அந்தக்கரணமாகிற உபாதியுள்ளமட்டுஞ் ஜீ வத்துவம்போகாது பிராரத்தநாசபரியந்த மந்தக்கரணுேபாதியிருக் கிறபடியினுலே ஜீவத்துவ மெப்படிவாதிக்கப்படுங் கண்ணுடி ஜலங் கள்முதலான துபாதியுள்ளமட்டும்முகாபாசமிருக்கிருப்போலே உபா தியுள்ளபடியினுலே ஜீவத்துவத்தை வாதிக்கிற தெப்படியென்று சீடன் சங்கித்ததற்குக் குரு சொல்லுகிருர் உபாதியுள்ளமட்டுஞ் ஜீவத்துவமிருக்குஞ் சந்தேகமில்லை யானுலுங் கண்ணுடிஜலமுத லான உபாதியை அப்பாலேவாங்கிப்போட்டால் அதிலே யாரோபிக் கப்பட்ட முகாபாச மெப்படி வாதிக்கப்பட்டுபோகிறதோ அப்படி அந்தக்கரணத்தையும் நிதித்தியாசனத்தினுலே லயம்பண்ணிப்போ ட்டாற் ஜீவத்துவமும் வாதிக்கப்பட்டுப்போமே சந்தேகமில்லையே ஆகையினுலே ஜீவத்துவத்தை வாதிக்கலாமென்று சொன்ன குரு

வைச் சிடன்சங்கிக்கிறான் இப்படி யந்தக்கரணத்தை வாதித்தாற் ஜீவனில்லாமல் சூனியமாய்ப் போகிறபடியினாலே பிரமமா யெப்படி யாவானென்று கேட்டதற் குத்தரஞ்சொல்லுகிறார் ஜீவன் ஆரோபிதனாய் மித்தியாபூதனானபடியினாலேயும் அதிஷ்டானத்திற்கன்னியமாகாதபடியினாலேயும் உபாதியை வாதிக்கிறபோது அதிஷ்டானமாய் மீருகிறபடியினாலேயுஞ் சொப்பனபுருடன்போலே பிரமமாயாவன். (உக)

சொப்பனபுருடன்போலேயாவ தேதென்றாற் சொப்பனோபாதியினாலே கற்பிக்கப்பட்ட தைசதன் விசுவனைத்தவிர அன்னியனன்று விசுவன்றானோவென்றால் விசுவனுமன்று எதினாலே விசுவனுமன்று விசுவனைத்தவிர அன்னியனுமன்றென்றால் விசுவனானவன் கிரகத்திலே சய்யையிலே சயனித்துக்கொண்டுதானே யொருவிடத்திலேயும் போகாமற் சுகமாய் நித்திரைபண்ணி யெழுந்திருக்கிறபடியினாலே நானாதிக்கிலேயும்போய்ச் சஞ்சரித்து வெகுசமுசாரத்தைப் பண்ணுகிற தைசதன் கிரகத்திலேசுகமாய்ச் சயனித்துக்கொண்டிருக்கிற விசுவனாயாகானே ஆகையினாலே சாக்ஷாது விசுவன்தானுமன்று இந்த விசுவன்தானே கிரகத்திலே நித்திரைபண்ணி யொருவிடத்திலேயும் போகாமலிருந்துகொண்டுதானே நித்திராமோக கற்பிதமாய்ப் பிராந்திமயமாயிருக்கிற சொப்பனோபாதியினாலே நானாதேச சஞ்சாரங்களையும் வெகுவித சமுசாரங்களையும் பண்ணுகிறவனாய் மனோவாசனைப் பிராந்தியினாலே போகிறவன்போலேயும் வருகிறவன்போலேயுஞ் சொப்பனங்கண்டு பிரமிக்கிறபடியினாலேயுந் திரும்பி விழித்தபிற்பாடு இத்தனைபோது சொப்பனங்கண்டேனென்று சொல்லுகிறபடியினாலேயும் விசுவனைத்தவிர அன்னியமாய் வேறாய்க் காணாமற்போகிறபடியினாலேயும் விசுவனுக்கு வேறன்றென் றறியலாமே இப்படி யிந்தத் தைசதனானவன் சாக்ஷாது

விசுவனுமன்றியிலே விசுவனுக்கன்னியனுமன்றியிலேபோனாற் பின்னையாரென்றால் மத்தியிலே நித்திராமோக கற்பிதமான சொப்பனப் பிராந்தியினாலே தோனுகிறதுமாத்திரமேயொழிய யதார்த்தமாகாத படியினாலே ரச்சுசர்ப்பாதிகள்போலே மித்தியாபூதனென் றறிய வேண்டும் இப்படி மித்தியாபூதனானாலும் இந்தத் தைசதனானவன் சொப்பனோபாதி யழிகிறபோது தனக்கதிஷ்டானமாய்ப் பரமார்த்தமாயிருக்கிற தன்னுடைய சொரூபத்தை யடைந்து விசுவனாகத்தானே யாகிவிடுகிறானே சமுசயமில்லையே இப்படிப்போலே யிங்கே ஜீவனுஞ் சமுசாரியானபடியினாலே சாக்ஷாது நிருவிகாரியாயிருக்கிற பிரமமுமன்று பிரமமாயிருக்கிற ஆத்மாத்தானே அஞ்ஞானகற்பிதமான அந்தக்கரணோபாதியினாலே சமுசாரத்தை யடைந்தவர்போலே விகாரியானவர்போலே ஜீவனானவர்போலே காணுகிறபடியினாலேயும் அதிஷ்டானத்தைவிட ஆரோபமில்லாதபடியினாலும் ஆத்மாவுக் கன்னியனுமன்று பின்னையாரென்றால் அஞ்ஞானகற்பிதமான அந்தக்கரணோபாதியினாலே தோணித்தோணிச் சுழுத்திமூற்சாதிகளிலே அழிந்துபோகிறபடியினாலே மித்தியாபூதனென் றறியலாமே இப்படி மித்தியாபூதனானாலுஞ் ஜீவன்றானே அந்தக்கரணோபாதி அழிகிறபோது தனக்கதிஷ்டானமாய் யதார்த்தமாயிருக்கிற சொரூபத்தை யடைந்து பிரமமாயாகலாமே ஜீவனானவன் அந்தக்கரணமாகிற உபாதியை வாதித்துப்போட்டு நான்பிரமமென் றறியலாமே. (உஉ-உங)

இப்படிச் ஜீவோபாதியான அந்தக்கரணத்தை வாதித்தாற் ஜீவனும் வாதிக்கப்பட்டுச் சூனியமாய்ப் போகிறபடியினாலே பிரமமாவனென் றறிகிறதெப்படியென்று சங்கித்தாற் பிரமமாகலாமேயெப்படியென்றாற் றைசதனானவன் சொப்பனோபாதி யழிகிறபோது தான் நசியாமல் விசுவனாயாகிறாப்போலே இங்கே ஜீவனுந் தனக்

ருபாதியாயிருக்கிற அந்தக்கரணமாத்திரம் வாதிக்கப்பட்டுத் தான் வாதிக்கப்படாமற் றனக்கு யதார்த்த சொரூபமாயிருக்கிற பிரமமாவனே ஆகையினுலே நிட்சேஷமாக மனதாகிற உபாதியை நாசம்பண்ணிஞற் ஜீவனுக்குச் சச்சிதானந்த சொரூபமாய் அத்தொய்தமாயிருக்கிற பிரமமேநாம் நாமேபிரமமென்று பிரமசாக்ஷாத்காரம் நன்ருயநுபவிக்கப்படுஞ் சித்தம் இப்படிச் ஜீவன் பிரமமாகத்தானே ஆகிவிட்டாற் சுழுத்திபோலே நிர்விகற்பமாயன்ரே இருக்கவேண்டும் அப்படி யிராமற் றிரும்பி நானேபிரமமென் றநுபவிக்கிற தெப்படியென்று சங்கித்தால் நன்ரு யநுபவிக்கலாமே யெப்படியென்ருற் றைசதஞனவன் சொப்பனநாசமானமாத்திரத்திலே விசுவஞயிருந்துகொண் டித்தனைபோது நாஞதேச கமஞகி சமுசாரங்களெல்லாம் பண்ணினவன்போலே சொப்பனமன்ரே கண்டோம் இத்தனையும் பிராந்தியன்ரே யதார்த்தமன்றே நாமிங்கேதானே யொருசமுசாரமன்றியிலே சுகமாயிருக்கிரேமேயென் றநுபவிக்கிருப்போலவும் உன்மத்தங்கொண்டவன் அந்தப் பயித்தியந் தெளிந்தபிற குன்மத்தப்பிரமையில்லாமற் சந்தோஷசுகத்தை யநுபவிக்கிருப்போலவும் வியாதிமுக்தஞனவன் ஆர்க்குவியாதிவந்துதென்று துக்கமன்றியிலே சுகமநுபவிக்கிருப்போலவுந் தரித்திரனிராச்சியத்தையடைந்திராஜாவாய்த் தாரித்திரியதுக்கமன்றியிலே சுகமநுபவிக்கிருப்போலவும் மநுடன்றேவத்துவத்தையடைந்து தேவானந்தத்தை யநுபவிக்கிருப்போலவும் உபாசக னீசுரசாயுச்சியத்தையடைந் தீசுரானந்தத்தை யநுபவிக்கிருப்போலவும் இங்கே ஜீவனும் பிரமத்தோடே ஐக்கியத்தையடைந்து பிரமமாயிருந்துகொண்டு நாமேபிரமமானேமே சகலசமுசாரங்களு மெங்கேயோடிப்போனதோ பிராந்தியினுலே யன்ரே ஜீவேசுரஜகத்துமுதலான வெகுவித சமுசாரங்களைப் பண்

ணுகிறவன்போலேகண்டு பிரமித்தோஞ் சொபாவமாய் நம்மிடத்திலே காலத்திரயத்திலேயு மொருசமுசாரமுங் காணோமே ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேத சூனியனாய்ச் சச்சிதானந்த சொருபனாயிருக்கிறோமென்றுபிரமானந்ததாநுபவத்தைநன்றா யநுபவிக்கலாமென்று சித்தமாச்சுதே ஆகையினாலே ஜீவனுக் குபாதிநாசத்தினாலே சாக்ஷாத்காரஞ் சித்திக்குமேயன்றியிலே மற்றபடி சித்தியாது. (உச)

ஜீவோபாதியான மனதை லயம்பண்ணினாற் பிரமமாயிருக்கிறோமென்கிற வநுபவமெப்படிக்கூடும் மனதிருந்தன்றோ வநுபவிக்கவேண்டுமென்று சங்கித்தால் நீ சொல்லுகிறது யதார்த்தந்தான் மனது லயித்துப்போனாலன்றோ அநுபவிக்கப்படாது அப்படி மனதை யத்தியந்தம் நாசம்பண்ணச் சொல்லவில்லை பின்னை மனோலயமாவ தேதென்றால் மனதிற்கு ரூபலயமென்றும் அரூபலயமென்றும் இரண்டுவிதமுண்டு ரூபலயமாவ தேதென்றால் வாசனாமயமாயிருக்கிற விர்த்திகளே மனதிற்கு ரூபமென்று சொல்லப்படும் இந்தச் சகலவிர்த்திகளையும் லயம்பண்ணுகிறதே ரூபலயமென்று பெயர் அரூபலயமாவ தேதென்றால் சகலவிர்த்திகளும் லயித்து நித்திரையுமன்றியிலே ஜகத்துத்தோற்றாமல் நிர்விகற்பமாய்ச் சச்சிதானந் தாநுபவமாத்திரமாயிருக்கிற சமாதிஅவத்தை அரூபமென்று பெயர் இந்த அரூபம் லயிக்கிறதே அரூபலயமென்றுசொல்லப்படும் இந்த அரூபலயம்பண்ணினாற் பிரமானந்த சாக்ஷாத்கார அநுபவங்கூடாது அரூபலயந்தா னெப்போவென்றால் விதேகமுக்தியிலே யொழியச் ஜீவன்முக்தியிலேயில்லை இப்போது ரூபலயமாத்திரமுண்டு இப்படிமனதிற்கு ரூபமாத்திரம் லயித்து அரூபம் லயிக்காமற் பிரமானந்தமாத்திரமாயிருக்கிறபடியினாலே பிரமமாயிருக்கிற மனதினாலேதானே நாமேபிரமமென்று தோணுகிறபடியினாலே யநுபவிக்கலாமே. (உரு)

சாக்ஷாக்காரமாவதேதென்று சித்தமாச்சுதென்றாற் ஜீவனுக்குபாதியாயிருக்கிற மனோரூபத்தை லயம்பண்ணிச் சச்சிதானந்தமாயிருக்கிற மனோரூபத்தையடைந்து நாமேபிரமமென்று அநுபவிக்கிறதே சாக்ஷாத்காரமென்று சித்தாந்தம் இதற்குப்பிரமாணமேது இப்படி யார்சொல்லியிருக்கிறார்களென்றால் ஸ்ரீஆசாரியசுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள் எப்படியென்றால் ஞானாப்பியாசத்திற்குமுன் பிரமமேநானென்கிற ஸ்மரணமேயின்றி தேகமேதானாய்ச் சமுசயவிபரீதமன்றியிலே சத்தியமாயிருந்தாப்போலே பிற்பாடு ஞானாப்பியாசத்தினாலே தேகமேதானாயிருக்கிற பிராந்தியைவிட்டு தேகஸ்மரணையே யன்றியிலே சச்சிதானந்தாகாரனாய்ச் சமுசயவிபரீதமன்றியிலே பிரமமேதானாய் எப்போதும் அநுபவிக்கிறதே சாக்ஷாத்காரமென்று சொல்லியிருக்கிறார் அதுவே பிரமாணம். (உ௬-உஎ)

இப்படிச் சொரூபாஅவத்தையை யடைகிறதே சாக்ஷாத்காரமென்று தத்துவவித்துக்களுடைய சித்தாந்தஞ் சொரூபாஅவத்தையாவதேது எங்கே சொல்லியிருக்கிறதென்றால் வாசிட்டத்திலே நன்றாய்ச் சொல்லியிருக்கிறது. (உ௮)

வாசிட்டத்திலே சொரூபஸ்திதி யெப்படிச் சொல்லியிருக்கிறதென்றால் மனதானது கல்லுக்குள்ளே யெப்படி யொன்றுமன்றியிலே நிச்சங்கற்பமா யிருக்கிறதோ அப்படிக் கல்லுடைய வுள்ளுப்போலே நிச்சங்கற்பமா யொருநினைவுமன்றியிலே நித்திரையுமன்றியிலே தொய்தப்பிரதீதியுமன்றியிலே மனதிருக்கிறதே சொரூபஸ்திதியென்று சொல்லியிருக்கிறது. (உ௯)

இப்படி யானபடியினாலே மனோலயம்பண்ணாமற் சொரூபஸ்திதியை யடையாமற்றானே நானேபிரமமென்று பிரமசாக்ஷாத்காரத்

ன்றிருஷ்டியிலேயென்றால் அவன்றிருஷ்டியிலே நிர்மலமாய்க் கேவலமாயிருக்கிற சிதாகாச மொன்றுமாத்திரமே யிருக்கிறதன்றியிலே வேறேயொன்றுமில்லை இப்படியானாற் புசிக்கக் கண்டோமென்றால் ஞானிக்குப் பரதிருஷ்டியிலே போகங்காணுகிறதேயொழியச் சுயதிருஷ்டியிலே இல்லை. (௬௪-௬௭)

இப்படி வித்துவானுக்குச் சுயதிருஷ்டியிலே போகமில்லைப் பரதிருஷ்டியிலே போகமுண்டென்கிறதற்குப் பிரமாணமேது யார் எங்கே சொல்லியிருக்கிறார்களென்றால் விவேகசூடாமணியென்கிற கிரந்தத்திலே ஸ்ரீஆசாரியசுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள் எப்படியென்றால் ஞானிக்கி ஞானம்வந்தமாத்திரத்திலே அஞ்ஞானகாரியங்களெல்லாஞ் சமூலமாய் லயித்துப்போம் ஒருபோகமுமில்லையென்றுசொன்னாற் பிராந்தாளாயிருக்கிற மூடர்களுக்குச் சங்கையுண்டாகிற தேதென்றால் ஞானத்தினாலே அஞ்ஞானகாரியங்களெல்லாஞ் சமூலமாய் நசித்துப்போனால் ஞானி வியவகரிக்கிறானே இவனுக்குத் தேகம் எப்படியிருக்குமென்று சங்கைவருகிறபடியினாலே அவர்களுடைய திருஷ்டியிலே தோணுகிறபடியினாலே பிராந்தர்களுடைய திருஷ்டியைக்குறித்து ஞானிக்குப் பிராரத்தமுண்டென்று சுருதி சொல்லுகிறது சுயதிருஷ்டியிலே பிராரத்தமுண்டென்று சுருதி அங்கீகரிக்கவில்லையென்று ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள் அதுவேபிரமாணம். (௬அ-௬௯)

சங்கை ஞானி பரமார்த்தமாய்ப் போகமே இல்லாதவனானால் அப்போது பரதிருஷ்டியினாலேதான் போகங் காணப்படுவானே யென்று சங்கித்தாற் சங்கிக்ககூடாது ஏனென்றாற் பராளுக்குப் பிராந்திபோகாம லிருக்கிறபடியினாலே இவன் போக்தாவாய் வருகிறதாய் * அப் பராள்திருஷ்டியிலே காணலாமே. (௭௦)

---

* அவன்திருஷ்டி - என்றும்பாடம்.

சாக்ஷாத்காரஞானிக்கிச் சுயதிருஷ்டியிலே யொருவியவகாரமு மில்லாவிட்டாற்பராளுக்கு வியவகரிக்கிறதாய்ப் பிராந்தியினுலே காணுமோவென்ருற் காணுமே எப்படியென்ருற் பரமார்த்தத்தை யறியாத பிராந்தாளுக்கு அத்தொய்தமாய்க் கேவலமாயிருக்கிற சிதாகாசமொன்றுதானே பிராந்தியினுலே ஜகஜ்ஜீவேசுராதிகளாய் நானுவித நாமரூபங்களாய் நீயென்றும்நானென்றும் அவனென்றும்இவனென்றும் அதென்றும் இதென்றுந் தோணுகிற தெப்படிப்போலேயென்ருல் ஸ்தாணுவிலே புருடத்துவ புத்திபோலேயுஞ் சுத்தியிலே ரசிதமென்று தோணுகிறுப்போலேயும் ரச்சுவிலே சர்ப்பப் பிராந்திபோலேயும் மிருத்துவிலே கடாதிப் பிராந்திபோலேயுஞ் சுவர்ணத்திலே பூஷணப் பிராந்திபோலேயும் பிராந்தனுக்குச் சிதாகாசந்தானே நாமரூபாத்மகமாய் நாளுரூபமாய்த் தோணுகிறதே அப்படிப்போலே ஞானப்பியாசத்தினுலே பிராந்திபோய்த் தத்துவத்தை யறிந்த வித்துவானுஞ் சிதாகாசசொரூபமாகத்தானே எப்போது மிருப்பனே யன்றியிலே அவன் பிராரத்தபோக வியவகாரங்க ளொன்றையுங் காணுன் சிதாகாசமாத்திரத்தைப் பார்த்துக்கொண்டு சிதாகாசமாகத்தானே யிருப்பன் இப்படித் தத்துவசாக்ஷாத்காரம்வந்த வித்துவானும் எப்போதுஞ் சிதாகாசசொரூபமாகத்தானே யிருந்தாலும் பிராந்திபுத்திகளாயிருக்கிற அஞ்ஞானிகளுக்குத் தேகியாயிருக்கிறவன் போலேயும் வியவகரிக்கிறவன்போலேயுந் தங்களுடைய பிராந்தியினுலே அவன் இவர்களுக்குச் சமுசாரியாய்த் தோணுகிறதன்றியிலே அவனொரு வியவகாரமும் பண்ணவில்லை. (சக-சஉ-சங)

சங்கை தத்துவவித்தானவனெப்போதுஞ் சிதாகாசசொரூபமாகத்தானேயிருந்தால் அவனுக்குப் பரதிருஷ்டியினுலேதான் வியவகார மெப்படியுண்டு வியவகார மொன்றுமன்றியிலே யிருக்கிறவன் பராளுக்குப் பார்த்தால் வியவகாரம்பண்ணுகிறவன்போலே பிராந்தி

யினாலே தோணுமென்றால் அதற்குத் திருஷ்டாந்தமேது அப்படி யெங்கே கண்டோமென்று சங்கித்தால் அதற்குத் திருஷ்டாந்த முண்டே அப்படிக் கண்டிருக்கிறோமே யெங்கேயென்றால் லோகத் திலே இரண்டுபே ரொருவிடத்திலே நித்திரைபண்ணினு ளதிலே யொருத்தன்மாத்திரஞ் சொப்பனங்கண்டா னொருத்தன் சுகமா யொரு வியவகாரமுமன்றியிலே தூங்குகிறான் இவன் தூங்குகிறதிலே யொருவியவகாரமுமன்றியிலேயிருந்தாலும் அவனைச்சொப்பனங்கா ணுகிறவன்போலே தன்னுடைய வாசனையினாலே வியவகரிக்கிறவனா கக் காணுகிறான் பூருவம் அவனோடே பழகியிருந்த வாசனையினாலே சொப்பனத்திலே அவனோடே கூடிக்கொண்டு நானாதிக்கிலேபோய் நானாவித வியவகாரங்களைப் பண்ணுகிறான் இப்படித் தன்னுடைய சொப்பனப் பிரமையினாலே * வெறும்மனே இருக்கிறவனை நானா வியவகாரம் பண்ணுகிறவனாய்க் காணுகிறானே ஆகையினாலே தூங்கு கிறவனுக்குச் சுயதிருஷ்டியிலே வியவகாரங்க ளில்லாமலிருந்தா லுஞ் சொப்பனங்காணுகிறவனுடைய திருஷ்டியினாலே சகலவியவ காரமு முண்டே இதுவே திருஷ்டாந்தமாம் இப்படிப்போலே வித்து வானுடைய திருஷ்டியிலே சிதாகாசமாத்திரமேயொழிய வேறே யொன்று மில்லாமலிருந்தாலும் இவனவனென்று நானாவித நாம ரூபப் பிராந்தியுள்ள பராளுக்குத் தங்களுடைய வாசனாப் பிரமையி னாலே வெறும்மனே இருக்கிற தத்துவவித்தும் வியவகரிக்கிறவன் போலே தோணுகிறபடியினாலே பரதிருஷ்டியிலே வியவகாரமுண் டே ஆகையினாலே தத்துவ சாக்ஷாத்காரம்வந்த வித்துவானுக்குப் பரதிருஷ்டியிலே பிராரத்தபோக வியவகாரங்களன்றியிலே சுயதிரு

---

* வேறும்மனே - என்னும் பதம் இப்புத்தகத்திலெங்கன் வரினு ம் சும்மா - விருதா - வியர்த்தம்-என்றும் பாடம்.

ஷ்டியிலே எல்லாங் கேவலமாயிருக்கிற ஆத்மசொரூபமாய்ப்போனப டியினாலே யொருவியவகாரமு மில்லை. (கூச-சரு-சகூ)

தத்துவ சாக்ஷாத்காரம்வந்தாலும் போகம் மித்தியாபூதமாயிருக்குமேயன்றியிலே அடியோடே இல்லாமற்போகாது ஞானத்தினாலே ஆகாமிய சஞ்சிதங்கள் நஷ்டமாய்ப் பிராரத்தமாத்திரமிருக்கும் பிராரத்தமுள்ளமட்டும் வியவகாரமும் மித்தியாபூதமாய்ச் சயதிருஷ்டியிலேயு முண்டென்று சங்கித்தால் அதுகூடாது ஏனென்றால் ஆகாமிய சஞ்சித பிராரத்தங்கள் மூன்றும் ஞானதிசையிலேயோ அஞ்ஞான திசையிலேயோவென்று விஜாரித்தால் அஞ்ஞான திசையிலே பிராந்தியினாலே யுண்டென்று சொல்லுகிறதேயன்றியிலே ஞானதிசையிலே பிராந்தி யில்லாதபடியினாலேபிராரத்தமே இல்லை ஆகையினாலே பிராந்தியே யில்லாமல் வித்துவானாய்ப் பரமார்த்தத்தைத்தானே சதா பார்த்துக்கொண்டிருக்கிறவனுக்குத்திரும்பியும் பிராரத்தபோகமென்கிற பிரமையெங்கேவரப்போகிறது சொப்பனப் பிரமைபோய் விழித்தவனுக்குத் திரும்பிச் சொப்பனபோகம் வருகிறதுண்டோ இல்லையே அப்படிப் பிராந்தியற்றவனுக்குப் போகமில்லை ஆகையினாலே வியவகாரபோகத்திலே தூங்கிப் பிரமத்திலே விழித்துக்கொண் டிருக்கிற ஞானியும் அத்தொய்தமாய் அகண்டேகரசமாய் நிர்விகற்பமாய்ச் சிதாகாசமாயிருக்கிற தன்னைத்தானே எப்போதும் பார்த்துக்கொண்டிருப்பனேயன்றியிலே பின்னையொன்றையும் பாரான். (சஎ-சஅ)

சங்கை.* தஸ்யதாவதேவ சிரம்யாவன்ன விமோக்ஷ்யே யதசம்பச்சியே என்கிற சுருதியானது தத்துவஞானம்வந்தாலும் பிராரத்தமுண்டு பிராரத்தமுள்ளமட்டும் பிரபஞ்ச வியவகாரங்களெல்லாம் மித்தையாய்த் தோணிக்கொண்டிருக்குமென்று சொல்லுகிறதேயெ

---

*தஸ்யதாவதேவிரமயாவன்னவிமோக்ஷ்யேயதசம்பச்சியே என்றும் பாடம்.

ன்று சங்கித்தால் அப்படிக்கூடாது ஏனென்றாற் பிராரத்த வியவகார ங்கள் ஜகத்துக்களெல்லாம் மித்தையாய்த் தோணுமென்கிற தார்க் கென்றால் ஞானப்பியாசம் பண்ணுகிறவனுக்கேயன்றியிலே தத்துவ சாக்ஷாத்காரம்வந்தவனுக்கன்று அப்பியாசிக்கிறவனுக்கே நான் சா க்ஷியென்றுஞ் ஜகத்துக்கள் வியவகாரங்களெல்லாஞ் சடங்களானப டியினாலே சாட்டியங்களென்றும் நன்றாய் அப்பியாசிக்கிறபோது பிர மமாயிருக்கிறநாமே சத்தியம் மற்றையவெல்லாம் மித்தையென்றும் அப்பியாசகாலத்திலே நன்றாய் அப்பியாசித்து முடிந்தாற் சடமாய்ச் சாட்டியங்களாயிருக்கிற பிராரத்தவியவகாரங்களென்கிறநாமரூபங்க ளே காலத்திரயத்திலேயு மில்லாதபடியினாலேயும் தனக்குச் சாக்ஷித் துவ மில்லாதபடியினாலேயும் பிரமமாத்திரமாய்ச் சேஷித்துத் தா னே பிரமமாய்த் தானேதானாய்ப் பார்த்துக்கொண் டிருக்கிற தத்துவ வித்துக்குப் பிரமமாத்திரந் தோணுமேயொழியப் பிராரத்த ஜகத்து வியவகாரப் பிரதீதிக ளொன்றுமில்லை இப்படியானாற் சுருதி பிராரத் த முண்டென்று சொல்லுவானேனென்றாற் றத்துவஞானியைக்குறி த்துச் சொல்லவில்லைப் பின்னை யாரைக்குறித்துச் சொல்லுகிறதெ ன்றால் அஞ்ஞானிகளைக்குறித்துச் சொல்லுகிறது யாதினாலேயென் றாற் றத்துவஞானியானவன் சுயதிருஷ்டியிலே யொருவியவகா ரமுமன்றியிலே இருந்தாலும் அஞ்ஞானியாயிருக்கிற வாதிகள் தன் னுடைய வாசனைப் பிரமையினாலே ஞானி வியவகரிக்கிறதாய்க் கண் டு பிரமிக்கிறதினாலே ஞானிக் கொருபோகமுமில்லையென்று சொ ன்னால் அவனுக்குச் சம்மதியாகாமல் ஞானி வியவகரிக்கிறானே யென்று சங்கிக்கிறபடியினாலே அந்தச் சங்கையைப் போக்குகி ற நிமித்தமாய்த் தத்துவஞானம்வந்தாலும் பிராரத்தமுண்டு ஞானி க்கென்று வாதிகளைக்குறித்துப் பிராரத்தத்தை ஞானிக்குச்சொல்லுகி றது ஞானியைக்குறித் துனக்குப் பிராரத்தமுண்டென்று சொல்லவி

ல்லை ஆகையினாலே ஞானம்வந்தும் பிராரத்தமுண்டென்கிற சுருதிக ளுக்கு ஞானிகளுக்குச்சுயதிருஷ்டியிலே பிராரத்தமுண்டென்கிறது அபிப்பிராயமன்று. (சுகக)

சங்கை இப்படியானாற் ஜீவனுக்குக் ஜீவத்துவத்தை நாசம்ப ண்ணியன்றோ சாக்ஷாத்காரஞ் சித்திக்கவேண்டும் இப்படித் தன்னை நாசம்பண்ணுகிறதற்கு ஆர்தான் இச்சிப்பானென்றாற் சமுசாரதாப த்திலேநின்றுங் கரையேறவேண்டுமென்றுங் கேவலப் பிரமமாகவே ண்டுமென்றும் இச்சித்த புருடன் தன்நாசத்தையும் பண்ணுவன் அ தெப்படிப்போலேயென்றாற் தேவத்துவத்தை யடையவேண்டு மெ ன்கிறவர்கள் அக்கினிப் பிரவேசங் கங்காப்பிரவேசம் முதலானதுக ளைப் பண்ணித் தன்னை நாசம்பண்ணுகிறதற் கெப்படி இச்சிக்கிறார்க ளோ அப்படி முமூக்ஷுக்களாயிருக்கிறவர்கள் சாக்ஷாது பரிபூரணப ரப்பிரமமாகத்தானே ஆகவேண்டுமென்று நிதித்தியாசன சமாதி அப் பியாசத்தினாலே ஜீவத்துவத்தை நாசம்பண்ணிப் பரப்பிரமமாகத்தா னே ஆகிவிடுவார்கள் சந்தேகமில்லைச் சித்தம் இப்படிச் சாக்ஷாத்கார ப் பிரகரணஞ் சொல்லப்பட்டது. (ருo-ருக)

இந்தச் சாக்ஷாத்காரப் பிரகரணத்தை யாதொருவித்துவான் பராமரிசித்துப் பார்க்கிறானோ அவனே ஜீவோபாதியாயிருக்கிற மன தை லயம்பண்ணிப் பரப்பிரமமாகத்தானே ஆகிவிடுவன். (ருஉ)

ஏழாவது - சாக்ஷாத்காரப்பிரகரணம் முற்றிற்று.

# எட்டாவது - மனோலயப்பிரகரணம்.

முந்தின பிரகரணத்திலே அத்வைத பிரமசாக்ஷாத்கார த்தைச் சீடனுக்குபதேசித்து இந்தப்பிரகரணத்திலே பிரமசாக்ஷாத் காரத்திற்குச் சாதனபூதமாயிருக்கிற மனோலயத்தை யுபதேசிக்கிறார் குரு வாராய் ஏ சுமதே அத்வைதராயிருக்கிற ஆத்மாவுக்குச் ஜீவத் துவத்தை யுண்டாக்கிறதிலே யுபாதியாய்ச் சமுசார மஹாவியாதிக்கி காரணமாயிருக்கிற யாதொருமனதுண்டோ அந்தமனதை நிட்சேஷ மாய் விட்டுப்போட்டுப் பிரமசாக்ஷாத்காரத்தை அடையென்று குரு சொன்னார். (௧)

வாருமையா ஏ குரோ மனதைவிடுகிறதெப்படி கடினமன் றோ மனதானது மஹாபெலவத்தன்றோ யொருத்தராலும் நிக்கிரகிக் கப்படாத துஷ்டமாய்ச் சர்வதாய்ச் சஞ்சலசொபாவமாயிருக்கிறதன் றோ அதைவிடுகிறதெப்படிச் சொல்லுமென்று சீடன் கேட்டான் குரு சொல்லுகிறார். (௨)

ஏ சுமதே மஹாமிருதுவாயிருக்கிற மல்லிகாகுசுமாதிகளைக்கச க்கிறதும் வெண்ணையிலேயிருக்கிற மயிர்வாங்கிறதும் கண்ணைமூடித் திறக்கிறதும் எப்படி லெகுவோ அப்படி மனதைவிடுகிறது மஹா லெகு சமுசயமில்லை நல்லவிவேகியா யிந்திரியவசத்தை யடையாமல் வைராக்கியபெலத்தினாலே பாகியவிடயங்களை யுபேக்ஷிக்கிற திரனுக் கு மனத்தியாகத்தினாலே யொருபிரயாசமுமில்லையே யெதனாலே யெனிதென்றால் மனதென்றொன்றிருந்தாலன்றோ அதைவிடுகிறது கடினம் எதார்த்தமாய் மனதில்லையே இதோ பேயிருக்கிறதென்று சொன்னமாத்திரத்திலே யொன்றுமில்லாதவிடத்திலே விருதாப்பிர மையினாலே பேயிருக்கிறதென் றில்லாததை யுண்டென் றெண்ணி

ன மூடஞானபாலனுக் கசத்தியமாயிருக்கிற பிசாசுதானே சத்தியம் போலே நிக்கிரகிக்கப்படாததாய் மஹாபயங்களை துக்கங்களை அனர்த் தங்களைக் கொடுக்கிறதோ அப்படிப்போலே பிரமத்திலே அதுவிது வென்று இல்லாதவஸ்துக்களை நினைத் தெண்ணுகிற பாவனையினலே மனதென்று பொய்யாய்ப் பிராந்தியினலே யொன்றுண்டாய்ச் சத்தி யம்போலேயிருந்துகொண்டு அதுவிதுவென்று சங்கற்பிக்கிறதாய் நிக் கிரகம்பண்ணப்படாமல் மகத்தாய மூடனாயிருக்கிறவனுக் குண்டா யிருக்கிறது ஆகையினலே நீரனாய் அந்தமனதினுடைய சொரூபத் தையறிந்த் விவேகிக் கஃதைவிடுகிற தத்தியர்த்தம் மஹாலேசு மனதி னுடையசொரூபத்தை யறியாதவனுக்கு மஹாபிரயாசமென்று குரு சொன்னார். (௩-ச)

மனதிற்குச் சொரூபந்தான் ஏதென்றால் அதுவிதுவென்று எணணுகிற சங்கற்பமே சொரூபஞ் சங்கற்பமன்றியிலேபோனல் மனதேயில்லை ஆகையினலே சங்கற்பநாசமானற் சசசிருங்கம்போலே மனதென்று பெயர்மாத்திரமேயன்றியிலே மனதேயில்லாமற் சூனிய மாய்வந்தியாபுத்திர சசசிருங்க ககனகுசுமாதிகளுக்குச் சரியாய்ப் போம் வாசிட்டத்திலேயும் அப்படியே சொல்லியிருக்கிற தெப்படி யென்றுற் சொல்லுகிறேன் கேள். (ரு-ச)

கேளும் ஏ இராமா மனதிற்குச் சொரூபம் ஒன்றுமில்லவே யில்லை ஆகாசமென்று சொல்லுகிறதேயன்றியிலே ஆகாசத்திற் கெப் படி ரூபமில்லையோ அப்படிச் சூனியமாய்ச் சடமாயிருக்கிற மன திற்கும் நாமமாத்திரமேயொழிய ரூபமேயில்லை மனதென்கிற வொ ருவஸ்து உண்டென்று ரூபமாய் இருதயத்திற்குள்ளேயுமில்லை வெ ளியிலேயுமில்லை ஆனலும் ஆகாசம் ரூபமன்றியிலேயிருந்தாலு மெங் குமெப்படியிருக்கிறதோ அப்படி மனது ரூபமில்லாமலிருந்தாலு

மெங்குமிருக்குமென் றறியும் ரூபமன்றியிலே யெங்குமெப்படி யிருக்குமென்றால் ரூபமில்லாவிட்டாலும் அதுவிதுவென்று சங்கற்பமெங்கேவருகிறதோ அங்கேயிருக்கிறது மனதென் றறிந்துகொள்ளும் எங்கெங்கே சங்கற்பம்வருகிறதோ அங்கங்கெல்லாம் இருக்குமென்றால் மனதுவேறேயோ சங்கற்பம்வேறேயோ வென்றாற் சங்கற்பம்வருகிறதினாலே மனதிருக்கிறதென்று சொல்லுகிறதேயொழியச் சங்கற்பமன்றியிலேபோனால் மனதேயில்லை ஆகையினாலே சங்கற்பத்தைத்தவிர மனதுவேறேயன்று சங்கற்பமேமனதென் றறியுஞ் சங்கற்பமாவ தேதென்றால் நினைக்கிறதேசங்கற்பமென் றறியும் நினைவில்லாததே சிவசொரூபமென் றறியும் நினைவாவ தேதென்றால் அநுபூதநினைவென்றும் அநநுபூதநினைவென்றும் இரண்டுவிதமாயிருக்குமென்று ஸ்ரீவசிட்டர் இராமனுக் குபதேசித்திருக்கிறாரென்று குரு சொன்னார். (எ-அ-கூ-க0)

வாசிட்டத்திலே யநுபூதநினைவென்றும் அநநுபூதநினைவென்றும் இரண்டுவிதமாய்ச் சொல்லியிருக்கிறதென்று சொன்னீரே நினைவாவதேது அஃதைத்தான் முன்னே சொல்லுமென்று கேட்ட சிடனைப்பார்த்துக் குரு சொல்லுகிறார் நினைவாவதேதென்றால் அதென்றும் இதென்றும் உண்டென்றும்இல்லையென்றும் இப்படியென்றும் அப்படியென்றும் ஏதாகிலு மொருபாகியவிடயங்களி லொன்றை நினைக்கிறதே நினைவென்று தத்துவவித்துக்கள் சொல்லுவார். (கக)

இப்படி யொன்றைநினைக்கிறதே நினைவென்றால் அதிலே யநுபூதமென்றும் அநநுபூதமென்றும் இரண்டுவித மேதென்று லொன்றைநினைக்கிறபோது பூருவங் கேட்டேன் தொட்டேன் கண்டேன் புசித்தேன் ஆக்கிராணம்பண்ணினேனென்று பூருவந் தன்

ஞலே கண்டதாய் கேட்டதாய் அநுபவிக்கப்பட்ட சத்தாதிவிடயங் களை நினைக்கிறதே அநுபூதநினைவென்று சொல்லுவாள். (கஉ)

அநநுபூதநினைவாவ தேதென்றால் பூருவங் காணாததாய்க் கேளாததாய்த் தானநுபவியாததாயிருக்கிற சத்தப்பரிசாதி விடயங் களை நினைக்கிறதேஅநநுபூதநினைவென்று பெயர். (கங)

சிடன்சங்கை பூருவந்தன்னாலே அநுபவிக்கப்பட்ட விடயங் களை நினைக்கிறதெல்லா மநுபூதநினைவென்று சொன்னீரே அதுயுக் தந்தான் அநுபவிக்கப்படாததை நினைக்கிறதும் நினைவென்று சொல் லுகிற தெப்படிப் பூருவம் எதெதநுபவிக்கப்பட்டதோ அதுவது வன்றோ நினைக்கப்படுகிறது அநுபவியாததும் நினைக்கப்படவில்லை யே ஆகையினாலே அநுபவியாததையும் நினைவென்கிற தெப்படி யென்று சங்கித்தாற் சொல்லுகிறோங் கேள். (கச)

அநுபவிக்கப்படாததையும் நினைவென்றுசொல்லவேண்டும் அதெப்படியென்றாற் சொல்லலாமே அநுபவிக்கப்பட்டது அநுபவி க்கப்பட்டதாய்த் தோணுகிறப்போலே அநுபவிக்கப்படாததும் அநு பவியாததாய் நினைத்துத் தோணுகிறபடியினாலே நினைவென்று சொ ல்லவேண்டும் அநுபவிக்கப்படாததாய்த் தோணினதினாலே நினை வென்று சொல்லவேண்டுமோவென்றால் வேண்டும் ஏனென்றால் அ ன்னுவயவிதிரேகங்களினாலே பார்க்கிறபோது தோணுகிறதெல்லாம் நினைவென்று சொல்லவேண்டும் அநுபூதமாயும் அநநுபூதமாயும் எப் படியானாலும் எதெதுதோணுகிறதோ தோணுகிறதெல்லாம் நினைவு தானே. (கரு)

அன்னுவயவிதிரேகங்களிலே தோணுகிறதே நினைவென்கிற தெப்படியென்றாற் சத்தாயுண்டானதாகட்டும் அசத்தாயில்லாததாக ட்டும் அநுபவிக்கப்பட்டதாகட்டும் அநுபவிக்கப்படாததாகட்டும் எப்படியெப்படியாகட்டும் எதெதுநினைக்கப்படுகிறதோ அதுவதுதா

ளே தோணுகிறது நினைத்ததெல்லாந் தோணுகிறபடியினுலே நினைவே பிரதீதியென்று அன்னுவயத்திலே சித்திக்குமே விதிரேகத்தினுலே யெப்படியென்ருற் சத்தாகட்டும் அசத்தாகட்டும் அநுபூதமாகட்டும் அநநுபூதமாகட்டும் எப்படியெப்படியாகட்டும் எதை நினைக்கப்படவில்லையோ அஃதெல்லாந் தோன்றவில்லையே ஆகையினுலே விதிரேகத்தினுலேயும் நினைவே பிரதீதியென்று * சித்தித்துதே. ()

சங்கை நினைத்ததெல்லாந் தோணுமென்கிறதெப்படி இப்போ இந்திரியப் பிரத்தியக்ஷமாய் அநுபவிக்கிறதுமாத்திரந் தோணுகிறதேயொழிய இந்திரியங்களுக் கப்பிரத்தியக்ஷமாய்க் கண்ணுலே காணமற் காதாலேகேட்காமல் அநுபவியாததை நினைத்தாற் ருேணவில்லையே ஆகையினுலே நினைத்ததெல்லாந் தோணுமென்கிற அன்னுவயயுக்தி கூடாதென்று சங்கித்தால் அப்படிச் சங்கிக்கக் கூடாது ஏனென்ருல் இந்திரியப் பிரத்தியக்ஷமன்றியிலே அநுபவியாததுமுதலாய் நினைத்தாற் ருேணதென் றெப்படிச் சொல்லுகிறது தோணுமே யெப்படியென்ருச் சுவர்க்கலோகத்திலே இருக்கிற அச்சரஸ்திரிகளுடைய கீதம்பாடுகிறசப்தத்தையு மவர்களுடைய ஆலிங்கனம்பண்ணுகிறபரிசத்தையும் அவர்களுடைய ரூபத்தையும் அமுதபானங்களுடைய ரசத்தையும் கற்பககுசுமங்களுடைய கந்தத்தையும் இந்திரியப் பிரத்தியக்ஷமாய் அநுபவியாமலிருந்தாலு மதுகளை நினைக்கிறபோது அதுகள்முதலாய்த் தோணுகிறதே எங்கேதோணுகிறதென்ருல் கண்ணுலே காணதிருந்தாலுஞ் சாஸ்திரங்களினுலே கேட்டிருக்கிறதை நினைத்தால் அதை நாம் அநுபவிக்கவில்லையென்றும் அநுபவியாததாகிலுந் தோணுகிறதே. (கஅ)

இப்படிச் சொல்லப்படாது அநுபவிக்கப்பட்டதை நினைத்தாற் ருேணுமேயன்றியிலே அநுபவியாததை நினைத்தாலுந் தோண

* சித்தமாச்சுதே - என்றும் பாடம்.

தென்று பின்னையுஞ் சங்கித்த சீடனுக்குச் சொல்லுகிறார் அநுபவித்ததானாலும் அநுபவியாததானாலும் நினைத்தாற் றோனும் எப்படியென்றாற் றேசாந்திரத்திலே பூருவம் அநுபவித்ததை நினைத்தால் அதெப்படித் தோணுகிறதோ அப்படிப்போலே அநுபவியாததையும் ஆப்தோபதேசத்தினாலே கேட்டால் அதைநினைக்கிறபோது மகாமேரு முதலானதுகள் முதலாய்த் தான் அறியாததாய் அநுபவியாததாய்ச் சுவர்ணமயமாயிருக்குமென்று மனதிலே தோணுகிறதே இதுமாத்திரமன்று பின்னைச் சக்ஷுசுரோத்திராதி இந்திரியங்களை மூடிக்கொண்டால் இந்திரியங்களுக்குப் பிரத்தியக்ஷமாயில்லாமற்போனாலும் ரூபசத்தாதிகளை நினைத்தாற்றோணுகிறதே மனதிலே இருட்டிலேயிருக்கிறவனுக்கு ரூபந்தெரியாமலிருந்தாலும் ஒன்றை நினைத்தால் அந்தரூபந் தோணுகிறதே இதுமாத்திரமன்று குருடனாய்ச் செவிடனாயிருக்கிறவனுக்குச் சக்ஷுசுரோத்திரங்களில்லாமலிருந்தாலும் ரூபசப்தங்களை நினைத்தாற்றோணுகிறதே ஆகையினாலே அறிந்ததானாலும் அறியாததானாலும் எதைநினைத்தாலும் நினைத்ததெல்லாந் தோணுமே ஆகையினாலே அன்னுவயயுக்திக்குத் தடையில்லை. ()

விதிரேகயுக்தி எப்படியென்றால் சுழுத்திமூர்ச்சாசமாதிகளிலே மனதில்லாதபோதொன்றுந்தோணாதபடியினாலே நினைவில்லாவிட்டாற் றோணுகிறதுமில்லை யென்கிறவிதிரேகயுக்தியுந் தடையில்லைச் சுழுத்தியாதி அவஸ்தையிலேமாத்திரமன்று சாக்கிர அவத்தையிலேயும் நினைவில்லாவிட்டாற் றோற்றறிவு மில்லையே. (உஉ)

சங்கை சாக்கிரத்திலேயும் நினைவன்றியிலே தோணாதென்று சொல்லப்படாது தென்னென்றால் இந்திரியப் பிரத்தியக்ஷமாய் யாதொன் றநுபவிக்கப்படுகிறதோ அது நினைவன்றியிலேதானே தோணுகிறதேயென்று சங்கித்தா லதுகூடாது தென்னென்றால் அப்படி லோகத்தி

லே அநுபவங் காணாதபடியினாலே நினைவன்றியிலேதோணாது லோக கத்திலே அநுபவந்தான் எப்படிக்கண்டோமென்று லொருகாரியத் திலே ஏகாக்கிரசித்தனா யொன்றைச் சிந்திக்கிறபோது பின்னை யொருத்தன் அழைத்தாலுந் தெரியாமல் வேறேநினைவா யிருந்தேன் கேட்காமற்போனேன் காணாமற்போனேன் அறியாமற்போனேனெ ன்று பார்த்துக்கொண்டு கேட்டுக்கொண்டு செய்துகொண் டிருக்கிற திலே வேறேநினைவா யிருக்கிறபோது தோணாமலிருக்கிறபடியினா லே நினைவன்றியிலே தோணாமலிருக்கிறது லோகத்திலே அநுபவிக் கக்கண்டோம் ஆகையினாலே பிரத்தியக்ஷமாய் அநுபவிக்கிறது முத லாய் நினைவன்றியிலே தோணாது. (உங-உச-உரு)

இந்திரியப் பிரத்தியக்ஷமாயிருக்கிறது நினைவன்றியிலே தோ ணாதோவென்றாற் றோணாது இந்திரியங்களுக்குப் பிரத்தியக்ஷமாயிரு ந்தாலும் நினைவன்றியிலே தோணாது பிரத்தியக்ஷமா யிந்திரியங்களி னாலே அநுபவிக்கிறதுமுதலாய் நினைவில்லாமற் றோணாதென்கிறது ண்டோ வென்றா லுண்டு எப்படியென்றாற் கழுத்திலேயிருக்கிற கண்டாபரணத்தைத் தொக்கிந்திரியத்தினாலே பரிசித்துக்கொண் டிருக்கிறதிலேதானே யஃதிருக்கிறதென்கிற நினைவில்லாமல் மறந்து போய்க் கண்டாபரணத்தைக் காணேமென்று தேடுகிறான் இப்படிப் பிரத்தியக்ஷமா யநுபவிக்கிறதிலேதானே யந்த நினைவில்லாதபடியி னாலே அதுதோணவில்லையே இதுமாத்திரமன்று மஹாவியாதிகளை அநுபவிக்கிறவனுக்குத் துக்கஞ் சகிக்கப்படாமலிருந்தாலும் வேறே பராக்காய் அதை நினையாதிருக்கிறபோது அந்த வியாதிபீடை முதலா ய்த்தோணவில்லையே இதுமாத்திரமன்று தாரித்திரியத்தினாலும் ஸ்தி ரிபுத்திராதிகள் மரித்துப்போனதினாலேயும் தனங்களுடையநாசத்தி னாலேயும் நானாவிதமாய் மஹாஅனர்த்தமாயிருக்கிற மஹாதுக்கங்களை ச்சர்வதாய் அநுபவித்துக்கொண்டிருந்தானானாலும் வேறேயொரு

பராக்கினாலே அந்த நினைவில்லாமலிருக்கிறபோ தந்தத்துக்கானர்த் தங்களொன்றும் அவனுக்குத்தோணவில்லையே ஆகையினாலே பிரத் தியக்ஷமாய் அனுபவிக்கிறதிலேயும் நினைவன்றியிலே தோணாது சித் தம். (உகூ-உஎ-உஅ)

இப்படிச் சொன்னபிரகாரமாய்ச் சித்தாந்த மேதாச்சுதென் றால் அநுபவிக்கப்பட்டதாகட்டும் அநுபவிக்கப்படாததாகட்டும் அன் னியதாவாய்த்தானாகட்டும் எப்படியானாலும் யாதொன்று தோணுகிற தோ அத்தோற்றறிவெல்லாம் நினைவென்றே சித்தாந்தமாச்சுது.(உக)

இப்படிச் சொன்னபிரகாரமாய் யாதொரு பிரதீதியுண்டோ அந்தத் தோற்றறிவே வேதாந்தசாஸ்திரத்திலே நானாவிதமாய்ச் சொல்லப்படுகிறது எப்படிச்சொல்லுகிறதென்றால் அதுவிதுவென்று தோணுகிறதோற்றறிவுதானே சங்கற்பமென்றும் நினைவென்றும் வி ர்த்தியென்றும் விஞ்ஞானமென்றும் வாசனையென்றும் பலமென்றும் இருதயக்கிரந்தியென்றுந் திரிசியமென்றும் பிராந்தியென்றுஞ் ஜீவ னென்றுஞ் ஜகத்தென்றுஞ் சர்வமென்றும் ஈசுரனென்றும் பெயரி டப்படுகிறதென்றறி சங்கை வேதாந்தசாஸ்திரத்திலே தோற்றறிவு தானே சர்வமென் றெங்கேசொல்லப்படுகிறது அப்படியில்லையே மா யைதானே சர்வமாச்சுதென் றன்றோ சொல்லப்படுகிறதென்று கேட் கிறாயோ அந்தத்தோற்றறிவுதானே மாயையென்றறி எப்படியென்றா ல் அந்தத் தோற்றறிவுதானே மாயையென்றும் அவித்தையென்றும் பந்தமென்றும் மலமென்றுந் தமசென்றும் அஞ்ஞானமென்றுஞ் சி த்தமென்றுஞ் சமுசாரமென்றுஞ் சொல்லப்படுகிறதன்றியிலே வே றே யொன்றுமன்று சங்கை இப்படித் தோற்றறிவுதானே சர்வமென் று சொன்னதினாலே இங்கே மனோலயத்திற்கு ஏதாச்சுதென்று சங் கிக்கிறாயோ சொல்லுகிறோங் கேள் இப்படி நானாவித நாமதேயங்களி

ஞலே சொல்லுகிற தோற்றறிவுதானே மனதென்று சொல்லப்படுகிற தென்றறி. (௩O-௩க)

இப்படித் தோற்றறிவே மனதென் ருர்சொல்லியிருக்கிருரெ ன்ருல் வாசிட்டத்திலே இராமனுக்கு ஸ்ரீவசிட்டர் சொல்லியிருக்கி ருர் எப்படியென்ருல் அதுவிதுவென் றுண்டானதாகட்டும் இல்லாத தாகட்டும் எதாஞலுந் தோணுகிற யாதொரு தோற்றறிவுண்டோ அதுதானே மனதென்றறியும் அதுவிதுவென்று தோற்றுகிற தோ ற்றறிவைத்தவிர மனதே இல்லையென் றறியுமென்று ஸ்ரீவசிட்டர் சொன்னுர். (௩உ-௩௩)

இப்படித் தோற்றறிவே மனதாஞல் இந்தமனதை லயம்ப ண்ணுகிறதற் குபாயமேதென்ருற்-சகலத்தையும் மறக்கிறதே பரமமா ய் இருக்கிற உபாயம் எப்படி என்ருல் சகலத்தையும் நினைக்கிறபோ தன்றே தோணுகிறது நினையாமலிருந்தாற் றேணுமே ஒன் றுந்தோ ணுமற்போஞல் மனதுமில்லையே ஆகையிஞலே யொன்றையும் நினை யாமற் சர்வத்தையும் மறக்கிறவிஸ்மரணமே மனது லயிக்கிறதற் குபாயம் இப்படி யெங்கே யார்சொல்லியிருக்கிருர்களென்ருல் வாசி ட்டத்திலேதானே இதுவும் இராமனுக்கு ஸ்ரீவசிட்டர் சொல்லியிரு க்கிருர். (௩௪)

ஸ்ரீவசிட்டர் எப்படிச்சொன்ஞரென்ருல் வாரும் ஏ இரா மா அநுபவிக்கப்பட்டதாயும் அநுபவிக்கப்படாததாயும் அநுபவிக் கப்படுகிறதாயும் முன்சொன்ன நினைவையெல்லாம் நன்ருய் மறந்து காட்டங்கள் குட்டியங்கள் எப்படி யொருநினைவுமன்றியிலே யிருக் கிறதோ அப்படிப்போலே யொருநினைவுமன்றியிலே இரும் சர்வத் தையும் மறக்கிறதோவென்ருற் சர்வத்தையும் நன்ருய் அடியோடே மறந்து ஒருநினைவுமன்றியிலே இரும் சர்வத்தையும் அடியோடே

மறந்தாற் காட்டகுட்டியங்கள்போலே மூடமாயன்றோ போகவேண்டுமென்கிறீரோ ஏ இராமா அப்படியன்று சகலமும் பிராந்தியானபடியினாலே சகலபிராந்தியும் மறந்து வெளியிலே மூடன்போலேயும் உள்ளே யொருபிராந்தியுமன்றியிலே பிரமானந்தமாத்திரமாய் அநுபவித்துக்கொண்டு மஹாபுத்தியா யிருந்துகொண்டு சுயதிருஷ்டியிலே யொருவியவகாரமுமன்றியிலே பிரமானந்தமா யிருந்துகொண்டு பரதிருஷ்டியிலே சகலவியவகாரமும் பண்ணிக்கொண்டு சுகியாயிருஞ் சின்மாத்திரமாயிருக்கிற தன்னிடத்திலே ஆகாசத்திலே நீலாதிவர்ணங்கள்போலே பிராந்தியினாலே தோணுகிற ஜகப்பிராந்தி யொருக்காலுந் திரும்பிநினையாமல் மறக்கிறதே யுபாயமன்றியிலே வேறேயொன்றுமில்லைச் சாக்ஷாது அந்த அரனுண்டே அந்தச் சிவன்முனேவந் துமக் குபதேசித்தாலுஞ் சாக்ஷாது விஷ்ணுதான் பிரமாதான் ஞானோபதேசம்பண்ணினாலும் உமக்குச் சொருபஸ்திதி வாராது சர்வத்தையும் மறக்கிறதைத்தவிர யொருக்காலுஞ் சுவத்தபாவமில்லை ஆகையினாலே சர்வத்தையும் மறக்கவேண்டுமென் றிராமனுக்கு ஸ்ரீவசிட்ட ருபதேசித்தார். (ருடு-ருகூ-ருஎ)

ரு

சர்வத்தையும்மறக்கிறது மஹாதுர்லபமன்றோவென்றால் அவிவேகிகளுக்குத் துர்லபமானாலும் விவேகிகளுக்கு மஹாசுலபந்தானே எப்படியென்று லொன்றையும் நினையாமல் அகண்டபிரமத்தைமாத்திரம நிரந்தரம் நினைத்துக்கொண்டிருந்துதானே நிரந்தரம் அப்பியாசித்தால் எளிதாய் மறக்கலாமே கடினமில்லையே யொருபிரயாசமுமன்றியிலே யொன்றையுநினையாமலே வெறும்மனே சும்மாவிருக்கலாமே ஒன்றையும் நினையாமல் வெறும்மனே சும்மாயிருக்கிறதிலே பிரயாச மொன்றுமில்லையே ஆகையினாலே மனதிலே யொன்றும் நினையாமற் பிரமமாத்திரத்தை நிரந்தரம் நினைத்துக்கொண் டிருக்க

| உதாரண ஆசிரியர்களின்பெயரகராதி. | உதாரண நூல்களின் பெயரகராதி. |
|---|---|
| வசிட்டர். | வேதசாஸ்திரம். |
| சங்கராசாரியாள். | சகலசாஸ்திரம். |
| வித்தியாரண்ணியாள். | சுருதி. |
| நாரதர். | அசங்கோகி. } சுருதி. |
| சனற்குமாரர். | அயம்புருஷ. } சுருதி. |
| இந்திரன். | வியாசசூத்திரம். |
| பிரமா. | வாசிட்டம். |
| சுகர். | விவேகசூடாமணி. |
| ஜனகமஹாராஜா. | ஸ்மிருதி. |
| யாக்கியவற்கர். | மைத்திராயணியசாகை. |
| மைத்திரை. | கீதை. |
| லீலை. | பஞ்சதசப்பிரகரணம். |
| சூடாலை. | புராணம். |
| இராமாருச்சுனுள். | இராமாயணம். |
| வியாசர். | சூதசங்கீதாவசனம். |
| கிருஷ்ணபகவான். | |
| பிரமசர்மா. | |
| சிகித்துவசன். | |
| சரபங்கரரிஷி. | |

உச்சரிப்புச்சப்தஞ்செவ்வையாயிருத்தற்காகச் சிலசில இடத்தில் வடமொழிச் சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூல்களை இந்நூலாசிரியரெவ்விடத்தெவ்விடத்தெந்தெந்த நியாயத்திற்கெந்தெந்த விடத்திலுதாரணங் கொடுக்கவேண்டுமோ ஆண்டாண்டனந்தமடங் குதாரணங் கொடுத்திருக்கின்றமையால் அவைகளை இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதுவசனமாதலா லிடையிடையேவேண்டிய வேண்டிய இடங்களில் உயிரெழுத்தும் உயிர்மெய் எழுத்தும் பிரிந்து வரும்படி செய்திருக்கின்றன ஏனெனிற்கற்ரோறன்றியில் மற்றோருக்கும் உபயோகப்படுமென்பதனால்.

# பரிசோதன பத்திரம்.

| பக்கம். | சுலோகம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௨ | ௬ | ௧ | அத்தோய்த | அத்தொய்த |
| ௮ | ௩௬ | ௫ | மத்தியிலெ | மத்தியிலே |
| ௧௩ | ௬௧ | ௨ | பேயரே | பெயரே |
| ௧௪ | ,, | ௬ | திற்க்கு | திற்கு |
| ௧௬ | ௭௫ | ௫ | காரா | கரா |
| ௨௦ | ௯௩ | ,, | ணினைக்பப் | ணினைக்கப் |
| ௨௨ | ௧௦௦ | ௩ | அத்தோய் | அத்தொய் |
| ,, | ,, | ௭ | ரைஞலே | ரையிஞலே |
| ௨௪ | ௧௧௦ | ௧ | ஜனன | ஜனன |
| ௨௬ | ௧௧௭ | ௪ | ஜகச் | ஜகத் |
| ௨௮ | ௧௨௭ | ௨ | இங் | இந்த |
| ,, | ,, | ௯ | மூவ்டண | மூவ்ஷண |
| ௩௧ | ௧௪௨ | ௨௦ | சமித்திர | சமுத்திர |
| ,, | ௧௫௬ | ௨ | மிரக்ஷிசிக் | மிரக்ஷிக் |
| ௩௫ | ௧௬௮ | ௬ | யிஞலெ | யிஞலே |
| ௩௬ | ௧௭௫ | ௪ | ன்ராந்தி | ராந்தி |
| ,, | ௧௭௬ | ௭ | போவ | போ |
| ௩௭ | ௧௮௧ | ௯ | தோணுகி | தோணுகிற |
| ௩௮ | ௧௮௫ | ௧௧ | வாரோவி | வாரோபி |
| ௪௧ | ௯ | ௪ | வித்துவாம்சா | வித்துவாம்ஷா |
| ௪௪ | ௨௧ | ,, | இஞலேயு | இஞலேயும் |
| ,, | ௨௫ | ௧௦ | யுக்திஞ | யுக்தியிஞ |
| ௪௬ | ௩௩ | ௮ | கிறத்தற்கு | கிறதற்கு |
| ௪௭ | ௪௦ | ௧௭ | பஸ்ம | பஸ்ப |
| ௪௮ | ௪௭ | ௪ | யான | யா |